ஓம் தத் சத்


ரெட்டியாரூர்

தவத்திரு. சு.பழனியப்ப சுவாமிகள்

அவர்கள் உபதேசித்து அருளிய

(நூல்களின் தொகுப்பு)

அத்வைத ஞானாமிர்தம்



11.03.2017, சனிக்கிழமை

குருபூஜை விழாவின் போது இந்நூல் வெளியிடப்பட்டது.

ரெட்டியாளூர்

தவத்திரு. சு.பழனியப்ப சுவாமிகள்

அவர்கள் உபதேசித்து அருளிய

(நூல்களின் தொகுப்பு)

அத்வைத ஞானாமிர்தம்



11.03.2017 சனிக்கிழமை

குரு பூஜை விழாவின் போது

இந்நூல் வெளியிடப்பட்டது.

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	அத்வைத ஞானாமிர்தம்
ஆசிரியர்	:	ரெட்டியாரூர் தவத்திரு. சு.பழனியப்ப சுவாமிகள்
மொழி	:	தமிழ்
வகை	:	எழுத்து தொகுப்பு
முதற் பதிப்பு	:	2017
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	128
தாள்	:	11.6
எழுத்து அளவு	:	12
உரிமை	:	தத்துவ ஞான சபை போடிப்பாளையம், பொள்ளாச்சி.
கட்டமைப்பு	:	சாதா பைண்டு அட்டை
கணினி அச்சுக் கோர்ப்பு	:	ஸ்ரீ வாரி பிரிண்டர்ஸ் செங்குன்றம்.
அச்சிட்டோர்	:	ஸ்ரீ வாரி பிரிண்டர்ஸ் செங்குன்றம்.
வெளியிடுபவர்	:	தத்துவ ஞான சபை போடிப்பாளையம், பொள்ளாச்சி.

பொருளடக்கம்

மதிப்புரை

*தவத்திரு.*ரெட்டியாரூர் **சு.பழனியப்ப சுவாமிகள்** நம்மிடையே சமீபகாலத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு சீவன் முக்தர். எண்ணறிய பிறவிகளில் மனிதனாகப் பிறந்த சீவனுக்கு மட்டுமே முக்தியடையும் பேறு கிட்டுவதாகும். அவ்வாறு சீவன் முக்தியடைய அந்தக்கரண கிருபையும், ஈஸ்வர கிருபையும், குரு கிருபையும் இன்றியமையாயதாகும். அத்தகைய குருவும் ஒரு சீவன் முக்தராக இருத்தல் வேண்டும். ஆனால் எல்லா சீவன் முக்தர்களும் குருவாக முடியாது. தன்னை அண்டிய காய்ந்த சுள்ளியை எப்படி நெருப்பு தன்னைப் போல் ஆக்கிக் கொள்கிறதோ. அதுபோன்ற வல்லமையும், திறமையும் கருணையும் கொண்ட சீவன் முக்தரே குருவாக முடியும். இத்தகைய ஒரு குருவே நம் தவத்திரு.**பழனியப்ப சுவாமிகள்.** தன்னை உணர்ந்த சுவாமிகள் அதை உரைத்தும் அதை நினைத்தும் இருப்பதன்றோ ஞானிகளுக்கான நீதி என்று கைவல்ய நவநீதம் கூறுவது போல, வாழ்ந்தவர். ரெட்டியாரூர், பொள்ளாச்சி, வேட்டைக்காரன் புதூர், போடி பாளையம், பழனி போன்ற பல ஊர்களில் எண்ணிறந்த சீடர்களை உத்தம ஞானிகளாக உருவாக்கியுள்ளார். ஆங்காங்கே கைவல்ய நவநீதம், விசாரசாகரம் போன்ற அத்வைத நூல்களை சங்கையற சீடர்களுக்கு போதித்ததோடு அல்லாமல் சற்றே நூலறிவு உடையோரும் முற்றும் தெளியும் வண்ணம் வினா - விடை வடிவிலும் சின்னஞ்சிறு கட்டுரைகள் வடிவிலும், பல நூல்களை அவ்வப்போது வெளியிட்டு வந்தார். இந்நூல்களை அவருடைய சற்சீடர்கள் குறிப்பாக ஊத்துக்குளி ஜமீன் மாணிக்கத்தாய் அம்மாள், உடுமலைப்பேட்டை ஞானஜோதி தங்கவேல் சுவாமிகள், ஆத்மபோதகர் இல.மனோகர் சுவாமிகள், போன்றோர் பதிப்பித்தனர். அவ்வாறு பதிப்பிக்கப்பட்ட **அத்வைத ரசமஞ்சரி, மஹா வாக்ய வினா - விடை, கீதாசாரா தாலாட்டு கருத்துரை ஞானஅனுசந்தானம்** போன்ற 11 நூல்களைத் தொகுத்து ஒரே தொகுப்பாக சுவாமிகளின் 14வது குருபூஜை அன்று **(11.03.2017) சனிக்கிழமை** வெளியிடப்படுகின்றது. முமுட்சுக்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது எனலாம். இந்தத்தொகுப்பு நூலைக்கற்று பின்னர் சுவாமிகளால் உரைசெய்யப்பட்ட கைவல்ய நவநீத உரைநூலைக் கற்பின் அத்வைத சாத்திர ஞானம் திடப்படும் என்பது உறுதி.

தவத்திரு. **பழனியப்ப சுவாமிகளின்** குருபரம்பரையை சிறப்புடன் விளங்க வைத்துக் கொண்டிருக்கும் தவத்திரு.**மனோகர் சுவாமிகள், ஞானஜோதி தங்கவேல் சுவாமிகள்,** தவத்திரு.**மாணிக்கத்தாயம்மாள்** போன்றோர் பெருமுயற்சியில் வெளிவரும் இந்நூலினை நாம் கற்றுத் தெளிவதே நாம் அவர்களுக்குச் செலுத்தும் நன்றியாக அமையும். பரம்பொருள் அனைவர்க்கும் தன்னைக் காட்டிக் கொடுப்பதாக

பெருவெளிராமன்

நன்னிலம் ஸ்ரீ நாரண தாண்டவராய சுவாமிகள்

கைவல்ய நவநீத ஞானப்பெருமன்றம்.

வணக்கம்
சென்னை
25.02.2017

அணிந்துரை

படர்ந்த வேதாந்தம் என்னும் பாற்கடல் மொண்டு ....
................................தின்றலைவரோ பசி இலாரே. கைவல்யம் வேது பாயிரம்.

(திரண்ட பாற்கடலை, சிறுகுடத்தில் நிரப்பி, பிறவிப் பயனுற, பூவுலகிற்கு இறங்கி வந்த ஞான அமிர்தமே - அத்வைத ஞானாமிர்தம் எனும் இந்நூல்)

எங்கும் நிறைந்த பரம்பொருளை, நெஞ்சில் பூமாலை சாற்றி, தன்னில் தவப்பொருள் கண்ணுறும் வண்ணம், விண்ணிலும் மிஞ்சிய ஞானவித்தை இதுவென, கண்ணுள் மணிகளாகிய தம் சீடர்கள், உயர்வு பெற்று, பெரு வழி வந்தடைய அத்வைத வேதாந்தகுரு தவத்திரு. ரெட்டியாரூர் சு.பழனியப்ப சுவாமிகள் அவர்கள், உபதேசித்து அருளிய பொன்மொழிகளின் தொகுப்பே அத்வைத ஞானாமிர்தம் என்னும் இந்த ஞானபொக்கிஷமாகும்.

நான் யார் ? என்னைப் படைத்தவன் யார் ? என்றெல்லாம் அறியாது, அஞ்ஞானத்தின் முழு உருவாய் திரிகின்ற நம் போன்ற ஜீவர்களை, ஞானமே வடிவமான, பிரம்ம புருஷன் படி இறங்கி வந்து, பாமரனோடு - பாமரனாக, நம்முடைய கைப்பிடித்து - வினாவிற்கு விடை கூறியவாறு, விளையாட்டாய் - விதி அறுக்கும் விடை பகன்று, தானே தலைமையேற்று, ஞானதேசம் அழைத்துப் போகும் புண்ணிய யாத்திரையாக இந்த ஞானநூல் அமைந்து உள்ளது.

ஏகநாயகனே, தவத்திரு.பழநியப்ப சுவாமிகளின் வடிவில், குரு வடிவெடுத்து தன் திருக்கரங்களால் எழுதி, திருஅவதாரம் நிறைவுறும் காலத்திற்கு முன் (சமாதி அடைவதற்கு முன்) தன்னுடைய சீடர் உடுமலை ஞானஜோதி தங்கவேல் எனும் அன்பரிடம் வழங்கிய கைப்பிரதிகளின் அச்சுப் பதிப்பே இந்நூலாகும்.

இந்நூல் வெளிவர உதவிய தத்போதம் பத்திரிகை குழுமத்தினருக்கு எங்களது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

குன்றிலிட்ட விளக்காய் நின்று, நெஞ்சத்தின் இருள் நீக்கிய குருவின் திருவடிகளில் பதிநான்காம் ஆண்டு குரு பூஜை நன்னாளில் காணிக்கை-யாக்குகிறோம்.

நாள் : **11.03.2017 சனிக்கிழமை** இடம் : **போடி பாளையம், பொள்ளாச்சி.**

இங்ஙனம்,

குருவின் திருவருளில் திளைத்த மெய்யன்பர்கள்

கோவை மாவட்ட தத்துவ ஞானசபை,

போடி பாளையம்.

மற்றும் சார்பு சபைகள்

திரு அருட்பா

ஓம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே எத்து
சற்குரு நாதா ! சற்குரு நாதா
சன்மார்க்க சங்கம் தழைக்க அருள்தாதா

திருவடிப் புகழ்ச்சி

பரசிவம் சின்மயம் பூரணம் சிவபோக பாக்கியம் பரம நிதியம்
பரசுகம் தன்மயம் சச்சிதானந்த மெய்ப் பரம ஏகாந்த நிலையம்
பரம ஞானம் பரமசத்துவ மகத்துவம் பரம கைவல்ய நிமலம்
பரம தத்துவ நிரதிசய நிட்களமட் பூத பௌதி காதார நி புணம் 4
பவபந்த நிக்ரக விநோத சகனம் சிற்பரம் பரானந்த சொரூபம்
பரிசய தீதம் சுயம் சதோதயம் வரம் பரமார்த்த முக்த மௌனம்
படன வேதாந்தாந்த மகாமாந்தாந்த நிரு பாதிகம் பரம சாந்தம்
பரநாத தத்துவாந்தம் சகச தரிசனம் பகிரங்கம் அந்தரங்கம் 8
பரவியோமம் பரமஜோதிமயம் விமலம் பரம்பரம் அனந்தம அசலம்
பரம லோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம் பரபதம் பரம சூசுமம்
பரா பர மநாமய நிராதரம கோசரம் பரம தந்திரம் விசித் திரம்
பரா முத நிராகரம் விகாசனம் விகோடணம் பரசு கோதயம் அக்ஷயம் 12
பரிபவ விமோசனம் குண ரகிதம் விசுவம் பதித்துவ பரோ பரிணம்
பஞ்ச கிர்த்தியசுத்த கர்த் தத்துவம் தற் பரம் சிதம்பர விலாசம்
பகர் சுபாவம் புனிதம் அதுலம் மதுலதமம் பராம் பர நிராலம்பனம்
பரவு சாக்ஷாத்கார நிரவயம் கற்பனா தீதநிரு விகாரம் 16
பாதுரிய அநுபவம் குருதுரி பதமம் பகம் பகாத்த விமலம்
பரம கருணாம்பரம் கற்பதம் கன சொற் பதாகீதம் இன்ப வடிவம்
பரோட்ச ஞானாதீதம் அபரோட்ச ஞானானு பவ விலாசப் பிரகாசம்
பாவனா தீதம் குணாதீதம் உப சாந்த பதமகா மௌனரூபம் 20
பரம போதம் போத ரகித சகிதம் சம் பவாதீதம் அப்ர மேயம்
பகர் அனந்தானந்தம் அமலம் உதிதஞ் சிற் பதம் சதானந்த சாரம்
பரையாதி கிரணாங்க சாங்க சௌபாங்க விம் பாகார நிருவி கற்பம்
பரசுகா ரம்பம் பரம் பிரம்வித்தம் பாரனந்த புரண போகம் 24
பரமிதா தீதம் பரோதமம் பரகிதம் பரபரிணம் பராந்தம்
பரமாற் புதம் பரம சேதனம் பசு பாச பாவனம் பரம மோட்சம்

பரமாணு குண நவாதீதம் சிதாகாச பாஸ்கரம் பரம போகம்
பரிபாக வேதன வரோத யானந்த பத பாலனம் பரம யோகம் 28

பரம சாத்திய அதீதானந்த போக்கியப் பரிசுதம் பரிவோத்தியம்
பர கேவலாற் விதானத் தானுவ சுத்த பாதாக்ர சுத்த பலிதம்
பரம சுத்தாத் விதானந்த அநுபூதிகம் பரிபூத சிற்குணாந்தம்
பரம சித்தாந்த நிகமாந்த சமரச சுத்த பரமா நுபவ விலாசம் 32

தரமிகும் சர்வ சாதிட்டான சாத்தியம் சர்வ ஆனந்த போகம்
சார்ந்த சர்வாதார சர்வ மங்கள சர்வ சத்திதரம் என்ற ளவிலாச்
சகுண நிர்க்குணமுறு சலச்சண விலச்சணத் தன்மை பல வாக நாடி
தம்மை நிகர் பறையெல்லாம் இன்னும் அளவிட நின்ற சங்கரன் அநாதி ஆதி 36

சாமகீதப் பிரியன் மணிகண்ட சீகண்ட சசிகண்ட சாம கண்ட
சயசய வெனும் தொண்டர் இதய மலர் மேவிய சடா மகுடன் மதன தகனன்
சந்திர சேகரன் இடப வாகனன் கங்கா தரன் சூலபாணி இறைவன்
தனிமுதல் உமாபதி புராந்தகன் பசுபதி சயம்பு மா தேவன் அமலன் 40

தாண்டவன் தலை மாலை பூண்டவன் தொழும் அன்பர் தங்களுக்கு அருளாண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச் சைல மெனும் ஒரு வில்லன்
தக்ஷிணாமூர்த்தி அருண்மூர்த்தி புண்ணியமூர்த்தி தரும் அட்ட மூர்த்தி ஆனேன்
தலைமை பெறுகண நாயகன் குழகன் அழகன் மெய்ச்சாமி நந் தேவதேவன் 44

சம்பு வேதண்டன் பிறப்பிலான் முடிவிலான் தாணு முக்கண்க ளுடையான்
சதுரன் கடாசலம்உ ரிப் போர்வையான் செந்தழல் கரந்தேந்தி நின்றேன்
சர்வ காரணன் விரற்கால காலன் சர்வ சாம்பிர மன் சர்வேச் சுரன்
தகை கொள் பரமேச் சுரன் சிவ பிரான் எம் பிரான் தம்பிரான் செம்பொற்பதம் 48

தகவு பெறு நிட்பேத நிட்கம்ப மாம் பரா சக்தி வடிவாம் பொற்பதம்
தக்க நிக்ஸ்காடியன்ய சாமவேத சாற்றிய சக்தி வடிவாம் பொற்பதம்
சாற்றறிய விச்சை ஞானங் கிரியை யென்னும் முச்சக்தி வடிவாம் பொற்பதம்
தடையிலா நிர்விடய சற்குண சிவானந்த சக்தி வடிவாம் பொற்பதம் 52

தகுவிந்தை மோகினியை மானை அசைவிக்கும் ஒரு சக்திவடிவாம் பொற்பதம்
தாழ்வில் ஈ சானமுதன் முர்த்திவரை ஐஞ்சக்தி தஞ்சத்தியாம பொற்பதம்
சவிகற்ப நிருவி கற்பம் பெறும் அனந்தமா சக்தி வடிவாம் பொற்பதம்
தட நிருப வவிவர்த்த சாமார்த்தியத் திருவருட் சக்தி உருவாம் பொற்பதம் 56

தவாத சாந்தப் பதம் துவாத சாந்தப் பதம் தருமிணை மலர் பூம்பதம்
சகலர் விஞ்ஞானகலர் பிரளயாகலர் இதய சாட்சி யாகிய பூம்பதம
தணிவிலா அனுபக்ஷ சம்புபக்ஷங்களில் சமரசமுறும் பூம்பதம
தருபரம சூக்குமம் தூலம இவை நிலவிய தமக்குள் உயிராம் புதமபதம்
சரவசர அபிரமித விவித ஆன்மப்பகுதி தாங்குந் திருப் பூகம்பம் 60

தண்ட பிண்டாண்ட அகிலாண்ட பிரமாண்டத் தடிக்க வருளும் பூமபதம
தத்வ தாத்விக சக சிருட்டி திதி சங்கார சகல கர்த்துரு பூம்பதம்
சகசமல இருளகல நின்மல சுயம பிரகாசம் குலவும் நற்பூம் பதம்
மரபுறு மாதா தீத வெளி நடுவில் ஆனந்த மாநடனமிடு பூம்பதம்
மன்னும் வினை ஒப்பு மல பரிபாகம் வாய்க்க மாமாயை மிதக்கும் பதம்
மலிபிறவி மறலியின் அழுந்தும் உயிர்தமை அருளின் மருவுற எடுக்கும் பதம்
வளர் ஊர்த்த வீரதாண்டவ முதல் பஞ்சகம் மகிழ்ந்திட வியற்றும் பதம் 68

வல்ல முயல்கன் மீதின் ஊன்றிய திருப்பதம் வளர்ந்தரத் தூக்கும் பதம்
வல்வினை எலாம் தவிர்த்து அழியாத சுத்தநிலை வாய்த்திட வழங்கும் பதம்
மறைதுதிக்குட் பதம் மறைச்சிலம் பொளிர்பதம் மறைப் பாதுகைச் செம்பதம்
மறைமுடி மணிப்பதம் மறைக்கு மெட்டாப் பதம் மறைப் பரியுகைக்கும் பதம் 72

மறையவ னுளங் கொண்ட பதம் அமித கோடியாம் மறையவர் சிரஞ்சூழ் பதம்
மறையவன் சிர சிகாமணியெனும் பதம் மலர்கொள் மறையவன் வாழ்த்தும் பதம்
மறையவன் செய உலக மார்க்கின் அதிகார வாழ்வை ஈந்தருளும் பதம்
மறையவன் கனவிலும் காணாத பதம் அந்த மறையவன் பரவும் பதம் 76

மால் விடை இவர்ந்திடு மலர்ப்பதம் தெய்வ நெடுமால் அருச்சிக்கும் பதம்
மால் பரவி நாடெறும் வணங்கும் பதம் மிக்க திருமால் விழி இலங்கும் பதம்
மால் தேட நின்ற பதம் ஓர் அனந்தங்கோடி மால் தலை அலங்கற் பதம்
மான் முடிப்பதம் நெடிய மாலுளப் பதம் அந்த மாலும் அறிவரிதாம் பதம் 80

மால்கொள் அவதாரங்கள் பத்தினும் வழிபட்டு வாய்மை பெற நிற்கும் பதம்
மாலுலகு காக்கின்ற வண்மை பெற்றடிமையின் வதிந்திட வளிக்கும் பதம்
வரையுறும் உருத்திரர்கள் புகழ் பதம் பலகோடி வயவுருத் திரர் சூழ் பதம்
வாய்ந்திடும் உருத்திரர்க்கு இயல்கொள் முத்தொழில் செய்யும்
வண்மை தந்தருளும் பதம் 84

வான இந்திரராதி எண்டிசைக் காவலர்கள் மாதவத் திறனால் பதம்
மதியிரவி யாதிசுரர் அசுரர் அந்தரர் வான வாசிகள் வழுத்தும் பதம்
மணியுரகர் கருடர் காந்தருவர் விஞ்சையர் சித்தர் மாமுனிவர் ஏத்தும் பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள் மதித்து வரவேற்கும் பதம் 88

மன்னு கின்னரர். பூதர் வித்யாதரர் போகர் மற்றையர்கள் பற்றும் பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கள் மனக்கோயில் வாழும் பதம்
மாதேவி எங்கள் மலை மங்கை என்னம்மை மென் மலர்க்கையால் வருடும் பதம்
மறலியை உதைத் தருள் சுழற் பதம் அரக்கனை மலைக்கீழ் அடர்க்கும் பதம் 92

வஞ்சமறு நெஞ்சினிடை எஞ்சலற விஞ்சு திறன் மஞ்சுற விளங்கும் பதம்
வந்தனை செய் புந்தியவர் தந்துயர் தவிர்ந்திட உண் மந்தன நவிற்றும் பதம்
மாறிலொரு மாறனுள மீறின் மகிழ் வீறியிட மாறி நடமாடும் பதம்
மறக்கருணையும் தனி அறக்கருணையுந் தந்து வாழ்விக்கும் ஒண்மைப் பதம் 96

இரவுறும் பகலடியர் இரு மருங்கினும் உறுவரென வயங்கிய சீர்ப்பதம்
எம்பந்தமற எமது சம்பந்த வள்ளல் மொழி இயன் மண மணக்கும் பதம்
ஈவரசர் எம்முடைய நாவரசர் சொற்பதிக இசை பரி பளிக்கும் பதம்
ஏவலார் புகழ் எமது நாவலாரூர் புகழ்இசை திருப் பாட்டுப் பதம் 100

ஏதவூர் தங்காத வாதவூர் எங்கோவின் இன்சொல் மணி அணியும் பதம்
எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர்முடி இடைவைகி அருண் மென்பதம்
எடுமே லெனத் தொண்டர் முடிமேன் மறுத்திடவும் இடை வலிந்து ஏறும் பதம்
எழில் கரவை அசைய ஆரூர் மருகினருள் கொண்டு இரா முழுதும் உலவும் பதம்104

இன்றொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறும் இரக்க நடை கொள்ளும் பதம்
இளைப்புறலறிந்து அன்பர் பொதி சோறருந்த முன்னிருந்து பின்னடக்கும் பதம்
ஏறிவிறகு விற்க வளர் கூடற்றெருத் தொறும் இயங்கிய இரக்கப் பதம்
இறுவைவகையங் கரையின் மண்படப் பல்கால் எழுந்து விளையாடும் பதம் 108
எங்கே மெய் அன்பருளர் அங்கே நலந்தர எழுந்தருளும் வண்மைப் பதம்
எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அன்றே இரங்கி ஈந்தருளும் பதம்
என் போன்றவர்க்கு மிக பொன் போன்ற கருணை தந்து இதயத் திருக்கும் பதம்
என்னுயிரை யன்ன பதம் என்னுயிர்க்குயிராய் இலங்கு செம்பதுமப் பதம் 112

என்னறிவெனும் பதம் என் அறிவினுக்கறிவாய் இருந்த செங்கலமலப் பதம்
என் அன்பெனும் பதம் என் அன்பிற்கு வித்தாய் இசைந்த கோகனப் பதம்
என் தவமெனும் பதம் என் மெய்த்தவப்பயனாய் இயைந்த செஞ்சலசப் பதம்
என்னிரு கண்மணியான பதம் என் கண்மணிகளுக்கினிய நல் விருந்தாம் பதம் 116

என் செல்வமாம் பதம் என் மெய்ச்செல்வ வருவாயெனும் தாமரைப் பொற்பதம்
என் பெரிய வாழ்வான பதம் என் களிப்பாம் இரும்பதம் என் நிதியாம் பதம்
என் தந்தை தாயெனும் இணைப்பதம் என் உறவாம் இயற்பதம் என் நட்பாம் பதம்
என் குருவெனும் பதம் என் இட்ட தெய்வப்பதம் எனது குலதெய்வப் பதம் 120

என் பொறிகளுக் கெல்லாம் நல் விடயமாம் பதம் என் எழுமையிம் விடாப் பொற்பதம்
என் குறையெலாந் தவிர்த்து ஆட்கொண்ட பதம் எனக்கு எய்ப்பில் வைப்பாகும் பதம்
எல்லார்க்கும் நல்லபதம் எல்லாம் செய்வல்ல பதம் இணையிலாத் துணையாம் பதம்
எழுமனம் உடைந்து உடைந்து உருகி நெகிழ் பக்தர்கட்கு இன்னமுதம் ஆகும் பதம் 124

என்னுறிற் பாலில் நறு நெய்யோடு சர்க்கரை இசைந்தென இனிக்கும் பதம்
ஏற்ற முக்கனிபாகு கன்னல் கற்கண்டு தேதென்ன மதுரிக்கும் பதம்
எங்கள் பதம் எங்கள் பதம் என்று சமயத்தேவர் இசை வழுங்கிடு நற்பதம்
ஈறிலாப்பதம் எலாந்தர திருப்பதம் அழிவில் இன்புதவு கின்ற பதமே 128

திருச்சிற்றம்பலம்

பசித்திரு தனித்திரு விழித்திரு

ஓம் தத் சத்

அருட்பெருஞ்சோதி ! தனிப்பெருங்கருணை !

உ

திருவாசகம்

சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

1 நமச்சிவாயம் வாழ்க ! நாதன் தாள் வாழ்க !
2 இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க !
3 கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க !
4 ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க !
5 எகன் அநேகன் இறைவன் அடி வாழ்க !
6 வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க !
7 பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய் கழல்கள் வெல்க !
8 புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
9 கரங்கு விவார் உண்மகிழும் கோன் கழல்கள் வெல்க !
10 சிரங்குவிவார் ஓங்கு விக்கும் சீரோன் கழல் வெல்க !
11 ஈசன் அடிபோற்றி, எந்தையடி போற்றி !
12 தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி !
13 நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி !
14 மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி !
15 சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி !
16 ஆராத இன்பம் அருளும் மலை போற்றி !
17 சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
18 அவனருளாலே அவன் தாள் வணங்கி
19 சிந்தை மகிழச் சிவ புராணந்தன்னை
20 முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
21 கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
22 எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
23 விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
24 எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்

25 பொல்லாவினையேன் புகழுமா றொன்றறியேன்
26 புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
27 பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
28 கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
29 வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
30 செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
31 எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
32 மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
33 உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
34 மெய்யா, விமலா, விடைப்பாகா, வேதங்கள்
35 ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
36 வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
37 பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
38 மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
39 எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
40 அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே
41 ஆக்கம் அள விறுதி இல்லாய் அனைத்துலகும்
42 ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்
43 போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்றொழும்பில்
44 நாற்றத்தின் நேரியாய் ! சேயாய் நணியானே !
45 மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
46 கறந்தபால் கன்னலொடு, நெய்கலந்தாற்போலச்
47 சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
48 பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
49 நிறங் களோரைந்துடையாய் ! விண்ணோர்களேத்த
50 மறைந்திருந்தாய் எம்பெருமான் ! வல்வினை யேன்தன்னை
51 மறைந்திடமூடிய மாய இருளை
52 அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
53 புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
54 மலஞ் சோரும் ஒன்பது வாயிற்குடிலை
55 மலங்கப் புலனைத்தும் வஞ்சனையைச் செய்ய
56 விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
57 கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
58 நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
59 நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
60 நாயிற் கடையாய்க் கடந்த அடியேற்குத்
61 தாயிற்சிறந்த தயாவான தத்துவனே

62 மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
63 தேசனே தேனார் அமுதே சிவபுரனே
64 பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
65 நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
66 பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
67 ஆரா அமுதோ அளவிலாப் பெம்மானே
68 ஓராதா ருள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
69 நீராய் உருக்கி யென் ஆருயிராய் நின்றானே
70 இன்பமும், துன்பமும், இல்லானே உள்ளானே !
71 அன்பருக்கன்பனே ! யாவையுமாய் அல்லையுமாம்
72 சோதியனே ! துன்னிருளே ! தோன்றாப் பெருமையனே
73 ஆதியனே ! அந்தம் நடுவாகி அல்லானே !
74 ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே !
75 கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
76 நோக்கரிய நோக்கே ! நுணுக்கரிய நுண்ணுணர்வே
77 போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
78 காக்குமெங்காவலனே காண்பரிய பேரொளியே
79 ஆற்றின்ப வெள்ளமே அத்தா ! மிக்காய் நின்ற
80 தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
81 மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
82 தேற்றனே ! தேற்றத்தெளிவே ! என் சிந்தனையுள்
83 ஊற்றான உண்ணாரமுதே ! உடையானே
84 வேற்றுவிகார விடக் குடம்பினுட்கிடப்ப
85 ஆற்றேன் எம் ஐயா, அரனே ! ஓ என்றென்று
86 போற்றிப் புகழ்ந்ததிருந்து பொய்கெட்டு மெய்யானார்
87 மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
88 கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
89 நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே !
90 தில்லையுட் கூத்தனே ! தென்பாண்டி நாட்டானே !
91 அல்லற் பிறவி அறுப்பானே ! ஓ வென்று
92 சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
93 சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
94 செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடியிற் கீழ்ப்
95 பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்.

அத்வைத ரசமஞ்சரி

ஹரி ஓம் தத் சத்

அத்வைத கீதம்

ஓங்காரம் ஜெய ஓங்காரம்
உலகம் அனைத்தும் ஓங்காரம் (ஓங்காரம்)

ஒளியின் விளக்கம் ஓங்காரம்
ஒலியின் முழக்கம் ஓங்காரம் (ஓங்காரம்)

மொழியின் அடிப்படை ஓங்காரம்
முடிவும் நடுவும் ஓங்காரம் (ஓங்காரம்)

விண்ணின் விரிவே ஓங்காரம்
வேதச் சிகரம் ஓங்காரம் (ஓங்காரம்)

எண்ணும் எழுத்தும் ஓங்காரம்
இசைப்பது அனைத்தும் ஓங்காரம் (ஓங்காரம்)

சத்து சித்து ஆனந்தம்

சச்சிதானந்த சிவம் நான் - ஏக
சச்சிதானந்த சிவம் நான் (சச்சி)
உச்சி சுழி முனையின் ஊடு சென்றேனே
உட்பிரகாசத்தினால் ஒளிர்கின்றேனே (சச்சி)
தத்துவம் எல்லாம் கடந்து
தற்பர நிலை உணர்ந்து
தானே நானாய் நானே தானாய்
மோனமாய் இலங்குகின்ற
சச்சிதானந்த சிவம் நான் - ஏக
சச்சிதானந்த சிவம் நான் (சச்சி)

காரண காரியங்கள் ஏகமென உணர்ந்து
கானலில் நீர்என காணுதி ஜகமிதை (சச்சி)

அறிதுயில் கொண்டேன் ; ஆனந்தம் கண்டேன் ;
அதுவே நான் எனும் அமைதியில் ஆழ்ந்தேன் (சச்சி)

ஓங்கார நாதத்தின் ஒளி அமுதம் புசித்தேன்
தூங்காமல் தூங்கும் சுகம் அதில் தோய்ந்தேன் (சச்சி)

அஹம்பிரம்மாஸ்மி

அகம் பிரம்மாஸ்மி - இது
ஆதி வேத நீதி போதம் (அஹம்பிரம்மாஸ்மி)
தேகமானதும் நானல்லன் ;
தேயும் பிராணனும் நானல்லன் ;
சோகமாம் மனதும் நானல்லன் ;
சுத்த அத்வைத சிவோஹம் (அஹம்பிரம்மாஸ்மி)

அஞ்சு பூதமும் நானல்லன் ;
அந்த கரணமும் நானல்லன் ;
பஞ்ச கோசமும் நானல்லன் ;
பராபரப் பொருளே நான் (அஹம்பிரம்மாஸ்மி)

இன்ப துன்பமும் நானல்லன் ;
இறப்பினோடு பிறப்புமில்லேன்
கன்மமே உடையனல்லேன் ;
காரண சொரூபமே நான் (அஹம்பிரம்மாஸ்மி)

காமக் குரோத லோபமில்லேன் ;
கன்ம ஞானேந்திரியங்களில்லேன்;
தாமத முக்குணமுமில்லேன் ;
சச்சிதானந்த சிவோஹம். (அஹம்பிரம்மாஸ்மி)

வேத மந்திர சொரூப அஷ்டோத்திரம்

ஓம் பிரக்ஞான பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஜீவசாட்சி பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் கூடஸ்த ஆத்மா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பரமாத்ம பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வசாட்சி பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சுத்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஏகநாயக பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பரமானந்த பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் தேஜோமயானந்த பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பரிபூரணானந்த பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சத்ரூபமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சித்ரூபமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஆனந்த ரூபமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நித்தியமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் புத்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம

ஓம் முத்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சத்தியமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சாந்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சதானந்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சிவா நந்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சின்மயாநந்த பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சிவசொரூபமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சின்மாத்திரமான பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அத்துவிதமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அகண்டாகார பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அக்ஷரமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஆதிஅந்தமில்லா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பந்தமில்லா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் தோடமில்லா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் விமலபோதமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நித்தியமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிர்குணமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிராமயமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிஷ்களமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிராகாரமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிச்சலமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிர்விகாரமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிர்விடயமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிஜானந்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் எங்குமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஏகாக்ஷரமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பூதபாவனமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பூதேசமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஜகத்பதியாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அருட்ஜோதி பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சிவஜோதி பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பரஞ்ஜோதி பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சுயஞ்ஜோதி பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் தத்துவா தீதமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் துரியமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஞானவடிவாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சொப்பிரகாசமாம் பரப்பிரம்ம சொரூபனே நம

ஓம் நிஷ்கிரியா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிருபத்திரவ பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிர்ச்சம்பந்த பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பிரத்தியட்ச பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அசரீரமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வக்ஞானம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அவ்யாக்கிருத பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் க்ஷேத்ரக்ஞ பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அனாதி முக்தனாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பிரத்தியக்காத்மா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிரீஸ்வரனாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிஷ்பிரக்கிருதியாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிர்ஜீவனாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பரோட்சமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அபரோட்சமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பிரம்மசக்திரகித பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிர் அவயமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நான் முகனும் காணா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஜோதிர்மயமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அமிர்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிருபமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் புராதானமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் மகாசூட்சமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் உன்னதமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வாதார பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிராதார பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிரஞ்சன பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் மகா காரணமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வபரிசுத்தமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அகாரணமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வாதிஷ்டான பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அபரிச்சின்ன பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வ காரணனே பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வசக்தி பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சர்வாத்மா பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிஷ்பிரபஞ்ச பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஏகரூபமாம் பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் வேதமந்திர பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பாபநாசம் பற்றிடா பரப்பிரம்ம சொரூபனே நம

ஓம் நிர்விகற்ப	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நானாரூபமாம்	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நிர்விசேஷ	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சுககணமாம்	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஓங்கார ரூபனே	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சகல லோக	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சூசகமாம்	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் நாதமாம்	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சிதாகாச	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் முக்தி நல்கும்	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் ஏக நாயக	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் அருட்ஜோதி	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் சிவஜோதி	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பிரக்ஞான	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பிரக்ஞான	பரப்பிரம்ம சொரூபனே நம
ஓம் பிரக்ஞான	பரப்பிரம்ம சொரூபனே நம

ஓம் சிவகடாக்ஷம் பரி பூரணம். குரு கடாக்ஷம் பரி பூரணம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அத்வைத ரச மஞ்சரி

முன்னுரை

எல்லா பிறவிகளிலும் மேலானது. மனிதப் பிறவி அது அடைவதற்கு அரிது. மனிதப் பிறவியில் தன்னை தான் அறிவது சிறப்பாம். தன்னை யார் ? என்று அறிய அவா உடைய முமூட்சுக்கள் சத் சங்கத்தோடு தொடர்பு கொண்டு சத் விசாரம் செய்து (கேட்டல். சிந்தித்தல். தெளிதல்) சத் சொரூப. சித் சொரூப. ஆனந்த சொரூபமே யான் என்று திடமாக அறியவும். உணரவும் ஏதுவாயுள்ள **அத்வைத ரச மஞ்சரி** என்னும் இந்நூல் எங்களின் அத்வைத வேதாந்த குரு. **தவத்திரு ரெட்டியாரூர் சு.பழனியப்ப சுவாமிகள்** அவர்களால் இயற்றப்பட்ட அவர் சமாதி அடைவதற்கு சில தினங்களுக்கு முன் அவரின் சீடர் **திரு ஞானஜோதி. தங்கவேல்** அவர்களிடம் கொடுக்கப்பட்ட **அத்வைத ரச மஞ்சரி என்னும் இந்த நூலை எங்களின் சற்குரு பழனியப்ப சுவாமிகளின் பனிரெண்டாம் ஆண்டு குரு பூஜை நன்னாளில்** சற்குருவின் பாதங்களுக்கு காணிக்கையாக்குகிறோம். இந்நூலில் கூறியுள்ள அர்த்தங்களை கற்றுத் தெளிவடைந்து சச்சிதானந்த சொரூபமே யான் என உணர்ந்து குரு அருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

கோவை மாவட்ட தலைமை தத்துவ ஞான சபை

மெய்யன்பர்கள், போடிப்பாளையம், பொள்ளாச்சி.

1. எல்லா வேதங்களும் எல்லா மஹரிகளும் **மேலானது அத்வைதமே** என்று விசேசமாய்க் கூறியிருப்பதால் துவிதத்தில் மூழ்கி கிடக்கும் மக்களுக்கு உபகாரமாக நினைத்து இந்த அத்வைத ரச மஞ்சரி என்கிற பெயரை வைத்து அடியேனுக்கு நினைவூட்டியது **சச்சிதானந்தகுருவே** ஆகுமென்று துணிவாக கூறி எல்லா மதங்களிலும் விசேசமாகவுள்ளது அத்வைதமே என்று மேலே கூறிய வேதங்களும் மகரிஷிகளும் கூறியது உண்மையானதால் அதை விசாரித்தறிபவர் பேதவாதிகளே ஆனாலும் **தத்துவஞானம்** உண்டாகி அத்வைத அகண்டாகாரமென்கிற மோட்ச வீட்டையே அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

2. ஒன்றை மற்றொன்றாகத் தோற்றி வைப்பதும் பல்வேறு ஜீவபேதத்தை உடையதும் அஞ்ஞானமே ஆகும். அந்த அஞ்ஞானத்தை உடையவன் எளிதில் முக்தி அடையப்படுவது அன்று. அது எது போல என்றால் கண்ணாடி வீட்டின் நான்கு பக்கத்திலும் பிரதிபிம்பித்துள்ள உள்வெளியில் அடைக்கப்பட்ட ஒரு அறியா பாலகன் எப்படி வெளியில் செல்ல முடியாதோ அதுபோல.

3. நல்ல சமதமாதி சாதனங்களை அடைந்துள்ள சிறந்த அதிகாரி புருடனாலேயே **தத்துவமசி** மஹாவாக்கிய சோதனத்தை செய்து பரதத்துவத்தை அடைந்து தன் சொரூபமான அத்வைதத்தை சுலபமாக அடையப்படுகிறது. அது எதுபோல என்றால் திருடர்களால் ஒருவனை அடர்ந்த வனத்தில் அநேக காலம் அடைக்கப்பட்டு மீண்டும் தன் கிராமத்தை அடைய வேண்டின் அந்த ஊர் வழியை அறிந்த புருடனது வாக்கியத்தாலேயே அடைய வேண்டும் அதுபோல.

4. **வியாபகமான ஆன்மாவே நீ** என்று மகாவாக்கிய அர்த்த, விளக்க, லட்சணத்தால் நான் கர்த்தா போக்த்தா என்ற அற்பத் தன்மை நீங்கி அதனால் அகண்ட பாவம் சித்திக்கிறது. அது எதுபோல என்றால் வேடர்களால் வளர்க்கப்பட்ட ராஜபுத்திரன் அவன் உண்மையான ராஜபுத்திரன் என்பதை ஒருவனால் விளக்கப்பட்ட பொழுது தான் வேடன் என்கிற நினைவை விடுத்து **நான் ராஜபுத்திரனே** என்று அறிந்ததுபோல.

5. பூர்வம் சத்து சித்து ஆனந்த வடிவமாகிய கூடஸ்த பிரம்மத்திற்கு பந்தம் என்றும் மோட்சமென்றும் சொல்வது அஞ்ஞானத்தின் செயலாகிய அறியாமையின் செயலே ஆகும் என்பதாகும்.

6. மலடிமகன் ஒருவன் பெரிய வீரனாகி அநேக நாடுகளை வெற்றி கொண்டு பட்டம் சூடி பின் மனைவி மக்களோடும் ஐஸ்வரியங்களோடும் வாழ்ந்து பின் வேறொரு வீரனால் நாடுகளை இழந்து இறந்தான் என்று கூறுவது முற்றிலும் பொய்யாவதே போல தெளிவின்றிய அறிவால் உலகம் இருக்கிறதாக கூறுதலும் பின்பு விசாரித்து பார்த்த பின் தெளிவுற்ற அறிவில் சிறிதேனும் இருப்பதில்லை என்று கூறுவதும் பயந்தவனுக்கு இருட்டில் நாற்புறமும் பிசாசின் தோற்றம் தோன்றி அதே இடத்தில் தீபம் கொண்டுவரின் என்ன இருப்பது ஆகுமோ அதுபோல.

7. சித்து வடிவான **ஆத்மா ஜோதியே** உலகமாக விளங்குகிறது. நன்கு விசாரித்து பார்க்கும் பொழுது ஆன்மாவிற்கு வேறாக எந்த ஒரு பொருளும் இருக்கிறது இல்லை. அது எது போல என்றால் மயக்கத்திற்கு ஆதாரமாயிருந்த கயிறே பாம்பாக தோற்றமளித்து நன்றாய் விசாரித்துப் பார்த்தால் கயிற்றைத் தவிர வேறு பொருள் எவ்வாற்றாலும்

இருப்பதில்லை அதுபோல.

8. இந்த உலகம் அஞ்ஞானத்தின் தோற்றமே ஆகும்.விசாரத்தால் பார்க்கில் இந்த உலகம் ஆன்மாவாகவே இருந்து கொண்டு நீங்காத சுகத்தையே வெளிப்படுத்துகிறது. அது எதுபோல என்றால் தோற்றமாத்திரமான இந்த உலகை சத்தியமென்று பார்ப்பானாயின் அது ஒருவன் கிளிஞ்சலை வெள்ளியென்று விற்று பணக்காரன் ஆகியிருக்க வேண்டும். ஆதலால் வெள்ளி தோற்றத்தால் பணக்காரனாகவும் இல்லை. உலகத் தோற்றத்தால் மோட்சசுகமும் இல்லாதது போல.

9. இந்த உலகத்தை விசாரித்து பார்க்கும் பொழுது நிகழ்காலத்திலே இருப்பதில்லை அல்லது முன்காலத்திலும் இருப்பதில்லை. எதிர்காலத்திலும் இருப்பதில்லை அப்படி முக்காலத்திலும் இருப்பதில்லை என்கிற இந்த உலகத்தின் தோற்றமானது அதிசயமே ஆகும்.அது எது போல என்றால் இந்த உலகம் மாயையின் கற்பனையாலேயே தோற்றமாத்திரமாக தோற்றினும் ஜால வித்தைக்காரனின் இந்திரஜாலத்தால் கந்தர்வ நகரத்தை காட்டுவது போல.

10. இந்த பூமாவாகிய ஆத்மா ஒன்றாகவே இருப்பதாயினும் தன்னிடத்தில் பொய்யாக உண்டான தமோகுணத்தின் மறைப்பாகிய தொடர்பால் பல வேற்றுமையுள்ளதாக விளங்குகின்றது. அது எதுபோல என்றால், சந்திரன் இரண்டின்றி ஒன்றாகவே இருப்பினும் மனிதன் கண் படலத்தால் இரு சந்திரனாக தோற்றமளிக்கிறது அதுபோல.

11. இந்த பூமியும் பூமியிலுள்ள உலகமும் வானமும் வானத்திலுள்ள உலகமும் மிகப்பெரிய அறியாமையால் உள்ளவை தோற்றினும் நிலையற்ற தன்மையைப் பார்ப்பாய் அது எது போல என்றால் தத்துவஞானத்தால் பிராந்தி ஆகிய அஞ்ஞானத்துக்கு நாசம் ஏற்படும்போது அந்த தோற்றமானது மீண்டும் தோற்றுகிறதில்லை அல்லவா அதுபோல.

12. இந்த உலகம் கந்தவர்வ நகரம் போல் நிலையற்றது. ஆயினும் இந்த கந்தர்வ நகரம் ஆகாயத்தை ஆதாரமாக கொண்டுள்ளது. அது எதுபோல என்றால் ஆகாயத்தில் மின்னல் தோன்றுமாயின் இந்த கந்தர்வ நகரம் உடனே மறைந்து போவது போல் ஆத்ம ஞானமானது வெளிப்படும் பொழுது இந்த உலகம் யாவும் அப்படியே மறைந்து விடுகின்றது அதுபோல.

13. உலகினது சிருஷ்டிக் கிரமத்தை அறிந்த நாம் முறையே ஒன்றிலொன்றாய் ஒடுங்குவதால் முடிவில் சிந்தனை வடிவ மனமே சிவசொரூபமாக மிஞ்சுகிறது. அது எதுபோல என்றால் எதிரியின் ரதத்தையும் அதன் சாரதியையும் கொன்று கீழேத் தள்ளி வாசனைகள் என்னும் மத யானையையும் கொல்லப்பட்ட பிறகு அந்த வீரனே மிஞ்சுவது போல அத்வைதமே மிஞ்சுகிறது.

14. இந்த சரீரமானது இன்றே மறைந்து போகட்டும் அல்லது சந்திர சூரியன்கள் உள்ள காலம் வரை இருக்கட்டும். சித் வடிவமாயுள்ள எனக்கு இதனால் என்ன விசேசமுள்ளது? ஒரு புதுமையும் உண்டாவதில்லை. குடமானது இப்பொழுதே உடைந்து போயினும் அல்லது நீண்ட காலம் இருப்பதாயினும் இதனால் குடத்தினுள் உள்ள ஆகாயத்திற்கு ஒரு புதுமையும் காணவில்லை அதுபோல.

15. மனோசங்கற்பத்தால் உண்டாக்கப்பட்டது தூலவுலகம். அத்தகைய உலகை சத்தியமென்று மூடபுத்தியுள்ளவன் மயக்கத்தையடைகிறான். அது எது போல என்றால்

நீண்ட நாள் மனைவியை பிரிந்துள்ளவன் மனோ உல்லாசத்தால் தோன்றிய ஒரு பெண்ணைப் பார்த்ததும் அவளே இவள் என்று எப்படி ஓடுகிறானோ அதுபோல.

16. இயற்கையாக சச்சிதானந்த சொரூப ஞானத்தோடு சுகமாக உள்ள என்னிடத்தில் துக்கம் தோன்றுமாயின் அது அஞ்ஞானத்தோடுள்ள ஒருவன் உலகம் இருக்கிறது என்று கூறுவானாயின் அதை வேறு யாதோமோரிடத்து பார்க்கப்படாத அதிசய வடிவம் தோன்றினால் இது தகுதி இல்லாத இடத்தில் தோன்றும் காட்சி நிச்சயிப்பது போல.

17. அத்தியாசப் பேதத்தால் அஞ்ஞானம் ஆத்மாவை மறைக்கப்படுவதாயினும் சித்தே வடிவமாகிய மூலப்பொருள் நீக்கமற நிறைந்திருக்கும் சுபாவத்தை எப்பொழுதும் விடுவதில்லை. நாலுவித அசையும் பொருள் அசையா பொருள்களை சித்திரமாக எழுதியபின் விசித்திரமாக விளங்குவதே ஆயினும் நூலால் ஆக்கப்பட்ட தன் வஸ்த்திர சுபாவத்தை விடவில்லை அதுபோல.

18. தனது நிஜ சொரூபம் சச்சிதானந்த வடிவாயும் அகண்டமாயும் இருக்கிறது என்று அறியாத ஒருவன் உடலையும் உலகையும் யான் எனது என்று எண்ணுகிறான். ஆன்மாவின் இலக்கணம் அறியாத ஒருவன் அஞ்ஞானத்தால் தேகம் இந்திரியம் பிரபஞ்சம் முதல் யாவற்றையும் யான் எனதென்று எப்படி அடைந்துள்ளானோ அதுபோல.

19. முனிவர்கள் இந்த உலகத்தோற்றம் புதிது புதிதாய் தோற்றினும் சுகமற்றது என்று விசாரித்துத் தனதுள்ளேயுள்ள இந்த ஆன்ம ரசத்தை பானம் பண்ணுவது எது போல என்றால் அறிவுள்ளவர்கள் புதிது புதிதாய் தோற்றுகிற கானல் ஜலத்தை பொய்யென்று விடுத்து தேவகங்கை பெருக்காகிய ஜலத்தை பருகி பானம் பண்ணியதுபோல.

20. மிகவும் சமீபத்தில் இருப்பதாயும் சுகமே சொரூபமாயும் உள்ள ஆத்ம தத்துவத்தை மூடபுத்தியுள்ள உலக மக்கள் பார்க்க விரும்பாதிருப்பது ஆச்சர்யமாயிருக்கிறது. அது எதுபோல என்றால் எல்லா உலகத்தையும் பிரகாசித்து கொண்டிருக்கிற ஆகாய வெளியிலுள்ள சூரியனை ஆந்தை பார்க்க விரும்பாததுபோல.

21. இல்லாத கானல் நீர் உள்ளதாக தோற்றுவது போல இந்த உலகமானது ஆனந்தத்தை வெளியிடுவதாயினும் மூடன் துக்கமாக எண்ணி மயக்கத்தை அடைகிறான். அது எதுபோல என்றால் தீபம் முதலிய பிரகாசத்தால் தெளிவாகவும் வேறாகவும் காணப்படும் தனது சரீரத்தின் நிழலை பார்த்து அறியா பாலகன் பயன்படுவது போல.

22. மாயையும் உண்டு பண்ணப்பட்ட ஆகாயம் முதலிய எல்லா சித்திரத் தோற்றங்களும் ஒன்றோடும் பற்றாத ஆத்மாவை விசாரம் செய்ய சமர்த்துள்ளது அன்று. அது எதுபோல என்றால் தாமரையானது ஜலத்தை பற்றியிருப்பினும் அந்த ஜலமும் ஜலத்தின் அலையும் நுரையும் குமிழியும் எங்ஙனம் தாமரையை நனைக்க முடியாதோ அதுபோல.

23. இந்த உலக விசித்திர தோற்றங்கள் தோற்ற மாத்திரமான வடிவுள்ளவைகள். அவைகள் எல்லாம் தோற்றப் பொருள்களிலும் தாக்கற்ற சாட்சியாகிய என்னை தீண்டாதவைகளாகின்றன. அது எதுபோல என்றால் ஆகாயத்தில் கற்பித மாத்திரமாக தோற்றுகிற மேக முதலிய வாச்சிய தோற்றங்களாகிய அனைத்தும் பரிசுத்தமாகிய ஆகாயத்தை தொடாதவைகளே ஆகும் அதுபோல.

24. சாட்சியாகிய என்னிடத்தில் சாக்கிர சொப்பன சுழுத்தி அவஸ்த்தை மூன்றும் அடிக்கடி தோன்றி மறையும் சுபாவமுள்ளன. அது எதுபோல என்றால் சர்ப்பராஜனான

ஆதிசேடனாகிய தன்னிடத்தில் அடிக்கடி தோன்றி மறையும் சட்டையைப் போல சாட்சியாகிய என்னிடத்தில் மூன்று அவஸ்த்தையும் அடிக்கடி தோன்றி மறைகின்றன அதுபோல.

25. சொப்பனம் என்றும் சாக்கிரம் என்றும் சொல் மாத்திரத்தாலுண்டான வேற்றுமையே ஆகும். எதனாலெனில் அவ்விரண்டும் மாயையின் காரியமாயிருத்தலாலும் சாக்கிர சொப்பனம் இரண்டும் தோன்றி மறைவதில் சமானமாயிருப்பதாலும் பொய்யென்றே சொல்லப்பட்டது. அது எதுபோல என்றால் ஆன்மாவிற்கு உள் என்றும் வெளி என்றும் சொல்லப்பட்டது. அதுபோல ஆன்மாவிற்கு உள் என்றும், வெளி என்றும் கூறுவது பெயர் மாத்திர வேற்றுமையே ஆகும்.அவைகளின் உண்மைச் சொரூபம் சச்சிதானந்த வடிவமே ஆகும்.

26. வெளிவிவகாரங்களில் சிந்தனையில்லாது எல்லாம் விடுத்து ஓய்வு பெற்றவர்களும் உலக விகல்பங்களை விடுத்து சாந்தி பெற்று எல்லா இந்திரியங்களின் அடக்கம் உள்ளவர்களும் மனதையும் ஆன்மாவில் ஒடுக்கி ஆனந்தத்தையே மிச்சமாக உடையவர்கள் எவர்களோ அந்த மகாத்மாக்கள் விழித்து இருப்பவர்களே ஆயினும் தூங்குகின்றவர்களே என்று அறிய வேண்டும். நனவினில் சுழித்திபோல.

27. சரீரம் போதல் வருதலாகிய செயலைக் காண்கிறவர்கள் தேகியாகிய ஆத்மா போவதாக வருவதாக அறிகிறார்கள். ஆயினும் நான் அப்படி இருப்பதில்லை. அது எதுபோல என்றால் இந்த சந்திரன் மேகத்தில் நுழைந்து ஓடுகிறான் என்று ஒரு மூடன் அறிவானாயினும் அச்சந்திரன் ஓடுகின்ற மேகத்தின் சமீபத்திலும் இல்லை. மேக சம்பந்தமும் இல்லை. சந்திரனுக்கு மேக சம்பந்தம் இல்லாததுபோல் எனக்கு எப்போதும் தேக இந்திரிய மனம் சம்பந்தம் இல்லாதவன் என்று அறியவும்.

28. பொய்யாகிய இந்த உலக தோற்றம் மெய்யாகவே காணினும் ஆத்மாவை அறிந்த எனக்கு தோற்றும் பொருள்கள் யாதொரு கெடுதியையும் செய்வதில்லை. அது எதுபோல என்றால் சொப்பனத்தில் கண்ட யானை, புலி, சிங்கம் ஆகிய எல்லாம் சொப்பனம் என்று அறிந்தவனை அத்தோற்றங்கள் ஒன்றும் செய்யாததுபோல.

29. இந்த பிரபஞ்சம் பிரமத்தாலேயே தோற்றுகிறது. ஆயினும் பிரபஞ்சமாகிய இந்த உலகில் பிரம்மம் தோன்றவில்லை என்று சொல்வது எதுபோல எனில் இந்த உருவத்தில் முகம் இல்லை என்று மறதி வருமானால் அவன் விரைவில் சென்று கண்ணாடியை எடுத்துப் பார்க்கும் போது தேகத்திலுள்ள முகத்தின் மறதியை கண்ணாடி நீக்கியது போல தேகியாகிய ஆன்ம மறதியை **மகாவாக்கிய சோதனமே** மறதியை நீக்கி கண்ணாடி முகத்தை காட்டுவது போல தேகியை காட்டுகிறது என அறிய வேண்டுமாம்.

30. தாயால் எழுப்பப்பட்டு உண். உண் என்று உணவை ஊட்டப்பட்டவனாயினும் தூக்க மயக்கம் உள்ள அக்குழந்தை நான் உணவு உண்ணவில்லை என்று சொல்வதுபோல இந்த ஜீவேஸ்வரசகத்து இந்திர ஜால வித்தையைப் போல பொய் பொய்யென்று வேதமாகிய தாய் சொல்லக்கேட்டவனாயினும் விசய சுக மயக்கத்திலுள்ள குழந்தையை போல் உள்ள அஞ்ஞானிக்கு இவ்வுலகம் பொய்யாக அவனுக்கு விளங்கவில்லை என்பதாம்.

31. திருஷிய விசயங்களை அறியப்படும் வரையில் பூமாவாகிய ஆத்மா அறியப்படுவதில்லை. இந்த ஆன்மாவை நன்றாய் அறியப்படும் பொழுது இந்தத்

திருஷியம் அறியப்படுவதில்லை. அது எதுபோல என்றால் கடவுளாக காண்கிறவனுக்கு கல் தெரிவதில்லை. கல்லாக காண்கிறவனுக்கு கடவுள் தெரிவதில்லை என்பதாம்.

32. ஒருவரிடத்தில் பரோட்சஞானம் உதிக்கும் பொழுதே அவருடைய இருதயத்தில் இருக்கும் அறியாமை நாசமடைந்து பின் அபரோட்ச ஞானம் உதிக்கும் பொழுது எல்லா காலங்களும் அவித்தையும் நாசமடைகின்றன. அது எதுபோல என்றால் சந்திரன் ஒவ்வொரு நாளும் கலைகளால் (பிறைகளால்) விருத்தியடையும் பொழுது பெரிய இருட்டானது அப்படியே மெதுவாக நாசத்தை அடைவதுபோல.

33. பிரம்மானுபவரஸத்தால் நிறைவு பெற்ற முனிசிரேஷ்ட்டர்களிடத்தில் சித்து புருசரால் காட்டப்பட்ட அச்சித்துக்களெல்லாம் பின்னடைந்து ஓடுகின்றன. அது எதுபோல என்றால் மகாவாக்கிய விசாரம் நிலைத்த தத்துவ சிரேஷ்ட்டரிடத்தில் விதிவாக்கியங்கள் பின்னடைந்து ஓடுவது போல.

34. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆன்மாவை அறிந்த முனிசிரேஷ்ட்டனிடத்தின் முன் செய்த ஜெபதபங்கள் இருக்குமாயின். அது எதுபோல என்றால் போதுமான எல்லா ஐஸ்வர்யங்களையும் அடைந்துள்ள ஒரு அரசன் சூதாட்டத்தை ஆடியது போல.

35. சுருதிகளில் விதித்த கருமம், விலக்கிய கருமம் எல்லாக் கருமங்களையும் விடுத்து ஓய்வு பெற்ற ஆத்மஞானியை ஆனந்தங்கள் அனைத்தும் தானே வந்து சேருகின்றன. எல்லாவிவகாரங்களையும் விடுத்த பெரிய ஜட பாவமுள்ள சோம்பேறிக்கு பெரிய துன்பத்தை உண்டாக்குகின்ற விவகாரங்கள் அவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்குவது போல.

36. ஆன்மதத்துவத்தையே இடையறாது அனுசந்தானம் செய்து கொண்டு இருக்கிறவர்கள் முனிவர்களென்றும், அவனே தலைவன் என்று சொல்லலாம் அத்தகைய தலைவனை உலக விவகாரங்களை செய்பவன் ஆயினும் தன்னிஷ்ட்டப்படி சுற்றித்திரிபவனாயினும் இருப்பான். அவரை ஒரு குறிப்பிட்ட காரியங்களை செய்யும் படி ஏவுதல் கூடாது. அது எதுபோல என்றால் ஒரு அரசன் எல்லா ராஜ்ஜியத்தையும் ஆளும் தலைமை பதவியை பெற்று தனது இஷ்டப்படி சஞ்சரித்து கொண்டு இருக்கிறான். அவனை மக்களோடு சேர்நது இருக்கும்படி செய்வது கூடாத காரியம் அதுபோல.

37. தான் முன் ஜென்மத்தில் செய்த புண்ணிய பாவ கர்மங்களின் பயன் சுகமும் துக்கமுமாகவே இருக்கிறது. அவைகளை செய்தவர்கள் சுக துக்கத்தை அனுபவித்தே தீர வேண்டும் என்பது நியமமாம் ! **இந்த நியமம் தானே சிவம்** என்று உணர்ந்த ஞானிக்கு பாவ புண்ணியம் இல்லை என்பதாம். அதுபோல உவர் நிலத்துக்கு (களர்) பெரும் மழை பெய்ததால் சுகமும் இல்லை. நெடுங்காலம் மழை இல்லாமல் வெய்யிலால் சுடப்பட்டாலும் துக்கமும் இல்லை. மழையால் விளைச்சலும் இல்லை. வெய்யிலால் காய்ச்சலும் இல்லை அதுபோல.

38. அதிகாரியாகிய ஒரு புருசன் முன் செய்த புண்ணிய பாவ கரும வடிவத்தின் பயனான அதிக சுகத்தையும் அதிக துக்கத்தையும் அனுபவித்தே தூய்மை அடைகிறான். அவனை அடைந்த கருமம் மீண்டும் தப்பிப்பதில்லை. அது எதுபோல் என்றால், கீரிப்பிள்ளை வாயில் அகப்பட்ட பாம்பு அந்தக் கீரிக்கு எத்தனை துன்பம் கொடுத்தாலும் அக்கீரிப்பிள்ளை யினிடத்தில் இருந்து பாம்பு விடுவித்துக் கொள்ள முடிவதில்லை அதுபோல.

39. ஆத்மாவை அறிந்தவனாயினும் ஊழ் வினையாகிய பிராப்த்த கருமபலத்தை

நிச்சயமாக அனுபவித்தே தீருவான். அது எதுபோல என்றால் ஒரு ஊரிலிருந்து வேறாரு ஊருக்கு செல்கிறவன் வழியில் பல துன்பங்கள் இருக்கிறது என்று தெரிந்தவனாயினும் துக்கப்பட்டாயினும் அந்த ஊரை அடைந்தே தீருவான் இடையில் நிற்க மாட்டான் அதுபோல.

40. அகத்தும் புறத்தும் மேலான சிவமே உள்ளது என்றும் அதையறிய விரும்பியவன் கடினமான விசாரத்தை செய்தாயினும் உண்மையை அடைவான். அதனால் துக்கப்படுவதில்லை. யுத்தத்தில் வெற்றியே கண்ணாக உள்ள தீரன் எதிரிகளால் கொடுக்கப்பட்ட கடினமான துன்பங்களே ஆயினும் அதனால் அவன் களைப்பு அடைவதில்லை என்பதாம்.

41. உலகத்தில் லௌகீகவிசயங்கள் மிகச் சிறந்தவைகளாகக் காணப்படினும் அதன் சிறப்பெல்லாம் கணத்தில் பங்கம் அடையும் என்ற உண்மையை அறிந்த தீரனை சிறிதும் திருப்தி செய்வதில்லை. ஒரு புருடன் அதிசய பெண் வேடம் பூண்டு கொண்டு பல ஆடல் பாடல்களை செய்தாலும் புருடனே என்ற உண்மையை அறிந்த யௌவன புருடனான காமுகனையுங் கூட சந்தோசப்படுத்த சாமர்த்தியம் அந்த வேடமணிந்த பெண்ணுக்கில்லை அதுபோல.

42. உள்ளத்தில் இடையறாது அனேக காலம் தீவிரமாக அனேககஷ்டங்களை சகித்து விசாரம் செய்து தனது ஆன்மாவை அறிந்தவன் முன்போல் விஷயங்களில் சிந்தனாசக்தியைச் செலுத்துவதில்லை. அனேகதரித்திரமுடைய ஒருவனுக்கு பூர்வபுண்ணியத்தால் யாதாவது ஓரிடத்தில் புதையல் அகப்பட்டு விட்டால் அதன வந்தனுக்குள்ள மகிழ்ச்சியும் மனநிறைவும் உள்ளவனாய் இருக்கிறான். முன்போல் தரித்திரம் ஏழ்மை குணத்தை அடைவதில்லை அதுபோல.

43. இயற்கை அழகுள்ள ஒரு ராஜனுக்கு ராஜ அணிகலன்களும் வந்தடைவது போல சுயம் பிரகாசமாகிய தனது ஆத்ம சொரூப மகிமையிலேயே மூழ்கி அனுபவித்துக் கொண்டிருக்கும் புருடனை சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் தானே வந்து அடைகின்றன. அது எது போல என்றால் மக்களுக்கு நண்பனும் செல்வத்தால் நிறைவு பெற்றவனும் ஆன அரசன் இருக்கும் பொழுது அவனுடைய வேலைக்காரர்களும் மற்றுமுள்ள இந்த உலக மக்களும் தானே சென்று அந்த ராஜனை அடைய விரும்பவதுபோல.

44. அஞ்ஞானமென்பது சிறிதேனும் கிடையாது. பிறகு உலகத்தின் இருப்பை எவ்வாறு கூற முடியும்? பிறகு ஜீவன் என்றும் ஈசன் என்றும் ஆசான் என்றும் உள்ள வேற்றுமைகள் ஆன்மாவினிடத்து காணவே இல்லை. தனிமையானதும் பயமற்றதும் சித்தே சொரூபமானதும் ஒன்றாய் ஆனந்த ரசத்தில் நிறைவு பெற்றதுமான ஒப்பற்ற பிரம்ம சொரூபமாகவே நான் இருக்கின்றேன்.

சுகமாயும், நித்தியமாயும், பிரகாசமாயும் வியாபகமாயும் நாம ரூபங்களுக்கு ஆதார மாயும், புத்தி அறியாததாயும், புத்தியை அறிவதாயும், சுத்தமாயும், அபாரமாயும், இருப்பது எதுவோ அதுவே நான்.

புத்தி என்கிற குகையில் இருக்கின்ற ஆத்மாவே நான் என்று அறிந்த புருடனுக்கு மாசு இல்லை, பாவம் இல்லை, சாவு இல்லை.

சுத்த சத்துவ குணத்தின் இயல்புகள் : 1. மனத்தெளிவு, 2. தன்னைதான் அறிதல், 3. சிறந்த அமைதி, 4. போதும் என்ற மனது, 5. சந்தோஷம், 6. பரமாத்மாவினிடத்து மனதை நிலைநிறுத்துதல்.

திருஷ்யம் அறியப்படுவதில்லை. அது எதுபோல என்றால் கடவுளாக காண்கிறவனுக்கு கல் தெரிவதில்லை. கல்லாக காண்கிறவனுக்கு கடவுள் தெரிவதில்லை என்பதாம்.

32. ஒருவரிடத்தில் பரோட்சஞானம் உதிக்கும் பொழுதே அவருடைய இருதயத்தில் இருக்கும் அறியாமை நாசமடைந்து பின் அபரோட்ச ஞானம் உதிக்கும் பொழுது எல்லா காலங்களும் அவித்தையும் நாசமடைகின்றன. அது எதுபோல என்றால் சந்திரன் ஒவ்வொரு நாளும் கலைகளால் (பிறைகளால்) விருத்தியடையும் பொழுது பெரிய இருட்டானது அப்படியே மெதுவாக நாசத்தை அடைவதுபோல.

33. பிரம்மானுபவரஸத்தால் நிறைவு பெற்ற முனிசிரேஷ்ட்டர்களிடத்தில் சித்து புருசரால் காட்டப்பட்ட அச்சித்துக்களெல்லாம் பின்னடைந்து ஓடுகின்றன. அது எதுபோல என்றால் மகாவாக்கிய விசாரம் நிலைத்த தத்துவ சிரேஷ்ட்டரிடத்தில் விதிவாக்கியங்கள் பின்னடைந்து ஓடுவது போல.

34. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆன்மாவை அறிந்த முனிசிரேஷ்ட்டனிடத்தின் முன் செய்த ஜெபதபங்கள் இருக்குமாயின். அது எதுபோல என்றால் போதுமான எல்லா ஐஸ்வர்யங்களையும் அடைந்துள்ள ஒரு அரசன் சூதாட்டத்தை ஆடியது போல.

35. சுருதிகளில் விதித்த கருமம், விலக்கிய கருமம் எல்லாக் கருமங்களையும் விடுத்து ஓய்வு பெற்ற ஆத்மஞானியை ஆனந்தங்கள் அனைத்தும் தானே வந்து சேருகின்றன. எல்லாவிவகாரங்களையும் விடுத்த பெரிய ஜட பாவமுள்ள சோம்பேறிக்கு பெரிய துன்பத்தை உண்டாக்குகின்ற விவகாரங்கள் அவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்குவது போல.

36. ஆன்மதத்துவத்தையே இடையறாது அனுசந்தானம் செய்து கொண்டு இருக்கிறவர்கள் முனிவர்களென்றும், அவனே தலைவன் என்று சொல்லலாம் அத்தகைய தலைவனை உலக விவகாரங்களை செய்பவன் ஆயினும் தன்னிஷ்டப்படி சுற்றித்திரிபவனாயினும் இருப்பான். அவரை ஒரு குறிப்பிட்ட காரியங்களை செய்யும் படி ஏவுதல் கூடாது. அது எதுபோல என்றால் ஒரு அரசன் எல்லா ராஜ்ஜியத்தையும் ஆளும் தலைமை பதவியை பெற்று தனது இஷ்டப்படி சஞ்சரித்து கொண்டு இருக்கிறான். அவனை மக்களோடு சேர்ந்து இருக்கும்படி செய்வது கூடாத காரியம் அதுபோல.

37. தான் முன் ஜென்மத்தில் செய்த புண்ணிய பாவ கர்மங்களின் பயன் சுகமும் துக்கமுமாகவே இருக்கிறது. அவைகளை செய்தவர்கள் சுக துக்கத்தை அனுபவித்தே தீர வேண்டும் என்பது நியமமாம் ! **இந்த நியமம் தானே சிவம்** என்று உணர்ந்த ஞானிக்கு பாவ புண்ணியம் இல்லை என்பதாம். அதுபோல உவர் நிலத்துக்கு (களர்) பெரும் மழை பெய்ததால் சுகமும் இல்லை. நெடுங்காலம் மழை இல்லாமல் வெய்யிலால் சுடப்பட்டாலும் துக்கமும் இல்லை. மழையால் விளைச்சலும் இல்லை. வெய்யிலால் காய்ச்சலும் இல்லை அதுபோல.

38. அதிகாரியாகிய ஒரு புருசன் முன் செய்த புண்ணிய பாவ கரும வடிவத்தின் பயனான அதிக சுகத்தையும் அதிக துக்கத்தையும் அனுபவித்தே தூய்மை அடைகிறான். அவனை அடைந்த கருமம் மீண்டும் தப்பிப்பதில்லை. அது எதுபோல் என்றால், கீரிப்பிள்ளை வாயில் அகப்பட்ட பாம்பு அந்தக் கீரிக்கு எத்தனை துன்பம் கொடுத்தாலும் அக்கீரிப்பிள்ளை யினிடத்தில் இருந்து பாம்பு விடுவித்துக் கொள்ள முடிவதில்லை அதுபோல.

39. ஆத்மாவை அறிந்தவனாயினும் ஊழ் வினையாகிய பிராப்த்த கருமபலத்தை

நிச்சயமாக அனுபவித்தே தீருவான். அது எதுபோல என்றால் ஒரு ஊரிலிருந்து வேறாரு ஊருக்கு செல்கிறவன் வழியில் பல துன்பங்கள் இருக்கிறது என்று தெரிந்தவனாயினும் துக்கப்பட்டாயினும் அந்த ஊரை அடைந்தே தீருவான் இடையில் நிற்க மாட்டான் அதுபோல.

40. அகத்தும் புறத்தும் மேலான சிவமே உள்ளது என்றும் அதையறிய விரும்பியவன் கடினமான விசாரத்தை செய்தாயினும் உண்மையை அடைவான். அதனால் துக்கப்படுவதில்லை. யுத்தத்தில் வெற்றியே கண்ணாக உள்ள தீரன் எதிரிகளால் கொடுக்கப்பட்ட கடினமான துன்பங்களே ஆயினும் அதனால் அவன் களைப்பு அடைவதில்லை என்பதாம்.

41. உலகத்தில் லௌகீகவிசயங்கள் மிகச் சிறந்தவைகளாகக் காணப்படினும் அதன் சிறப்பெல்லாம் கணத்தில் பங்கம் அடையும் என்ற உண்மையை அறிந்த தீரனை சிறிதும் திருப்தி செய்வதில்லை. ஒரு புருடன் அதிசய பெண் வேடம் பூண்டு கொண்டு பல ஆடல் பாடல்களை செய்தாலும் புருடனே என்ற உண்மையை அறிந்த யௌவன புருடனான காமுகனையுங் கூட சந்தோசப்படுத்த சாமர்த்தியம் அந்த வேடமணிந்த பெண்ணுக்கில்லை அதுபோல.

42. உள்ளத்தில் இடையறாது அனேக காலம் தீவிரமாக அனேககஷ்டங்களை சகித்து விசாரம் செய்து தனது ஆன்மாவை அறிந்தவன் முன்போல் விஷயங்களில் சிந்தனாசக்தியைச் செலுத்துவதில்லை. அனேகதரித்திரமுடைய ஒருவனுக்கு பூர்வபுண்ணியத்தால் யாதாவது ஓரிடத்தில் புதையல் அகப்பட்டு விட்டால் அதன வந்தனுக்குள்ள மகிழ்ச்சியும் மனநிறைவும் உள்ளவனாய் இருக்கிறான். முன்போல் தரித்திரம் ஏழ்மை குணத்தை அடைவதில்லை அதுபோல.

43. இயற்கை அழகுள்ள ஒரு ராஜனுக்கு ராஜ அணிகலன்களும் வந்தடைவது போல சுயம் பிரகாசமாகிய தனது ஆத்ம சொரூப மகிமையிலேயே மூழ்கி அனுபவித்துக் கொண்டிருக்கும் புருடனை சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் தானே வந்து அடைகின்றன. அது எது போல என்றால் மக்களுக்கு நண்பனும் செல்வத்தால் நிறைவு பெற்றவனும் ஆன அரசன் இருக்கும் பொழுது அவனுடைய வேலைக்காரர்களும் மற்றுமுள்ள இந்த உலக மக்களும் தானே சென்று அந்த ராஜனை அடைய விரும்பவதுபோல.

44. அஞ்ஞானமென்பது சிறிதேனும் கிடையாது. பிறகு உலகத்தின் இருப்பை எவ்வாறு கூற முடியும்? பிறகு ஜீவன் என்றும் ஈசன் என்றும் ஆசான் என்றும் உள்ள வேற்றுமைகள் ஆன்மாவினிடத்து காணவே இல்லை. தனிமையானதும் பயமற்றதும் சித்தே சொரூபமானதும் ஒன்றாய் ஆனந்த ரசத்தில் நிறைவு பெற்றதுமான ஒப்பற்ற பிரம்ம சொரூபமாகவே நான் இருக்கின்றேன்.

சுகமாயும், நித்தியமாயும், பிரகாசமாயும் வியாபகமாயும் நாம ரூபங்களுக்கு ஆதார மாயும், புத்தி அறியாததாயும், புத்தியை அறிவதாயும், சுத்தமாயும், அபாரமாயும், இருப்பது எதுவோ அதுவே நான்.

புத்தி என்கிற குகையில் இருக்கின்ற ஆத்மாவே நான் என்று அறிந்த புருடனுக்கு மாசு இல்லை, பாவம் இல்லை, சாவு இல்லை.

சுத்த சத்துவ குணத்தின் இயல்புகள் : 1. மனத்தெளிவு, 2. தன்னைதான் அறிதல், 3. சிறந்த அமைதி, 4. போதும் என்ற மனது, 5. சந்தோஷம், 6. பரமாத்மாவினிடத்து மனதை நிலைநிறுத்துதல்.

மகாவாக்கிய 100 வினா - விடை (1)

வினா 1 மனிதப்பிறவிக்கு வந்த சீவர்கள் நித்திய சுகத்தை அனுபவிக்கச் செய்து முடிக்க வேண்டிய சொந்தக் கர்மம் யாது ? சொந்த தர்மம் யாது ?

விடை மகாவாக்கிய விசாரமாகிய கர்மமே நித்திய சுகத்தை அனுபவிக்க ஒருவர் செய்து முடிக்க வேண்டிய சொந்தக்கர்மம் ஆகும். தத்துவ ஞானத்தைத் தரத்தக்கதாய் உள்ள மகாவாக்கிய விசாரம் நிலை பெருவதற்குச் செய்யும் தர்மமே சாத்வீக தர்மமாகிய சொந்த தர்மமாகும்.

வினா 2 ஒருவர் எவ்வளவு காலம் வேதாந்த விசாரம் செய்து கொண்டே இருக்க வேண்டும் ?

விடை எப்படி தூலதேகம் உள்ள பரியந்தம் அதற்கு அன்னம் புசித்துக் கொண்டிருக்க வேண்டுமோ, அதே போல ஆபாசனும் ஆபாசனுடைய செயலும் ஒருவரிடம் எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலமும் வேதாந்த விசாரம் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

வினா 3 நவசக்திகள் யாவை ?

விடை 1. அபின்னா சக்தி 2. பராசக்தி 3. ஆனந்தரூபசக்தி 4. சித்ரூபசக்தி 5. சத்துரூபசக்தி 6. பின்னாசக்தி 7. மாயாசக்தி 8. அவித்தையாசக்தி 9. அஞ்ஞானசக்தி என ஒன்பது வகைப்படும்.

வினா 4 தூல தேகத்தின் சகஜ தர்மம் யாது ?

விடை சாதி, வர்ணம், ஆச்சிரமம், குலம், கோத்திரம் முதலியவை தூல தேகத்தின் சகஜ தர்மம் ஆகும்.

வினா 5 அந்தக் காரணத்தின் சகஜ தர்மம் யாது ?

விடை ராகம், துவேசம், காமம், குரோதம், லோபம், மோகம் முதலியவையே அந்தக் காரணத்தின் சகஜ தர்மம் ஆகும்.

வினா 6 சீவனின் சகஜ தர்மம் யாது ?

விடை அகந்தை, அபிமானம், ஆசை, கோபம் ஆகிய இந்த நான்கும் சீவனின் சகஜ தர்மம் ஆகும்.

வினா 7 அவித்தையின் சகஜ தர்மம் யாது ?

விடை மூவகைச் சீவர்களாகிய தத்துவ ஞானநிஷ்டன், கர்மநிஷ்டன், சோம்பல், நித்திரைமயக்கம் உடையவர்கள் என்கிற மூவகைச் சீவர்களை தோற்றுவிப்பதே அவித்தையின் சகஜ தர்மம் ஆகும்.

வினா 8 மாய்யயின் சகஜ தர்மம் யாது ?

விடை பஞ்ச மூர்த்திகளைத் தோற்றுவிப்பதும், நரகம், சொர்க்கம், நன்மை, தீமைகளே மாயையின் சகஜ தர்மம் ஆகும்.

வினா 9 பஞ்ச மூர்த்திகளின் சகஜ தர்மம் யாது ?

விடை சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரஹம் என்னும் பஞ்சகிருத்தியங்களே பஞ்சமூர்த்திகளின் சகஜ தர்மமாகும்.

வினா 10 உலகத்தில் உள்ள மக்களில் திருஷ்டியை உடைய மக்கள் என்று யாரைச் சொல்வது ?

விடை கற்பிதமாகத் தோற்றுகிற அலை, நுரை, குமிழி முதலியவைகளை சமுத்திர சலமாகவே பார்ப்பது போல, கற்பிதமாகத் தோற்றுகிற சீவேஸ்வர ஜகத்தை ஆத்மாவாகிய தன்னில் ஒடுக்கிக் காண்பதே தன்மய திருஷ்டி எனப்படும்.

வினா 11 சாக்கிரம் முதலிய மூன்று அவஸ்தைகளிலும் பிரவேசிக்கிர புத்தி, விருத்தி, சமாதி அவஸ்தைக்கு செல்லாமல் இருப்பதற்குக் காரணம் யாது ?

விடை அவித்தை அல்லது அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம் இந்த மூன்றும் தடையாய் உள்ளதே காரணமாம்.

வினா 12 பூத இருள் என்பது யாது ? ஆவரண இருள் என்பது யாது ?

விடை வீட்டினுள் இருக்கும் வெள்ளிப்பாத்திரம், பித்தளைப் பாத்திரம் முதலியவைகளை மறைப்பது எதுவோ அதுவோ பூத இருள் எனப்படும். சிவத்தால் ஆக்கப்பட்ட மனித தேகமாகிய வீட்டினுள் இருக்கும் ஆன்ம ரத்தினத்தைத் தெரியாமல் மறைப்பது எதுவோ அதுவே ஆவரண இருள் எனப்படும்.

வினா 13 கர்த்தா என்பவன் எப்படிப்பட்டவன் ? அகர்த்தா என்பவன் எப்படிப்பட்டவன் ?

விடை தேகம், புத்தி, சீவன் ஆகிய இம்மூன்றையும், நான் என்று எண்ணி அதற்கு அடிமைப்பட்டவனே கர்த்தா எனப்படுவன். 'இம்மூன்றும் நான்' என்கின்ற நினைவை நாசம் பண்ணி, 'ஆத்மாவே நான்' என்னும் நினைவுடையவனே அகர்த்தா எனப்படுவன்.

வினா 14 அஞ்ஞான சாக்கிரம் என்பது யாது ? அதனால் பொய்யானது எது ?

விடை ஒருவரது புத்தி விருத்தியானது இந்திரியங்களுடன் கூடி பஞ்ச பூத பதார்த்தங்களை மெய் என்று எண்ணி அனுபவிக்கிற காலமே அஞ்ஞான சாக்கிரம் எனப்படும். இந்த சாக்கிரத்தில் உள்ளவர்களுக்கு சொர்ப்பன பதார்த்தங்கள் பொய்யாய் விட்டது.

வினா 15 ஞான சாக்கிரம் என்பது எது ? அதனால் பொய்யானது எது ?

விடை ஒருவரது புத்தி விருத்தி வேதப் பிரமாண அர்த்தத்துடன் சேர்ந்து தன் ஆன்ம சொரூபத்தை அறிந்து ஆத்மானந்தத்தை அனுபவிக்கும் காலமே ஞான சாக்கிரம் எனப்படும். இந்த ஞான சாக்கிரத்தால் விவகாரிக சத்தையாகிய சாக்கிர பதார்த்தங்கள் பொய்யாயிற்று.

வினா 16 தோசமின்றிய பார்வை உடையவர் யார் ?

விடை ஆபாசரகித விருத்தி உடையவர்களே தோசமின்றிய பார்வை

உடையவர்கள் ஆவர்.

வினா 17 ஆபாசரகித விருத்தி உடையவர் யார் ?

விடை விபரீத பாவனையை நாசம் செய்தவர்களே ஆபாசரகித விருத்தியை உடையவர் ஆவார்.

வினா 18 பேதரகித வசனம் உடையவர் யார் ?

விடை உற்பத்தி நாசம் இன்றிய மெய்ப்பொருளைப் பற்றி வசனிப்பவர்களே பேத ரகித வசனம் உடையவர்கள் ஆவார்கள்.

வினா 19 எப்படிப்பட்டது பந்தம் ? எப்படிப்பட்டது முத்தி ?

விடை சீவன்வேறு, பிரம்மம்வேறு என்று எண்ணும் பேத ஞானமே பந்தம் எனப்படும். சீவனே பிரம்மம் என்று எண்ணும் அபேத ஞானமே முத்தி எனப்படும்.

வினா 20 பிரம்ம சொரூபத்தினிடத்தில், மாயை பின்னமாய் உள்ளதா ? அல்லது அபின்னமாய் உள்ளதா ?

விடை மாயை பிரம்ம சொரூபத்திற்குப் பின்னம் எனில் சுசாதி, விசாதி, சுவகத பேதம் அற்றது பிரம்மம் என்னும் சுருதிக்கும், அத்வைதம் பிரம்மம் என்னும் சுருதிக்கும் விரோதம் வரும். அபின்னம் எனின் முத்தி மோட்சம் அடைந்த ஞானிகள் இருப்பதால் அதற்கும் விரோதம் வரும். அதனால் மாயை பிரம்ம சொரூபத்தில் பின்னமாயும் இல்லை அபின்னமாயும் இல்லை என்பதாம்.

வினா 21 மாயையை உடையவர் யார் ? மாயா மயக்கத்தை உடையவர் யார் ?

விடை மாயா பிரதி பிம்பராகிய ஈஸ்வரனே மாயையை உடையவன். அது எதுபோல எனின் மதுவாகிய லாகிரியை வைத்திருப்பவனைப் போல அது அவனை மயக்குவது இல்லை அதை வாங்கி உண்பவர்களை மதுவில் உள்ள லாகிரி மயக்குகிறது. அதுபோல மதுவைப் போல் உள்ள மாயையின் காரியமாகிய நாமரூபம் என்னும் லாகிரியாகிய மயக்கத்தை உடையவர்கள் சீவர்கள் ஆகும்.

வினா 22 தூல லயசிந்தனம் என்பது யாது ?

விடை மண்ணின் காரியமாகிய கடம், கலசம் முதலியவை மண்ணின் சொரூபமே யாதல் போலவும், இரும்பின் காரியமாகிய கத்தி, ஈட்டி முதலியவைகள் இரும்பின் சொரூபமேயாதல் போலவும் தங்கத்தின் காரியமாகிய அட்டி, பதக்கம் ஆகியவை தங்கத்தின் சொரூபமேயாதல் போலவும், ஜலத்தின் காரியமாகி அலை, நுரை, குமிழி அனைத்தும் காரியமாகிய ஜலத்தின் சொரூபமேயாதல் போலவும், பிரகிருதியின் காரியமாகிய சீவேஸ்வர ஜகத் அனைத்தும், மூல காரணமாகிய சச்சிதானந்த சிவசொரூபத்திற்குப் பின்னமன்று. அந்தச் சிவப்பிரகாசமே எனக்குள்ளும் நிறைந்து விளங்கிக் கொண்டிருக்கிறது என்று புத்தி விருத்தி இடையின்றி நினைத்து கொண்டிருப்பதே தூலலயசிந்தனம் எனப்படும்.

வினா 23 சூக்கும லய சிந்தனம் என்பது யாது எனின் ?

விடை கற்பிதமாகத் தோற்றுகிற தூலப்பிரம்மாண்டங்களும், தூல சரீரங்களும் பஞ்சீகிரத பூதங்களின் சொரூபமேயாம். அதுபோல் சூக்ம பஞ்ச பூதங்களும் அதன் காரியங்களும் அபஞ்சிகிரத பூதங்களின் சொருபமேயாம். அபஞ்சீகிரத பூதங்களின் சொரூபமேயாம். எப்படிப் பஞ்சபூதங்கள் எல்லாம் விட்சேப சக்தியின் சொரூபமேயாமோ அதேபோல பஞ்சசக்திகளும் மூல காரணமாகிய சச்சிதானந்த சிவசொரூபத்திற்கு பின்னமன்று. அந்தச்சிவப்பிரகாசமே எனக்குள்ளும் நிறைந்து விளங்கிக் கொண்டிருக்கிறது என்று புத்தி விருத்தி நினைந்து கொண்டிருப்பதே சூக்மலயசிந்தனம் எனப்படும்.

வினா 24 சோபாதிகப் பிராந்தி என்து யாது ? நிருபாதிகப் பிராந்தி என்பது யாது ?

விடை கிளிஞ்சலில் வெள்ளி தோற்றுவது நிருபாதிகப் பிராந்தி எனப்படும். எதனால் எனின் கிளிஞ்சல் வெள்ளியைப் பொய்யென்று நிச்சயம் செய்தவர்களுக்கு மீண்டும் அதில் சத்தியபுத்தி உண்டாவதில்லை. அதில் பிரதிபந்தம் உண்டாகாமையால் நிருபாதிகப் பிராந்தி எனப்படும். ஆனால் தேகமோ எனின் சோபாதிகப் பிராந்தியாம். தத்துவ ஞானத்தால் தேகத்தைப் பொய்யென்று அறிந்த ஞானிக்கு மீண்டும் தேகத்தில் இச்சை உண்டாவதால் பிரதிபந்தம் உண்டு. ஆதலால் தேகத்தைச் சோபாதிகப் பிராந்தி எனப்படும்.

வினா 25 பிரதிபந்தம் என்பது யாது ? அது எத்தனை வகைப்படும் ?

விடை ஒருவர் சிவஞானம் அடைவதற்குத் தடையாகத் தான் முன் அனுபவித்த விஷயங்களின் சமஸ்காரம் விருத்தியில் மீண்டும் உண்டாவதே பிரதிபந்தம் எனப்படும். அதுவும் பூதப்பிரதிபந்தம், வர்த்தமான பிரதிபந்தம், ஆகாமியப்பிரதிபந்தம் என மூன்று வகைப்படும்.

வினா 26 பூதப் பிரதிபந்தமாவது யாது ?

விடை ஒரு நைட்டிக பிரம்மச்சாரியாகிய ஒரு சன்யாசினிடத்திலும் தான் பூர்வம் கிரகஸ்த ஆச்சிரமத்தில் அனுபவித்த வனிதா தி ரூபயௌவர்ணங்களின் சமஸ்காரம் ஆன்ம தியானத்திற்கு வந்து தடை செய்வதே பூதப் பிரதிபந்தம் எனப்படும்.

வினா 27 வர்த்தமானப் பிரதிபந்தம் என்பது யாது ?

விடை பேத நூல்களைப் படித்ததனால் உண்டான பேதஞானமும், தர்க்க சாஸ்திரங்களைப் படித்ததனால் உண்டான குதர்க்கமும் வேதாந்த சிரவணம் செய்யும் காலத்து வந்து வந்து தடைசெய்வதே வர்த்தமானப் பிரதிபந்தம் எனப்படும்.

வினா 28 ஆகாமியப் பிரதிபந்தம் என்பது யாது ?

விடை ஒரு சீவன் முத்தஞானியும், நான் இன்னும் சில ஜென்மங்களை எடுத்து பிராரத்த கர்மங்களை அனுபவித்து தீர்க்க வேண்டும் என்று எண்ணுவதே

ஆகாமியப் பிரதிபந்தம் எனப்படும்.

வினா 29 பிராந்தி ஜென்னிய தேகாபிமானம் என்பது யாது ?

விடை அவித்தையாய் பிரதி பிம்பனாகிய சீவன் காரண தேகத்தை என் தேகம் என்று இச்சித்த இச்சையே பிராந்தி ஜென்னிய தேகாபிமானம் எனப்படும்.

வினா 30 கா்ம ஜென்னிய தேகாபிமானம் என்பது யாது ?

விடை சீவன் கா்மத்தை இச்சித்ததனாலேயே தூல சூக்கும சரீரங்கள் உண்டாயிற்று தூல சூக்குமத்தேகத்தை என் தேகம் என்று இச்சித்த இச்சையே கா்ம ஜென்னிய தேகாபிமானம் எனப்படும்.

வினா 31 மண், மனை, மனைவி, மக்கள் ஆகிய இன்நான்கையும் துக்க சாதனம் என்று சுருதிகளால் சொல்லப்பட்டது எதனால் ?

விடை மண், மனை, மனைவி, மக்கள் இந்நான்கையும் தேடும் காலத்திலேயே தேடுகிறவா்களுக்கு கஷ்டத்தையும், துக்கத்தையும் தருகிறது. தேடி தனதாக்கி அனுபவித்த அந்தத்திலும் விஷத்தையே கொடுக்கிறது. மேலும் ஆத்மா, அனாத்மாவைத் தெரிய வொட்டாமல் பிரதிபந்தமாய் மறைக்கிறது. கருக்குழிக்கும் செல்வதாகிய பெருந்துக்கத்தை உண்டாக்குகிறது. அதோடு காமாதி அறுவகைப்பகையையும் விளைவிப்பதால் துக்க சாதனம் என்று சொல்லப்பட்டது.

வினா 32 எப்படிப்பட்ட மக்கள் சுருதிப் பிரமாணங்களால் சொல்லப்பட்ட யோகத்தை அடைந்தவா்கள் ஆகிறாா்கள் ?

விடை அனாத்ம பதாா்த்தங்களையே ஆத்மபதாா்த்தம் என்று பல பிறவிகளில் எண்ணி இருந்த விருத்தியை மாற்றி அனாத்மபதாா்த்தத்தை, அனாத்மபதாா்த்தம் என்றும் அறிந்தவா்களே யோகத்தை அடைந்த மக்கள் எனப்படுவா்.

வினா 33 மக்கள் எப்போது சேமத்தை அடைந்தவா்கள் ஆகிறாா்கள் ?

விடை நம்மனித தேகத்தில் ஓங்கார வடிவத்தில் உள்ள சிவப்பிரகாசத்தில் விருத்தியை நிலை நிறுத்தினவா்களே சேமத்தை அடைந்த மக்கள் எனப்படுவா்.

வினா 34 ஆன்மாவில் தாதான்மிய அத்தியாசத்தால் தோற்றிய அகங்காரமும், ஆவரணமும் எதனால் நாசமாகும் ?

விடை எந்த ஒரு முமூட்சுவானவன், சிரத்தையோடு மகாவாக்கிய சோதனம் செய்து முடிக்கிறாரோ அவருக்கே ஆத்மாவில் தாதாத்மிய அத்தியாசமாகத் தோற்றிய அகங்காரமும், ஆவரணமும் நாசமாகிறது.

வினா 35 சீவன் முத்தனுக்கு விட்சேபமும், அதன் அஞ்ஞானமும் எதனால் நாசமாகும் ?

விடை ஒரு சீவன் முத்தன் எப்போது பிராரத்தகா்மத்தை முடித்து வெற்றி பெறுகிறானோ அப்போது அவனுக்கு விட்சேபமும் அதன் அஞ்ஞானமும் நாசமாகிறது.

வினா 36 சுருதிப் பிரமாணங்களால் சொல்லப்பட்ட வாசனை எத்தனை வகைப்படும் ?

விடை சுபவாசனை அசுபவாசனை என இரண்டு வகைப்படும்.

வினா 37 சுபவாசனை என்பது யாது ? அதை உடையவர்களுக்கு அடையாளம் யாது ?

விடை சச்சிதானந்த சேதனமாகிய அகண்டாகார சேதனமே ஆத்மாவாகிய நான். என்கிற அர்த்தத்தில் விருத்தியை இடையின்றி நிலை நிறுத்துவதினால் உண்டாகிற சமஸ்காரமே சுபவாசனை எனப்படும். மகாவாக்கிய சத்தம் கேட்டவுடன் ஓங்கார வடிவசிதாகாயத்தில் உள்ள சிவப்பிரகாசத்தில் விருத்தி நிலைப்பதே சுபவாசனை உடையவர்களுக்கு அடையாளம் எனப்படும்.

வினா 38 அசுப வாசனை என்பது யாது ? அதை உடையவர்களுக்கு அடையாளம் யாது ?

விடை அநேக ஜென்மங்களில் செய்த பாவ கர்ம சம்ஸ்க்காரம் புத்திவிருத்தியில் பற்றி இருப்பதுவே அசுப வாசனை எனப்படும். அசுப வாசனை உடையவர்களுக்கு அடையாளம் யாது எனின் ஒருவர் சத்தத்தை கேட்டவுடன் முன்பின் ஆராயாமல் கோபமும். குரோதமும் உண்டாவதே அடையாளம் ஆகும்.

வினா 39 மானசீக வாசனையாவது யாது ? விடய வாசனையாவது யாது ?

விடை சத்த அர்த்தத்திற்கும் புத்தி விருத்திக்கும் ஏற்படும் சம்பந்தமே மானசீக வாசனை எனப்படும்.

வினா 40 ஒருவரது புத்தி விருத்தி முயற்சியுடன் பிரம்மபானம் பண்ணுவதில்லை ஏன் ?

விடை விசாரம் செய்தும் பிரம்ம பானம் பண்ணுவதில்லை. அது எதனால் ? ஆனால் அதே விருத்தி முயற்சி இன்றியே பிரபஞ்சபதார்த்தங்களைப் பானம் பண்ணுவது எதனால் ? ஒருவருக்கு பூர்வ ஜென்மங்களில் பிரம்ம விசாரம் செய்த சம்ஸ்காரம் சொற்பமாய் உள்ள விருத்தியாய் இருப்பதால் பிரம்ம பானம் பண்ணமுடிவதில்லை. அனந்த ஜென்மங்களாக பிரபஞ்ச விசாரம் செய்ததனால் ஏற்பட்ட சமஸ்காரம் அதிகமாக விருத்தியில் இருப்பதால் முயற்சி இன்றியே இந்த ஜென்மத்தில் பிரபஞ்ச பதார்த்தங்களைப் பானம் பண்ணுகிறது.

வினா 41 எப்படிப்பட்டவன் ஞானவான் ?

விடை சம்சயபாவனை. அசம்பாவனை. விபரீதபாவனையை நாசம் செய்தவனே ஞானவான் எனப்படுவான்.

வினா 42 ஞானவானுக்குப்பாகிய விட்சேபம் எதனால் நாசம் ஆகிறது ?

விடை நான் பிரம்மம் என்கிற விருத்திப் பிரவாக ஞானத்தால் ஞானவானுக்கு பாகிய விட்சேபம் நாசம் ஆகிறது.

வினா 43 ஒரு அஞ்ஞானவான் எப்போது ஞானவான் ஆகிறான்.

விடை தத்பத. துவம்பத. அசிபத சோதனம் செய்தகாலத்திலேயே ஞானவான் ஆகிறான்.

வினா 44 சீவன் முத்தி ஆனந்தத்திற்குப் பாதகமாய் உள்ள பிரதிபந்தத் திரயங்கள் யாவை ?

விடை பூதப்பிரதிபந்தம், வர்த்தமானப் பிரதிபந்தம், ஆகாமியப் பிரதிபந்தம் ஆகிய இம்மூன்று பிரதி பந்தங்களும் சீவன் முத்தி ஆனந்தத்திற்குத் தடையாய் உள்ளது.

வினா 45 சீவன் முத்தி ஆனந்தத்திற்கு சாதகமாய் உள்ள சாதனம் யாது ?

விடை தத்துவ ஞானமே சீவன் முத்தி ஆனந்தத்திற்கு சாதகமாய் உள்ள சாதனமாம்.

வினா 46 பாவனையோடு கூடிய சொரூப நாட்டம் உடையவர் யார் ?

விடை சின்முத்திரை தரித்து ஆசனத்தில் அமர்ந்து சொரூப நாட்டத்தில் இருப்பவரே பாவனையோடு கூடிய சொரூப நாட்டத்தில் உடையவர் ஆவார்.

வினா 47 பாவனை கடந்த சொரூப நாட்டம் உடையவர் யார் ?

விடை பிராரர்த்த கர்ம நிமித்தம் தேகம் கர்மத்தைச் செய்யுங்காலத்தும் சொரூபத்தில் விருத்தி நிலைத்தவரே பாவனை கடந்த சொரூப நாட்டம் உடையவர் ஆவார்.

வினா 48 இருந்ததை மறைத்தது எந்தக் கர்மம் ?

விடை திரிவித கர்மத்தில் மகாவாக்கிய விசாரம் அல்லாதமற்றைக் கர்மங்கள் அனைத்தும் இருந்ததை மறைத்த கர்மம் ஆகும்.

வினா 49 இருந்ததை விளக்கி வைத்தது எந்தக் கர்மம் ?

விடை மகாவாக்கிய விசாரம் என்கின்ற கர்மமே இருந்ததை விளக்கி வைத்த கர்மம் ஆகும்.

வினா 50 காமிய கர்மத்தில் இச்சையுள்ள ஒரு கர்மவான் அந்தக் கர்மம் செய்யும் இடத்தில் வந்து நிற்கும் போது அந்தக் கர்மத்தினால் பதார்த்தம் உற்பத்தி ஆவதற்கு முன் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒன்று உண்டா இல்லையா ?

விடை முக்காலத்திலும் அழியாமல் இருக்கிற சத்துப்பொருள் உண்டு.

வினா 51 ஒருவருக்கு சொப்பன காலம் எது ? சுழித்தி காலம் எது ?

விடை யான், எனது என்னும் அபிமானம் எவ்வளவு காலம் ஒருவரிடம் உள்ளதோ அவ்வளவு காலமும் அது சாக்கிரமேயாயினும் சொப்பனகாலம் என்றே சொல்லப்படும். மூன்று காலத்திலும் விளங்கிக் கொண்டிருக்கிற மூலப்பொருள் எவ்வளவு காலம் ஒருவருக்கு விளங்க வில்லையோ அவ்வளவு காலமும் சுழுத்தி காலம் என்றே சொல்லப்படும்.

வினா 52 ஒருவர் சாக்கிரத்தில் இருந்தாலும் எப்போது விழித்தவர் ஆவார் ?

விடை நித்திய அநித்திய வஸ்து விவேகம் நிலை பெற்ற போதே ஒருவர் விழித்தவர் ஆவார்.

வினா 53 பிரமத்தில் மாயை இல்லை என்றது எதனால் ?

விடை பிரம்ம பானம் பண்ணிய ஞானிகள் இருப்பதாலேயே பிரம்மத்தில் மாயை இல்லை என்று சொல்லப்பட்டது.

வினா 54 பிரபல சுருதி என்பது யாது ? அற்ப சுருதி என்பது யாது ?

விடை பிரம்ம ஞானத்தை உண்டு பண்ணத்தக்கதாய் உள்ள சுருதி எதுவோ அதுவே பிரபல சுருதி எனப்படும். இதற்கு அந்நியமாய் உள்ள சுருதிகள் அனைத்தும் அற்ப சுருதிகள் எனப்படும்.

வினா 55 பகுத்தறிவு உள்ள மக்கள் எந்த வீட்டில் குடிபுகுவது ஞாயமான ஞாயம் ?

விடை போக்குவரத்து இல்லாத நித்திய வீட்டில் குடி புகுவதே பகுத்தறிவு உள்ள மக்களுக்கு ஞாயமான ஞாயம் ஆகும்.

வினா 56 விசேசிய விசேசன பாவ சம்பந்தம் என்பது யாது ?

விடை இரண்டு ஆபாசர்களுக்கு அதிஷ்டானத்தோடு உள்ள சம்பந்தமே, விசேசன விசேகிய சம்பந்தம் எனப்படும்.

வினா 57 லட்சிய லட்சண பாவ சம்பந்தம் என்பது யாது ?

விடை ஆரோபமாகிய சுத்த சத்திக்கு அதிஷ்டானத்தோடு உள்ள சம்பந்தமே லட்சண லட்சிய பாவ சம்பந்தம் எனப்படும்.

வினா 58 சாமானாதி கரண்ய சம்பந்தம் என்பது யாது ?

விடை சீவனாகிய இந்த ஆபாசனுக்கு அதிஷ்டானமாய் உள்ள சாட்சிசேதனமே அந்த ஆபாசனுக்கு அதிஷ்டான சேதனமாம். அந்த ஆபாசனுக்கு அதிஷ்டானமானமாகிய வியாபக சேதனமே இந்த ஆபாசனுக்டகு அதிஷ்டான சேதனமாம் என்று அதிஷ்டான சேதனத்திற்கு உள்ள ஏகத்துவத்தை உணர்த்துவதே சாமானாதி கரண்ய சம்பந்தம் எனப்படும்.

வினா 59 விசேசிய விசேசனபாவ சம்பந்தத்தை அறிந்ததனால் நாசமான துக்கம் எது ?

விடை மாயா அவித்தையா ஆபாசர்களை அதிஷ்டானம் என்று எண்ணியதால் உண்டான துக்கம் நாசம் ஆயிற்று.

வினா 60 லட்சிய, லட்சண பாவ சம்பந்தத்தை அறிந்ததனால் நாசம் ஆன துக்கம் எது ?

விடை சுசாதி, விசாதி, சுவகதி பேதம் அற்றது பிரம்மம் என்று வேதம் சொல்லியிருக்க பிரம்மத்திற்கு அந்நியமாய் ஒரு சக்தி உண்டு என்று எண்ணியதால் உண்டான துக்கம் நாசம் ஆயிற்று.

வினா 61 சாமானாதி கரண்ய சத்பந்தத்தை அறிந்ததனால் நாசம் ஆன துக்கம் எது ?

விடை அகண்டப் பொருளாய் உள்ள தன்னைக் கண்டப்பொருள் என்று எண்ணியதால் உண்டான துக்கம் நாசம் ஆயிற்று.

வினா 62 அன்னமய கோசம் என்பது யாது ?

விடை இந்தச்சுவர் எப்படி மண்ணினால் ஆக்கப்பட்டதோ அதேபோல இந்த மனித தேகம் அன்னத்தினாலேயே ஆக்கப்பட்டு, அன்னத்தினாலேயே அபிவிருத்தி அடைந்து, அன்ன சொரூபமாய் உள்ள மண்ணில் அடங்கி அழிந்து விடுவது எதுவோ அதுவே அன்னமய கோசம் எனப்படும்.

வினா 63 சிவத்திற்கு சீவன் என்கிற பெயர் வந்தது எதுபோல ?

விடை மண்ணிற்கே கடம் என்கிற பெயர் வந்தது போலும், பொன்னிற்கே கடக மகுடம் என்கின்ற பெயர் வந்தது போலும், இரும்பிற்கே கத்தி, கேடயம் என்கின்ற பெயர் வந்தது போலும் சிவம் ஒன்றிற்கே சீவன் என்கிற பெயர் வந்தது.

வினா 64 எந்தச் சடம் சித்துபோல் இயங்கும் ? எந்தச் சடம் சித்துப் போல் இயங்காது ?

விடை சிவத்தால் பஞ்சீகரணம் செய்யப்பட்ட சடம் சித்துப்போல் இயங்கும். பஞ்சீகரணம் செய்யப்படாத சடம் சித்துபோல் இயங்காது.

வினா 65 தேகத்திற்கும், கர்மத்திற்கும் உறவு என்று சுருதி சொன்னது எதனால் ?

விடை தேகமின்றி கர்மம் செய்ய முடியாது. ஆதலால் தேகத்திற்கும், கர்மத்திற்கும் உறவு என்று சொல்லப்பட்டது.

வினா 66 அஞ்ஞானத்திற்கும், உபாசனைக்கும் உறவு என்று சுருதி சொன்னது எதனால் ?

விடை உலகத்திலும், வேதத்திலும் வழங்கப்படுகிற சத்தங்கள் அனைத்தும் ஓங்கார வடிவசிதாகாயத்தில் இருந்து உண்டானதால் சக்தி இல்லையேல் வாசக சத்தம் இல்லை. வாசக சத்தம் இல்லையேல் மந்திரமில்லை. மந்திரம் இல்லையேல் உபாசனை இல்லை. அதனால் உபாசனைக்கும் அஞ்ஞானத்திற்கும் உறவு எனப்பட்டது.

வினா 67 சீவர்களால் ஆக்கப்பட்ட ஆலய வழிபாட்டால் மக்களுக்கு உண்டான பிரயோஜனம் யாது ?

விடை சீவர்களால் ஆக்கப்பட்ட ஆலய வழிபாட்டை முன்பின் விரோதத்தை அறிந்து வழிபடுகிறவர்களுக்கு விலங்குத்தன்மை நாசம் ஆவதே பயனாம்.

வினா 68 சீவனாகிய லிங்கத்தை சிவமாக எண்ணி வழிபடுகிறவர்கள் அடையும் பயன் யாது ?

விடை சிவத்தால் ஆக்கப்பட்ட மனிததேகமாகிய ஆலயத்தில் உள்ள சீவனாகிய லிங்கத்தை சிவமாக எண்ணி வழிபடுகிறவர்கள் சிவ வடிவம் ஆவதே பயனாம்.

வினா 69 பகுத்தறிவு உள்ள மக்களுக்கு அடையாளம் யாது ?

விடை எந்த ஒன்றைத் தன்னுடையதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அது முக்காலத்தும் தன்னுடையதாகவே இருக்க வேண்டும். அதுவே பகுத்தறிவு உள்ள மக்களுக்கு அடையாளம் ஆகும்.

வினா 70 மனிதப் பிறப்பை எடுத்த சீவர்கள் எப்போது சிவத்திற்கு வட்டியும் முதலும் கட்டியவர்கள் ஆகிறார்கள் ?

விடை மெய்ப்பொருள் எது என்று அறிந்த காலத்தில் வட்டி கட்டியவர்கள் ஆகிறார்கள். அந்த மெய்ப்பொருளே நான் என்று அறிந்த போதே வட்டியும் முதலும் சேர்த்துக் கட்டியவர்கள் ஆகிறார்கள்.

வினா 71 நித்திய சுகத்தைத் தரத்தக்க பதார்த்தம் இருக்க சீவன் அநித்தியபதார்த்தத்தை இச்சிப்பதற்குக் காரணம் யாது ?

விடை விருத்தியானது நேத்திர வாயிலாகச் சென்று பஞ்சபூத பதார்த்தங்களை மூடியுள்ள தூல ஆவரணத்தை பங்கம் பண்ணும்போது ரூப விசயங்களை நேத்திர இந்திரியம் தோற்றுவிப்பதால் சீவன் அநித்திய பதார்த்தங்களை இச்சிக்கிறான்.

வினா 72 புத்தி விருத்தியாகிய குழந்தை மீண்டும் கருக்குழிக்குச் செல்வதாகிய பாண்டு நோயை உண்டாக்கிக் கொண்டது எதனால் ? அது எது போல ?

விடை காரண சரீரமாகிய வீட்டில் வியட்டி அஞ்ஞானமாகிய தாயின் மடியில் ஆனந்தத்துடன் இருந்த புத்தி விருத்தியாகிய குழந்தையை கர்மம் என்ற சகபாடிக் குழந்தைகள் சாக்கிரமாகிய பாகியத்திற்கு அழைத்து வேண்டிய அளவு விடய போகங்களைப் புசித்து அதனால் கருக்குழிக்குச் செல்வதாகிய பாண்டு நோயை உண்டாக்கிக் கொண்டது. அது எது போல எனின் வீட்டினுள் இருக்கும் தாயின் மடியில் ஆனந்தமாக இருந்த குழந்தையை வெளியில் உள்ள தனது சகபாடிக்குழந்தைகள் அழைக்க வெளியே வந்து அவர்களுடன் சேர்ந்து மண்ணைத்தின்று விளையாடிப் பாண்டு நோயை உண்டாக்கிக் கொண்டது போலவாம்.

வினா 73 புத்தி விருத்தியானது நேத்திரப் பிரமாணத்துடன் சேரும்போது அவர்களை அது என்ன ஆக்கியது ? வேதப் பிரமாண அர்த்தத்துடன் விருத்தி சேரும்போது அவர்களை அது என்ன ஆக்கியது.

விடை ஒருவரது புத்தி விருத்தியானது நேத்திர பிரமாணத்துடன் சேரும்போது ரூபாதி விசயங்களில் இச்சையை உண்டு பண்ணிக் கருக்குழிக்குச் செல்வதாகிய பெருந்துக்கத்தை உண்டாக்குகிறது. விருத்தியானது வேதப்பிரமாண அர்த்தத்துடன் சேரும் போது சொரூபத்தில் இச்சையை உண்டு பண்ணி அகண்டாகார சேதனத்துடன் ஐக்கியம் ஆகிறது.

வினா 74 சத்து, சித்து, ஆனந்தம் மூன்றும் பின்னமா அல்லது அபின்னமா ?

விடை சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய இம்மூன்றும் பிரம்மமாகிய இலக்கியத்திற்கு இலக்கணம் ஆகும். இலக்கியம் அல்லாததால் சத்து, சித்து, ஆனந்தம் மூன்றும் பின்னமும் அல்ல அபின்னமும் அல்ல என்பதாகும்.

வினா 75 பெரிய ஞானம் என்று சுருதிகளால் சொல்லப்பட்டதன் அர்த்தத்தை விளக்கு ?

விடை எப்போதும் துக்கத்தையே விளைவிக்கக்கூடிய அனாத்ம பதார்த்த ஞானத்தை அடியோடு எரித்து நாசம் செய்கிற ஞானம் எந்தத் தத்துவ ஞானமோ அதுவே பெரிய ஞானம் எனப்படும்.

வினா 76 பிராதி பாசிக சத்தை என்பது யாது ?

விடை கானல் நீர், கிளிஞ்சில் வெள்ளி, கயிற்றரவு இவையே பிராதி பாசிக சத்தை எனப்படும்.

வினா 77 விவகாரிக சத்தை என்பது யாது ?

விடை பிறப்பு, இறப்பு, பந்தம், மோட்சம் இவற்றை உடையது விவகாரிக சத்தை எனப்படும்.

வினா 78 பாரமார்த்திக சத்தை என்பது யாது ?

விடை கூடஸ்த ஆத்மாவே பார மார்த்திக சத்தை எனப்படும்.

வினா 79 தத்துவ ரூபம் தெரிந்தவர் எப்படிப்பட்டவர் ?

விடை அனாத்ம தத்துவங்கள் 35-ம் சடம் என்றும் அசுத்த தத்துவம் என்றும் அறிந்தவரே தத்துவ ரூபம் தெரிந்தவர் ஆவார்.

வினா 80 தத்துவ சுத்தி செய்தவர் எப்படிப்பட்டவர் ?

விடை அனாத்ம தத்துவங்கள் 35-னிடத்தும் உள்ள அசுத்தம் ஆத்மதத் துவத்தினிடம் இல்லை என்று அறிந்தவர்களே தத்துவசுத்தி செய்தவர்கள் ஆவார்.

வினா 81 தத்துவ தெரிசனம் செய்தவர் எப்படிப்பட்டவர் ?

விடை ஆத்ம தத்துவமே நான் என்று அபரோட்சமாக அறிந்தவர்களே தத்துவ தரிசனம் செய்தவர் ஆவார்.

வினா 82 நிவர்த்தி மார்க்கத்தில் விருத்தி நிலைத்தவர்கள் யாவர் ?

விடை வீட்டில் உள்ள ஒரு புருடன் தன் தேகமானது வீட்டிற்கு வெளியே வருவதும், உள்ளே செல்வதுமாக இருப்பதும் அவனே அறிந்து கொண்டிருப்பது போல, தேகமாகிய வீட்டில் இருக்கும் சிவப்பிரகாசம் நேத்திரப் பிரமாணத்தின் வழியாக வெளியே செல்வதையும், உள்ளே செல்வதையும் அறிந்து கொண்டிருப்பவரே நிவர்த்தி மார்க்கத்தில் விருத்தி நிலைத்தவர் ஆவார்.

வினா 83 சுத்த சத்தியாகிய ஆதிசக்தி ஓம் என்கின்ற சத்தத்தை எழுப்பியதன் நோக்கம் யாது ?

விடை சீவர்களுக்குள்ள பலவகையான பந்தங்கள் நாசமாவதற்கு உபகாரமாய் உள்ள சப்த்த கோடி மந்திரங்களை உண்டு பண்ணுவதே ஓம் என்கின்ற சத்தத்தை ஆதி சக்தி எழுப்பிய தன் நோக்கம் ஆகும்.

வினா 84 ஞானகாண்டத்தில் பிரதி பாதிக்கப்பட்டுள்ள பிரணவத் தியானத்தை எப்படிச் செய்தால் சுருதிக்குச் சம்மதம் ?

விடை உலகத்தில் உள்ள எல்லா நாம ரூபங்களும் எப்படி ஓங்கார ரூபமோ, அதேபோல எல்லா ஓங்கார வடிவத்தில் உள்ளபிரகாசங்களும், சிவப்பிரகாசமேயாம். அந்த சிவப்பிரகாசமே நான் என்று தியானிக்கிற தியானமே சுருதிப் பிரமாணங்களுக்குச் சம்மதமான பிரணவ தியானம் ஆகும்.

வினா 85 ஆத்மாவாகிய தனக்கு அஞ்ஞானத்தால் தோற்றுகிற ஜனனமரண துக்கத்தை மறைப்பது எது ? அது எது போல ?

விடை ஆத்மாவாகிய தனக்கு அஞ்ஞானமாகிய நோயினால் உண்டாகிய ஜனன

மரணம் என்னும் துக்கமாகிய வலியை அருந்தல் பொருந்தல் என்னும் விடய சுகமாகிய மதுவைப்பானம் பண்ணியதால் உண்டாக்கிய லாகிரி மறைக்கிறது. அது எது போல எனின் தூல தேகத்திற்கு உண்டான சிலந்தி முதலிய நோய்களால் ஏற்பட்ட வலிகள் முதலிய மதுவைப் பானம் பண்ணியதால் உண்டாகிய லாகிரி மறைப்பது போலவாம்.

வினா 86 ஒருவரது விருத்தி எப்போது சித்தை விசயம் செய்ய முடிகிறது ?

விடை ஒருவரது புத்தி விருத்தி எவ்வளவு காலம் சடபதார்த்தங்களை விஷயம் செய்து கொண்டிருக்கிறதோ அவ்வளவு காலம் அந்த விருத்தி சித்தைப்பானம் செய்ய முடிவதில்லை. சடபதார்த்தங்களை விசயம் செய்வதை விட்டு நீங்கிய போதே அந்த விருத்தி சித்தை விசயம் செய்ய முடிகிறது.

வினா 87 விருத்திகள் எத்தனை வகைப்படும் ?

விடை ஆபாசவிருத்தி, சக்தி விருத்தி, லட்சணா விருத்தி என மூன்று வகைப்படும்.

வினா 88 ஞானி அஞ்ஞானியாகிய இருவரின் விருத்தியும், ஆகாயத்தை ஆதாரமாக வைத்துச்சந்திக்கும் போது ஞானியினுடைய விருத்தியின் செயல் யாது ? அஞ்ஞானியினுடைய விருத்தியின் செயல் யாது ?

விடை ஞானியினுடைய விருத்தியானது அஞ்ஞானியினது விருத்தியின் உற்பத்தி ஸ்தானம் வரை சென்று அந்த விருத்தியில் உள்ள விசய விசயங்களை அறிகிறது. அஞ்ஞானியின் விருத்தியானது ஞானியினது தூல சரீரத்தை மட்டும் அறியும். இதுவே அஞ்ஞானியினது விருத்தியின் செயலாகும்.

வினா 89 ஞானியினுடைய விருத்தியும், அஞ்ஞானியினுடைய விருத்தியும் பாகியத்திற்கு வரும் போது இரண்டு விருத்திகளும் செய்யும் செயலில் உள்ள வேறுபாடு யாது ?

விடை அஞ்ஞானியினது விருத்தி பாகியத்திற்கு வரும்போது பதார்த்தங்களை மூடியுள்ள ஆவரணத்தை நாசம் செய்து முயற்சியின்றியே பொய்ப் பொருளைப் பானம் பண்ணுகிறது. ஞானியினுடைய விருத்தி பாகியத்திற்கு வரும்போது வியாபகசேதனத்தை மறைத்துள்ள மூல ஆவரணத்தை நாசம் செய்து மெய்ப்பொருளையே பானம் பண்ணுகிறது.

வினா 90 பிரவிருத்தி மார்க்கத்தை உடையவர்களுக்கு அடையாளம் யாது ?

விடை பொருளை வைத்திருப்பவர்களே யோகத்தை உடையவர்கள் என்றும், பொருளோடு மனைவி, மக்கள் முதலிய சகல சம்பத்துக்களும் உள்ளவர்களே சேமத்தை உடையவர்கள் என்றும் சொல்லுபவர்களே பிரவிருத்தி மார்க்கத்தை உடைய மக்கள் ஆவார்.

வினா 91 நிவர்த்தி மார்க்கத்தை உடையவர்களுக்கு அடையாளம் யாது ?

விடை நம் மனித தேகத்தில் ஓங்கார வடிவ சிதாகாயத்தில் நிறைந்திருக்கிற சிவப்பிரகாசத்தை தரிசித்தவர்களே யோகத்தை உடையவர்கள் என்றும், சீவேஸ்வர ஜகத்தை சிவசொரூபமாக அபவாதித்து அந்த சிவசொரூபமே நான்

என்று அறிந்தவர்களே சேமத்தை உடையவர்கள் என்றும் சொல்லுவதே நிவர்த்தி மார்க்கத்தை உடையவர்களுக்கு அடையாளம் ஆகும்.

வினா 92 சுருதிகளால் சொல்லப்பட்ட மோட்சம் எத்தனை வகைப்படும் ?

விடை சுருதிகளால் சொல்லப்பட்ட மோட்சம் நித்தியமுத்தி மோட்சம், பதமுத்தி மோட்சம் என்று இருவகைப்படும். அந்தப்பத முத்தியும், சாலோகமுத்தி, சாமீபமுத்தி, சாரூபமுத்தி, சாயுட்சமுத்தி என நான்கு வகைப்படும்.

வினா 93 சாலோக முத்தி என்பது யாது ? அது யாருக்குச் சித்திக்கும் ?

விடை வைகுண்டம் முதலிய லோகங்களில் ஓர் இடத்தில் பிரஜையாகப் பிறந்து வாழ்வதே சாலோக முத்தி எனப்படும். ஒருவர் இறக்கும் தருவாயில் நாராயணா என்ற சத்தத்தைக் கேட்டுக் கொண்டே உயிரை விடுவாரானால் அவருக்குச் சாலோப முத்தி சித்திக்கும்.

வினா 94 சாமீபமுத்தி என்பது யாது ? அது யாருக்குச் சித்திக்கும் ?

விடை நாராயணன் வசிக்கும் நகரத்தில் பிறந்து வாழ்வதே சாமீப முத்தி எனப்படும். ஒருவர் இறக்கும் தருவாயில் தன் வாக்கினால் நாராயணா என்று சொல்லிக் கொண்டே உயிரே விடுவாரானால் அவருக்கு சாமீப முத்தி சித்திக்கிறது.

வினா 95 சாரூப முத்தி என்பது யாது ? அது யாருக்கு சித்திக்கும் ?

விடை நாராயணனுக்கு மந்திரியாகப் பிறந்து வாழ்வதே சாரூப முத்தி எனப்படும். ஒருவர் இறக்கும் தருவாயில் மனத்தினால் நாராயணனை எண்ணிக்கொண்டே உயிரை விடுவாரானால் அவருக்குச் சாரூப முத்தி சித்திக்கும்.

வினா 96 சாயுட்சியமுத்தி என்பது யாது ? அதுயாருக்குச் சித்திக்கும் ?

விடை வைகுந்த அதிபதியாகிய நாராயணனாகப் பிறந்து வாழ்வதே சாயுட்சிய முத்தி எனப்படும். ஒருவர் இறக்கும் தருவாயில் நானே நாராயணன் என்று தியானித்துக் கொண்டு உயிரை விடுவாரானால் அவருக்கு சாயுட்சிய முத்தி சித்திக்கிறது.

வினா 97 விருத்தியின் தொழில் எப்போது பூர்த்தியாகிறது ?

விடை தத்துவசோதனம் செய்து முடித்த காலத்தில் பூர்த்தியாகிறது.

வினா 98 எது நாசம் ஆனவிருத்தி துரிய சேதனத்தைப் பானம் பண்ணும் ?

விடை விருத்தியில் உள்ள ஆபாச அம்சம் நாசம் ஆன விருத்தியே துரிய சேதனத்தைப் பானம் பண்ணும்.

வினா 99 எது நாசம் ஆன விருத்தி சச்சிதானந்த சேதனத்தைப் பானம் பண்ணும் ?

விடை விருத்தியில் உள்ள புத்தியம்சம் நாசமான விருத்தி சச்சிதானந்த சேதனத்தைப் பானம் பண்ணும்.

வினா 100 எது நாசம் ஆன விருத்தி அகண்டாகார சேதனத்தைப் பானம் பண்ணும் ?

விடை விருத்தியின்றிய ஞானமே அகண்டாகார சேதனத்தைப் பானம் பண்ணும்.

மகாவாக்கிய 100 வினா - விடை (2)

வினா 1 சர்வ துக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தியாகிய நித்திய சுகம் யாருக்குச் சித்திக்கும் ?

விடை தத்துவஞானம் சித்தித்தவர்களுக்கே சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தியாகிய நித்திய சுகம் சித்திக்கும்.

வினா 2 தத்துவஞானம் என்பது யாது ? அது யாருக்குச் சித்திக்கும் எனின் ?

விடை நித்தியமாகிய பிரம்மமே நான் என்று சத்தியமாய் அறிவதுவே தத்துவ ஞானம் எனப்படும். இந்த தத்துவஞானம் தத்பத, துவம்பத, அசிபத சோதனம் சித்தித்தவர்களுக்கே சித்திக்கும்.

வினா 3 நிருத்தியாசனம் என்பது யாது எனின் ?

விடை அநாத்மாகாரவிருத்தியை அழித்தலும் பிரம்மாகார விருத்தியை நிலை நிறுத்தலுமே நிருத்தியாசனம் எனப்படும்.

வினா 4 மனனம் என்பது யாது எனின் ?

விடை சீவப்பிரமங்களுக்குள்ள பேதத்தை பாதித்தலும் அபேதத்தைச் சாதித்தலுமாகிய யுக்திகளுடன் சதா பிரம்மசொரூபத்தைத் தியானித்து கொண்டிருப்பதே மனனம் எனப்படும்.

வினா 5 வேதாந்த சிரவணம் என்பது யாது எனின் ?

விடை தத்துவ மசி மகாவாக்கிய அர்த்தத்தை சட்விதலிங்க யுக்திகளால் தாத்பர்ய நிச்சயம் செய்வதே வேதாந்த சிரவணம் எனப்படும். (வேதாந்த சாஸ்திரத்தினைப் படித்தல் சிரவணம் அன்றாம்)

வினா 6 வேதாந்த சிரவணம் யாருக்குச் சித்திக்கும் எனின் ?

விடை மலவிட்சேப தோடம் நீங்கினவர்களாயும் ஆவரணதோடம் உள்ளவர்களாயும் நான்கு சாதனங்களும் கைவரப் பெற்றவர்களுக்கே வேதாந்த சிரவணம் சித்திக்கும்.

வினா 7 பரோட்சஞானம் என்பது யாது ? அதற்கு ஏது எது எனின் ?

விடை வேதாந்த சாஸ்திர சிரவணத்தால் சச்சிதானந்த பரிபூரண பிரம்மம் ஒன்று உண்டு என்று அறிவதுவே பரோட்ச ஞானம் எனப்படும்.அதற்கு ஏது எது எனின் ? சுரோத்திரசம்பந்தியாய் உள்ள அவாந்தர வாக்கியம் சத்தஞானமே ஏது எனப்படும்.

வினா 8 அபரோட்சஞானம் என்பது யாது எனின் ? அதற்கு ஏது எது எனின் ?

விடை சச்சிதானந்த பரிபூரண பிரம்ம சொரூபமாகிய ஆத்மாவே நான் என்று அறிவதுவே அபரோட்சஞானம் எனப்படும். இதற்கு ஏது எது எனின் சுரோத்திர சம்பந்தியாய் உள்ள மகாவாக்கிய சத்தஞானமே ஏது எனப்படும்.

வினா 9 உலகத்தில் எழுகிற சத்தங்கள் அனைத்தையும் சுருதிகளால் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது எனின் ?

விடை மகாவாக்கிய சத்தம் என்றும் அவாந்தர வாக்கிய சத்தம் என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வினா 10 மகாவாக்கிய சத்தம் என்பது யாது ? சத்தத்தில் உள்ள இரண்டு அம்சங்கள் யாவை ?

விடை சத்த அர்த்தத்தில் உள்ள இரண்டு அம்சங்கள் யாவை எனின் உற்பத்தி நாசம் இன்றிய பொருளை உணர்த்தும் அர்த்தமும் அந்த அர்த்தத்திற்கு உள்ள சத்தத்தையே மகாவாக்கிய சத்தம் எனப்படும். சத்தத்தில் உள்ள இரண்டு அம்சங்களாவது யாது எனின் சூக்மபஞ்சபூதங்களை விசயம் செய்த பின்னர் சத்தியின் அம்சமும் சச்சிதானந்த சேதனத்தின் அம்சமும் உள்ளன. சுத்த அர்த்தத்தில் பஞ்சபூத உற்பத்திக்கு முன்பே உள்ள சிவத்தை விசயம் செய்த அபின்னா சத்தியின் அம்சமும் சிவத்தின் அம்சமும் ஆக இரண்டு அம்சங்கள் உள்ளன.

வினா 11 அவாந்தரவாக்கிய சத்தம் என்பது யாது சத்தத்தில் உள்ள இரண்டு அம்சங்கள் யாவை ? சத்த அர்த்தத்தில் உள்ள இரண்டு அம்சங்கள் யாவை ?

விடை உற்பத்தி நாசம் உடைய பொருளை உணர்த்தும் அர்த்தமும் அந்த அர்த்தத்திற்கு உள்ள சத்தத்தையே அவாந்தரவாக்கிய சத்தம் எனப்படும். அல்லது பஞ்சபூதபதார்த்தங்களில் ஏதேனும் ஒரு பொருளை உணர்த்தும் அர்த்தமும் அந்த அர்த்தத்திற்கு உள்ள சத்தத்தையே அவாந்தரவாக்கிய சத்தம் என்றும் சொல்லப்படும். சத்தத்தில் கூடஸ்தசேதனத்தின் அம்சமும் விட்சேப சக்தியின் அம்சமும் ஆக இரண்டு அம்சங்களும் சத்த அர்த்தத்தில் சீவசேதனத்தின் அம்சமும் ஆக இரண்டு அம்சங்கள் உள்ளன.

வினா 12 அதிகாரிகள் எத்தனை வகைப்படுவர் ?

விடை மந்தன் மத்திமன் உத்தமன் உத்தமோத்மன் என நான்கு வகைப்படுவர். சாதன சதுட்டயம் ஏதுபரியந்தம் கைவரப் பெற்றவன் மந்தன். வேதாந்த விசாரம் செய்தும் கர்த்தவ்யம் நாசமாகாதவன் மத்திமன். வேதாந்த விசாரம் செய்து கர்த்தவ்யம் நாசமாகியும் தத்துவ ஞானம் உண்டாகாதவர் உத்தமர். வேதாந்த விசாரம் செய்து தத்துவஞானம் உண்டாய் அவித்தையை நாசம் செய்தவரே உத்தமோத்தர் எனப்படுவார்.

வினா 13 முமூட்சுக்கள் எத்தனை வகைப்படுவர் ?

விடை உத்தமன், மத்திமன், அதமன் என மூன்று வகைப்படுவர். முமூட்சுக்களுடன் கூடி வேதாந்த சிரவணம் செய்யுங்காலத்தும் தான் தனித்திருக்கும் காலத்தும் புத்திவிருத்தி ஆத்மபோதத்தில் நிலைத்தவர் உத்தமமுமூட்சு எனவும் வேதாந்த சிரவணம் செய்யும் காலத்து மட்டும் புத்தி விருத்தி ஆத்ம போதத்தில் நிலைத்தவர் மத்திம முமூட்சு என்றும் முமூட்சுக் களுடன்கூடி வேதாந்தசிரவணம் செய்யும் காலத்தும் தான் தனிந்திருக்கும்

காலத்தும் விசய போகங்களில் விருத்தி நிலைத்தவரே அதம முமூட்சு எனப்படுவர்.

வினா 14 வேத உபநிடதங்களால் போதிக்கப்பட்ட போதனை எத்தனை வகைப்படும் எனின் ?

விடை உத்தேசபோதனை, இலக்கண போதனை, பரீட்சையா போதனை என மூன்று வகைப்படும்.

வினா 15 உத்தேசபோதனை இலக்கண போதனை பரீட்சையா போதனை என்பது யாது எனின் ?

விடை வேதப்பிரமாணங்களால் பிரதிபாதிக்கப்பட்ட 36 தத்துவங்களின் பெயர்களையும் சாங்கோமாங்கமாக எடுத்துக்கூறுவதே உத்தேச போதனை எனப்படும். இலக்கண போதனை யாவது யாது எனின், வேதவாக்கியங்களால் அறிவிக்கப்படும் இலக்கியத்திற்குக் கூறிய இலக்கணம் அதிவியாப்த்தி தோடம் அவ்வியாப்த்தி தோடம், அசம்பாவ தோடம் என்னும் முத்தோடங்களும் இன்றிய அசாதாரண தர்மச் சிறப்பை எடுத்துக் கூறுவதே இலக்கண போதனை எனப்படும். தன்னால் விவரிக்கப்படும் பொருளுக்குக்கூறிய இலக்கணம் உண்டோ இல்லையோ என சீடன் ஆராய்ந்து அறிந்து தெளியும் படியாக வினாவிப் பரீட்சிப்பதே பரீட்சையா போதனை எனப்படும்.

வினா 16 பசுவாகிய இலக்கியத்திற்குக் கூறிய இலக்கணத்தில் உள்ள அதிவியாப்த்திதோடம் என்பது யாது ?

விடை கோடுடையது பசு என்னும் இலக்கணம் மற்ற இலக்கியங்களிலும் காணப்படுவதால் இது அதிவியாப்தி தோடம் உடையது.

வினா 17 பசுவாகிய இலக்கியத்திற்குக் கூறிய இலக்கணத்தில் உள்ள அவ்வியாப்திதோடம் என்பது யாது எனின் ?

விடை கபிலை நிறம் உடையது பசு என்னும் இலக்கணம் சொன்ன பசு இலக்கியத்திலேயே ஏகதேசத்தில் காணப்படாமையால் அது அவ்வியாப்திதோடம் எனப்படும்.

வினா 18 பசுவாகிய இலக்கியத்திற்குக் கூறிய இலக்கணத்தில் உள்ள அசம்பவதோடம் என்பது யாது எனின் ?

விடை ஒற்றைக்குளம்புடையது பசு என்றும் இலக்கணம் சொன்ன பசுவிலக்கியம் முழுவதிலும் காணப்படாமையால் அது அசம்பவதோடம் உடைய இலக்கணம் எனப்படும்.

வினா 18.1 பசுவாகிய இலக்கியத்திற்குச் சிறந்த இலக்கணம் யாது எனின் ?

விடை அலை தாடையும் முதுகுக்கொண்டையும் உடையது பசு என்னும் இலக்கணம் பசுவாகிய இலக்கியத்தைத் தவிர மற்ற இலக்கியங்கள் ஒன்றிற்கேனும் காணப்படாமையால் அதிவியாப்த்தி தோடமும் பசு இனங்கள் முழுவதிலும் எப்போதும் இருத்தலால் அவ்வியாப்த்தி அசம்பவதோடம்

என்னும் முத்தோடங்களும் இன்றியதால் சிறந்த இலக்கணம் எனப்படும்.

வினா 19 பிரம்மமாகிய இலக்கியத்திற்குச் சிறந்த இலக்கணம் ஆவது யாது எனின் ?

விடை சச்சிதானந்த இலக்கணமே பிரம்மாகிய இலக்கியத்திற்குச் சிறந்த இலக்கணம் என்று சொல்லப்படும்.

வினா 20 சச்சிதானந்த இலக்கணத்தை பிரம்மாகிய இலக்கியத்திற்குச் சிறந்த இலக்கணம் என்று சுருதி சொன்னது எதனால் எனின் ?

விடை குறிப்பிடப்படும் இலக்கியமாகிய பிரம்மத்திற்குக் கூறும் சச்சிதானந்த இலக்கணம் குறிப்பிடப்படாதமற்ற பிரகிருதி முதலிய தத்துவங்கள் ஒன்றிற்கேனும் காணப்படாமையால் அதிவியாப்த்தி தோடமும் பிரம்ம வியாபகத்தில் ஏகதேசத்தில் இருக்கினும் குறைவுபடாமல் இருப்பதால் அவ்வியாப்த்தி தோடமும் எப்போதும் இருப்பதால் அசம்பவதோடமும் என்னும் முத்தோடங்களும் இன்றியதால் சச்சிதானந்த இலக்கணத்தைப் பிரம்மத்திற்குச் சிறந்த இலக்கணம் என்று சுருதிகள் சொன்னதற்கு இதுவே காரணமாம்.

வினா 21 சக்தி. விருத்தி என்பது யாது எனின் ?

விடை பதத்திற்குள்ள அர்த்தத்தைக் காட்டுவதே சத்திவிருத்தி எனப்படும்.

வினா 22 இலட்சணா விருத்தி என்பது யாது எனின் ?

விடை பதத்திற்குரிய வாச்சியப் பொருளை விடுத்து அதன் சம்பந்தியை உணர்த்துவது எதுவோ அது இலட்சணாவிருத்தி எனப்படும்.

வினா 23 விட்ட இலக்கணை பிரம்மத்தை எவ்வாறு உணர்த்துகிறது எனின் ?

விடை சத்தியின் காரியமாகிய வாச்சியார்த்தங்கள் முழுவதையும் விட்ட விருத்திக்கே விட்ட இலக்கணை பிரம்மத்தை உணர்த்துகிறது. மனம் பிரம்மம் என்னும் வாக்கியத்தில் அந்தக்கரண விருத்தியாகிய வாச்சியார்த்தம் முழுவதையும் விடுத்து அதன் சம்பந்தியாய் உள்ள சேதன பிரம்மத்தை விட்ட இலக்கணை உணர்த்துகிறது.

வினா 24 விடாத இலக்கணை பிரம்மத்தை எவ்வாறு உணர்த்துகிறது ?

விடை வாச்சியார்த்தம் முழுவதையும் விடாமல் அதன் சம்பந்தியை உணர்த்துவது விடாத இலக்கணை எனப்படும். சச்சிதானந்தம் பிரம்மம் என்னும் வாச்சியத்தில் உள்ள சச்சிதானந்தமாகிய வாச்சியார்த்தங்கள் முழுவதையும் விடாமல் அவைகளின் சம்பந்தியாய் உள்ள பிரம்மத்தை விடாத இலக்கணை உணர்த்துகிறது.

வினா 25 விட்டுவிடாத இலக்கணை பிரம்மத்தை எவ்வாறு உணர்த்துகிறது எனின் ?

விடை வாச்சியார்த்தமாகிய பொருள்களில் ஓர்பாகத்தை விடுத்து மற்றொர் பாகத்தை விடாமல் உணர்த்துவது பாகத்தியாகமாகிய விட்டுவிடாத இலக்கணையாம். தத்துவமசி மகாவாக்கியத்தில் உள்ள தத்பதார்த்தத்தில் மாயை அதன் ஆபாசம் சர்வ்வஞ்ஞத்துவாதி தர்மங்களாகிய ஓர் பாகத்தையும் துவம்பத

வார்ச்சியார்த்தத்தில் அவித்தை அதன் கண் உள்ள ஆபாசம் கிஞ்ஞுத்துவாதி தர்மங்களாகிய ஓர் பாகத்தை விடுத்து அவற்றின் சம்பந்தியாய் உள்ள பிரம்மம் கூடத்தர் என்னும் அதிஷ்டான சேதனங்களை விடாமல் அசி என்னும் பதத்தால் பிரம்மமே கூடத்தர். கூடத்தரே பிரம்மம் என விரோதமின்றி விட்டுவிடாத இலக்கணையானது பிரம்மத்தை உணர்த்துகிறது.

வினா 26 துவம்பத வாச்சியமும். வாச்சியார்த்த சமூகக் கூட்டங்களும் யாவை எனின் ?

விடை காரியசகித அவித்தை அதன்கண் உள்ள ஆபாசம் இவற்றின் அதிஷ்டான சேதனம் ஆகிய மூன்றும் சேர்ந்துள்ள கிஞ்ஞுக்யத்துவாதி தர்மசகித சீவன் துவம்பதவாச்சியம் எனப்படும். தூலம் சூக்குமம் காரணம் என்னும் சரீரதிரயமும் சாக்கிரம் சொர்ப்பணம் சுழுத்தி என்னும் அவஸ்தாத் திரயமும் விசுவன்தைசசன் பிராஞ்ஞன் என்னும் அபிமானத்திரயமும் ஆகிய இந்த ஒன்பதும் துவம்பத வாச்சி யார்த்த சமூகக்கூட்டங்கள் எனப்படும்.

வினா 27 தத்பதவாச்சியமும் வாச்சியார்த்த சமூகக்கூட்டங்களும் யாவை எனின் ?

விடை காரியசகித மாயை அதன் கண் உள்ள ஆபாசம் இவற்றின் அதிட்டானசேதனம் ஆகிய மூன்றும் சேர்ந்துள்ள சர்வஞ்ஞுத்துவாதி தர்மசகித ஈஸ்வரன் தத்பத வாச்சியம் எனப்படும். விராட்டு இரணிய கர்ப்பன் அவ்வியாகிருதம் என்னும் சரீர திரயமும் சிருட்டி திதிசம்காரம் என்னும் அவஸ்தா திரயமும் வைசுவானரன் சூத்திராத்மா அந்தர்யாமி என்னும் அபிமான திரயமும் ஆகிய இவ்வொன்பதும் தத்பத வாச்சியார்த்த சமுகக் கூட்டங்கள் எனப்படும்.

வினா 28 துவம்பத அன்வயம் யாது ? வியதிரேகம் யாது எனின் ?

விடை சாக்கிர அவத்தையில் வியட்டிதூல சூக்கும காரண சரீரமாகிய மூன்று சரீரங்களுக்கும் கூடஸ்த ஆத்மாவே சாட்சியாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. சொப்பன அவஸ்தையில் வியட்டி சூக்கும் காரண சரீரங்களுக்கு கூடஸ்த ஆத்மாவே சாட்சியாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. சுழுத்தி அவஸ்தையில் காரண சரீரத்திற்கு கூடஸ்த ஆத்மாவே சாட்சியாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. சமாதி அவஸ்தையில் கூடஸ்த ஆத்மாவே பரமாத்வாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்று புத்திவிருத்தி அறிவதுவே துவம்பத அன்வயம் எனப்படும். துவம்பத வியதிரேகம் என்பது யாது எனின் ? சொப்பன அவஸ்தையில் சாக்கிரத்தில் கண்ட தூலசரீரம் விளங்குவதில்லை. சுழுத்தி அவஸ்தையில் சொப்பனத்தில் கண்ட சூக்குமசரீரம் விளங்குவதில்லை. சமாதி அவஸ்தையில் சுழுத்தியில் கண்ட காரண சரீரம் விளங்குவதில்லை என்று புத்தி விருத்தி அறிவதுவே துவம்பத வியதிரேகம் எனப்படும்.

வினா 29 தத்பத அன்வயம் என்பது யாது ? வியதிரேகம் என்பது யாது எனின் ?

விடை பஞ்சீகரணத்திற்குப் பின்பு உண்டான சமட்டி தூலபஞ்சபூதங்களுக்கும் அதன் காரியங்களுக்கும் அந்த பரமாத்மாவே சாட்சியாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. பஞ்சீகரணத்திற்கு முன்னாலோ எனின் அந்த பரமாத்மாவே சூக்கும பஞ்சபூதங்களுக்கு சாட்சியாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆகாயபூத உற்பத்திக்கு முன் பிரளய காலத்திலோ எனின் அந்த பரமாத்மாவே மாயைக்குச் சாட்சியாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. இப்படி தத்துவவிசாரம் செய்தவர்களுக்கு மாயையும் அவித்தையும் நாசமாய் பிராரத்த போகம் முடிந்த பின் வர்த்தமான சரீரம் வீழ்ந்த காலமே விதேகமுத்திதிசை என்று சொல்லப்படும். இத்தகைய விதேகமுத்தி திசையில் இந்த பரமாத்மா அகண்டாகார சொப்பிரகாசமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது என்று புத்திவிருத்தி அறிவது வேத தத்பத அந்வயம் எனப்படும். வியதிரேகம் ஆவது யாது எனின் பஞ்சீகரணத்திற்கு முன் சமட்டிதூல பஞ்சபூதங்கள் விளங்குவதில்லை ஆகாய பூத உற்பத்திக்கு முன் சூக்ம பஞ்ச பூதங்கள் விளங்குவதில்லை. முத்தி அவத்தையில் மாயையும் அதன் காரியங்களும் விளங்குவதில்லை என்று புத்திவிருத்தி அறிவதுவே தத்பத வியதிரேகம் எனப்படும்.

வினா 30 அநுபந்த சதுட்டயம் என்பது யாது எனின் ?

விடை அதிகாரி, விசயம், சம்பந்தம், பிரயோஜனம் என நான்காம்.

வினா 31 சாதன சதுட்டயம் என்பது யாது எனின் ?

விடை விவேகம், வைராக்கியம், சமாதிசட்கசம்பத்து முமூட்சுத்துவம் என நான்காம்.

வினா 32 அதிகாரியின் இலக்கணம் யாது எனின் ?

விடை மலவிட்சேபதோடம் நீங்கினவர்களாயும் ஆவரணதோடம் உடையவர்களாயும் நான்கு சாதனங்களும் கைவரப்பெற்றவர்களே அதிகாரிகள் என்று சொல்லப்படுவர்.

வினா 33 நித்திய அநித்திய வஸ்து விவேகம் என்பது யாது எனின் ?

விடை நித்தியமாயும் சலனரகிதமாயும் உள்ளது பிரம்மம். அநித்தியமாயும் சலனசகிதமாயும் உள்ளது தேகாதிப் பிரபஞ்சம். இந்த இரண்டையும் அன்னப்பட்சியானது பாலையும் நீரையும் வேறு பிரித்து எடுப்பதுபோல நித்திய அநித்தியங்களை வேறு பிரித்து அறிவதே நித்திய அநித்தியவஸ்து விவேகம் என்று சொல்லப்படும்.

வினா 34 மல விட்சேபதோடம் என்பது யாது எனின் ?

விடை பூர்வம் அநேக ஜென்மங்களில் செய்த பாவகர்ம சமஸ்காரம் புத்திவிருத்தியில் பற்றியிருப்பதுவே மலதோடம் எனப்படும். பூர்வம் அநேக ஜென்மங்களில் செய்த புண்ணியகர்ம சமஸ்காரம் புத்திவிருத்தியில் பற்றியிருப்பதுவே விட்சேப தோடம் எனப்படும்.

வினா 35 ஆவரண தோடம் என்பது யாது ?

விடை கண்ணிற்தோன்றிய காசபடலாதிகள் ரூபவிசயத்தைத் தெரியாமல் மறைப்பது போல சுயம்பிரகாசமாகிய ஆத்மாவை மறைப்பதுவே ஆவரணதோடம் எனப்படும்.

வினா 36 மல விட்சேப தோடங்கள் எதனால் நாசமாகும் ?

விடை பிரணவ தியானத்தால் நாசமாகும்.

வினா 37 பிரணவதியானம் என்பது யாது எனின் ?

விடை பிரணவ அச்சரம் ஆகிய ஓம் வடிவமே பிரம்ம சொரூபமாம். அந்தப் பிரணவ அச்சரம் ஆகிய பிரம்ம சொரூபமே நான் என்கின்ற நினைவில் புத்தி விருத்தியை இடையின்றி நிலைநிறுத்துவதே பிரணவ தியானம் எனப்படும்.

வினா 38 அச்சரப் பிரணவ தியானம் சிதாகாயப் பிரணவ தியானம் சோதிப்பிரணவ தியானம் என்பது யாது எனின் ?

விடை ஓங்காரரூப அச்சரத்தைப் புருவமத்தியில் வைத்து அதில் புத்தி விருத்தியை நிலை நிறுத்திப் பழகுவதே அச்சரப் பிரணவ தியானம் என்றும் மனித சரீரத்தில் தொப்புளின் உட்பாகத்தில் உள்ள ஓங்கார வடிவ சிதாகாயத்தில் புத்திவிருத்தியை நிலைநிறுத்திப் பழகுவதே சிதாகாயப் பிரணவ தியானம் என்றும் சிதாகாயத்தையும் விட்டு சிதாகாயத்தில் நிறைந்திருக்கிற சுயம்பிரகாசமாகிய சிவப்பிரகாசத்தில் புத்திவிருத்தியை நிலை நிறுத்திப் பழகுவதே சோதிப்பிரணவ தியானம் எனப்படும்.

வினா 39 சகுனப்பிரணவ தியானம் என்பது யாது ?

விடை ஸ்தூல உபாதிசகித விராட் விஸ்வசேதனம் அகாரத்தின் வாச்சியம் சூக்ம உபாதியோடு கூடிய சேதனமாகிய ஹிரண்ய கர்ப்ப தைசசன் உகாரத்தின் வாச்சியமாம். காரண உபாதியோடு கூடிய சேதனம் ஆகிய ஈஸ்வரப் பிராஞ்ஞன் மகாரத்தின் வாச்சியமாம். இப்படி நாமரூபமான சகல உபாதிகளோடும் கூடிய சேதனம் ஓங்காரத்தின் வாச்சியாம் இவ்விதசர்வரூப ஓங்காரமே நான் என்னும் தியானமே சுகுணப்பிரணவ தியானம் எனப்படும்.

வினா 40 நிர்க்குணப் பிரணவ தியானம் என்பது யாது ?

விடை ஸ்தூல உபாதியை விட்டு சேதன மாத்திரம் அகாரத்தின் லட்சியம் சூக்கும உபாதியை விட்டுச் சேதன மாத்திரம் உகாரத்தின் லட்சியம் காரண உபாதியைவிட்டு சேதன மாத்திரம் மகாரத்தின் லட்சியம் இவ்வித சர்வ உபாதிகளும் இன்றிய சேதனம் ஓங்காரத்தின் லட்சியமாம். அந்த ஓங்காரமே நான் என்னும் தியானமே நிர்குணப்பிரணவதியானம் எனப்படும்.

வினா 41 ஓங்கார வடிவ சிதாகாயத்திலிருந்தே சப்தகோடி மந்திரங்களும் எப்படி உண்டாயிற்று ?

விடை ஒவ்வொரு மனித சரீரத்திலும் தொப்புளின் உட்பாகத்தில் ஓங்காரவடிவ சிதாகாயம் ஒன்று உண்டு. அதில் சப்தகோடி மந்திரங்கள் உண்டு. அந்த

மந்திரத்திற்குக் காரணமான சத்தியுண்டு. சத்திக்குக் காரணமான சிவமும் உண்டு. அது எதுபோல் எனின் ஒரு ரேடியோ பெட்டியில் தமிழ், மலையாளம், இந்தி, ஆங்கிலம் என்னும் நான்கு பாசைகள் அடங்கியருப்பது போலவாம் நாம்எந்த பாசை வேண்டும் என்று சுட்சைத் திருப்புகிறோமோ அந்தப் பாசையை நமக்கு எடுத்துக் கொடுப்பது போல சுட்சைப் போல் உள்ள புத்திவிருத்தியில் எந்த மந்திரம் வேண்டும் என்று நினைக்கிறோமோ அந்த மந்திரத்தை நமக்கு அது உண்டு பண்ணுகிறது.

வினா 42 உலகத்தில் உள்ள எல்லா ரூபங்களும் ஓங்காரரூபமேயாம் என்று சுருதி சொன்னது எதனால், எனின் ?

விடை உலகத்தில் உள்ள எல்லாப் பதார்த்தங்களிலும் நாமபாகம் ரூபபாகம் என இரண்டு பாகங்கள் உண்டு. இவற்றில் ரூபத்திற்கு நாமமே காரணம். ஏன் எனில் ரூபம் அழிந்தும் நாமம் அழிவதில்லை. நாமமின்றி எந்த ரூபங்களையும் அறிய முடியாது. ஆதலால் ரூபத்திற்கு நாமம் காரணமாம் நாமத்திற்குக்காரணம் வாசக சத்தமாம். வாசக சத்தம் இன்றி எந்த நாமத்தையும் அறிய முடியாது. ஆதலால் நாமத்திற்கு வாசக சத்தம் காரணம். வாசக சத்தத்திற்கு காரணம் ஓங்கார ரூபமாம் ஓங்கார ரூபமின்றி என்ற வாசகசத்தங்களும் இல்லை. உலகத்திலும் வேதத்திலும் வழங்கப்படுகிற சத்தங்கள் அனைத்தும் ஓங்கார ரூபசிதாகாயத்திலிருந்தே உண்டாயிற்று என்று பிரபல சுருதிகளாலும் பிரத்தியட்சப் பிரம்மாணங்களாலும் பிரதிபாதிக்கப்பட்டிருப்பது பிரசித்தமாதலால் உலகத்தில் உள்ள எல்லா ரூபங்களும் ஓங்கார ரூபமேயாம் என்று சொல்லப்பட்டது.

வினா 43 சர்வதுக்கங்களையும் நாசம் செய்யும் தியானமானது யாது எனின் ?

விடை ஜோதிப்பிரணவ தியானமே சர்வதுக்கங்களையும் நாசம் செய்யும் தியானம் ஆகும்.

வினா 44 மக்கள் எத்தனை வகைப்படுவர் ?

விடை உத்தம மக்கள், மத்திம மக்கள், அதம மக்கள் என மூன்று வகைப்படுவர். மனித சரீரத்தில் தொப்புளின் உட்பாகத்தில் உள்ள ஓங்கார வடிவு சுயம்பிரகாசமே நான் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களே மக்களுள் உத்தம மக்கள் ஆவர். ஓங்கார வடிவ சுயம்பிரகாசத்திற்கு உபாதியாய் உள்ள மனித சரீரமாகிய வடிவத்தை நான் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் அதமமக்கள். மனித சரீரமாகிய வடிவம் சத்தியமாகப் பொய் என்று எண்ணிய எண்ணத்தின் பூர்வமாக பஞ்ச மூர்த்திகள் முதலிய ஏதேனும் ஓர் மூர்த்தி வடிவத்தை நான் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களே மத்திம மக்கள் எனப்படுவர்.

வினா 45 உத்தம மக்கள் எதன்மூலம் மோட்சத்தை அடைவர் ?

விடை மகாவாக்கிய விசாரத்தின் மூலம் மோட்சத்தை அடைவர்.

வினா 46 மத்திம மக்கள் எதன் மூலம் மோட்சத்தை அடைவர் எனின் ?

விடை சிதாகாசபிரணவதியானத்தின் மூலம் மோட்சத்தை அடைவர்.

வினா 47 அதமமக்கள் எதன்மூலம் மோட்சத்தையடைவர் எனின் ?

விடை அட்சரப்பிரணவ தியானத்தின் மூலம் மோட்சத்தை அடைவர்.

வினா 48 உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் ஏற்பட்டுள்ள எல்லாத் துக்கங்களுக்கும் எது காரணம் எனின் ?

விடை பொய்ப்பொருளை மெய்பொருள் என்று நம்பி அந்தப் பொய்ப் பொருளையே மனம் என்று நம்பி பற்றிக் கிடந்ததே காரணம் என்று சொல்லப்படும்.

வினா 49 இந்த துக்கம் எப்போது நாசமாகும் எனின் ?

விடை பொய்ப்பொருளை மனம் எவ்வளவு காலம் பற்றியிருக்கிறதோ அவ்வளவு காலம் மெய்ப்பொருளில் பற்று உண்டாகிற காலமே இந்தத் துக்க நாசமாகும் காலம் ஆகும்.

வினா 50 சீவன் முத்தியானந்தம் யாருக்குச் சித்திக்கும் எனின் ?

விடை ரஜோ தமோ குணங்களை நாசம் செய்தவர்களுக்கு சீவன் முத்தியானந்தம் சித்திக்கும்.

வினா 51 எப்படியுள்ளது சீவன் முத்தி நிலை ?

விடை ரஜோ தமோகுணங்கள் நாசமாய் சத்துவகுணமும் லிங்கசரீரமும் நாசம் ஆகாமல் இருக்கும் நிலையே சீவன்முத்தி நிலை எனப்படும்.

வினா 52 எப்படியுள்ளது விதேகமுத்திநிலை எனின் ?

விடை சத்துவகுணமும்லிங்கதேகமும் நாசமான நிலையே விதேகமுத்திநிலை என்று சொல்லப்படும்.

வினா 53 சுகபானம் பண்ணினவர்களுக்கு அடையாளம் யாது ?

விடை சச்சிதானந்தமாக விளங்கிக் கொண்டிருப்பதே அடையாளமாகும்.

வினா 54 புத்திவிருத்தியில் உள்ள திரிபுடி யாது ?

விடை சேதன அம்சம் சீவ அம்சம் புத்தி அம்சம் என்னும் மூன்றும் திரிபுடி எனப்படும்.

வினா 55 பாகிய பதார்த்தங்களை விருத்தி அறியும் போது விருத்தியில் உள்ள அம்சங்களின் செயல் யாது ?

விடை விசயத்தை மறைத்திருந்த ஆவரணத்தைப் பங்கஞ் செய்வது விருத்தியின் செயல். விசயத்தை அறிவது சீவபாகத்தின் செயல். இவற்றை நிர்விகாரமாய் இருந்து சூரியனைப் போல விளக்கி வைப்பது சாட்சியின் செயல் ஆகும்.

வினா 56 சாக்கிர அவஸ்தைக்கும் சமாதி அவஸ்தைக்கும் வேறுபாடு இல்லை என்றது எதனால் எனின் ?

விடை அனாத்ம தத்துவங்கள் 35ம் நியதிகளைந்து ஆத்மத்துவமாகிய பிரம்மமே நான் என்று அறிந்தவர்களுக்கு, சாக்கிர அவஸ்தைக்கும் சமாதி

அவஸ்தைக்கும் வேறுபாடு இல்லை எனப்படும்.

வினா 57 விசுவன் தைசசன் பிராஞ்ஞன் ஆகிய இம்மூவரும் சுதந்திரர்களா ? அல்லது ஒரே தேசத்தின் அவஸ்தா விசேசத்தால் இயங்குகின்றனரா ? எனின்.

விடை சுதந்திரர்கள் அல்ல. ஒரே சேதனத்தின் அவஸ்தா விசேசத்தால் இயங்குகின்றவர்களே. மூன்று அவஸ்தா விசேசர்களையும் சமாதி அவஸ்தையில் உள்ள சாட்சிசேதனமே விளக்கி வைப்பதால் இம்மூவரும் சுதந்திரர்கள் அல்ல என்பதாம்.

வினா 58 தந்திரகலை மந்திரகலை உபதேசகலை என்பது யாது எனின் ?

விடை கர்மகாண்டத்தை முன்பின் விரோதமின்றி அநுஷ்டித்தலை உணர்வதுவே தந்திரகலை எனப்படும். உபாசன காண்டத்தில் சொல்லியபடி மனத்தை அடக்கிப் பழகுவதே மந்திர கலை எனப்படும். உபதேச கலை என்பது யாது எனின் நித்தியமாகிய பிரம்மம் தன்னில் வேறில்லாத சச்சிதானந்த சொரூபமாய் இருக்கும் இயல்பைத் தான் உணரும் வழியையும், பிறர்க்கு உணர்த்தும் வழியையும் உணர்வதுவே உபதேசகலை எனப்படும்.

வினா 59 சோதி ஞானம் என்பது யாது எனின் ?

விடை சீவேஸ்வர சகத்திலும் அதற்கு காரணமான அபின்னா சத்தியிலும் யாதொன்றிலும் தாக்கற்றிருக்கிற சேதனமே சோதிஞானம் எனப்படும்.

வினா 60 சொரூப ஞானம் என்பது யாது எனின் ?

விடை சீவேஸ்வர ஜகத்திற்கும் அபின்னா சத்திக்கும் இடங்கொடுத்து அதற்கு உறவாக இருக்கும் சேதனமே சொரூப ஞானம் எனப்படும்.

வினா 61 விருத்தி ஞானம் என்பது யாது எனின் ?

விடை சீவேஸ்வர ஜகத்திற்குக் காரணமாய் உள்ள அபின்னா சக்தியை நாசம் செய்யும் ஞானமே விருத்திஞானம் எனப்படும்.

வினா 62 புருட தந்திரமாவது யாது ? வஸ்து தந்திரமாவது யாது எனின் ?

விடை ஆதாரமின்றிய அவித்தையில் பிரதி பிம்பித்த சீவன் புருடன் எனப்படுவான். அந்த சீவனே நான் என்னும் எண்ணத்துடன் செய்யும் ஞான காண்ட அப்பியாசமும் புருட தந்திரம் எனப்படும். அந்த அவித்தைக்கு அதிஷ்டானமாகிய ஆத்மாவே வஸ்து எனப்படும். ஆத்மாவே நான் என்னும் எண்ணத்துடன் செய்யும் ஞான காண்ட அப்பியாசம் வஸ்து தந்திரம் எனப்படும்.

வினா 63 வாக்கையும் மனத்தையும், சிவம் சீவர்களுக்கு ஆக்கிக் கொடுத்த நோக்கம் யாது எனின் ?

விடை நால் வேத மகாவாக்கியத்தை வசனிக்கவே வாக்கையும் அந்த வாக்கிய அர்த்தத்தை நினைக்கவே மனத்தையும் சிவம் சீவர்களுக்கு ஆக்கிக் கொடுத்த நோக்கமாகும்.

வினா 64 மனிதப்பிறப்புக்குள்ள சிறப்புத்தன்மை யாது எனின் ?

விடை ஒவ்வொரு மனித சரீரத்திலும் தொப்புளின் உட்பாகத்தில் ஓங்கார வடிவ சிதாகாயம் ஒன்று உண்டு. அதில் சப்தகோடி மந்திரங்கள், மந்திரங்களுக்குக் காரணமான சத்தம், சத்தத்திற்குக் காரணமான சிவம் ஆகிய நான்கு பதார்த்தங்கள் உண்டு. இவற்றில் மந்திரம் சத்தம் சத்திக்குக் காரணமாக இந்த மூன்றையும் விட்டு சுயம் பிரகாசமாகிய சிவப்பிரகாசமே நான் என்கின்ற நினைவில் புத்தி விருத்தியை நிலைநிறுத்துவதே மனிதப் பிறப்புக்குள்ள சிறப்புத் தன்மையாகும்.

வினா 65 மனிதன் மனிதன் ஆகும் காலம் எப்பொது ?

விடை மகாவாக்கிய சத்த அர்த்தத்திற்கு புத்தி விருத்திக்கும் சம்பந்தம் ஆன காலமே மனிதன் ஆன காலம் எனப்படும்.

வினா 66 மூன்று காண்டங்களாலும் மக்களுக்கு உண்டான பயன் யாது எனின் ?

விடை கர்மகாண்டம் மக்களுக்குள்ள விலங்குத்தன்மையைப் போக்கி மனிதத்தன்மைனயை ஆக்கியது. உபாசன காண்டம் மனிதத் தன்மையைப் போக்கி தேவத்தன்மையை உண்டாக்கியது.ஞானகாண்டம் தேவத்தன்மையையும் போக்கி என்றும் உள்ள சிவத்தன்மையை ஆக்கியது.

வினா 67 கர்மகாண்டி என்பவன் யாவன் ?

விடை தேகாந்திரங்களின் கிரியைகளை சாகாதவர்கள் செத்து இளவு கொண்டாடுகிற இடத்திலும் சற்றும் கெடவிடாமல் செய்து முடிப்பவனே கர்மகாண்டி எனப்படவன்.

வினா 68 உபாசனா காண்டி என்பவன் யாவன் ?

விடை பிரணவமாகிய ஏதேனும் ஒரு மந்திரத்தை சற்றும் கெடவிடாமல் இடையின்றித் தியானித்துக் கொண்டிருப்பவரே உபாசன காண்டி எனப்படுவர்.

வினா 69 ஞான காண்டி என்பவர் யாவர் ?

விடை அநாத்மதத்துவங்கள் 35ம் நான் அல்ல என்று நியதிகளைந்து ஆத்ம தத்துவமாகிய பிரம்மமே நான் என்று புத்தி விருத்தியில் இடையின்றித் தியானித்துக் கொண்டிருப்பவரே ஞானகாண்டி எனப்படுவர்.

வினா 70 பிரமேயகத அசம்பாவனை, சம்சயபாவனை, விபரீத பாவனையாவது யாது எனின் ?

விடை நான் சிவமா சீவனா என்று எண்ணுகிற நிலைக்கு பிரமேயகத சம்சயபாவனை என்றும் நான் சிவம் அல்ல என்று எண்ணுகிற நிலைக்கு பிரமேயகதஅசம்பாவனை என்றும் நான் சிவம் அல்ல சீவனேதான் என்று எண்ணுகிற நிலைக்கு பிரமேயகத விபரீதபாவனை என்றும் சொல்லப்படும்.

வினா 71 பிரம்மத்தினிடத்தில் உள்ள நிராபேட்சிக வியாகபத்தன்மைக்கும் மாயையினிடத்தில் உள்ள ஆபேட்சிக வியாபகத் தன்மைக்கும் உள்ள வேறுபாடு யாது எனின் ?

விடை மாயை பிருதிவி முதலிய பஞ்ச பூத பௌதிகங்களை அபேட்சிக்க வேண்டும் என்று இச்சித்து இச்சித்தபடியே பானம் பண்ணுகிறது. அதுபோல பிரம்மத்தை அபேட்சிக்க வேண்டும் என்று இச்சித்தும் இச்சித்தபடியே அனுபவிக்க முடியாததனால் அதனிடம் உள்ள வியாபகத்தன்மைக்கு ஆபேட்சிக வியாகபத்தன்மை என்றும் பிரம்மம் யாதொன்றையும் அபேட்சிக்க வேண்டும் என்கிற இச்சையின்றியே சர்வ அண்டங்களிலும் உள்ள சத்திசத்தர்களையும் வியாபித்து இருப்பதால் பிரம்மத்தினிடத்தில் உள்ள வியாபகத் தன்மைக்கும் நிராபேட்சிக வியாபகத் தன்மை என்பதே வேறுபாடு ஆகும்.

வினா 72 ஆத்மா சத்தெனப்பட்டது எதனால் ? சித்தெனப்பட்டது எதனால் ? ஆனந்தம் எனப்பட்டது எதனால் எனின் ?

விடை தேகாதிப்பிரபஞ்சமாகிய சகத்துதோன்றி இருந்து அழிந்த காலத்தும் தான் அழியாமல் இருப்பதனால் ஆத்மா சத்து எனப்பட்டது. அது எது போல எனில் கற்பித சர்பம் தோன்றியிருந்து அழிந்த காலத்து அதிஷ்டானமாகிய கயிறு அழியாமல் இருப்பதுபோலவாம் சகலலோகங்களிலும் உள்ள சீவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் மகாபிரளயத்தில் ஒருவரும் இல்லை என்பதையும் விளக்கி வைத்துக் கொண்டிருப்பதால் ஆத்மா சித்து எனப்பட்டது. அது எதுபோல எனின் நாடகக் கொட்டகையில் நாடகம் நடிக்கும்போது சகலமும் இருக்கிறார்கள் என்பதையும் நாடகம் முடிந்தபின் அங்கு ஒருவரும் இல்லை என்பதையும் விளக்கி வைத்துக் கொண்டிருக்கும் தீபப்பிரகாசம் போலவாம். சகல அனாத்ம பதார்த்தங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்துதானும் ஆனந்த சொரூபமாகவே இருப்பதால் ஆத்மா ஆனந்தம் எனப்பட்டது. அது எது போல எனின் மதுரமில்லாத மாவுகளுக்கு மதுரத்தைக் கொடுத்து தானும் மதுர சுபாவமாகவே இருக்கும் வெல்லக்கட்டியைப் போலவாம்.

வினா 73 கடவுள் கண்டப்பொருள் அல்ல அகண்டப் பொருள் என்று சுருதி சொன்னது எதனால் எனின் ?

விடை ஒரு அண்டத்தில் உள்ள பஞ்ச மூர்த்திகளுக்கும் மற்றொரு அண்டத்தில் உள்ள பஞ்சமூர்த்திகள் வேறு அண்டங்களிலும் உள்ள பஞ்சமூர்த்திகளுக்கும் மற்ற அந்தந்த அண்டங்களில் உள்ள பஞ்சமூர்த்திகளும் கண்டப் பொருளென்றும், ஆனால் கடவுள் சகல அண்டங்களிலும் நிறைந்து வியாபித்து இருப்பதால் கடவுள் கண்டப்பொருள் அல்ல அகண்டப் பொருள் என்றும் சுருதிகளால் சொல்லப்பட்டது.

வினா 74 பிரம்மம் தேசகாலவஸ்து பரிச்சேதம் அற்றது என்று சுருதி சொன்னது எதனால் எனின் ?

விடை ஒரு தேசத்தில் இருந்து ஒரு தேசத்தில் இல்லாதன வாயும் உள்ள பொருள்கள் தேசபரிச்சேதம் உடையவை எனப்படும். பிரம்மம் எல்லாத்தேசங்களிலும் இருக்கிறது. இருக்கிறது என்று வியாபகசத்தாய் விளங்கிக் கொண்டிருப்பதால்

தேச பரிச்தேசம் இன்றியது பிரம்மாகும். பிரம்மம் மூன்று காலத்திலும் விளங்கிக் கொண்டிருப்பதால் காலபரிச்சேதம் இன்றியது ஆகும். கடத்தில் படமாகிய வஸ்து இல்லை. கடகலசாதிகளில் படாதிகள் இல்லாது இருப்பது வஸ்து பரிச்சேதம் எனப்படும். பிரம்மம் எல்லா வஸ்துக்களிலும் நிறைந்திருப்பதால் வஸ்து பரிச்சேதமும் அற்றது என்று சுருதிகளால் சொல்லப்பட்டது.

வினா 75 மகாவாக்கிய சத்தம் கேட்ட ஒருவரை அந்தச் சத்தம் அவரை என்ன ஆக்கியது ?

விடை சீவன் நான் என்று எண்ணிக்கொண்டிருந்த புத்தி விருத்தியைக் கெடுத்து சீவசாட்சியாகிய நானே சர்வசாட்சி என்கின்ற நினைவை உண்டாக்கியது.

வினா 76 நான் பிரம்மம் என்கின்ற நினைவு நிலைத்தவர்களுக்கு அடையாளம் யாது ?

விடை நீச்சல் தெரிந்த மனிதன் தவறி கிணற்றில் விழுந்த உடனே கிணற்றில் இருந்து மேலே ஏறுவதற்கு தானே உணர்த்தும் கைகால் முயற்சி செய்வது போல தூல, சூட்சும, காரண சரீரங்களுக்கு துக்கம் வந்த காலத்து விருத்தியானது தானே நான் பிரம்மம் என்கிற நினைவை உண்டாக்குவதே அடையாளம் ஆகும்.

வினா 77 முக்கிய அதிகாரியின் இலக்கணம் யாது ?

விடை சகுணப் பிரம்மம் வழிபாடு உருவ வழிபாடுமே எனக்கு உண்டான பெருந்தீமைகளுக்கும் துக்கத்திற்கும் காரணம் என்று அறிந்து அதைச் சத்தியமாய் கைவிட்டு வேதாந்த விசாரத்தால் ஆத்ம போதத்தின் விருத்தியில் நிலைத்தவரே முக்கிய அதிகாரியாவர்.

வினா 78 அமுக்கிய அதிகாரி என்பவர் யாவர் ?

விடை சகுணப்பிரம்ம வழிபாடும் உருவ வழிபாடுமே எனக்குண்டான பெருந்தீமைக்ளுக்கும் துக்கத்திற்கும் காரணம் என்று அறியாதவரும் வேதாந்த சிரவணத்தில் இச்சையுள்ளவரும் அமுக்கிய அதிகாரி எனப்படுவர்.

வினா 79 சிதாகாயத்தில் உள்ளது சிவப்பிரகாசம் என்பதற்குப் பிரத்தியட்சப் பிரமாணம் யாது ?

விடை சுயம் பிரகாசமானது நேத்திர இந்திரிய வழியாக வெளியே சென்று பதார்த்தங்களை விளக்கி வைப்பதே பிரத்தியட்சப் பிரமாணம் ஆகும்.

வினா 80 ஷட்வித லிங்க யுத்தியாவது யாது ?

விடை 1. உபக்கிரம உபசம்காரலிங்கயுத்தி 2. அப்யாசலிங்கயுத்தி 3. அபூர்வதை லிங்கயுத்தி 4. பலலிங்கயுத்தி 5. அர்த்தவாத லிங்கயுத்தி 6. உபபத்தி லிங்கயுத்தி என ஆறு வகைப்படும்.

வினா 81 உபக்கிரம உபசம்மார லிங்க யுக்தியாவது யாது ?

விடை உற்பத்தி நாசம் இல்லாத ஆத்மதத்துவத்தில் இருந்து உற்பத்தி நாசம் உள்ள

35 தத்துவங்களும் தோற்றுகிற கிரமத்தை புத்தி விருத்தி எண்ணிப்பார்ப்பதே உபக்கிரம லிங்க யுத்தி என்றும் உற்பத்தி நாசம் உடைய 35 தத்துவங்களும் உற்பத்தி நாசம் இன்றிய ஆத்மதத்துவத்தில் ஒடுங்கும் கிரமத்தை புத்தி விருத்தி எண்ணிப்பார்ப்பதே உமசம்மார லிங்கயுத்தி எனப்படும்.

வினா 82 அப்பியாசலிங்கயுத்தி யாவது யாது ?

விடை ஒருயாசகன் தாயே சோறு போடு ! லட்சுமியே சோறுபோடு ! பார்வதியே சோறு போடு ! என்று ஒரே ஸ்திரீயை பல நாமங்களால் துதிப்பது தனக்கு வேண்டியது ஆகாரம் என்னும் ஒரே பொருளைக் குறிப்பதாகும். அதுபோல வேத உபநிடதங்கள் பிரம்ம சொரூபத்தை வெவ்வேறு யுக்திகளால் பிரதிபாதிப்பது அத்வைதமாய் உள்ள பிரம்ம சொரூபமே நீ என்று பிரதிபாதிப்பது - உணர்துவது அப்யாச லிங்க யுக்தியாம்.

வினா 83 அபூர்வதை லிங்கயுத்தியாவது யாது ?

விடை அஷ்டப் பிரகாசங்களின் உதவியின்றி ஆத்மாசுயம் பிரகாசமாய் இருத்தலால் உபநிசத் பிரமாணங்களால் அன்றி மற்ற பிரத்தியட்சம் முதலிய இதரப் பிரமாணங்களால் அறிய முடியாது என்று பிரதி பாதிப்பதே அபூர்வதை லிங்கயுத்தியாகும்.

வினா 84 பலலிங்கயுத்தியாவது யாது ?

விடை கூடஸ்த ஆத்மாவாகிய தன்னை அறிவதாகிய தத்துவ ஞானத்திற்கு சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தியாகிய மோட்சம், பலம் எனப்பிரதி பாதிப்பதே பல லிங்கயுத்தி எனப்படும்.

வினா 85 அர்த்தவாத லிங்கயுத்தியாவது யாது ?

விடை பிரத்தியக் ஆத்மாவாகிய பிரம்மத்திற்கு பஞ்சகிர்த்திய கர்த்திருத்துவம் கற்பிப்பதையும் பேத ஞானத்தை நிந்திப்பதும் அபேத ஞானத்தின் ஸ்துதியுமே அர்த்தவாத லிங்கயுக்தி என்று சொல்லப்படும்.

வினா 86 உபபத்தி லிங்கயுக்தியாவது யாது ?

விடை வேதாந்த சாஸ்திரங்களில் பிரதிபாதிக்கப்படும் அத்வைத அர்த்தத்திற்கு அனுகூலமான திருஷ்டாந்தங்களை உபபத்தி என்பர். அதாவது காரணமாகிய மண்ணிற்கும் அதிற் தோன்றிய காரியமாகிய கடாதிகளுக்கும். காரணமாகிய தங்கத்திற்கும் அதிற்தோன்றிய காரியமாகிய பூடணங்கட்கும் வித்தியாசம் இல்லாததுபோல காரணமாகிய பிரம்மத்திற்கும் அதிற்தோன்றிய காரியமாகிய ஜகத்திற்கும் வித்தியாசம் இல்லை எனப்பிரதிபாதிப்பதுவே உபபத்தி லிங்கயுத்தி எனப்படும்.

வினா 87 கர்மாதி முதலிய ஆசைகளை சிவசிருஷ்டி என்று சொன்னவர்களுக்கு அருநரகமாகிய அதோ கதியை அடைவார்கள் என்று சுருதி சொன்னது எதனால் ?

விடை சீவசிருஷ்டியாகிய வாக்குமனங்களால் காண்டத்திரயங்களை விசாரித்து காமாதி ஆசைகளை நாசம் செய்யாமல் காமாதி ஆசைகளை சீவ சிருஷ்டி

என்று அறியாமலும் சிவசிருஷ்டி என்று சொன்னதே அருநரகம் அடைவார்கள் என்று சொன்னதற்குக் காரணமாகும்.

வினா 88 இகலோகப்பிராப்த்தியையும். பரலோகப்பிராப்தியையும் தரத்தக்க வல்லமை உடைய கர்ம உபாசனைகளுக்கு மோட்சப் பிராப்த்தியைத் தரத்தக்க வல்லமை ஏன் இல்லை ?

விடை எப்படி இகலோக பிராப்தியை மட்டும் தரத்தக்க வல்லமை உடைய கர்மத்திற்கு பரலோகப் பிராப்த்தியைத் தரத்தக்க வல்லமையுடைய உபாசனைக்கு மோட்சப் பிராப்தியைத் தரும் வல்லமை இல்லை என்பதாம்.

வினா 89 உயர்ஞானம் என்பது யாது ?

விடை சகல ஆரோபங்களுக்கும் அதிஷ்டானம் அகண்டாகார பிரம்மமாய் இருப்பதாலும் அந்த அகண்டாகார பிரம்மமே கூடஸ்த ஆத்மாவாக இருப்பதாலும் நானாகிய கூடஸ்த ஆத்மாவே அகண்டகார பிரம்மமாய் இருப்பதாலும் அத்தகைய அகண்டாகார பிரம்மமே நான் என்று அறிவதுவே உயர்ஞானம் எனப்படும்.

வினா 90 வாததிருஷ்டி என்பது யாது ?

விடை புத்தி விருத்தியானது சச்சிதானந்த இலக்கணத்தைப் பன்னிப் பார்த்தாலும் சாக்கிர பதார்த்தங்களும் சொர்ப்பன பதார்த்தங்களும் சுழுத்தியில் எப்படி இல்லையோ அதுபோல பிரபஞ்சமும் பிரபஞ்ச பதார்த்தங்கள் அனைத்தும் பிரம்மத்தில் இல்லை என்று புத்திவிருத்தி அறிவதுவே வாத திருஷ்டி எனப்படும்.

வினா 91 மித்தையா திருஷ்டி என்பது யாது ?

விடை விவகார திசையில் புத்தி விருத்தியானது விடயசுகங்களில் பிரவிர்த்திக்குமாயின் அவற்றைக் கானல் சலம். சொப்பன பதார்த்தம் போல பொய் எனப்பார்ப்பதே மித்தையா திருஷ்டி எனப்படும்.

வினா 92 விட்சேபம் என்பது யாது ?

விடை புத்தி விருத்தியை அக முகம் ஆகவிடாமல் பகிர் முகப்படுத்தி விசய சுகங்களில் இச்சையை உண்டாக்கிச் சலிக்கச் செய்வதே விட்சேபம் எனப்படும்.

வினா 93 தன்மய திருஷ்டி என்பது யாது ?

விடை அலை நுரை குமிழ் அனைத்தையும் அபவாதித்து சமுத்திர சலமாகவே பார்த்தல் போல சீவேஸ்வர சகத்துத் தோற்றினும் அவற்றை ஆத்மாவாகிய தனக்குப் பின்ன மன்று எனப்பார்ப்பதே தன்மய திருஷ்டி எனப்படும்.

வினா 94 நம் மனித தேகம் சத்தியப் பொருளா அசத்தியப் பொருளா அல்லது மித்தையாப் பொருளா ?

விடை மூன்று காலத்திலும் தோற்றிக் கொண்டிருக்கிற சத்தியப் பொருளின் இலக்கணம் இல்லாததால் நம் மனித தேகம் சத்திப் பொருள் அல்ல. மூன்று காலத்திலும் தோற்றத்திற்கே வராத அசத்தியப் பொருளின் இலக்கணம்

இன்றியதால் நம் மனித தேகம் அசத்தியப் பொருளும் அல்ல. முன்னும் பின்னும் இன்றி மத்தியில் கொஞ்சகாலம் தோற்றி அழிகிற மித்தையா இலக்கணம் நம் சரீரத்தினிடம் உள்ளதால் நம்மனித சரீரம் மித்தையாய் பொருள் எனப்படும்.

வினா 95 மோட்ச இச்சையுடைய முமூட்சு கர்ம உபாசனைகளை அத்தியந்தம் நாசம் செய்ய வேண்டும் என்று சுருதி சொன்னது எதனால் ?

விடை இகலோக பரலோகப் பிராப்தியை மட்டும் கொடுக்கும் வல்லமை கர்மஉபாசனைகளுக்கு உண்டே தவிர மோட்சப் பிராப்தியைக் கொடுக்க அதற்கு வல்லமை இன்றியதால் மோட்ச இச்சையுடைய முமூட்சு அத்தகைய கர்ம உபாசனைகளை அத்யந்தம் நாசம் செய்ய வேண்டும் என்று சுருதி சொன்னதாம்.

வினா 96 புத்தி விருத்தி அனாதி அஞ்ஞானத்தை எரிக்க முடிந்தது எதனால் ? எரிக்க முடியாதது எதனால் ?

விடை ரஜோ தமோ குணங்கள் சிறிதும் இன்றி சத்துவகுணத்தைப் பொருந்தி நின்று எந்த விருத்தியானது மகா வாக்கிய சோதனம் செய்கிறதோ அந்த சோதனத்தால் சித்திக்கிற அர்த்த ஞானத்தை உடைய விருத்திக்கே அனாதி அஞ்ஞானத்தை எரித்து நாசம் செய்ய முடியும். ரஜோ தமோ குணங்களைப் பொருந்தியுள்ள விருத்திக்கு அனாதி அஞ்ஞானத்தை எரிக்கும் ஆற்றல் இல்லை.

வினா 97 நித்தியமுத்திக்கும் லோகப்பிராப்த்திக்கும் உள்ள வேறுபாடு யாது ?

விடை காரணமாகிய சீவனே முன்பு நாசம் செய்து காரியமாகிய ரூபம் பின்பு நாசமாகி விடுவதே நித்தியமுத்தி எனப்படும். ரூபநாசமாகியும் காரணமாகிய சீவன் நாசம் ஆகாமல் கைலாயம் வைகுந்தம் முதலிய லோகங்களின் பிராப்தியை அடைவதே லோகப் பிராப்தி எனப்படும்.

வினா 98 விசார லட்சணம் என்பது யாது ?

விடை அனாத்ம தத்துவங்கள் 28-ம் நானல்ல என்று விசாரித்து நியதிகளைந்து இவற்றை விளக்கி வைத்துக் கொண்டிருக்கும். ஆத்மாவே நான் என்று விருத்தி அறிவதே விசார லட்சணம் எனப்படும்.

வினா 99 தடஸ்த லட்சணம் என்பது யாது ?

விடை அனாத்மதத்துவங்கள் 35-ம் நான் அல்ல என்று நியதிகளைந்த இவற்றை விளக்கி வைத்துக் கொண்டிருக்கும் சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்மாவே நான் என்று விருத்தி அறிவதே தடஸ்த லட்சணம் எனப்படும்.

வினா 100 சொரூப லட்சணம் என்பது யாது ?

விடை நாம ரூபங்களாகிய சர்வ உபாதிகளும் இன்றி அகண்டாகார சொப்பிரகாசமாய் விளங்கிக் கொண்டிருப்பது எதுவோ அதுவே சொரூபம் எனப்படும். அந்த சொரூபமே நான் என்று விருத்தி அறிவதே சொரூப லட்சணம் எனப்படும்.

ஞான அநுசந்தானம்

ஓம்

அருட்பெருஞ்ஜோதி ! அருட்பெருஞ்ஜோதி !

தனிப்பெருங்கருணை ! அருட்பெருஞ்ஜோதி !

1. அண்ட பகிரண்டமும் மாயா விகாரமே
2. பிரணவ அட்சரமாகிய ஓம் வடிவமே பிரம்ம சொரூபமாம்.
3. உலகத்திலுள்ள எல்லா நாம ரூபங்களும் ஓங்கார ரூபமேயாம்.
4. பிரபஞ்சத்திலுள்ள விகாரங்கள் அனைத்தையும் அறிகிற சாட்சியே நானாக இருக்கிறேன்.

1. பிரக்ஞானம்

அர்த்தம் :

கண்ணில் வெளிப்பட்ட ஆத்மஜோதியே பிரக்ஞானமாம். ஒவ்வொரு உடம்பிலும் சமாதி அவஸ்தையில் உள்ள ஆத்மஜோதி ஞானேந்திரியங்களோடு கலந்த காலத்தில் காது கேட்கிறது.

தோல் ஸ்பரிசத்தை அறிகிறது. கண் பார்க்கிறது. நாக்கு ருசியையும், ருசியின்மையையும் அறிகிறது. மூக்கு நுகர்கிறது.

பிரம்மதேவன் முதல் பசு, பட்சி, மனிதன் முதலிய அனைத்து உயிர்களிடத்திலும் உள்ள பிரக்ஞானம் ஒரே பரிபூரண பிரம்மாகவே இருக்கிறது. அதனால் என் உடம்பிலுள்ள பிரக்ஞானமும் பிரம்மமாகவே இருக்கிறது என்பதை புத்தி விருத்தி அறிவதே பிரக்ஞானம் என்ற பதத்திற்கு உள்ள அர்த்தமாம்.

விளக்கம் :

சாக்ரகாலத்தில் பிரக்ஞானம் வெளிப்பட்ட உடனே வேதப்பிரமாணத்துடன் சேராவிட்டால் உலக விஷயப் பொருள்களைப் பற்றுகிறது. அப்போது இந்த உடம்பே நான் என்று எண்ணிக் கொண்டு பார்ப்பதாலேயே தேகவாசனை, லோகவாசனை, சாஸ்த்திரவாசனை என்ற மூன்று வாசனைகள் உண்டாகின்றன. பாகிய ராக துவேஷம், ஆந்திராக துவேஷம், வாசனராக துவேஷம் ஆகியவை உண்டாகின்றன. பந்த பாசங்களாகிய அனைத்து உபாதிகளும் உண்டாகின்றன. அதனால் ஜீவனுக்கு பெருந்துக்கம் உண்டாகும் என்று புத்தி விருத்தி அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

கண்ணில் வெளிப்பட்ட பிரக்ஞானம் வேதப் பிரமாணத்துடன் சேருமானால் அறிவே நான் என்ற உணர்வு ஜீவனுக்கு உண்டாகிறது. அப்போது தேக லோக சாஸ்த்திர வாசனைகளும், ஆந்திரபாகிய வாசனாராக துவேஷங்களும் பந்தபாசமாகிய அனைத்து உபாதிகளும் அதனால் ஏற்படும் துக்கங்களும் நீங்குவதற்கு இந்தப் பிரக்ஞானமே ஏதுவாக இருக்கிறது என்று உணர்வதே லட்சணமாம்.

உ. நித்தியம்

அர்த்தம் :

குரு : 1. உலகில் உள்ள அனைத்து உடம்புகளிலும் உள்ள ஆத்மா தேச பரிசேதம் அற்ற வியாபகப் பொருளாக உள்ளது.

2. கால பரிச்சேதம் அற்ற அனாதிப்பொருளாக உள்ளது.

3. வஸ்து பரிச்சேதம் அற்ற நித்தியப் பொருளாக உள்ளது என்பதை உணர்வதே நித்தியம் என்ற பதத்திற்கு அர்த்தமாம்.

விளக்கம் :

சீடன் : சுவாமி, ஆத்மா தேசபரிச்சேதம் அற்ற வியாபகப்பொருளாக இருக்கிறது. ஆகாயமும் வியாபகப் பொருளாக இருக்கிறது. அதனால் அதிவியாப்தி தோடம் வருகிறது.

குரு : நீ கூறிய ஆகாயம் வியாபகப் பொருளாக இருந்தாலும் மகாபிரளய காலத்தில் அழிந்துபோகிறது. நான் கூறிய ஆத்மா காலத்தால் அழியாத அனாதிப் பொருளாக உள்ளது. அனாதி என்ற பதத்தால் அதிவியாப்தி தோடம் நீக்கப்படும்.

சீடன் : சுவாமி, ஆத்மா அனாதிப்பொருள் என்று கூறினால் ஈஸ்வரன், மாயை, ஜீவன், கருமம், அவித்தை, ஆத்மா ஆகிய ஆறும் அனாதிப் பொருள்கள் என்று வேதம் கூறுகின்றது. அதனாலும் அதிவியாப்தி தோடம் பிரபலமாக உள்ளதே.

குரு : மகனே, ஆத்மாவைத் தவிர மற்ற ஐந்தும் கற்பனை அனாதியாகவும், ஞானத்தால் அழியக்கூடியதாகவும் இருக்கிறது. ஆனால் ஆத்மா ஞானத்தால் அழியாத நித்திய அனாதிப்பொருளாக உள்ளது. நித்தியம் என்ற பதத்தை வைத்து 2-வது அதிவியாப்தி தோடத்தை நீக்கினார் என்பது விளக்கமாம்.

லட்சணம் :

சீடன் : இதற்கும் அதிவியாப்தி தோடம் வரும். ஆத்மா நித்தியப் பொருள் என்றால் பிரமமும் நித்தியப் பொருளாக இருக்கிறது.

குரு : மைந்தனே, ஆத்மா வேறு பிரமம் வேறு அல்ல. உடம்பில் உள்ள ஆத்மாவும் புறத்தில் உள்ள பிரம்மமும் ஒன்றே ஆகும். கட ஆகாயமும், மட ஆகாயமும் ஒரே மகா ஆகாயமாக இருக்கிறது. சமுத்திரத்தில் மூழ்கிக்கிடக்கும் குடத்திற்குள் உள்ள ஜலமும், குடத்திற்குப்புறத்தே உள்ள ஜலமும் ஒரே சமுத்திர ஜலமாகவே இருக்கிறது. அதுபோல உன் உடம்பில் இருக்கும் ஆத்ம ஜோதியும், உடம்புக்குப் புறத்தே எங்கும் வியாபகமாக இருக்கும் சிவஜோதியாகிய பிரம்மமும் ஒன்றே. துவம்பத லட்சியமாகிய கூடஸ்த ஆத்மாவும், தத்பத லட்சியமாகிய பரமாத்மாவும், அசிபத லட்சியமாகிய பரை பரபிரம்மமாகவே இருக்கிறது. அந்த ஏக நாயகனே சமாதி அவஸ்தையில் உள்ள ஆத்ம ஜோதியாகவும் இருக்கிறது. நெருப்பு வேறு, நெருப்புப் பொறிவேறு அல்ல என்பதைத் தத்துவமஸி மகாவாக்கியத்தை வைத்து அறிந்து கொள். ஆத்மாவாகிய பிரம்மமே நீயாக இருக்கிறாய் என்பதை அனுபவத்தின் மூலம் உணர்ந்தகொள். ஆத்ம விசாரத்தால் நாமரூபங்களை நீக்கிப் பார்க்கும் போது எல்லாம் ஒரே ஜோதியாக

இருக்கிறது. நீயே அதுவாகவும் அதுவே நீயாகவும் இருக்கிறாய் என்பதை உணர்வதே நித்தியம் என்ற பதத்திற்கு லட்சணமாம்.

3. ஜீவசுழுத்தி

அர்த்தம் :

ஜீவன் எதோடு சேர்ந்து லயமான காலம் ஜீவசுழுத்தி எனப்படும்?

சுழுத்தி காலத்தில் ஜீவன் விஞ்ஞானமயனோடு சேர்ந்து அஞ்ஞான விருத்தியில் லயமான காலமே ஜீவசுழுத்தி எனப்படும். அப்பொழுது ஜீவன் சத்து மாத்திரமாக சுழுத்தி அவஸ்தையில் இருக்கிறான் என்பதே அர்த்தமாம்.

விளக்கம் :

ஜீவன் விஞ்ஞான மயனோடு சேராத போது இருட்டு வீட்டுக்குள் சிக்கிக் கிடந்தவனைப்போல அஞ்ஞான விருத்தியில் சிக்கிக் கிடக்கிறான். அதாவது சூக்ம சரீரம் இல்லாமல் மூலப்பிரகிருதியில் இருந்த காலம் ஆகும்.

விஞ்ஞான மயனோடு சேர்ந்த காலத்தில் விளக்கை எடுத்துக் கொண்டு இருட்டு வீட்டிற்குள் சென்றவனைப் போல இருக்கிறான். இந்த ஜீவன், சுழுத்தி அவஸ்தைக்குச் செல்லும்போது புறத்தே உள்ள ஐந்து பிரகாசங்களில் (சூரியன், சந்திரன், நட்சத்திரம், மின்னல், அக்னி) ஒரு பிரகாசமும் இல்லை. ஆனால் ஆத்மப் பிகாசம் ஒன்று மட்டுமே உண்டு. அந்த ஆத்மப் பிரகாசமே சித்துப்பிரகாசம் என்று மனம் உணர்வதே விளக்கமாம்.

லட்சணம் :

சுழுத்தி அவஸ்தையில் உலகில் உள்ள விஷய போகங்கள் ஒன்று கூட இல்லை. அப்படி இருந்தும் இந்த ஜீவன் உறக்கத்தில் ஆனந்தத்தை அனுபவிக்கிறான். (ஆனந்தமாகத் தூங்கினேன் என்று சொல்கிறான்) அந்த ஆனந்தம் எதனுடைய ஆனந்தம் என்றால் அதுவே ஆத்மானந்தம் என்று அறிவதே லட்சணமாம். ஆத்ம விசாரம் இல்லா காரணத்தாலும், அஞ்ஞான விருத்தியில் இருந்து சுழுத்தி ஆனந்தத்தை அனுபவிப்பதாலும் அந்த சுகம் ஆத்மசுகம் என்று ஜீவன் அறிய முடியவில்லை.

4. கற்பனை

அர்த்தம் :

அவித்தையில் தோன்றிய ஜீவராசிகள் ரஜோகுண கற்பனையாம். அஞ்ஞானத்தில் தோன்றிய உலகாதிகள் தமோகுண கற்பனை. கட்டை இருக்கக் கள்வன் தோன்றியது போல கூடஸ்த ஆத்மா இருக்க விசுவன், தைஜசன்,பிராஞ்ஞன் ஆகியவை தோன்றுகின்றன. இந்தக் கற்பனைகளை ஆத்ம ஞானத்தால் கற்பனை என்று நிச்சயம் செய்த ஜீவர்களுக்கு மற்ற ரஜோகுண கற்பனையும், தமோகுண கற்பனையும் எந்தவிதப் பிரயத்தனமும் இல்லாமல் தானாகவே நாசமாகும் என்று புத்தி விருத்தி அறிவதே அர்த்தமாம்.

விளக்கம் :

மாயையில் தோன்றிய ஈஸ்வராதிகள் சத்துவகுண கற்பனை கயிறு இருக்கப் பாம்பு, பூமாலை, தடி ஆகிய இம்மூன்றும் இல்லாமலே தோற்றுகிறது போல.

பரமாத்மா இருக்கப் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்கிற மூன்று கற்பனைகளும் இல்லாமலே தோற்றுகிறது என்று அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

மூலப்ப பிரகிருதி உற்பத்திக்கு முன்கயிறு போன்ற பரமாத்மா என்கிற நாமமும் ஜீவசாட்சி என்கிற நாமமும் இல்லை என்று விசாரித்து உணர்ந்து, நிச்சயம் செய்து பரை பிரமம் மாத்திரம் உண்டு என்று புத்தி விருத்தி அறிவதே கற்பனை என்ற பதத்திற்கு உள்ள லட்சணமாம்.

5. அதிகாரி

(கைவல்யம் 5-ம் கவி)

அர்த்தம் :

எவன் அதிகாரி ? இவன் அதிகாரி - நித்திய அநித்திய வஸ்து விவேகம், வைராக்யம், சமாதிசட்க சம்பத்து, முமுட்சுத்துவம் ஆகிய சாதன சதுட்டயங்கள நான்கும் கைவரப் பெற்றவனே அதிகாரி என்று அறிவதே அர்த்தமாம்.

விளக்கம் :

எந்த தேவேந்திரப் பதவியை அடைந்தாலும் அதில் துன்பமே உள்ளது. இன்பம் இல்லை. ஆனால் சமாதி அவஸ்தையில் உள்ள இன்பப் புணரியை (ஆனந்தக்கடலை) அடைந்தவர்க்கு அனைத்துத் துன்பங்களும் நீங்குகிறது என்று உணர்வதே விளக்கமாம்.

லட்சணம் :

எதனால் அனைத்துத் துன்பங்களும் நீங்குகிறது ? இந்த உடம்பு இருக்கும்போதே அத்யந்தம், பசி, தாகம் இல்லாமல் போக்குவதால் அனைத்துத் துன்பங்களும் நீங்குகின்றன என்று உணர்வதே லட்சணமாம்.

6. ஆனபின் (6-ம் கவி)

அர்த்தம் :

எதை எல்லாம் தெரிந்து ஆனவன் ? சாதனசதுட்டயம் நான்கையும், அனுபந்த சதுட்டயம் நான்கையும் அறிந்து உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களை அடைந்தாலும் அதிலும் துன்பமே உள்ளது என்று அறிந்து ஆனவன், இந்திர பதவியே கிடைத்தாலும் அதிலும் துன்பமே உள்ளது என்று அறிந்து ஆனவன், ஆனால் இன்பப்புணரி என்ற சமாதி அவஸ்தையில் உள்ள ஆத்மாவை அடைந்தால் அனைத்துத் துன்பங்களும் நீங்கி நித்திய இன்பம் நிலைக்கும் என்று தெரிந்து ஆனவன்.

விளக்கம் :

ஆத்மாவை அடைந்தால் சர்வ துக்கமும் நீங்கும் என்பதற்குத் தாத்பரியம் என்ன ?

பசியிலாரே - என்பதே தாத்பரியம்.

உதாரணம் :

ஒருவருக்குப் பசி உண்டாகும்போது உணவின் மீது ஏற்படும் இச்சையே ராகம்

எனப்படும். அந்த உணவுக்கு ஒருவரால் தடை உண்டானால் அவர்மேல் கோபம் உண்டாவதே துவேஷம் எனப்படும்.

ராகம் - விருப்பு, துவேஷம் - வெறுப்பு

ராக, துவேஷத்தால் பாவ புண்ணியமும், பாவ புண்ணியத்தால் பிறப்பு, இறப்பும் உண்டாகும்.

பிறப்பு இறப்பு எப்போது நீங்கும் ?

பாவ, புண்ணிய கர்மம் இல்லையேல் பிறப்பு, இறப்பு இல்லை.

பாவ புண்ணியம் எப்போது நீங்கும் ?

ராக, துவேஷம் நீங்கினால் பாவ புண்ணியம் இல்லை. ராக, துவேஷம் எப்போது நீங்கும்? அத்யந்தம் பசியில்லா நிலையை உண்டாக்கினால் ராக, துவேஷம் நீங்கும். அதனால் தான் அனுபந்த சதுட்டயத்தில் விடயமண் தின்று அலைவரோ பசியிலாரே என்று கூறியிருப்பதே தாத்பரியமும், விளக்கமும் ஆகும்.

லட்சணம் :

எதை அடைந்தால் அத்யந்தம் பசி நீங்கும் ?

சமாதி அவஸ்தையில் உள்ள ஆத்ம ஜோதியை அடைந்தவர்க்கே அத்யந்தம் பசி நீங்கி விடுகிறது. இதுவே சர்வ துக்க நிவர்த்தியும், பரமானந்தப் பிராப்தியும் ஆகும்.

7.மகாவாக்கியம்

அர்த்தம் :

ஜீவப்பிரம ஐக்கியமே நித்திய முத்தி மோட்சம் என்று அறிவதே அர்த்தமாம்.

விளக்கம் :

ஜீவன், பிரம்மம் இரண்டு உண்டு என்ற தவறான கருத்து அறியாமையால் வந்தது. இதனால் ஜீவன், பிரம்மத்தோடு போய் ஐக்கியம் ஆனதா ? அல்லது பிரம்மம் ஜீவனோடு போய் ஐக்கியம் ஆனதா ? என்ற கேள்வி எழுகிறது.

ஜீவன் பிரமத்துடன் போய் ஐக்கியம் ஆனது என்றால் என்ன குற்றம் வரும் ?

ஜீவன் கற்பித அனாதியாக இருப்பதால் பிரம்மமும் கற்பித அனாதி என்ற தோஷம் வரும். அதனால் ஜீவன் பிரம்மத்தோடு போய் ஐக்கியமாகவில்லை என்பதாம்.

பிரமம் ஜீவனோடு போய் ஐக்கியம் ஆனது என்றால் கிரியை இல்லாத பிரமத்துக்குக் கிரியை கற்பித்த தோஷம் வரும். அதனால் பிரம்மமும் ஜீவனோடு போய் ஐக்கியம் ஆகவில்லை என்று உணர்வதே விளக்கமாம்.

லட்சணம் :

இந்த ஜீவனுக்கு நித்தியமுத்தி மோக்ஷம் எப்படி சித்திக்கும் ?

கடம் என்ற உபாதி நாசம் ஆன உடனே கடாஹாயம் அதே இடத்தில் மஹாகாயத்துடன் ஐக்கியமாகிறது. அதுபோல அவித்தை என்ற உபாதி நாசமான உடனே ஜீவன் அதே இடத்தில் பிரம்மத்துடன் ஐக்கியமாகி விடுகிறது. இடைவிடாத ஆத்ம விசாரத்தால் உண்டாகும் ஆத்ம ஞானத்தாலேயே மாயை நாசமாகிறது. நான்

பிரமசொரூபமாக இருக்கிறேன் என்ற உண்மையை உணரும்போது இந்த ஜீவன் சிவமாவதே நித்தியமுத்தி. மோட்சம் அல்லது ஜீவப் பிரம்ம ஐக்கியம் என்று அறிவதே லட்சணமாம்.

8. ஒப்பமாய் (21-ம் கவி)

அர்த்தம் :

சாக்ரகாலத்தில் 84 லட்சம் வகை ஜீவராசிகளிடத்தும் அனேகவிதமான பேத அபேதங்கள் தோன்றுகின்றன. ஆனால் சுழுத்தி காலத்தில் ஜீவன் சத்து மாத்திரமாய் ஒடுங்கிவிடுவதால் எந்த பேத அபேதங்களும் தோன்றுவதில்லை என்று புத்திவிருத்தி அறிவதே ஒப்பமாய் என்ற பதத்திற்கு உள்ள அர்த்தமாம்.

விளக்கம் :

சுழுத்திப்பிரளயம், பூதப்பிரளயம், பிரம்மப்பிரளயம், மகாபிரம்மப்பிரளயம், அத்யந்தப்பிரளயம் ஆகியவற்றில் முதல் நான்கு பிரளயங்களிலும் இந்த உடம்பும் உலகமும் அழிந்தாலும் ஜீவனுக்குப் பிறவி ஒழியவில்லை என்பதாம்.

லட்சணம் :

இந்த ஜீவனுக்கு இந்த உடம்பு இருக்கும்போதே காரண சரீரத்தை நாசமாக்கிய பின் தூல சூக்கும சரீரம் நாசமாகும் காலமே அத்யந்தப் பிரளயம் என்று அறிவதே ஒப்பமாய் என்ற பதத்திற்கு லட்சணமாம்.

9. நன்றாக வணங்கினான்

அர்த்தம் :

எப்படி வணங்கினால் நன்றாக வணங்கினது ஆகும் ?

ஒவ்வொரு உடம்பிலும் உள்ள கூடஸ்த ஆத்மா, சாட்சி, ஆபாசன், ஜீவசாட்சி ஆகிய நான்கின் அர்த்தத்தைக் கண்டு, அந்தக் கூடஸ்தனே நான் என்று எண்ணுவதே நன்றாக வணங்கினது ஆகும்.

விளக்கம் :

பரமாத்மாவே கூடஸ்த ஆத்மாவாகவும், கூடஸ்த ஆத்மாவே சாட்சியாகவும், சாட்சியே ஆபாசனாகவும் ஆபாசனே ஜீவசாட்சியாகவும் உள்ளது. அதனால் பரமாத்மாவே நான் என்று வணங்குவதே விளக்கமாகும்.

லட்சணம் :

கூடஸ்த ஆத்மா, சாட்சி, ஆபாசன், ஜீவசாட்சி இந்த நான்கும் பரமாத்மாவாகவே இருக்கிறது. அந்தப் பரமாத்மாவும் பறை பிரம்மமாக இருக்கிறது. நான் அந்த பறை பிரம்மமாகவே இருக்கிறேன் என்பதை அறிய வழிசெய்ய வேண்டும் என்று குருவை நன்றாக வணங்கினான் என்பதாம்.

10. பிரம்மசாக்ஷாத்காரம்

அர்த்தம் :

ஒரு ஜீவனுக்கு பிரம்மசாக்ஷாத்கரம் எப்பொழுது சித்திக்கும் ?

ஆபாச ஜீவன் அநேக ஜென்மங்களாக அனுபவித்து வந்த ஆசை, அகந்தை, சோம்பல், மயக்கம், நித்திரை அபிமானம், மமதை முதலியவைகளை நீக்கி நிஷ்காமமாகச் செய்கிற ஆத்ம விசாரத்தால் சுத்த ஜீவன் ஆகிறான் என்று உணர்வதே அர்த்தமாம்.

விளக்கம் :

இத்தகைய சுத்த ஜீவனுக்கு ஆத்ம சாக்ஷாத்காரம் ஆகும் காலத்தில், சாக்ஷாத்காரமான வஸ்து இந்த ஜீவனுக்கு வேறான வஸ்துவா என்றால் வேறு அல்ல. அந்த சாக்ஷாத்காரமான வஸ்து தானாகவே இருக்கிறது. அதாவது சுத்த ஜீவனே அந்த வஸ்துவாக இருக்கிறது. சுத்த ஜீவனே பிரம்மம் ஆக முடியுமா ? கடம் என்ற உபாதி நாசம் ஆன உடனே அதே இடத்தில் கடாஹாயமானது மஹாகாயத்துடன் ஐக்கியமாகிறது. அதுபோல அவித்தை என்ற உபாதி நாசமான உடனே அதே இடத்தில் ஜீவன் பிரம்மத்துடன் ஐக்கியமாகி விடுகிறது. மாயா உபாதியை நீக்கிய உடனே சுத்த ஜீவனே பரமாத்மா ஆகிறான். உமிக்குள் இருக்கும் அரிசிக்கே நெல் என்ற பெயர் வந்தது போல மாயா உபாதியில் கட்டுண்ட பரமாத்மாவுக்கே ஆபாசன் என்று பெயராம். ஆபாசனை நீக்குவதற்காகவே பரமாத்மா இந்த ஜீவனுக்கு தூல சூக்கும சரீரங்களை ஆக்கிக் கொடுத்தார் என்று உணர்வதே விளக்கமாம்.

லட்சணம் :

இந்த உடம்பு இருக்கும் போதே மகாவாக்கிய விசாரம் செய்து அந்த விசார ஞானத்தால் அஞ்ஞானம் நாசமாகி ஆபாசனே பரமாத்மாவாகி பரமாத்மாவே பரை பிரம்மமாக இருக்கிறத என்று தெரிய வேண்டும். அந்தப்பரை பிரம்மமே நானாக இருக்கிறேன் என்று அறிவதே லட்சணமாம்.

11. சாக்கிர அவஸ்தை

அர்த்தம் :

பசு,பட்சி முதலிய எல்லாப் பிராணிகளும் கண் விழித்த உடனே இது என் உடம்பு, இவர்கள் என் மக்கள் என்று அறிகின்றன. அதுபோல மனிதனும் கண்விழித்த உடனே இது என் உடம்பு, இது என் குழந்தை என்ற எண்ணத்துடன் வாழ்கிறான். உருவத்தில் வேற்றுமையே தவிர எண்ணத்தில் வேற்றுமை இல்லை. இதனாலேயே திருவள்ளுவர் இலங்கு நூல் கல்லாத மனிதன் விலங்கு என்று கூறினார். அதனால் ஆத்ம விசாரம் செய்யாத மனிதர்களும் பசு, பட்சி முதலிய பிராணிகளும் ஒன்று தான் என்று சொல்லப்பட்டது. பசுபட்சிகள் தன் கண்களில் வெளிப்பட்ட விருத்தி மூலமாக தன்னிடம் மூன்று சேதனங்கள் இருப்பதை அறியாவாம். ஆத்ம விசாரம் செய்யாத மனிதர்களும் தன்னிடம் மூன்று சேதனப்பிரகாசம் இருப்பதை அறியார். அதனால் அஞ்ஞானியும் விலங்கும் ஒன்றே ஆம். அஞ்ஞானிக்கு சாக்கிரத்துக்கு வரும் போது தன் விருத்தியில் சாட்சிப்பிரகாசம் ஆபாசப்பிரகாசம் இரண்டும் ஒன்று சேர்ந்துள்ளன என்பது தெரியாது வியாபக சேதனத்துடன் சங்கமமாகிறது என்பதும் தெரியாது. ஞானிக்கு கண்விழித்த உடன் தன் விருத்தியில் உள்ள சாட்சிப்பிரகாசம் வெளிப்பட்டு வியாபகசே தனத்துடன் சங்கமமாகிறது என்பது தெரியும். அந்த சாட்சி சேதனமே நானாக இருக்கிறேன் என்றும் உணர்கின்றான். இதுவே சாக்கிர அவஸ்தை என்ற பதத்துக்கு உள்ள அர்த்தமாம்.

விளக்கம் :

பரமாத்ம சேதனம், சாட்சி சேதனம், ஆபாச சேதனம் இம்மூன்றின் தன்மைகளை உணர்வதே விளக்கமாம். ஆபாசனிடம் சங்கல்பம், விகல்பம் இரண்டும் உண்டு.

1. ஆபாசன் (அஞ்ஞானி) சாக்கிரத்துக்கு வரும் போது உடம்பின் நினைவையும் உலகத்தின் நினைவையும் உண்டாக்கி, அவற்றை அபிமானித்து அதனால் அனைத்துத் துன்பங்களையும் அனுபவிக்கிறான். இந்தக் காலத்தில் இந்த இடத்தில் என் உடம்பு இருக்கிறது என்று எண்ணுவது ஆபாசனின் செயல் ஆகும். இதுவே விகல்பம் ஆகும்.

2. சாட்சியினிடத்தில் நான் இருக்கிறேன் என்ற சங்கல்பம் மட்டும் உண்டு.

3. சங்கல்பம், விகல்பம் இரண்டும் இன்றிய பரமாத்மாவே நிர்விகல்பமாய் உள்ளது என்று அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

சீடன் : சுவாமி பரமாத்மா, சாட்சி, ஆபாசன் ஆகிய மூன்றினிடத்தும் சேதனத்தன்மை இருந்தும் வெவ்வேறு பேதங்கள் தோன்றக் காரணம் என்ன ?

குரு : ஆபாச ஜீவன் அவித்தியா உபாதியிலும் அஞ்ஞான உபாதியிலும் கட்டுண்டு இருப்பதால் அவனிடம் சங்கல்பம், விகல்பம் இரண்டும் உண்டு. சாட்சியானது அவித்தியா உபாதையில் மட்டும் கட்டுண்டு இருப்பதால் சங்கல்பம் மட்டும் உண்டு. ஆனால் பரமாத்மசேதனம் அஞ்ஞானம் உபாதி ரகிதனாகவும், அவித்தியா உபாதி ரகிதனாவும், மாயா உபாதி ரகிதனாகவும் இருப்பதால் நிர்விகல்பமே உள்ளது என்று உணர்வதே லட்சணமாம்.

12.நிர்க்குண பிரம்ம தியானம்

அர்த்தம் :

ஆன்மலாபம் வேண்டும் என்றால் நிர்க்குண பிரம்மதியானம் செய்தே ஆக வேண்டும். இந்த தியானம் ஆத்மசொரூபத்தை 100/100 உணர்த்துகிறது. 100-க்கு 1 பங்கு ஆன்மலாபம் அடைந்த உடனே மரணம் வந்து விட்டாலும் பெரிய அரசன் வீட்டில் ஞானத்தாயின் வயிற்றில் பிறப்பான் என்பதே அர்த்தமாம்.

விளக்கம் :

இந்த அர்த்தம் சித்தித்த ஜீவனுக்கு முன் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கும். இனிமேல் செய்யும் கருமங்களுக்கு சஞ்சிதம் ஆகாமியம் உண்டாவதில்லை என்று அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

மரண காலத்தில் இந்த ஜீவன் பிரத்யக் ஆத்மாவில் ஐக்கியம் ஆகிறான். நிர்க்குண பிரம்மதியானத்திற்கு அர்த்த விளக்கம் உணர்ந்து ஆத்ம சாக்ஷாத்காரத்தை அடைந்த ஜீவனே சிவமாகிறான் என்பதாம்.

13. சகுண பிரம்ம தியானம்

அர்த்தம் :

சகுண பிரம்ம தியானத்தால் ஆன்ம லாபத்தை 100ல் / 1 பங்கு கூட அடைய முடியாது. சகுண பிரம்மம் நாம ரூபம் உடையது (உருவதியானம்)

விளக்கம் :

சகுண பிரம்ம தியானத்தால் சஞ்சித ஆகாமியம் அதிகமாகி மீண்டும் மீண்டும் பிறவிக்கு ஏதுவாகும் என்று அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

இந்த ஜீவன் மீண்டும் பிரளய காலத்தில் சமட்டி அஞ்ஞானத்தில் அடங்கி, உலக சிருஷ்டியின் போது சம்சார துக்கத்தை அடைகிறான். அதனால் சகுண பிரம்ம தியானத்தை வேதம் கண்டிக்கிறது என்பது லட்சணமாம்.

14. அனர்த்தம்

அர்த்தம் :

அனர்த்தம் என்பது யாது ?

தன் உடம்பில் உள்ள ஆத்மாவை மறந்ததே அனர்த்தமாம். சிபிச்சக்ரவர்த்தியின் உடம்பில் உள்ள மாமிசம் அனைத்தும் ஒரு புறாவின் எடைக்கு ஈடாக வில்லை. அதுபோல ஆத்மாவை மறந்த அனர்த்தத்துக்கு உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் இழந்த அனர்த்தம் ஈடாகாது. என்பதே அர்த்தம் ஆகும்.

விளக்கம் :

அவிவேக புருடனுக்கு தன்னிடத்துள்ள சிறிய பொருளை இழந்தாலும் அது பெரிய அனர்த்தமாகத் தெரியும். ஆனால் ஆத்மாவை மறந்தது அவனுக்கு அனர்த்தமாகத் தெரிவதில்லை. விவேக புருடனுக்குத் தன்னிடத்துள்ள ஆத்மாவை மறந்தது பெரிய அனர்த்தமாகத் தெரியும். தன்னிடமுள்ள அனைத்துப் பொருள்களையும் இந்திர பதவியையும் இழந்தாலும் அவனுக்கு அனர்த்தம் என்று தெரிவதில்லை.

லட்சணம் :

அனர்த்தம் எதனால் நிவர்த்தி ஆகும் ?

ஆத்ம விசாரம் செய்து தன்னறிவைக் கொண்டு இது காலம் வரை மறந்த ஆத்மாவை சாக்ஷாத்காரம் பண்ணுவதாலேயே அனர்த்த நிவர்த்தி ஆகும். இதுவே ஆனந்தப் பிராப்தி ஆகும். தன்னை அறிந்தவன் தலைவன் ஆவான்.

15. மகாவாக்கிய சத்தம்

அர்த்தம் :

மகாவாக்கியம் என்ற பதத்திற்கு ஏது, சொரூபம், காரியம், அவதி காண்பதே அர்த்தமாகும்.

ஏது : மகாவாக்கிய சத்துத்துக்கும், வாக்குக்கும் உள்ள சம்பந்தமே ஏதுவாகும்.

சொரூபம் : மகாவாக்கிய சத்தத்துக்கும், காதுக்கும் உள்ள சம்பந்தம் சொரூபம் எனப்படும்.

காரியம் : மகாவாக்கிய சத்த அர்த்தத்துக்கும், புத்தி விருத்திக்கும் உள்ள சம்பந்தமே காரியம் ஆகும்.

அவதி : புத்திவிருத்தியில் உள்ள அர்த்தத்திற்கு நம் உடம்பில் ஜொலித்துக் கொண்டிருக்கிற ஆத்ம ஜோதிக்கும் உள்ள சம்பந்தமே அவதி எனப்படும்.

விளக்கம் :

என் உடம்பில் சமாதி அவஸ்தையில் பிரகாசித்துக் கொண்டுள்ள ஆத்ம ஜோதியை உணர்த்துகிற சத்தம் எதுவோ அதுவே மகாவாக்கிய சத்தம் எனப்படும். அதற்கு அன்னியமாக உள்ள சத்தம் அவாந்திர சத்தம் (உலக சத்தம்). இந்த அவாந்திர வாக்கிய சத்தமே அநேக கோடி பிறப்பையும், இறப்பையும் உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. மகாவாக்கிய சத்தம் ஆத்ம ஜோதியை உணர்த்துவதால் பிறப்பு இறப்பையும் சர்வ துக்கங்களையும் நீக்குகிறது என்று அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

மகாவாக்கியம் என்ற பதத்திற்கு உள்ள அர்த்தமும் விளக்கமும் கண்டபிறகு ரஜோ,தமோ குணத்துடன் கூடி புத்திவிருத்தியில் அசுத்த ஜீவனாக இருந்தவன் ஞானம் பெறுகிறான். அதாவது நான் சுயம்பிரகாசமாய உள்ள சுத்தசேதன (சத்துவகுண) வடிவமாகவே இருக்கிறேன் என்ற ஞானம் வந்தது. அதனால் அந்தக்கரணத்தில் உள்ள, விருத்தி அவச்சின்ன சேதனத்துக்கும் புறத்தினல் உள்ள விஷய அவச்சின்ன சேதனத்துக்கும் அபேதம் காண்பதே லட்சணமாம்.

16.சாட்சிமாத்திரமாய் நிற்கும்

அர்த்தம் :

ஒரு ஜீவன் சாட்சியே நான் என்று அறிவதற்கு ஆத்ம விசாரம் செய்தே ஆக வேண்டும். ஆத்ம விசாரம் செய்ய சற்குரு துணை வேண்டும்.

சற்குரு யாருக்குச் சித்திக்கும் ?

தானம், மந்திரம், விரதம், ஓமம் இந்த நான்கையும் நிகாமமாகச் செய்தவருக்கு சற்குரு உபதேசம் சித்திக்கும்.

விளக்கம் :

அர்த்தம் கண்டதனால் தத்துவஞானம் உண்டாகும். இந்த ஜீவனுக்கு பஞ்சபூத உற்பத்திக்கு முன் தூல சூக்கும சரீரம் இல்லை. காரண சரீரம் மட்டுமே உண்டு. அப்போது அபிமானித்திருந்த காரண சரீரத்தை ஞானத்தால் நாசமாக்கி ஜீவன் சாட்சிமாத்திரமாய் நிற்கச் செய்வது திட அபரோக்ஷ ஞானமே என்று அறிவது விளக்கமாம்.

லட்சணம் :

சற்குரு சித்தித்தவற்கு பரோக்ஷ ஞானம் சித்திக்கும். பரோக்ஷ ஞானத்தால் மகாவாக்கிய சோதனம் சித்திக்கும். மகாவாக்கிய சோதனம் சித்தித்தவர்க்கு, அபரோக்ஷ ஞானமும் ஸ்திரவிசாரமும் சித்திக்கும். ஸ்திரவிசாரம் சித்தித்தவற்கு தத்துவ ஞானம் சித்திக்கும். தத்துவஞானத்தால் ஜீவன் முக்தி சித்திக்கும் என்பதே லட்சணமாம்.

17. தத்துவஞானம்

அர்த்தம் :

நித்தியமாகிய ஆன்மாவே நான் என்று சத்தியமாய்ப் புத்திவிருத்தி அறிவதே அர்த்தமாகும்.

விளக்கம் :

உடம்பு நான் என்கிற புத்தி 100க்கு 100 அஞ்ஞானிக்கு இருப்பது போல என் உடம்பில் ஜொலித்துக் கொண்டிருக்கும் ஆத்ம ஜோதியே நான் என்ற புத்தி 100க்கு 100 ஞானிக்கு இருக்கிறது. அதன்பிறகு உண்டாகும் ஞானமே தத்துவ ஞானம் ஆகும். இந்த ஞானமே அஞ்ஞானத்தின் காரிய சகித ஜகத் நிவர்த்தியும் ஆனந்தப் பிராப்தியும் உண்டாக ஏதுவாகும் என்பதே விளக்கமாம்.

லட்சணம் :

தத்துவ ஞானமே தேகம் நான் என்கிற புத்தியை நாசமாக்கும். முன் ஜென்மங்களில் உண்டாகிய சமஸ்காரங்களை ஒவ்வொன்றாக நாசம் செய்யும். இந்த ஆத்மசாதகன் செய்யும் பிரம்ம அப்பியாசத்தால் அநேககோடி ஜென்மங்களில் தான் செய்த பஞ்சமா பாதங்களால் உண்டாகிய அனைத்து சமஸ்காரங்களும் நாசம் ஆகும் என்று புத்திவிருத்தி அறிவதே லட்சணமாம்.

18. பிராஞ்ஞன் என்கிற ஜீவன்

அர்த்தம் :

ஜீவன் எந்தக் காலத்தில் பிறந்தவன் ? உலக உற்பத்திக்கு முன்னால் உள்ள அனாதி காலத்தில் பிறந்தவன்.

விளக்கம் : ஜீவனுக்குப் பிறப்பிடம் எது ?

அவித்தியா அம்சமும், ஆவரண அம்சமும் கலந்த அஞ்ஞான விருத்தியே ஜீவன் பிறந்த இடம் ஆகும். அந்த அஞ்ஞான விருத்திக்கே காரண சரீரம் என்று பெயர். காரண சரீரத்தை அபிமானித்த ஜீவனுக்கே பிராஞ்ஞன் என்று பெயர்.பிராஞ்ஞன் என்ற ஜீவன் ஒரு குருவிக் கூட்டுக்குள் கட்டுண்டு கிடந்தது போல இருக்கிறான். அந்த ஜீவன் காரண சரீரத்தை அபிமானித்த போதே கருமமும் உண்டாயிற்று.

லட்சணம் :

பிராஞ்ஞன் என்கிற ஜீவனுக்கு பல கோடி தூல சூக்கும சரீரங்கள் உண்டாவதற்கு காரண சரீரமே பிரதானமாம். பல கோடி பிறப்பையும், இறப்பையும் உண்டாக்கிய காரண சரீரத்தை நாசமாக்குவதற்கே மனித உடம்பையும், பகுத்தறிவையும் பரமாத்மா ஆக்கிக் கொடுத்தார். அதனால் இந்த மனித உடம்பு இருக்கும்போதே காரண சரீரத்தை நாசம் செய்ய வேண்டும். மகாவாக்கிய விசாரம் செய்வதால் புத்திவிருத்தியில் உண்டாகிற ஆத்ம ஞானமே காரண சரீரத்தை நாசமாக்கும் என்று அறிவதே லட்சணமாம்.

இந்த லட்சணத்துக்கு ஞான அங்கி எப்படிப்பட்டது ?

சுஜாதி பேதம் : ஒரு மரத்தைப் போல இன்னொரு மரம் உள்ளது என்று பேதம் காட்டி

உணர்த்துவது.

விஜாதி பேதம் : ஒன்றுக்கு மேலானது என்று காட்டுவது. மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள பேதம்.

சுவகத பேதம் : தனக்கும் தன்னுடைய அவயத்துக்கும் உள்ள பேதம். தன்னிடத்தினின்று தோன்றி தன்னைவிட்டுப் பிரியாமல் தனக்கு அந்நியமாக இருப்பது ஆகும். செடியிலிருந்து பூ உண்டாகிறது. ஆனால் செடி வேறு பூ வேறு என்று உணர்த்துகிறது. பிரம்மம் இந்த மூன்று பேதங்களும் இல்லாத அத்வைத இலக்கணம் உடையது. பிரம்மத்தைப் போல ஒருவஸ்து இல்லை. பிரம்மத்துக்கு மேலானது இல்லை. பிரம்மம் எங்கும் வியாபமாக உள்ளது. அவயவம் இன்றி, நிரவயவப் பொருளாக இருக்கிறது. பசுவாகிய இலக்கியத்துக்கு முக்காலத்திலும் ஒற்றைக்குளம்பு இல்லை. அதுபோல பரை பிரம்மாகிய இலக்கியத்துக்கு மூலப்பிரகிருதியும் அதன் காரியங்களும் முக்காலத்திலும் இல்லை. இந்த சத்தியபுத்தி உண்டான பிறகு செய்யும் அகம் பிரம்மாஸ்மி அப்பியாசத்தால் பிரம்ம ஞானம் உண்டாகும். இந்த பிரம்ம ஞானத்தினாலேயே, இந்த ஜீவன் அனாதி காலமுதல் அபிமானித்த காரண சரீரம் அத்யந்தம் நாசமாகிறது. இதுவே அகம்பிரம்மாஸ்மி அப்யாசத்திற்கு உள்ள ஞான அங்கி ஆகும். இந்த ஞான அங்கி கிடைத்த பிறகு செய்யும் நிதித்தியாசனமே விதேக முக்திக்கு ஏதுவாகும். விஜாதீய விருத்தி இன்றிய சுஜாதீய விருத்திப் பிரவாகமே நிதித்தியாசனம் ஆகும். இது பேரின்பத்துக்கு வழிகாட்டும்.

19. மகாபூத விகாரம்

அர்த்தம் :

1. சூக்கும பஞ்சபூதத்தின் தமோ குணத்தைப் பஞ்சீகரணம் செய்ததால் உண்டான தூல பூதம் ஒரு விகாரம். 2. அதிலிருந்து உண்டான உலகத்திலுள்ள ரூபப்பொருள்களாகிய அனைத்து தூல தேகங்கள் ஒரு விகாரம். 3.அண்டம் ஒரு விகாரம், 4. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்கள் ஒரு விகாரம் 5.பூமியின் விளைபொருள்கள், தானியங்கள், காய்கனிகள், கிழங்கு, தங்கம் முதலிய அனைத்து உலோகங்கள் யாவும் ஒரு விகாரம். இவையனைத்தும் மகாபூத விகாரங்கள் அல்லது பிரபஞ்ச விஷயப் பொருள்கள் ஆகும்.

விளக்கம் :

அனைத்து விகாரங்களையும் அறியக்கூடிய சாட்சியே நான் என்ற புத்தியுடையவன் உயர்ந்த நற்கருத்துடையவன். மகாபூத விகாரங்களை அறிகின்ற சாட்சியே நான் என்று அறிந்தவன் பிரம்ம வித்து ஆவான். சாட்சியால் அறியப்பட்ட அனைத்து விகாரங்களையும் நான் அறிந்தேன் என்ற அகங்காரத்துடன் கூடிய கீழான புத்தி உடையவன் துர்க்கருத்து உடையவன்.

லட்சணம் :

அனைத்து உடம்புகளிலும் உள்ள ஜீவசாட்சிகள் அனைத்தும் சேர்ந்து சர்வசாட்சியாகவே இருக்கிறது என்று அறிவதே லட்சணமாம்.

20. சுழுத்தி சுகம் பிரம்ம சுகம் அல்ல

அர்த்தம் :

ஒருவன் அளவுக்கு மிஞ்சிய மதுவை அருந்தியதால் தேக அபிமானமின்றி மனம் ஒடுங்கி நினைவு இழந்து கிடக்கிறான். ஒரு ஜீவன் ஆழ்ந்து தூங்கும் போது தேக அபிமானமின்றி மனம் அடங்கி நினைவு இழந்து தூங்குகிறான். அவனுக்கு இது பிரம்ம சுகம் என்று சொல்ல முடியாது.

விளக்கம் :

சுழுத்தியில் உடம்பு சாய்ந்து விடுகிறது. ஆனால் சமாதி அவஸ்தையில் உடம்பு சாய்வதில்லை. அதனால் சமாதி அவஸ்தையே பிரம்ம சுகம் என்று அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

இதைப் பிரம்மசுகம் என்று சொல்வதற்கு அனுபவம் எப்படி ?

சுழுத்தி அவஸ்தையிலிருந்து சாக்கிரத்துக்கு வந்த அஞ்ஞானி மகாபூத விகாரங்களை என்னுடையது என்று அபிமானித்து பெரும் துன்பத்தை அடைகிறான். சமாதி அவஸ்தையிலிருந்து சாக்கிரத்துக்கு வந்த ஞானி, மகாபூத விகாரங்களை அறிகிற சாட்சியே நானாக இருக்கிறேன் என்று சாக்ஷாத்காரம் செய்து பேரின்பத்தை அடைகிறான்.

21. இந்திரிய ஜன்னிய ஞானம்

(சாக்கிர அவஸ்தை)

அர்த்தம் :

இந்திரிய ஜன்னிய ஞானம் சாக்கிர அவஸ்தையில் உண்டாகிறது. இந்த ஞானம் இல்லாமல் இந்திரிய சம்ஸ்கார ஞானம் உண்டாகாது. அந்த ஞானம் இரண்டு வகைப்படும். 1. வேதமஹா வாக்கியத்திற்கும், வாக்குக்கும் உண்டாகிற சம்பந்தத்தால் உண்டாகிற ஞானம் ஆத்மஞானம். 2. உலகவாக்கிய சத்தத்துக்கும், வாக்குக்கும் உள்ள சம்பந்தத்தால் உண்டாகிற ஞானம் பிராந்திஞானம் என்று அறிவதே அர்த்தமாகும்.

விளக்கம் :

உலகவாக்கிய சத்தத்தால் உண்டாகிற ஞானமும், அதனால் பல கோடி ஜன்மங்களில் உண்டாகிற சம்ஸ்காரமும் சேர்ந்து சித்தமலமாக அஞ்ஞானியிடம் உள்ளது. இந்த சித்தமலம் எப்போது நாசமாகும் ? வேத மகாவாக்கிய விசாரத்தால் உண்டாகும் ஆத்ம ஞானத்தால் ஞான சமஸ்காரம் உண்டாகும். இதனால் வரும் அனுபவத்தால் சித்தமலம் நாசமாகும்.

லட்சணம் :

அஞ்ஞானியிடம் உள்ள சித்தமலம் நாசமான உடனே பரோக்ஷ ஞானமும், பரோக்ஷ ஞானத்தால் அபரோக்ஷ ஞானமும், அபரோக்ஷ ஞானத்தால் ஸ்திடவிசாரமும், ஸ்திரவிசாரத்தால் பிரம்ம ஞானமும் உண்டாகும். இந்த ஞானமே முத்தி மோட்சத்திற்கு ஏதுவாகும் என்று உணர்வதே லட்சணமாம்.

22. சமநோக்கு

அர்த்தம் :

நான்கு வேதங்களுக்கும் உள்ள விஷயம் யாது ? ஜீவப்பிரம்ம ஐக்கியமே விஷயம். வேதம் சொன்ன கடவுள் எப்படிப்பட்டது ? சத்து, சித்து, ஆனந்தம் எதனிடத்தில் உள்ளதோ அதுவே வேதம் சொன்ன கடவுள் ஆகும். ஆத்மாவே கடவுள் என்று வேதம் ஏன் சொல்கிறது ? கடவுளிடத்துள்ள மூன்று அடையாளங்களும் ஆத்மாவினிடம் உள்ளதால் ஆத்மாவே கடவுள் என்று வேதம் சொல்கிறது.

விளக்கம் :

நான் இருக்கிறேன் - சத்து, நான் அறிகிறேன் - சித்து, நான் சுழுத்தியில் சுகமாயிருந்தேன் - ஆனந்தம். இந்த மூன்றும் ஆத்மஜோதியினிடம் உள்ள அடையாளங்கள் என்று சோதனம் செய்வதே விளக்கமாம்.

லட்சணம் :

பிரம்மத்திடம் உள்ள சத்து, சித்து, ஆனந்தம் மூன்றும் ஆத்மாவிடம் இருப்பதால் அனைத்து ஆத்மாக்களும் சேர்ந்து ஒரே பிரம்மமாக இருக்கிறது என்று உணர்வதே லட்சணமாம்.

23. காரணசரீரம்

அர்த்தம் :

அவித்தை அஞ்ஞானம் ஆகிய இரண்டு அம்சங்களும் சேர்ந்ததே ஜீவனுக்குக் காரணசரீரம். இந்தக் காரணசரீரம் என்னும் பேயை நாசம் செய்த ஜீவனுக்கே பிறப்பு, இறப்புத் துக்கம் நீங்கும்.

விளக்கம் :

காரணசரீரத்ததை நாசமாக்கிய பிறகு வேறு தூல சூக்கும சரீரம் உற்பத்தி ஆவதற்கு எந்தவித ஏதுவும் இல்லையாம். ஒரு மரத்தை ஆணிவேருடன் வெட்டி வீழ்த்தி விட்டால் காரியமாகிய கிளை, இலை முதலியன எந்தவித முயற்சியும் செய்யாமலே காய்ந்து நாசமாகிவிடும் என்பது உதாரணம் ஆகும்.

லட்சணம் :

ஒரு ரசவாதியானவன் தன்னிடம் கிடைத்த தாமிரத்தைத் தங்கமாக்கும் வரை விட மாட்டான். அதுபோல ஒரு வித்தையால் அதிகாரியானவன் தானே சிவமாக இருக்கிறேன் என்ற நிச்சயம் வரும்வரை ஆத்ம விசாரம் செய்வதை விட மாட்டான். இதுவே காரணசரீரம் என்ற பதத்திற்கு உள்ள லட்சணமாம்.

24. புருடதந்திரம், வஸ்துதந்திரம்

அர்த்தம் :

அவிவேகத்தால் உணர்வதெல்லாம் புருடதந்திரம் ஆகும். நித்திய அநித்திய வஸ்து விவேகம் வந்த பிறகு உணர்வதெல்லாம் வஸ்து தந்திரம் ஆகும்.

விளக்கம் :

துவம்பத வாச்சியத்தில் ஒன்றாகிய இந்தத் தூல உடம்பே நான் என்று எண்ணிக்கொண்டு இருப்பதே புருடதந்திரமாம். துவம்பத லட்சியமாகிய கூடஸ்த ஆத்மாவே நான் என்று எண்ணிக் கொண்டிருப்பதே வஸ்து தந்திரமாம்.

லட்சணம் :

சமாதி அவஸ்தையில் எழுகின்ற அகண்டகார விருத்திக்கு ஆதாரமாயுள்ள அசிபத லட்சியமாகிய பரைபிரம்மமே வஸ்து தந்திரம் என்று உணர்வதே லட்சணமாம்.

25. வீடுபேறு

அர்த்தம் :

வீடுபேறு. இரண்டு வகைப்படும். 1. இதிகாச புராணங்கள் சொன்ன வீடுபேறு. 2. வேதம் சொன்ன வீடுபேறு. மரணம் அடைந்த பிறகு மும்மூர்த்திகளுடைய உலகங்களாகிய வைகுந்தம், கைலாசம், பிரம்மலோகம் ஆகிய மூன்று லோகங்களை அடைவதே வீடுபேறு என்று இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இது வேதம் சொன்ன வீடுபேறு அல்ல.

விளக்கம் :

ஏன் அது வேதம் சொன்ன வீடுபேறு அல்ல ?

மும்மூர்த்திகள் மாயையிலிருந்து தோன்றுபவர்கள். மாயை பின்னா சக்தியிலிருந்து தோன்றியது. கிளிஞ்சலில் வெள்ளி இல்லாமலே தோற்றுவது போல சச்சிதானந்த பிரம்மத்திடம் பின்னாசக்தி இல்லாமலே தோற்றுகிறது. இந்தப் பொய்த்தோற்றம் உள்ள பின்னா சக்தியிலிருந்து ஜீவ ஈஸ்வர ஜகத் எப்படித் தோற்ற முடியும் ? கயிற்றிலிருந்து முக்காலத்திலும் இல்லாத கற்பித சர்ப்பம் தோன்றித் துக்கத்தை உண்டாக்குகிறது. அதுபோல மும்மூர்த்திகளும் அவர்களுடைய உலகங்களும் கற்பிதமாகத் தோன்றி பிரளயகாலத்தில் அழிவதாகும். அதனால் அந்த லோகங்களை அடைகிற ஜீவனுக்குப் பிறப்பு, இறப்பு நீங்குவதில்லை.

லட்சணம் :

நாம ரூப குண சக்தி ரகிதனாகிய ஆனந்தோ பிரம்மமே அனைத்துக்கும் ஆதாரமாக இருக்கிறது. அந்த ஆனந்த பிரம்மமே பரமாத்மாவாகவும் அந்த பரமாத்ம ஜோதியே ஒவ்வொரு உடம்பிலும் ஆத்மஜோதியாகவும் உள்ளது. ஆத்மஜோதியே பேரறிவுப் பொருளாக கண்ணில் வெளிப்பட்டு விளங்குகிறது. அதுவே சாட்சியாகவும் அந்தச் சாட்சியே நானாகவும் இருக்கிறேன் என்ற நிச்சய அனுபவத்தால் ஜீவனுடைய பிறப்பு, இறப்புத் துன்பம் நீங்கும். இத்தகைய துக்க நீக்கமே வேதம் சொன்ன வீடுபேறாகும். அந்த அனுபவத்தால் இந்த ஜீவனே ஆனந்தோ பிரம்மமாகின்றான் என்று அறிவதே லட்சணமாம்.

26. பிரம்மவித்து

அர்த்தம் :

பிரம்மவித்து என்கிற ஞானியிடம் காமிய கர்மமாகிய உலக விவகாரம்

இல்லை. ஆனால் நிஷ்காமிய கர்மம் இருக்கிறது என்று அறிவதே அர்த்தமாம்.

விளக்கம் :

சாட்சியையும், சாட்சி அறியக் கூடிய விகாரங்களையும் அறிந்து சாட்சியை நிலைத்துச் செய்யும் கருமமே நிஷ்காம்ய கர்மம் ஆகும். விகாரம் என்பது இருப்பது போல் தோன்றி இல்லாமல் அழிந்து போகக்கூடியது ஆகும். இந்த விகாரங்களையும் சாட்சியே அறிகிறது என்பதே விளக்கமாம்.

லட்சணம் :

கர்மகாண்டியானவன் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தன் இஷ்ட தெய்வத்துக்கே அர்ப்பணிக்கிறான். ஆனால் எதற்காக அர்ப்பணிக்கிறான் என்று தெரியாது. ஆனால் ஞானகாண்டிக்கு அந்த விபரம் தெரியும். தன் உடல் பொருள், ஆவி அனைத்தையும் தன் சொரூபமாகிய சாட்சிக்கே அர்ப்பணம் செய்கிறான். அந்த சாட்சியே நானாக இருக்கிறேன் என்று நிச்சயிக்கிறான். அந்த நிச்சயம் வருவதே பிரம்மவித்து என்ற பதத்திற்கு உள்ள லட்சணமாம்.

27. ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் உள்ள வேற்றுமை

அர்த்தம் :

ஞானியும், அஞ்ஞானியும் சாக்கிரகாலத்தில் இருக்கும் தன்மையில் ஒற்றுமை உண்டு. ஆனால் சாட்சாத்காரம் ஆகும் தன்மையில் வேற்றுமை உண்டு. சாக்கிரகாலத்தில் இந்தச் சடமாகிய உடம்பையும் உறுப்புகளையும் அறிகிற சாட்சியே ஞானிக்குச் சாக்ஷாத்காரம் ஆகிறது. ஆனால் சாட்சியால் அறியப்படுகிற இந்த உடம்பும் உறுப்புக்களும் அஞ்ஞானிக்குச் சாக்ஷாத்காரம் ஆகிறது. இப்படி அறிவதே அர்த்தமாம்.

விளக்கம் :

சாட்சியை உணர்கிற ஞானிக்கு பிரம்மமே சாக்ஷாத்காரம் ஆகிறது. தேகத்தை அறிகிற அஞ்ஞானிக்கு பிரபஞ்சமே சாக்ஷாத்காரம் ஆகிறது என்று புத்திவிருத்தி அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

பிரம்மம் அப்பியாசம் செய்கிற ஞானி அத்த சிவத்தையே அடைகிறான். பிரபஞ்ச சமஸ்தானத்தால் அஞ்ஞானி பிறப்பு, இறப்பு என்கிற பெரும் நரகத்தையே அடைகிறான். இதுவே லட்சணமாம்.

28. அதிகாரி

அர்த்தம் :

அதிகாரிக்கு சாக்கிரகாலத்தில் சாட்சியை உணர்த்துகிற அர்த்தம் சித்தித்து இருக்கிறது என்று உணர்வதே அர்த்தமாம்.

விளக்கம் :

இந்த அர்த்த அப்பியாசத்தால் சாட்சியே நான் என்கிற நிச்சயம் சித்தித்து இருப்பதே மேற்படி பதத்துக்கு உள்ள விளக்கமாம்.

லட்சணம் :

சாட்சியே நான் என்கிற அப்பியாசத்தால் பிரம்மமே நான் என்ற அப்பியாசம் சித்திக்கிறது. பிரம்ம அப்பியாசம் செய்கிற ஞானி அதீத சிவத்தையே அடைகிறான். பிரபஞ்ச சமஸ்காரத்தால் அஞ்ஞானி பிறப்பு, இறப்பு என்ற பெரும் நரகத்தையே அடைகிறான் என்று அறிவதே லட்சணமாம்.

29. அகம்பிரம்மாஸ்மி

அர்த்தம் :

அகம்பிரம்மாஸ்மி - யஜுர்வேத மகாவாக்கியம். துவம்பத லட்சியமாகிய கூடஸ்த ஆத்மாவே என் கண்ணில் வெளிப்பட்டு விளங்குகிறது என்று அறிவதே அர்த்தமாம்.

விளக்கம் :

தத்பத லட்சியமாகிய பரமாத்மாவே என் கண்ணில் வெளிப்பட்டு விளங்குகிறது என்று அறிவதே விளக்கமாம்.

லட்சணம் :

அசிபத லட்சியமாகிய பரைபிரம்மமே என் கண்ணில் வெளிப்பட்டு விளங்குகிறது என்று அறிவதே லட்சயணமாம்.

30. கரண விருத்தி

அர்த்தம் :

கரண விருத்தி அவஸ்தைகள் காண்பது எப்படி ?

குதிரை மேய்ப்பவனும், மாடு மேய்ப்பவனும் இது மாடு, இது குதிரை என்று தெரிந்து மேய்ப்பதுபோல, ஆத்மவிசாரம் செய்வர்கள் கரண விருத்தியின் அவஸ்தைகள் காண்பது அவசியம். அந்தக்கரண விருத்தியில் ஆபாசப்பிரகாசமும், சாட்சிப் பிரகாசமும் இருக்கின்றன. அவைகளின் செயல் என்ன என்பதையும் அறிந்து செயல்படுபவரே கரண விருத்தியின் அவஸ்தைகள் காண்பார் என்று அறிவதே அர்த்தமாம்.

விளக்கம் :

ஒரு தீபத்தின் பிரகாசமே சூதாடுபவனுக்கும் ஆத்ம விசாரம் செய்வனுக்கும் ஏதுவாக இருக்கிறது. அதுபோல ஞானி செய்கிற ஆத்ம விசாரத்துக்கும், அஞ்ஞானி செய்கிற உலக விசாரத்துக்கும், அந்தக்கரணவிருத்தி ஒன்றே ஏதுவாக உள்ளது. ஆஞ்ஞானியின் அந்தக்கரணவிருத்தியில் ஆபாசப்பிரகாசம், சாட்சிப்பிரகாசம் ஆகிய இரண்டு பிரகாசங்களுண்டு. ஞானியின் அந்தகரண விருத்தியில் சாட்சிப்பிரகாசம் மட்டுமே உண்டு. அஞ்ஞானி சாக்கிரத்துக்கு வந்தவுடன் ஐந்து விகாரங்களில் ஏதாவது ஒரு விகாரத்தை (ஆபாசன்) அபிமானிக்கிறான். ஆனால் ஞானியோ மெய்ப்பொருளையே சாட்சாத்காரம் செய்கிறான் என்பது விளக்கமாம்.

லட்சணம் :

உலக விகாரப் பொருளை மூடியுள்ள மழைநிசி இருளை சூரியப்பிரகாசம் நீக்குகிறது. அதுபோல உலக விஷயப்பொருள்களை மூடியுள்ள அபானாபாதக ஆவரண இருளைக் கண்ணில் வெளிப்பட்ட சாட்சிப்பிரகாசம் நீக்குகிறது. இந்த இருள் நீங்கிய

உடனே ஆபாசன் தங்கு தடையின்றி விஷயப் பொருள்களை இச்சிக்கிறான். ஆனால் ஞானி விஷயப் பொருளுடன் கலந்துள்ள வியாபகசேதனத்தை அல்லது விஷய அவச்சின்ன சேதனத்தை சாக்ஷாத்காரம் செய்கிறான். இப்படிக் கரண விருத்தியின் அவஸ்தைகள் காண்பவர் யாராக இருந்தாலும் அவர் முத்தரே ஆகுவர் என்று அறிவதே லட்சணமாம்.

31.சர்வசாட்சி

அர்த்தம் :

சர்வசாட்சி என்ற பெயர் ஏன் வந்தது ?

சர்வ சாட்கியாகிய பிரம்மத்தில் அபின்னா சக்தியும், பின்னா சக்தியம் கற்பிதமாகத் தோன்றுகின்றன. இந்தச் சக்திகளின் விகாரத்தால் தோன்றிய பதத்திரய வாச்சியார்த்த சமூகக்கூட்டங்களில் பாவ அபாவங்களை (பாவம் – இருப்பது, அபாவம் – இல்லாதிருப்பது) விளக்கி வைத்துக் கொண்டும், தான் யாதொரு விகாரமும் அடையாமல் இருப்பதால் சுத்த பிரம்மத்துக்கு சர்வசாட்சி என்ற பெயர் வந்தது.

விளக்கம் :

ஜீவசாட்சி பிண்டத்தில் உள்ளது சர்வசாட்சி அண்டத்தில் உள்ளது. ஜீவசாட்சியானது சாக்கிர சொப்பன சுழுத்தி என்கிற மூன்று அவஸ்தைகளின் பாவ, அபாவங்களை விளக்கி வைத்து கொண்டிருக்கிறது. ஆனால் தான் ஒரு விகாரமும் அடைவதில்லை. அதுபோல சர்வசாட்சியாகிய பிரமம் தத்பததுவம்பத அசிபதம் என்கிற மூன்று பதங்களின் வாச்சியார்த்த சமூகக்கூட்டங்களின் பாவ அபாவங்களை விளக்கி வைத்துக் கொண்டு தான் ஒரு விகாரமும் அடையாமல் இருக்கிறது என்று உணர்வதே விளக்கமாம்.சொப்பன அவஸ்தையில் சாக்கிர காலத்து விஷயப் பொருள்களும், தூல சரீரமும் அபாவமாம். சுழுத்தி அவஸ்தையில் சொப்பன விஷயப் பொருள்களும் சூக்கும சரீரமும் அபாவமாம். சமாதி அவஸ்தையில் காரண சரீரமும், சுழுத்தி சுகமும் அபாவமாம். இப்படி ஜீவசாட்சி மூன்று அவஸ்தைகளின் பாவ, அபாவங்களை விளக்கி வைத்துக் கொண்டு விகாரம் அடையாமல் இருக்கிறது.

லட்சணம் :

அபின்னா, பின்னா சக்திகளில் தோன்றிய அனைத்து விகாரங்களின் பாவ அபாவங்களை அறிந்து கொண்டிருக்கிற சர்வ சாட்சி என்ற நாமத்தை விட்ட இலக்கணையால் விட்டு, இவைகள் அனைத்துக்கும் ஆதாரமாய் உள்ள அதீத சிவத்தை விடாத இலக்கணையால் பொருள் கொண்ட ஜீவனே சுஜாதிய, விஜாதிய சுவகத பேதம் அற்ற ஜீவன்.இப்படி உணர்வதே சர்வசாட்சி என்ற பதத்திற்கு உள்ள லட்சணமாம்.

கீதாசார கருத்துரை

கீதாசாரத் தாலாட்டு
சிறப்புப்பாயிரம்
வெண்பா

மாதையர்கோன் வேதநவில்வாய் வேங்கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்கு கண்ணனருள் - கீதைக்
கருத்துயர் தாலாட்டாக் கட்டுரைத்தான் யாரும்
கருத்துயர் தீர்ந்தெய்தக்க தி.

பொருள் : பார்த்தனுக்கு கிருஷ்ண பகவான் அருளிச் செய்த கீதை என்கிற வேதசாஸ்த்தரார்த்தத்தின் சாரத்தால் யாரும் சம்சாரத்துக்கத்தை நீக்க வேண்டுமென்கிற சிரத்தையுடைய முமுட்சுக்களாகிய அனைவருக்கும் ஜனன மரணரூப துக்கம் நீங்கி நித்திய மோட்க்ஷத்தை எய்த எண்ணிய திருவேங்கடநாதன் என்னும் நாமமுடைய அப்பெரியார் கீதாசாரத்தாலாட்டாக தாலாட்டுப் பிரபந்தமாகக் கட்டுரைத்தார். இதை மனனம் செய்கிறவர்களுக்கும் உண்மை ஞானம் உறுதியாக உண்டாகுமென்று கூறினார்.

காப்பு

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கள் மூன்றும்
செய்வினை இரண்டுமொன்றி யாவருந் திகைப்பநின்ற
பொய்யிருளகல ஞானப் பொருட்கதிர்விரித்த புத்தேள்
கைவளராழிச் செங்கட் கண்ணணைக் கருத்தூள் வைப்பாம்.

பொருள் : ஆகாயமுதல் பூதங்கள் ஐந்தும் பிராதி வாயுக்கள் ஐந்தும் ஆனந்தமயம் முதல் கோசங்கள் ஐந்தும் வாக்காதி கர்மேந்தியங்களைந்தும் சுரோத்ராதீ ஞானேந்திரியங்களைந்தும் மனம் முதல் அந்தக்கரணங்கள் நான்கும் சத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணத்திரயங்கள் மூன்றும் நல்வினை தீவினை என்னும் வினைகளிரண்டும் புண்ணிய பாவங்களால் சீவர்கள் இயற்கையிலேயே பொருந்திப் பந்தப்பட்டு திகைத்துக் கிடக்கும் பொய்யிருளகல மித்தையாகத் தோன்றுகிற மாயையின் காரியமாகிய ஜீவேஸ்வர சகத்தாகிய விஷய சுகங்களை விட்டு நீக்கி நிற்கும் வல்லமையுடைய தத்துவ ஞானத்தை சகல உலகின் கண்ணும் பரப்பி பந்தப்பட்ட சீவர்களுய்யும் பொருட்டு இந்த கீதாவேதத்தை ஆக்கியவர் கையில் சக்கரத்தையும் சங்கையும் விழித்துக் கொண்டிருக்கும் கண்ணையுடைய (விழித்துக் கொண்டே தூங்கும்) கண்ணனை கருத்துள் வைத்து மனத்தால் தியானித்து வணங்குவோம்.

நூல்

சீராரும் பரமார்த்த தெரிசனத்தை யருள் செய்ய
பேராரும் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ - (1)

கருத்துரை : ஏ அருச்சுனா ! அருச்சுனருக்கு உபதேசிக்க வந்த குரு அவித்தையில்

பிறந்தவர் அல்லர் பின்னையோ மாயையில் பிறந்தவர் என்பதாம்.

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினா
லருச்சுநற்கு மெய்ஞ்ஞாந மனைத்துமுரை செய்தவரோ - (2)

கருத்துரை : மாயையின் சத்துவ குணத்தில் பிறந்த கண்ணன் அருச்சுனனுக்கு சாரதியாய் வந்து ஆத்ம ஞானம் அனைத்தையும் உபதேசித்தார் என்பதாம்.

செஞ்சமரிற் பந்துசநஞ் சேதம்வரு மென்றிரங்கி
யஞ்சினவன் பயந்தீர்த்தே யமர்செய்யச் சொன்னவரோ - (3)

கருத்துரை : தர்மம் தவறாது நடக்கப் போகும் பாரத யுத்தத்தில் குருவையும், பாட்டனையும் கொன்றால் பாபமென்று பயந்த பார்த்தனைப் பார்த்து, பாபமில்லை, இது உன் தருமம் என்று சொன்னார்.

சுற்றமரிற் சோகமெனச் சொல்லினைசற் றறிந்தவன்போற்
கற்றுணர்ந்த பேரதனால் கலங்கார்கா ணென்றவரோ - (4)

கருத்துரை : ஏ அருச்சுனா ! குருவும் சுற்றமும் இறந்தால், எனக்குத் துக்கமென்று சொன்னாய், ஆனால் கற்றறிந்தவர்கள் இப்படி கலங்க மாட்டார்கள் என்றார்.

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்த பேரேனு
மலங்காம னானிருக்கும் வகையுரையு மெனவினவ - (5)

கருத்துரை : ஏ கண்ணா ! கற்றுணர்ந்தவர்கள் மரணம் வரின் கலங்க மாட்டார்கள் என்றால், அதை எனக்கு உபதேசிக்க வேண்டுமென்று வணங்கினான்.

நீயுநா னும்புவிமே னிருபர்களு மெய்யுணர்வா

வாயுங்காற் பிறந்திறப்ப தார்க்குமிலை யென்றவரோ - (6)

கருத்துரை : ஏ அருச்சுனா ! நீயும் நானும் இந்த உலகில் உள்ள அனைவரும் விசாரம் செய்து பார்க்குங்கால் பிறப்பு, இறப்பு ஒருவருக்கும் இல்லையென்றார்.

ஈங்கெவர்க்கும் பிறந்திறப்ப தில்லையென் நாரிவ்வுலகி,

னீங்குபவ மார்க்கிதனை நிச்சயமாய்ச் சொல்லுமென. - (7)

கருத்துரை : ஏ கண்ணா ! பிறப்பு, இறப்பு இல்லையென்று சொன்னீர். ஆனால் ஞானத்தைப் பெற்றவர்க்குத் தான் பிறப்பு இல்லையென்று வேதம் சொல்லியது எதனால் ?

இத்தரையிற் பிறந்திறப்ப தெடுத்தவுடற் கடுத்தபொறி

நித்தியமா கியவாந்மா நின்சொரூப மென்றவரோ - (8)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! மண்ணால் அன்னமும், அன்னத்தால் வீரியமும், வீரியத்தால் ஆன உடம்பிற்கே பிறப்பு, இறப்பு அல்லாமல் உன்னுடைய ஆத்மாவிற்கு பிறப்பு, இறப்பு இல்லை என்பதாம்.

அங்கமுயி ரிந்தியநா னன்றிவே றேனைக்காணே

னிங்கியான் வேறுண்டே னைக்கறியப் புகலுமென - (9)

கருத்துரை : ஏ கண்ணா ! இந்த உடம்பைத் தவிர தாங்கள் சொன்ன ஆத்மாவைக் காணேன். அப்படி உண்டமானால், நான் அறியும்படி உபதேசிக்க வேண்டும் என்றான்.

மெய்யுயிரிந் தியங்களல்லால் வேறறியே னென்றவனைப்
பையவவை யாலறியப் படானுநீ யென்றவரோ - (10)

கருத்துரை : ஏ அருச்சுனா ! உடம்பையும், பிராணனையும் தவிர வேறொன்றைக் காணேன் என்றாய் ஆனால், இந்த உடம்பின் நினைவிருக்கும் வரை ஆத்மாவைக் காண முடியாது என்றார்.

தேகம்வே றாகிலதைச் சேர்ந்ததிவ ணேதெனவே
சோகமே விளைகருமத் தொடர்ச்சியினா லென்றவரோ - (11)

கருத்துரை : ஏ கண்ணா ! உடம்பிற்கு ஆத்மா வேறாகில், ஆத்மா உடம்போடு எதனால் சேர்ந்தது என்றான். ஏ அர்ச்சுனா ! காமிய கர்மத்தாலேயே வந்து சேர்ந்தது என்றார்.

தேகமெடா முன்கருமச் செயல்வருமா றேதெனவே
யேகமா மரமும்வித்து மெனுமுறைபோ லென்றவரோ - (12)

கருத்துரை : ஏ கண்ணா ! காமிய கருமத்தில் இந்த உடம்பு வந்ததென்றால் உடம்பு இல்லாத காலத்திற்கும் முன்பு யார் கர்மம் செய்தவர்கள் என்று வினவிய அருச்சுனனுக்கு வித்தும் மரமும் போல என்று உபதேசித்தார்.

காயமுந்தா னும்பிறிதேற் கன்மமெவர் செய்ததெனத்
தீயவுடற் கலதுகன்மச் செயறனக்கே தென்றவரோ - (13)

கருத்துரை : ஏ கண்ணா ! இந்த உடம்பும், ஆத்மாவும் வெவ்வேறானால் யார் கர்மத்தைச் செய்ததென்பதை எனக்குத் தெரியும்படி கூற வேண்டும் என்ற அருச்சுனனுக்கு காரண சரீரத்திலுள்ள ஜீவனே கருமத்தை செய்தான் என்று உபதேசித்தார்.

படர்கரும முடல்செய்யிற் பலமுறுவ தார்க்கெனவே
யடர்பலமு முடற்கேயா மறிவாற்கே தென்றவரோ - (14)

கருத்துரை : ஏ கண்ணா ! கருமத்தை உடம்பு செய்யுமானால் அந்த கருமத்தின் பலன் உடம்பிற்கா ! ஆன்மாவிற்கா ? என்று வினவிய அருச்சுனனுக்கு உடம்பிற்கே தவிர ஆத்மாவிற்கு இல்லை என்று உபதேசித்தார்.

வெய்யவினை யுடற்கென்றால் மெய்யிங்கே விழவாந்மா
வையமற நரகசொர்க்க மநுபவிப்ப தேதெனவே - (15)

கருத்துரை : ஏ கண்ணா ! உடம்பு பிணமாகி மண் மேல் விழ அந்த உடம்பு செய்த புண்ணியத்தால் ஏற்பட்ட சொர்க்கத்தை ஆத்மா போய் அனுபவிக்கலாமா ? இது ஞாயமா ? என்றான்.

அனுபவமே யிலையதுவீ ணாரோபி தநிகழ்த்திற்
றநுகரணச் செயறனதாச்சார்வதுபோ லென்றவரோ - (16)

கருத்துரை : ஏ அருச்சுனா ! நீ சொன்ன வசனம் புராண சிரவணம் செய்தவர்கள் வசனமே தவிர வேதாந்த சிரவணம் செய்தவர்கள் வசனம் அல்ல. அஞ்ஞான காலத்தில் தான் அல்லாத உடம்பைத்தான் என்று சொன்னவர்கள் வசனம் போல் என்றார்.

மற்றுடலின் செய்கைதன்மேல் வருமயக்கமேதெனவே
முற்றுணர்வொன் றில்லாத மோகமென்று சொன்னவரோ. - (17)

கருத்துரை : ஏ கண்ணா ! வேறொரு உடம்பின் செயலை தான் செய்ததாக எண்ணுகிற எண்ணம் ஏன் வந்தது ? என்றான். அர்ச்சுனா ! வேதாந்த சிரவணம் செய்த அறிவின் அர்த்தத்தில் ஒன்று கூட இல்லாத மயக்கம் அப்பா என்றார்.

அறிவுதே கந்தனக்கோ வாந்மாவிற்கோ வெனவே
பிறிவுசெயி லசித்துடலாம் பிரமமறி வென்றரோ - (18)

கருத்துரை : ஏ கண்ணா ! தாங்கள் சொன்ன அந்த அறிவு உடலுக்கா ? ஆத்மாவுக்கா என்றான். சடமாகிய உடலுக்கு அறிவு இல்லை சித்தாகிய ஆத்மாவுக்கு அறிவு உண்டு அர்ச்சுனா என்றார்.

தேகமசித் தாகிலிந்தச் செயல்வருவ தேதெனவே.
யேகபரஞ் சோதியின்முன் னிருக்கையினா லென்றவரோ - (19)

கருத்துரை : ஏ கண்ணா ! குளிரையும் உஷ்ணத்தையும், உடம்பு அறிக்கின்ற அறிவு பிரத்தியச்சமாய் இருந்த உடம்பை சடமென்று ஏன் சொன்னீர். அருச்சுனா ! சித்தாகிய ஆன்மா உடம்போடு சம்பந்தப்பட்டு இருப்பதால் உடம்புக்கு அறிவும் தன்மை வந்ததப்பா என்றார்.

இருக்கினும் சேதநத்துக் கிச்செயலுண்டோ வெனவே
யுருக்குபடா காந்தமுன்னிலூசி நிகரென்றவரோ - (20)

கருத்துரை : ஏ கண்ணா ! சித்தாகிய ஆன்மா, உடம்பில் பட்டாலும் சடமாகிய உடலுக்கு இச்செயல் எப்படியுண்டாகும். என்ற அருச்சுனனுக்கு, காந்தம்பட்ட ஊசி அடைவது போல் என்று சொன்னார்.

சொன்னசெய லுடற்கானாற் சுகதுக்க மியார்க்கெனவே.
அன்னசுக துக்கமுந்தா னவ்வுடற்கே யென்றவரோ. - (21)

கருத்துரை : ஏ கண்ணா ! ஆத்மா சம்பந்தத்தால் உடம்பு சுகதுக்கத்தை அறியுமானால் இந்த துக்க சுகம், ஆத்மாவுக்கா, உடம்புக்கா ? என்ற அருச்சுனனுக்கு, உடம்புக்குத்தான் சுக துக்கம் என்றார்.

சேதநமா மாந்மாவைச் சேராத துக்கசுக,
மோதுசடமாமுடலை யுற்றிடுமோ சொல்லுமென. - (22)

கருத்துரை : ஏ கண்ணா ! கொலை செய்தவனிருக்க கொடுவாளுக்கு தண்டனை கொடுத்த நீதிபதியின் செய்கையைப் போல் உள்ளது என்றான்.

பூதமைந்தோ டைந்துயிர்கள் புலன்கள் பத்து மநமுதனான்
கீதிருமெ யிதின்மநத்துக் கின்பதுன்ப மென்றவரோ - (23)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! ஐம்பூதங்கலா லுண்டான தூலசூக்குமம் என்கின்ற இருபத்தாறு தத்துவங்களில் மனத்துக்குத் தான் சுக துக்கங்கள் என்றார்.

இந்தவிரு வகைத்தநுவிற் கேதுவே தெனவினவ.
முந்தியகா ரணமதனான் மூன்றுதநு வென்றவரோ - (24)

கருத்துரை : ஏ கண்ணா ! உடம்பு இயக்கத்துக்கு மனம் காரணமாயிருந்தது போல மன இயக்கத்துக்கு காரணம் யாது ? என்று வினவிய அருச்சுனனுக்கு பஞ்சபூத உற்பத்திக்கு முன்னமே உண்டான காரண சரீரத்தில் உள்ள ஜீவனே ஏது என்றார்.

மநமறியுந் துக்கசுக வரவென்றீ ரம்மநமும்.
வினவிலசே தநமலவோ விரித்தெனக்கு விளம்புமென. - (25)

கருத்துரை : ஏ கண்ணா ! மனம் சடமாயிற்றே ! துக்க சுகத்தை அறிய முடியாதே. ஆதலால் அதை எனக்கு விளங்கும்படி உபதேசிக்க வேண்டுமென்றான்.

அம்மநத்தி லாந்மா வபேதம்போற் றோன்று தலால்.
விம்முதுக்க சுகத்தைமந மேவுமென்று சொன்னவரோ. - (26)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! எப்படி கம்பியோடு மின்சாரம் சேர்ந்தால் வெளிச்சம் உண்டாகிறதோ. அதேபோல் மனத்தோடு ஆத்மா சேர்ந்தால் சுக துக்கத்தை அறிகிறது என்றார்.

அந்தமநோ துக்கசுக மதனிடத்து நில்லாமல்
வந்திலங்கு மாத்மாவை மருவியதென் சொல்லுமென - (27)

கருத்துரை : ஏ கண்ணா ! அந்த துக்க சுகமனத்தில் மட்டும் நில்லாமல் ஆத்மாவில் ஏன் கலந்தது என்றான்.

வெய்யகன லின்சூடு மேல்வைத்த சட்டியினூ
டுய்யபுன லூடுவந்தங் கொன்றுதல்போ லென்றவரோ - (28)

கருத்துரை : ஏ அருச்சுனா ! சட்டியில் பட்ட நெருப்பின் சூடு சட்டியில் உள்ள தண்ணீரோடு சேர்ந்தது போல் என்றார்.

சித்தாகு மாத்மாவுஞ் செடமாகுஞ் சித்தமுந்தா
னெத்தாங்கி ரண்டுமொன்றா யுற்றவகை சாற்றுமென. - (29)

கருத்துரை : ஏ கண்ணா ! உற்பத்தி நாசமுடைய மனமும். உற்பத்தி நாசம் இல்லாத ஆத்மாவும் இரண்டும் என்ன காரணத்தால் சேர்ந்தது என்றான்.

வல்லிரும்பு கனலுடனே மருவியது போன்மநமு
மொல்லையிலாந் மாவுடனே யுற்றதுகா ணென்றவரோ - (30)

கருத்துரை : ஏ அருச்சுனா ! நெருப்புடன் சம்பந்தப்பட்ட இரும்புபோல் பஞ்சீரகணத்தால் ஏற்பட்ட மனது ஆனதால். ஆத்மாவும் மனதும் ஒன்று சேர்ந்தது என்றார்.

உற்றதெத னாலெனவே யுள்ளமவி வேகமுறப்
பற்றியதன் மேலுமதன் பண்புவந்த தென்றவரோ - (31)

கருத்துரை : ஏ கண்ணா ! மனத்தின் சுபாவம் ஆத்மாவில் தோற்றுவது ஏன் ? என்ற அருச்சுனனுக்கு வளைவுள்ள, இரும்போடு சேர்ந்த நெருப்பு. நெருப்பும் வளைவாய் தோற்றுவது போல என்றார்.

அடுத்தகுணம் போமோபின் ஆன்மாவை விட்டெனவே
யெடுத்தசெம்பூ நிறம்படிகத் தேறுதல்போ லென்றவரோ - (32)

கருத்துரை : ஏ கண்ணா ! ஆத்மாவோடு சேர்ந்த மனம் ஆத்மாவை விட்டுப் போகுமா ? போகாதா ? என்ற அருச்சுனனுக்கு செடியிலிருக்கிற செம்பூவின் நிறம் கண்ணாடியில் தோற்றுவது போல் என்றான்.

சுத்தபடி கம்போற்சொ ரூபமாய்த் தானிருக்க
மெத்தவுமா சாமலிந மேவியதென் சொல்லுமென - (33)

கருத்துரை : ஏ கண்ணா ! கண்ணாடியைப் போல் ஆத்மாவிருக்க சுகதுக்கத்தைத் தருகின்ற பந்தங்கள் வந்து சேரலாமா ? என்றான்.

அநாதியாம் வாசனையா லடைந்ததா சாமலிந
மநோபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்தவரோ - (34)

கருத்துரை : ஏ அருச்சுனா ! அனாதிப் பொருள்கள் ஆறு. ஆறில் ஒன்றாகிய ஜீவனிடத்துள்ள ஆசை மனத்தில் இருக்கு மட்டும் முத்தி கிடையாது என்றார்.

பந்தமெது முத்தியெது பகுத்துரைக்க வேண்டுமென்றன்
சிந்தைதெ ளியவென்று திருத்தாளினை வணங்க - (35)

கருத்துரை : ஏ கண்ணா ! எப்படிப்பட்டது பந்தம் ? எப்படிப்பட்டது முத்தி ? என்பதை என் சிந்தையில் பதியும்படியும் ஆசை நீங்கும் படியும் சொல்ல வேண்டுமென்று வணங்கினான்.

தேகாதி தானெனவே சேரபிமா நங்கள்பந்த.
மாகாத மாநம்விடி லரியமுத்தி யென்றவரோ. - (36)

கருத்துரை : ஏ அருச்சுனா ! உடலை நான் என்று எண்ணுவதே பந்தம் அந்த அபிமானத்தை விடுவதே முத்தி என்றார்.

அபிமாநம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வகையுந்
தபியாம் லானறியத் தயவாகக் கூறுமென. - (37)

கருத்துரை : ஏ கண்ணா ! உடலை நான் என்று எண்ணிக் கிடக்கிற அபிமானத்தார் அழுந்திக்கிடக்கிற என்னை, அந்த துக்கத்திலிருந்தும் நீங்கும் மார்க்கத்தை எனக்கு கிருபையோடு அருள் செய்ய வேண்டுமென்றான்.

மறந்திடுமஞ் ஞாநத்தான் மாநம்வந்த தஞ்ஞாந
மிறந்துவிடின் மாநமும்போ மென்னவுரை செய்தவரோ. - (38)

கருத்துரை : ஏ அருச்சுனா ! உன் ஆன்மாவை நீ மறந்து விட்டதே அஞ்ஞானமாம் ஆத்மாவை நான் என்று அறிவதால் அஞ்ஞானம் நீங்கி துக்கம் நாசமாகும் என்றார்.

அந்தமுறை யஞ்ஞாந மணுகுவதும் போவதுவுஞ்
சந்தயமி லாதறியத் தயவாகக் கூறுமென. - (39)

கருத்துரை : ஏ கண்ணா ! அஞ்ஞானம் வந்ததையும், போகின்ற மார்க்கத்தையும் சொன்னீர். ஆனால் எனக்கு விளங்கவில்லை. விளங்கும்படி கூறி அருள் செய்ய வேண்டுமென்றான்.

அஞ்ஞாநம் வந்தத நாதியது சொல்வதல்ல
மெய்ஞ்ஞாநத் தாலேவி டுமென்று ரைத்தவரோ - (40)

கருத்துரை : ஏ அருச்சுனா ! அஞ்ஞானம் வந்தது இப்படியென்று ஒருவராலும் சொல்ல முடியாது. ஆனால் தத்துவ ஞானத்தால் நீங்கி விடும் என்பது உண்மையாம்.

இரவியெதி ரடுத்துவந்த விருட்போல வஞ்ஞாநம்
வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை யேதெனவே. - (41)

கருத்துரை : ஏ கண்ணா ! சூரியனைப் போல் உள்ள ஆத்மாவாகிய என்னிடத்தில் இருளைப் போலுள்ள அஞ்ஞானம் நெருங்கி வரலாமா ? என்றான்.

அந்தவறி வுவந்தா லஞ்ஞாந மில்லையப்பாற்
சந்ததமு மாநந்த சாகரங்கா ணென்றவரோ. - (42)

கருத்துரை : ஏ அருச்சுனா ! இப்படி அறிவு ஒருவருக்கு வருமானால் அதுவே ஞான நிலையென்றும், பரமானந்த நிலையென்றும் சொல்லப்படும்.

வேதாந்தத் தாற்குருவான் மெய்ஞ்ஞாநம் வந்தவுடன்
நீதான துக்கசுகந் தீராத தேதெனவே. - (43)

கருத்துரை : ஏ கண்ணா ! வேதாந்த விசாரத்தாலும், குரு உபதேசத்தாலும் தத்துவஞானம் வந்தவுடனே நெடுங்காலம் துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த துக்க சுகங்கள் ஏன் நாசமாகவில்லை என்றான்.

பற்றறுமோ துக்கசுகம் பரோட்சஞா நத்தாலே,
யற்றமா மவ்விரண்டு மபரோட்சத் தென்றவரோ - (44)

கருத்துரை : ஏ அருச்சுனா ! பரோக்ஷ ஞானமென்றும், அபரோக்ஷ ஞானமென்றும் இரண்டுவகை. அதில் பரோக்ஷ ஞானத்தால் நாசமாகாமல் அபரோக்ஷ ஞானம் வந்தவுடன் சுகதுக்கங்கள் நாசம் ஆகும் என்று உபதேசித்தார்.

பரோட்சமப ரோட்சமெது பகுத்துரைக்க வேண்டுமென்றன்,
நிரோதமாம் நன்றாத் தெளியும்ப டிக்கெனவே. - (45)

கருத்துரை : ஏ கண்ணா ! இந்த இரண்டு ஞானங்களின் விளக்கத்தை என் புத்தி தெளியும்படி சொல்ல வேண்டுமென்றான்.

பகர்ந்தசத்த ஞாநம்ப ரோட்சம நுபவத்தா,
லகம்பிரம மெனுஞாந மபரோட்ச மென்றவரோ - (46)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஆத்மாவே நீ என்ற உபதேசத்தைக் கேட்டதாலுண்டான ஞானம் பரோக்ஷ ஞானமாக அதை அனுபவத்தால் நேரிட்டு அறியும்போது உண்டாகும்

ஞானமே அபரோக்ஷ ஞானமாம் என்றார்.

தான்பிரம மென்றறிந்துந் தநுவைத்தா னென்றபுத்தி.
யேன்போக வில்லையதை யெனக்கறியப் புகலுமென - (47)

கருத்துரை : ஏ கண்ணா ! ஆத்மாவே பிரம்மமென்று அறிந்தும் உடம்பை நான் என்கின்ற புத்தி ஏன் போகவில்லை என்றான்.

கேள்வியினான் மநநத்தாற் கிளர்ந்தயோ கங்களினால்
ஆழ்பிரமத் துநுபவம்வந் ததுதீரு மென்றவரோ - (48)

கருத்துரை : ஏ அருச்சுனா ! குருவுபதேசத்தாலும் மனனத்தாலும் ஆத்ம தியானம் அனுபவம் உண்டான பின், உடம்பை நான் என்கிற புத்தி நீங்குமென்று உபதேசித்தார்.

ஆதியாஞ் சிற்சொரூப தானினிமேற்.
சோதிமந நாதியினாற் சொரூபமா மோவெனவே - (49)

கருத்துரை : ஏ அருச்சுனா ! அஞ்ஞானத்தை நாசம் செய்யும் ஆத்மாவாகிய நித்தியத்தை மறந்து வேறு அனாத்மாக்களாகிய அநித்தியத்தை தேடித் திரிந்ததே காரணமாம். அத்தகைய ஆத்மாவை மறந்தது எதுபோல் என்றால்.

எப்போதுஞ் சிந்மயந்தா னெனன்மறந்து தேடுவது
செப்புமிடற் றணியிருக்கத் தேடுதல்போ லென்றவரோ - (50)

கருத்துரை : ஒரு பெண்ணின் கழுத்தில் ஆபரணமாகிய நகையை வைத்துக் கொண்டு வீடெல்லாம் தேடுவது போல் இருந்தது என்றார்.

தேடியபின் றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொரூபங்
கூடுவனோ யானென் குறைதீரச் சொல்லுமென - (51)

கருத்துரை : ஏ கண்ணா ! அனாத்ம புத்தி நீங்கி அதாவது தேகம் நானல்ல என்னும் நினைவு வந்து என் மனம் ஆத்ம சொரூபத்தைக் கூடுவேனோ சுவாமி என்றான்.

வந்தவுடல் வேறாயும் வாசனையாற் றானெனலாற்
சந்தயமெ ன்றற்சொரூபந் தானாதற் கென்றவரோ. - (52)

கருத்துரை : ஏ அருச்சுனா ! உற்பத்தி நாசமுடைய இந்தப் பொய்யுடலை அநேக ஜன்மப் பழக்கத்தினால் நான் என்கிற சத்திய புத்தி நாசமாய் மெய்யாகிய ஆத்மாவை நானென்று சொல்லுவதில் சந்தேகம் ஒன்றும் வேண்டியதில்லை என்றார்.

தநுவைத்தா னெனும்பிரமை சத்தஞா நத்திறொ
தநுபவமெய்ஞ் ஞாநத்தா லறிம்வகையே துரையுமென - (53)

கருத்துரை : ஏ கண்ணா ! உடம்பை நான் என்கின்ற புத்தி குரு உபதேசத்தால் நீங்காமல் அனுபவமாகிய தத்துவ ஞானம் வந்துதான் நீங்கும் என்றது எதனால் சுவாமி என்றான்.

விளக்குவிளக் கெனுமதனால் வெய்யவிருள் போய்விடுமோ.
துளக்கமுள்ள விளக்கேற்றிற் றொலையுமிரு ளென்றவரோ. - (54)

கருத்துரை : ஏ அருச்சுனா ! வீட்டுக்குள் இருக்கும் இருளை நீக்க ஒருவர் விளக்கு விளக்கு

என்று சொன்னால் போகுமா ? போகாது ? தீபமேற்றியவுடனே நீங்குவது போல என்பதாம்.

நெடுங்கால மாந்மாவை நீங்காத வஞ்ஞாநம்
விடுங்கால மெந்நாளோ மெய்ஞ்ஞாநத் தாலெனவே - (55)

கருத்துரை : ஏ கண்ணா ! அநேக ஜன்மங்களாக ஆத்மாவோடு கூடியிருந்த அஞ்ஞாநம் தத்துவஞானம் வந்தபிறகுதான் நிற்குமோ சுவாமி என்றான்.

அந்தகா ரங்குகையி லாயிரநா ளிருந்தாலுஞ்
செந்தீபங் கண்டவுடன் றீர்வதுபோல லென்றவரோ - (56)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஒரு குகைக்குள் அநேக நெடுங்காலம் குடியிருந்த இருள், ஒரு தீப வெளிச்சத்தைக் கண்டவுடனே ஓடிவிடுவது போல என்றார்.

கருமயோ கந்தவமே காரணமா நீங்காம,
வருமையா ஞாநம்வந்தோ வஞ்ஞாநம் போமெனவே - (57)

கருத்துரை : ஏ கண்ணா ! ஒருவர் எத்தனை ஜன்மங்கள கர்மஉபாசனைகளை செய்தாலும் அதனால் நீங்காத அஞ்ஞானம், ஞானம் வந்தபிறகு தான் நீங்குமோ சுவாமி என்றான்.

குத்துவெட்டும் படைகளினாற் கூடுமோ விருடூரக்க,
வுத்தமாம் ரவியுதித்தா லோடுமிரு ளென்றவரோ. - (58)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஒருவர் மிகப்பெரிய அசுவமேத யாகங்களை செய்தாலும், அக்கர்மங்களால் அஞ்ஞானம் நீங்காதாம். தத்துவ விசாரம் செய்து அவ்விசாரத்தால் உண்டாகும் தத்துவ ஞானத்தால் தான் அஞ்ஞானம் நாசமாகும் என்பதாம்.

அஞ்ஞாந விருடூரக்க வறியாத நல்லகன்ம
மெய்ஞ்ஞாலந் தனைப்பிரிக்கும் விதமெவ்வா றெனவினவ - (59)

கருத்துரை : ஏ கண்ணா ! அஞ்ஞானத்தை நாசமாக்கும் ஆற்றலில்லாத கருமத்தால் ஞானமுண்டாகி அந்த அஞ்ஞானத்தை நாசமாக்குவது எப்படி என்றான்.

கருமம் இருவகையாம் காமியம் நிட்காமிய மென்றும்
நிஷ்காம கருமமே ஏதுகாண் என்றவரோ - (60)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! காமிய கர்மமென்றும் நிஷ்காம கர்மமென்றும் சுருதிகளால் இருவகையாக சொல்லப்பட்டுள்ளன. அதில் நிஷ்காம கருமமே தத்துவ ஞானத்துக்கு ஏதுவாம் என்பதாம்.

கருமமே காரணமாய் கட்டுரைத்தீர் இவ்வுலகை,
ஒருவும் வகையதெனக்கு ஓதென்றடி பணிய - (61)

கருத்துரை : ஏ கண்ணா ! ஞானத்திற்கு காரணம் கருமம் என்றால், பிரம்மத்திற்குக் காரணம் பிரபஞ்சமென்றால் போல் விரோதமாகுமே சுவாமி என்றான். எனக்கு இந்த சந்தேகத்தை நீக்க வேண்டுமென்று அடிபணிந்தான்.

இந்திரஜா லம்போல விவ்வுலகை நம்மிடத்திற்.
றந்திரமாத் தோற்றுவித்தோஞ் சத்யமல வென்றவரோ - (62)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஒரு வித்தைக்காரன் முன்பின் இல்லாத பொய்யான மாமரத்தைக் காட்டுவது போல என்னிடத்திலுள்ள பொய்யான மாயா சத்தியால் இவ்வுலகத்தைத் தோற்றுவித்தோம். ஆனால் சத்தியமல்ல என்றார்.

மித்தையெனுஞ் சகத்து நின்பால் விளங்குமோ வெனவினவ.
சுத்திதனி லேரஜதந் தோன்றுதல்போ லென்றவரோ. - (63)

கருத்துரை : ஏ கண்ணா ! மெய்யாகிய உன்னிடத்தில், பொய்யாகிய ஜகத்து தோற்றாதே என்றான். அதற்கு, ஏ அருச்சுனா ! மெய்யான கிளிஞ்சலில் இருந்த பொய்யான வெள்ளி தோற்றுவது போல என்றார்.

அயல்வெள்ளி சுத்தியின்மே லாரோபி தங்கூடு.
மியலுள்ள சகமுன்வே றிருந்ததுமுண் டோவெனவே - (64)

கருத்துரை : ஏ கண்ணா ! கிளிஞ்சலுக்கு முன்னே வெள்ளியிருப்பதுபோல தங்களுக்கு முன்னே வேறு ஜகத்து உண்டோ என்றான்.

மநமயக்கம் பிடிக்கில்லா வத்துவுந்தோன் றிடுமதுபோல்.
கநவில்விண்ணிற் றான்பறக்கக் கண்டதுபோ லென்றவரோ. - (65)

கருத்துரை : ஏ அருச்சுனா ! மன பீதியடைந்த ஒருவனுக்கு இல்லாத திருடன் தோற்றுவது போல கனவில்தான் ஆகாயத்தில் பறக்கக் கண்டது போல் என்பதாம்.

கநவுபோற்ப்ர பஞ்சமென்றீர் கண்விழித்தாற் கநவுபொய்யாம்.
வினவுசகந் திநமுமெய்யா விளங்குவதென் சொல்லுமென. - (66)

கருத்துரை : ஏ கண்ணா ! இந்த உலகை, கனவுப் பொருள்போல் என்றீர். கண் விழித்தால் கனவு பொய்யாக்கி விடுகின்றது தோற்றுவதில்லை. ஆனால் இந்த உலகம் தோற்றிக் கொண்டே இருக்கிறது ஏன் என்றான்.

மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞாநம் வருமளவும்.
பொய்யாம்பின் கநவதுபோற் போதம்வரி லென்றவரோ - (67)

கருத்துரை : ஏ அருச்சுனா ! இந்த உலகம் மெய்யாகத் தோற்றுவது தத்துவஞானம் வராதவரை தத்துவ விசாரம் செய்து ஒருவருக்கு தத்துவஞானம் உண்டானவுடனே கனவுப்பொருள்போல உலகமும் பொய்யாய் போய் விடுமப்பா என்றார்.

முன்புகண்ட கநவுபொய்யா முழிசாக்ரம் போலவென்றீர்.
பின்புமுத்தித் தசையடைந்தும் ப்ரபஞ்சநிற்ப தேதெனவே. - (68)

கருத்துரை : ஏ கண்ணா ! கண் விழித்தவுடனே கனவுப் பொருள் பொய்யானதுபோல ஒருவருக்கு தத்துவ ஞானம் வந்தவுடனே இந்த உடம்பு ஏன் பொய்யாகத் தோற்றவில்லை.

தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லாற்.
பரந்தசகங் காரியத்திற் பயன்படா தென்றவரோ. - (69)

கருத்துரை : ஏ அருச்சுனா ! வெந்து சாம்பலான வஸ்திரம், மீண்டும் வஸ்திரம் போல தோற்றினும், அது குளிருக்கு போர்த்துக் கொள்ள உதவாதது போல ஞானம் வந்தபின் உடம்பு தோற்றினும் முன்போல் பிரபஞ்ச விவகாரம் செய்ய ஆகாது என்று உபதேசித்தார்.

கன்மவினை யஞ்ஞாநங் கடந்துமதன் காரியமாம்,
புன்மையுறு மெய்யுடனே போகாத தேதெனவே. - (70)

கருத்துரை : ஏ மாதவா ! ஒருவருக்கு ஞானம் வந்தவுடனே அஞ்ஞானம் நாசமாய் விட்டது என்றால், அந்த அஞ்ஞாநத்தின் காரியமாகிய உடம்பு ஏன் நாசமாகவில்லை சுவாமி என்றான்.

வெட்டவிழு மரம்பசந்து விளங்குதல் போற்சிலகாலம்,
நட்டகன்ம மாய்ந்துமங்க நடித்திடுங்கா ணென்றவரோ - (71)

கருத்துரை : ஏ தனஞ்சயா ! வெட்டி விழுந்த மரத்தில் மண்ணின் காரணமாகிய ஈரம், உடனே நீங்காமல் கொஞ்சகாலம் கழித்து நீங்குவது போல அஞ்ஞானத்தை அழித்த ஞானிக்கு அஞ்ஞானத்தின் காரியமாகிய உடம்பு உடனே நீங்காமல் ப்ராப்த கர்மத்தை அநுபவித்தபின் நீங்குமப்பா என்றார்.

சென்மம்போய் முத்தியினைச் சேரச்சி ளிருக்கத்
தொன்மையாந் மாபலவோ சொரூபம் பகருமென. - (72)

கருத்துரை : ஏ கண்ணா ! முத்தியடைந்த ஞானிகளுடைய ஆத்மாவும், அஞ்ஞானியினுடைய ஆத்மாவும் இரண்டும் ஒன்றா ? பலவா என்று கேட்டான்.

பிரமமென்று மீசனென்றும் பெருபல சீவரென்று,
முறைமயக்க மலதாந்மா வொருவனே யென்றவரோ. - (73)

கருத்துரை : ஏ அருச்சுனா ! விசார திருஷ்டியால் பார்க்கும்போது ஜீவர்களும், பஞ்சமூர்த்திகளும் ஒரே சச்சிதானந்த பிரம்ம சொரூபமாகிய ஆத்மா ஒன்றாகவே இருக்கிறது பலதில்லை என்பதாம்.

ஏகந்தா னாந்மா வெனும்வகையே மெய்யானா
லாகந்தோ றும்பலவா யமர்ந்ததென்னோ சொல்லுமென. - (74)

கருத்துரை : ஏ கண்ணா ! ஆத்மா ஒன்றேதான் என்பது உண்மையானால் பல உடம்பில் பல ஆத்மாக்களாக தோற்றலாமா ? சுவாமி என்றான்.

பலகடத்திற் சலத்தூடு பாநுவிம்பந் தோன்றுதல் போற்,
றொலை வில்புத்தி தொறுமாந்மா தோற்றுதல்கா ணென்றவரோ. - (75)

கருத்துரை : ஏ அருச்சுனா ! பலகோடி கடஜலத்திற் தோற்றுகிற பிரதி பிம்ப சூரியர்களுக்கு, ஆகாயத்தில் தோற்றுகிற ஒரே அதிஷ்டான சூரியனைப் போல பலகோடி உடம்பிலிருக்கும் புத்தியில் தோற்றும் ஆத்மா ஒன்றே அப்பா என்று உபதேசித்தார்.

ஆதித்தன் போலாந்மா வளவில்புத்தி தொறுந்தோன்றிற்
சாதிக்கு முத்தியெவர் தமக்கதனைச் சாற்றுமென - (76)

கருத்துரை : ஏ கண்ணா ! பலகோடி உடம்பிலும், உள்ளது ஒரே ஆத்மா என்பது

உண்மையானால் முத்தியடைந்த ஜீவன் யாரென்று வினவினான்.

பந்தமுத்தி தானுமந்தப் பரந்தபுத்தி தனக்கேயாம்
அந்தவிம்பந் தனக்கில்லையென் றறிவுவரச் சொன்னவரோ - (77)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! பந்தம், முத்தி என்கிற இரண்டும் புத்திக்கு உள்ளதே தவிர சேதனமாகிய ஆத்மாவுக்கு இல்லை என்று உபதேசித்தார்.

பரமேக மாயுமதிற் பலசீவ ரேதெனவே
யொருகடலிற் பலகுமிழி யுதிப்பதுபோ லென்றவரோ - (78)

கருத்துரை : ஏ கண்ணா ! ஒன்றாகவே சச்சிதானந்த சொரூபமிருக்குமானால் பலகோடி ஜீவர்கள் எப்படித் தோற்றினார்கள் சுவாமி என்றான். ஒரே சமுத்திர ஜலத்தில் பலகோடி குமிழிகள் தோற்றினது போல என்றார்.

சீவனது தானென்றுஞ் சேரும்பி ரமமென்று,
மாவதுவோ பேரின்ப மாங்கதெனக் கோதுமென. - (79)

கருத்துரை : ஏ கண்ணா ! சமுத்திர ஜலத்தில் உண்டாகும் குமிழிகள் அந்த ஜலத்தில் ஒடுங்குவது போல ஜீவர்கள் சச்சிதானந்த சிவத்தில் ஒடுங்குவதுதான் முத்தி மோக்ஷமோ சுவாமி என்றான்.

ஏகம்பி ரமமி ரண்டிலைநீ வேறுமலை
சோகமுறும் பேதமறிற் றோன்றுமின்ப மென்றவரோ. - (80)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஜலமும், குமிழியும் விசாரிக்கும்போது ஒன்றாய் இருப்பது போல ஜீவனையும், சிவத்தையும் விசாரிக்கும்போது ஒன்றென்று எண்ணுகிற சத்திய புத்தியே முத்தி என்று உபதேசித்தார்.

சீவபே தம்போமோ சித்தொன்றா மோவெனவே,
யாவன்மந மறுஞ்சுழுத்த யவத்தையிற்பா ரென்றவரோ. - (81)

கருத்துரை : ஏ கண்ணா ! ஜீவன் நான் என்கின்ற புத்தி நீங்கி, சிவம் நான் என்கிற புத்தி வருமா ? சுவாமி என்றான். அர்ச்சுனா ! நீ நன்றாய் தூங்குகிற சுழுத்தி அவஸ்தையில் ஜீவ பேதங்கள் இல்லாதிருப்பதை நீயே யோசித்துப்பார் என்றார்.

பேதமல விவ்வுலக பிரமமய மென்றறிந்தும்,
பூதமய மாய்த்தோற்றல் போகாததேனெவே. - (82)

கருத்துரை : ஏ கண்ணா ! தோற்றப் பொருட்கள் யாவும் பொய்யென்று ஆத்மாவே மெய் என்று அறிந்த ஞானிக்கு உலகம் மெய்யாகத் தோற்றலாமா ? சுவாமி என்றான்.

கானலைநீ ரென்றோடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும்,
வானுலவு நீராகி வயங்குதல்போ லென்றவரோ - (83)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! கானல்நீர் தோற்றுகிற இடத்தில் உள்ளது. சூரிய வெப்பமே ! அல்லாமல், தண்ணீர் இல்லை என்று அறிந்த பின்பும் கண்ணுக்கு தண்ணீர் பொய்யாகத் தோற்றிக் கொண்டு இருப்பது போல என்றார்.

அறிவானு நல்லறிவு மறியப்படும் பொருளும்,
பிறிவாய்மூன் றாயிருத்தல் பேதமலவோ வெனவே. - (84)

கருத்துரை : ஏ கண்ணா ! அறிபவனும் அறிவும் அறியப்படும் பொருளும் என மூன்று விதமாக பிரிவுப்பட்டதாய் இருத்தல் பேதமன்றோ ! என்று அர்ச்சுனன் வினவினான்.

சொப்பநத்திற் றனித்தொருவன் றோற்றம்வே றில்லையங்கே
கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போ லென்றவரோ - (85)

கருத்துரை : ஏ பார்த்திபா ! நீ சொப்பனம் காண்கின்ற நேரத்தில் இருந்தது ஒருவனே ஆகும். ஆயினும் அந்தச் சொப்பனத்தில் மனத்தினிடத்தே பல கூட்டங்களை கற்பனையில் உண்டு பண்ணி பார்ப்பது போல் என்று உபதேசித்தார்.

கற்பனையாம் பேதங்கள் காணாமற் போம்வகையை,
விற்பநமா நானறிய விளம்புமென வேவணங்க. - (86)

கருத்துரை : ஏ கண்ணா ! சொப்பனப் பொருளும் அதை கற்பித்துக் காண்கிற மனமும் நீங்கி, என் ஆத்ம சொரூபமாகிய மெய்ப்பொருளை நான் அறியும்படி உபதேசிக்க வேண்டுமென்று வணங்கினான்.

துரியமாம் யோகத்தாற் றூயமநம் யைமானா,
லரியமூ வகைவிகற்ப மழியுமென்று சொன்னவரோ. - (87)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! உன் உடம்பிலிருக்கும் நாலாவது அவஸ்தையாகிய சமாதி அவஸ்தைக்கு உன் மனம் எப்போது போய்ச்சேருமோ அப்போது உன் ஆத்ம சொரூபத்தை நீயே அறிவாய் என்று உபதேசித்தார்.

சிறந்திருக்கும் மாந்மாவுஞ் செகமெல்லா நிறைந்திருந்து,
மறைந்தெனக்குத் தோன்றாத வகையேது சொல்லுமென - (88)

கருத்துரை : ஏ கண்ணா ! உலகமெல்லாம் நிறைந்திருக்கும் ஆத்மா, என்னுடம்பில் இருந்தும் ஏன் தெரியவில்லை என்றான்.

சத்துசித்தா நந்தந்தா மூன்று மதனுடனே
யொத்துற்று நாமவு ருவஞ்ச கமாகி. - (89)

கருத்துரை : ஏ அருச்சுனா ! சத்து, சித்து ஆனந்தம் என்று மூன்று இலக்கணங்களோடு கூடிய ஆத்மா, நாமரூபத்தோடு கூடி இருப்பதால் உனக்குத் தோற்றவில்லை என்றார்.

இருக்கையினிற் தோற்றா திவைமூன்றும் பிரமமென
மரிக்கில்வரும் பின்னிரண்டு மறிசகமென்றுரைத்தவரோ - (90)

கருத்துரை : ஏ பார்த்தா ! உன் மனம் நாமரூபத்தை மறந்து சச்சிதானந்த பிரம்ம சொரூபமாய் இருக்கிற ஆத்மா, அந்த ஆத்ம சொரூபமே நான் என்கின்ற நிச்சயபுத்தி ஆகிய ஞானத்தினாலே உன்னுடைய ஆத்மாவை அறியலாமென்று உபதேசித்தார்.

அறிந்துகொண்ஞா நத்தாலே யாந்மாவை யென்றுரைத்தீர்
சிறந்தொளிரு மாந்மாவுந் திருசியமா மோவெனவே - (91)

கருத்துரை : ஏ கண்ணா ! தத்துவ ஞானத்தினாலேயே ஆத்மாவை அறிய

வேண்டுமென்று உபதேசித்தீர். ஆனால், உடம்பை பிரத்தியட்சமாய் அறிந்தது போல என்னுடைய ஆத்மாவும் பிரத்தியட்சமாய் நானறிவேனோ சுவாமி என்றான்.

முந்தியஞா நத்தாலே முதிருமஞ்ஞா நந்துரக்கிற்
சிந்தையிலாந் மாச்சுயமாய்த் திகழுமென்று சொன்னவரோ - (92)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஒருவருக்கு பரோக்ஷ ஞானம் வந்தவுடன், அபரோக்ஷ ஞானமும், அபரோக்ஷ ஞானம் வந்த பின் மெய்ஞானமும் அந்த மெய்ஞானத்தால் அஞ்ஞான நாசமும், அந்த அஞ்ஞான நாசமாவது எது போலவென்றால் தீபமேற்றியவுடனே வீட்டுக்குள் இருக்கும் இருள் நீங்கி, பொருள் பிரத்தியட்சமாய் காண்பதுபோல உன்னுடைய உடம்புக்குள் இருக்கும் ஆத்மா பிரத்தியட்சமாய் விளங்கும் என்று உபதேசித்தார்.

இனியமுத்திச் சுகமிருப்ப தெப்படி யென்றேவினவ
வநுபவத்திறி விடயா நந்தம்போ லென்றவரோ - (93)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஒரு அஞ்ஞானிக்கு விடய சுகத்தில் இச்சையிருப்பது போல ஞானிக்கு ஆத்ம சுகத்தில் இச்சையிருக்கிறது என்றார்.

மநயைம்வந் தவரலது மற்றிலரோ முத்தரெனச்,
சநகனைப்போற் சீவந்முத்தர் தாமுமுள ரென்றவரோ - (94)

கருத்துரை : ஏ கண்ணா ! மனத்தை நாசம் செய்த ஞானிகளைத் தவிர வேறு வகையான ஞானிகள் இல்லையோ எனறான். மனநாசம் செய்த ஜனகனைப்போல், ஜீவன் முத்த ஞானிகளும் உண்டு என்று உபதேசித்தார்.

சீவந்முந்தி யடைந்தோர்கள் செயலுமவர் தங்குணமு,
நாவுரைக்கும் வாசகமு நானறியச் சொல்லுமென. - (95)

கருத்துரை : ஏ கண்ணா ! ஜீவன் முத்தியடைந்தவர்களுடைய செயலும், அவர்கள் சொல்லும், அவர்கள் நினைப்பும் எப்படி இருக்கும் என்பதை நான்அறியும்படி உபதேசிக்க வேண்டும் என்றான்.

வருங்கருவு பிறப்பினொடு வளர்தல் பருத்தல்குறைத,
லொருங்கலுமெய்க் கென்றதனை யொறுத்திருபபா ரென்றவரோ - (96)

கருத்துரை : ஏ அர்ச்சுனா ! கருவிலும், பிறப்பிலும், பிறந்தபின் உடம்பு வளர்வதிலும் உடம்பு பருத்த காலத்திலும் உடம்பு இளைத்துச் சிறுத்த காலத்திலும் கடைசியில் நாசமாவதும் இந்த ஆறுவிதமான விவகாரங்களும் அன்னமய கோசமான உடம்புக்கே தவிர ஆத்மாவாகிய எனக்கு இல்லையென்று பரமானந்தமாயிருப்பாரப்பா ! என்று உபதேசித்தார்.

பார்ப்பதுவுந் கேட்பதுவும் பகர்வதுஞ்செல்வதுவு,
மேற்பதுவுங் கரணதன்ம மெனத்துணிவா ரென்றவரோ - (97)

கருத்துரை : ஏ அருச்சுனா ! ஜீவன் முத்தர் எப்படியிருப்பார் என்றால், கண்பார்ப்பதும், காது கேட்பதும், வாய் பேசுவதும், கால் நடப்பதும், கை செய்கிற தொழிலும் இந்த ஐந்தின்

செயல்களும் அந்தக்கரணத்தின் செயலே தவிர ஆன்மாவின் செயலல்ல என்று நிச்சயமாய் மகிழ்ந்திருப்பார் என்று உபதேசித்தார்.

பசிதாக முயிர்கெனவே பயந்துக்கஞ் சுகங்காமம்,
வசிகோப மதிக்கெனவே மகிழ்ந்திருப்பா ரென்றவரோ - (98)

கருத்துரை : ஏ அர்ச்சனா ! இன்னும் ஜீவன் முத்தர்களுடைய தன்மையைக்கேள். பசி, தாகம் வந்தால் அந்தப் பசி தாகம் பிராணனுக்கே என்றும் பயம், துக்கம், சுகம், காமம் வந்தால் ஜீவனுக்கும் மனத்துக்குமே தவிர ஆத்மாவாகிய எனக்கு இல்லையென்று மகிழந்து இருப்பார் என்று உபதேசித்தார்.

வீடுதா ரமுமுறவு மேவியென்று மிருந்தாலு,
நீடுந்தா மரையிலைநீர் நிகராவா ரென்றவரோ - (99)

கருத்துரை : ஏ பார்த்தா ! இன்னும் கேட்பாயாக, தண்ணீருடன் தாமரை கூடி இருக்கினும் தாமரை இலை, தண்ணீரைப் பற்றாதிருப்பது போல ஜீவன் முத்த ஞானி குடும்பத்தோடு கூடி இருக்கினும் அந்த ஜீவன் முத்தனிடத்தில் குடும்பம் இல்லை. தாக்கற்று சஞ்சலமில்லாமல் சந்தோசமாய் இருப்பார் என்பதாம்.

பற்றிடுங்கா யமுந்தானும் பன்னாளொன் றாயினும்பின்,
உற்றபுளி யம்பழமு மோடுமொப்பா ரென்றவரோ - (100)

கருத்துரை : ஏ விஜயா ! ஜீவன் முத்தனுடைய பெருமையை இன்னும் சொல்வேன் கேள். புளியம்பழம் எப்படி மேலோட்டிற்கும் பழத்திற்கும் தாக்கற்று இருக்கிறதோ ! அதுபோல ஜீவன் முத்த ஞானி குடும்பத்தில் இருக்கினும் தான் தாக்கற்றி இருப்பார் என்பதாம்.

கூறுமுல கியற்கையுடைய கூடினுமெய்ஞ் ஞாநம்வந்தோர்
சேறும்பிள்ளைப் பூச்சியும் போற்றிரிவார்கா ணென்றவரோ - (101)

கருத்துரை : ஏ அருச்சுனா ! இன்னும் சொல்வேன் கேள் ! எப்படிச் சேற்றிலே இருக்கிற பிள்ளைப் பூச்சியானது சேற்றில் குடியிருப்பினும் அப்பூச்சியை சேறு சிறிதும் பற்றுகிறதில்லையோ அதுபோல ஜீவன்முத்த ஞானி உலகத்தோடு கூடியிருக்கினும் உலகம் அச்சீவன் முத்தனை சிறிதும் பற்றுவதில்லை என்று உபதேசித்தார்.

ததியூடு கடைந்தவெண்ணெய் தான்மோரிற் கிடப்பதுபோன்,
மதியோடு கூடினும்பின் மயங்கார்கா ணென்றவரோ - (102)

கருத்துரை : ஏ அருச்சுனா ! இன்னும் அந்த ஜீவன் முத்தருடைய பெருமையை சொல்வேன் கேள் ! எப்படி மத்தால் கடையப்பட்ட வெண்ணெய் மோரில் கலந்தாலும், எப்படி மோரைப் பற்றுவதில்லையோ அதுபோல தீவிரமாக தத்துவ விசாரம் செய்தும் தத்துவஞானத்தை பெற்ற சீவன் முத்த ஞானி உடலோடு கூடியிருகினும் உடம்புப் பற்று சிறிதேனும் அவனிடத்து இல்லையென்று உபதேசித்தார்.

அருச்சுநன்றன் பொருட்டாக வனைவருக்கு ஞாநம்வரப்,
பொருந்தியதே சிகவடிவாம் புண்ணியரே கண்வளரீர். - (103)

கருத்துரை : இந்த உலகிலுள்ள குருவின் உபதேசத்தால், ஒருவருக்கு ஞானம் வருவதே துர்லபம். ஆனால் இந்த மாயையில் தோன்றிய கண்ணன் என்கிற குருவால் அருச்சுனனுக்கு உபதேசித்த உபதேச வாக்கியத்தை உலகிலுள்ள அஞ்ஞானிகளாகிய மக்கள் இந்த கீதா உபதேசத்தை சிரவண மனனம் செய்வார்களானால் அவர்கள் ஞானத்தைப் பெறுவதில் சிறிதும் ஐயமில்லையாம். அத்தகைய கண்ணனை வாழ்த்தி வணங்குகிறோம்.

ஆயர்குல மாத ரளவிலோ ரைப்புணர்த்துந்
தூயபதி னாறாயிரவருடன் றோய்ந்திருந்தும். - (104)

பரமமுநி வர்முன்னே பரிச்சித்தைத் தீண்டியென்று.
பிரமசாரி யஞ்செலுத்தும் பேரொளியே கண்வளரீர். - (105)

கருத்துரை : யாதவகுலப் பெண்கள் பதினாறாயிரம் பேரை மனைவிகளாக அடைந்திருந்தாலும் தோய்ந்திருந்த அந்தக் கண்ணன் உத்திர குமாரத்தியின் கர்பத்திலிருந்த சிசுவானது அசுவத்தாமனது கொடுஞ்செயலால் உயிரில்லாமல் கெட்டு வெறும் பிண்டமாக கீழே ஜனிக்க அதைக் கண்ட பாண்டவர்கள் கண்ணனிடம் சென்று ஏ கண்ணா ! எங்களுக்கு சந்ததியில்லாமல் போய்விடும் போலிருக்கிறதே என்று கதறி பகவானிடத்தில் முறையிட அதற்கு கண்ணன் ஏ தர்மபுத்திரா ரிஷிகளாகிய பிரம்மச்சாரிகள் இந்தப் பிண்டத்தைத் தடவினால் உயிர் பெற்றுவிடுமென்று சொல்ல அதைக் கேட்ட பாண்டவர்கள் அநேக பிரம்மச்சாரிகளாகிய முனிவர்களை வரவழைத்து தடவச் செய்து உயிர் பெறாததைக் கண்ட பாண்டவர்கள் மீண்டும் கண்ணனைப் பார்த்து நாங்கள் என்ன செய்வோமென்று முறையிட அப்போது கண்ணன் அச்சபையில் பல பிரம்மச்சாரிகளாகிய முனிவர்கள் முன்னே கண்ணன் எழுந்து தன் கையால் தடவிய உடனே அபிமன்யு மகனாகிய அப்பிண்டம் உயிர் பெற்று அச்சிசுவு விழித்து அசைந்ததைக் கண்ட அங்கு கூடியிருந்த பிரம்மச்சாரிகள் முன்னால் கண்ணனே பரிசுத்த பிரம்மச்சாரி என்று முனிவர்களும் சொல்லும்படி உள்ளவரே வாழ்க !!

நூற்பயன்

ஆதிமூ லம்விசயற் காதிமறை யின்பொருளை
யோதியு ணர்த்துமிந்த வுண்மைதனைக் - காதலுற்றுக்
கற்றோருங் கேட்டோருங் காசினியில் வாழந்துமுத்தி
பெற்றோர்கண் முத்தர் பெறும் பேறு.

கருத்துரை : ஆதிமூலமே யென்ற கஜேந்திரனுக்கு, முத்தி கொடுத்துக் காத்த அந்தக் கண்ணனானவர், அருச்சுனனுக்கு, ஆதிமறையின் பொருளை அதாவது வேத உபநிடதார்த்தங்களை பாரத யுத்த சமயத்தில் உபதேசித்து ஞானமுண்டாகும்படி செய்விக்கும் இந்த உண்மையான கீதாசாரம் என்னும் அர்த்தமாகிய பரமார்த்த தரிசனமாகிய இந்த நூலினை காதலுற்றுக் கேட்டோரும் சிரத்தையோடு கற்றோரும் காசினியில் வாழ்ந்து ஜீவன் முத்தர்கள் அடைந்திருக்கும் பிரயோஜனமாகிய முத்திப்பேறு பெற்று பெருவாழ்வு வாழ்ந்தவர்கள் ஆவார்கள் என்பதாம்.

கீதாசாரத் தாலாட்டு முற்றிற்று.

அறிவு நூல்

ஓம் தத் சத்

மனிதப்பிறவிக்கு வந்த மக்களை வேதத்தில் நான்கு விதமாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. பாமரன் என்றும் 2. விஷயி என்றும் 3. முமூட்சு என்றும் 4. முத்தன் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது.

1.பாமரன் என்பவன் எப்படிப்பட்டவன் என்றால் மனிதப் பிறவிக்கு வந்த மக்களுக்கு வேதம் காமிய கா்மத்தை செய்யாதே என்றும் நிஷ்காமிய கா்மத்தை செய் என்றும் விதித்துள்ளது. இந்த இரண்டு கா்மமும் இன்னதென்று தெரியாதவனே பாமரனாம். காமிய கா்மம் என்பத எப்படிப்பட்ட தென்றல் ? இந்த அழிகிற உடம்பு என்னுடையது என்று எண்ணி செய்கிற கா்மம் எல்லாம் காமியகா்மம் ஆகும். நிஷ்காமிய கா்மம் என்பது எப்படிப்பட்டதென்றால் இந்த அழிகிற உடம்பில் அழியாத ஆத்மா ஒன்று இருக்கிறது. அந்த ஆத்மாவே நான் என்று எண்ணிக் கொண்டு செய்கிற கா்மம் எல்லாம் நிஷ்காமியகா்மம் ஆகும்.

2. விஷயி என்பவன் எப்படிப்பட்டவன் என்றால் காமிய கா்மத்தை தொடாமலும் நிஷ்காமிய கா்மத்தை விடாமலும் செய்து கொண்டு இருப்பவனே விஷயியாம். இந்த விஷயி செய்கிற நிஷ்காமிய கா்மத்தால் மனமாசு நீங்கி தூயமனமாகிறது. அந்த தூயமனத்தோடு கூடிச் செய்கிற ஆத்ம விசாரத்தால் முழு விவேகம் சித்திக்கிறது. மீண்டும் விவேகமும் தூயமனதோடு கூடி ஆத்ம விசாரம் செய்வதால் வேதம் சொன்ன முழு வைராக்கியம் சித்திக்கிறது. மேலும் வைராக்கியமும் விவேகமும் தூயமனம் என்கிற இந்த மூன்றோடு கூடிச் செய்கிற ஆத்ம விசாரத்தாலேயே ஆறு அங்கங்களோடு கூடிய சா்கசம்பத்து சித்திக்கிறதாம். மேலும் சட்கசம்பத்து, வைராக்கியம், விவேகம் தூயமனம் என்கிற இந்த நான்கோடு கூடிச் செய்கிற ஆத்ம விசாரத்தாலேயே முமூட்சுத்துவம் சித்திக்கிறதாம். இப்படிப்பட்ட மனிதனே வேதம் சொன்ன மூன்றாவது மனிதனாகிய முமூட்சாம். இந்த முமூட்சுத்துவம் சித்தித்த மனிதனே உத்தம மனிதனாம். இப்படிப்பட்ட உத்தம மனிதனுக்கே ஒரு எண்ணம் உதிக்கிறதாம். அது எப்படிப்பட்ட எண்ணம் என்றால், எவ்வளவு காலம் இந்தத்தூல உடம்பு வந்து கொண்டே இருக்குமோ அவ்வளவு காலமும் ஏதோ ஒரு துக்கமோ துயரமோ அல்லது நோயோ நொடியோ வந்து கொண்டே இருக்குமாம்.

மனத்திற்கு எவ்வளவு செல்வம் கிடைத்தாலும் ஒரு பூமண்டலத்திற்கு ராஜனே ஆனாலும் மனத்திற்கு தெளிவோ அமைதியோ கிடைப்பதில்லையாம்.

ஆதலால் இந்த உடம்பு வராது இருக்கும் வழியையும் பிறப்பையும் நீக்குவதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்வதற்கு எண்ணுகிறான்.

இந்த எண்ணமும் எப்படிப்பட்டது என்றால் ?

இந்த உடம்பு நாசம் ஆக வேண்டுமானால் பாவ, புண்ணிய கர்மம் நாசமாக வேண்டும். பாவ, புண்ணிய கர்மத்தை நாசமாக்க வேண்டுமானால் ?

விருப்பு, வெறுப்பை நாசமாக்க வேண்டும். விருப்பு வெறுப்பை நாசமாக்க வேண்டுமானால் ராகதுவேசத்தை நாசமாக்க வேண்டும். ராகதுவேசத்தை நாசம் ஆக்க வேண்டுமானால் பேத ஞானத்தை நாசம் ஆக்க வேண்டும். பேதஞானத்தை நாசமாக்க வேண்டுமானால் அஞ்ஞானத்தை நாசமாக்க வேண்டும். அஞ்ஞானத்தை நாசமாக்க வேண்டுமானால் ஆத்ம ஞானத்தை தேட வேண்டும். இதனால் தான் பிறப்பு இறப்பு நீங்குகிறது என்கிற எண்ணத்தோடு தீவிர முயற்சி செய்து பக்குவப்பட்ட மனிதனே வேதம் சொன்ன மனிதனே முமூட்சு ஆகும் என்பதாம்.

4. முத்தன் என்பவன் எப்படிப்பட்டவன் என்றால் மேலே கண்ட முமூட்சு ஆனவன். மோட்சத்திற்கு சாதனமாய் உள்ள ஞானத்தை அடைந்து அஞ்ஞானத்தை நீக்குவதற்கு வேண்டிய அதிதீவிரமான முயற்சியைச் செய்கிறான். அந்த முயற்சியும் எப்படிப்பட்ட முயற்சியை செய்ய வேண்டும் என்று எண்ணுகிறான் என்றால் வேதம் சொன்ன மோட்சத்திற்குச் சாதனமாய் உள்ள மனனம் நிதித்தியானம் என்கிற அங்கத்தை அடைய வேண்டும் என்று எண்ணுகிறான். அந்த மோட்சத்திற்கு அங்கமாய் உள்ள மனன நிருத்தியாசனமும் யாருக்கு சித்திக்கும் என்றால் வேதாந்த சிரவணம் என்கிற அங்கி சித்தித்தவர்க்கே மனன நிதித்தியாசம் என்கிற அங்கம் சித்திக்கும் என்பதாம். ஏன் இப்படி இவன் சிந்திக்கிறான் என்றால், அந்த வேதாந்த சிரவணமாகிய அங்கி சாதன சதுட்டயம் சித்தித்த சம்பன்னனுக்கே சித்திக்கும் என்று வேதம் கூறி இருப்பதாலும் சாதன சதுட்டயம் சித்தித்த மூட்மூசுவாகதான் இருப்பதாலும் இப்போதும் மேலே கண்ட சாதனங்களை அடைவதற்கு தீவிரமுயற்சி செய்கிறான். ஏன் இப்படித் தீவிர முயற்சி செய்கிறான் என்றால் வேதாந்த சிரவணம் என்கிற அங்கியால் சம்சயபாவனையும் வேதாந்த மனன. நிதித்தியாசனம் என்கிற அங்கத்தால் அசம் பாவனையும் விபரீத பாவனையும் நீங்குகிறது என்பது சுருதி வாக்கியமாக இருப்பதாக இவன் அதி தீவிரமான முயற்சியைச் செய்து மேலே கண்ட அங்கி அங்கங்களை அடைகிறான். இப்படி அடைந்தவனே பிரம்மவித்து என்கிற முத்தனாம்.

இப்படிப்பட்ட பிரம்ம வித்து என்கிற ஜீவன் முத்தியை மனிதப் பிறப்பிற்கு வந்த அனைவரும் அடைய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

ஞான விளக்கம்

ஓம் தத் சத்

1. ஆத்ம தத்துவம் என்பது எப்படிப்பட்டது ?

உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு நாமம் உண்டு. இந்தப் பொருளுக்குப் பேனா என்றும், இந்தப் பொருளுக்குச் சோபா என்றும், இந்தப்பொருளுக்குப் புத்தகம் என்றும் பெயர். அதுபோலவே நம் உடம்பிலுள்ள அறிவுப் பொருளுக்கு ஆத்ம தத்துவம் என்ற பெயராம்.

2. ஞானி என்பவர் எப்படிப்பட்டவர் ?

நம் உடம்பிலுள்ள அறிவு பொருளாகிய ஆத்ம தத்துவமே நான் என்ற எண்ணம் யாருக்கு நிலை பெறுகிறதோ அவரே ஞானியாவார்.

3. ஞானி ஆவதற்கு என்ன முயற்சி செய்ய வேண்டும் ?

விழிப்புக்காலத்தில் தோன்றுகிற தூல உடம்பும், கனவுக் காலத்தில் தோன்றுகின்ற சூக்கும உடம்பும், ஆழ்ந்த உறக்கத்தில் தோன்றுகின்ற காரண உடம்பும் ஆகிய மூன்று உடம்புகளும் எப்படி உண்டாயிற்று என்று விசாரம் செய்கிற முயற்சியினால் ஞானி ஆகலாம். இந்த மூன்று உடம்பையும் அறிந்து வாழ்கிற வாழ்வே நித்திய வாழ்வாம்.

4. மகரிஷி என்பவர் எப்படிப்பட்டவர் ?

நமது உடம்பிலுள்ள அறிவுப் பொருளாகிய ஆத்ம தத்துவமே நான் என்ற எண்ணம் வந்து ஞானியான பின்னர் அந்த அனுபவத்தைப் பெற்றவர்களே மகரிஷிகளாம்.

5. ரிக், யஜீர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் யாரால் தோன்றிற்று.

இந்த உடம்பில் இருக்கும் ஜீவனுக்குப் பகுத்தறிவையும் பேச வாயையும் இந்த மனித உடம்பையும் ஆக்கிக் கொடுத்த பரமாத்மாவே மேலே கண்ட நான்கு வேதங்களையும் ஆக்கிக் கொடுத்தார் என்பதாம்.

6. நான்கு வேதங்களையும் மகரிஷிகள் ஏன் மூன்று காண்டங்களாகப் பிரித்தார்கள் ?

இந்த மனித உடம்பில் குடி புகுந்திருக்கும் ஜீவர்கள் மூன்று தன்மை உடையவர்கள்.

1. சத்துவ குணத்தினோடு பொருந்திய ஜீவன் தெய்வத் தன்மை உடையவன்.
2. ரஜோ குணத்தினோடு பொருந்திய ஜீவன் மனிதத் தன்மை உடையவன்.
3. தமோ குணத்தினோடு பொருந்திய ஜீவன் மிருகத் தன்மை உடையவன்.

இந்த மூன்று தன்மையுடைய ஜீவர்களும் நான்கு வேதங்களிலுள்ள சாரத்தையும் எடுத்து மூன்று காண்டங்களாக, அதாவது கர்ம காண்டம், உபாஸனா காண்டம், ஞான காண்டம் என மூன்றாகப் பிரித்தனர்.

7. இந்த மூன்று காண்டங்களும் மனிதனை எப்படி மோட்சத்தை அடையவழி செய்கினறன ?

மிருகத்தன்மை உடைய ஜீவன் கர்ம காண்டத்தை அனுஷ்டித்தால் மனிதத் தன்மை அடைகிறான். மனிதத் தன்மை உடைய ஜீவன் உபாசனா காண்டத்தை அனுஷ்டித்தால் தெய்வத்தன்மை அடைகிறான். தெய்வத்தன்மை உடைய ஜீவன் ஞான காண்டத்தை

அனுஷ்டித்தால் சிவமே ஆகிறான். இதுவே நித்தியமுத்தி மோட்சம் எனப்படும். இப்படிப்பட்ட மோட்சத்தை ஜீவர்கள் அடைவதற்காகவே மகரிஷிகள் நான்கு வேதங்களையும் மூன்று காண்டங்களாகப் பிரித்தனர்.

8. தாங்கள் மேலே கூறிய 3 உடம்புகளையும் அறிந்தவரே ஞானி என்று கூறினீர். அந்த 3 உடம்புகளையும் நீக்கும் கிரமத்தை உபதேசிக்க வேண்டும்.

நீ உட்கார்ந்திருக்கும் நாற்காலி அறிவுப்பொருளா அல்லது ஜடப்பொருளா ? அது ஜடப்பொருள் ஆகும். ஏனென்றால் இந்த நாற்காலி தன்னையும் அறிவதில்லை. ஏனென்றால் இந்த நாற்காலி தன்னையும் அறிவதில்லை. தன்னைச் சாந்தவற்றையும் அறிவதில்லை. அதனால் இது ஜடப்பொருள் என்று சொல்லப்பட்டது.

இதில் அமர்ந்திருக்கும் இந்த மனித உடம்பு ஜடப்பொருளா ? அறிவுப்பொருளா ? இந்த உடம்பும் ஜடப்பொருள்தான். ஏனென்றால் இந்த உடம்பு தன்னையும் அறிவதில்லை. தன்னைச் சார்ந்திருக்கும் உறுப்புகளையும் அறிவதில்லை. அதனாலேயே இந்த மனித உடம்பும் ஜடப்பொருள் என்று சொல்லப்பட்டது. அப்படியானால் இந்த உடம்பையும் உறுப்புகளையும் அறிகிறவன் யார் ? உனது உடம்பின் கொப்பூழடியில் உள்ள ஓங்கார சிதாகாயத்தில் உள்ள பேரறிவுப் பொருளே அறிகிறது.

9. இந்த உடம்பை அறிகிற அறிவுப் பொருள் இந்த உடம்பில் மட்டும்தான் உள்ளதா ? அல்லது உடம்பிற்குப் புறத்திலும் உள்ளதா ?

அறிவுப் பொருள் உடம்பிற்கும் புறத்தில் சகல அண்டங்களிலும் நிறைந்து இருக்கிறது.

10. இந்த அறிவுப் பொருளுக்குப் போக்குவரத்து உண்டா ?

உடம்பின் அகத்தும் புறத்தும் நிறைந்துள்ள அறிவுப் பொருளாகிய பிரம்மத்துக்குப் போக்குவரத்து இல்லை.

11. உடம்பின் அகத்திலும் புறத்திலும் அனைத்து உலகங்களிலும் உள்ள அறிவுப்பொருள் ஆகிய பிரமத்துக்குப் போக்குவரத்து இல்லையே சுவாமி. இந்த உடம்பைவிட்டு எது பிரிந்தால் பிணம் என்று சொல்லப்படும். அதை உபதேசிக்க வேண்டும் சுவாமி என்று கேட்டான்.

சூரியப்பிரகாசம் எங்கும் ஏகமாக நிறைந்திருக்கிறது போல பிரமத்திடம் உள்ள அறிவுப்பிரகாசம் உடம்பின் அகத்தும் புறத்தும் அனைத்து உலகங்களிலும் நிறைபொருளாக இருக்கிறது. சூரியப் பிரகாசத்தை ஒரு காந்தக் கண்ணாடி மூலம் வெளிப்படுத்தினால் அதில் இருந்து வெளிப்படும் பிரகாசம் பஞ்சை எரிக்கும் கிரியை உண்டு. ஆனால் காந்தக் கண்ணாடியிலிருந்து வெளிப்படாத சூரிய ஒளிக்குப் பஞ்சை எரிக்கும் கிரியை இல்லை. அதேபோல் ஜீவனோடு கலவாத அறிவிற்குப் பிறப்பு இறப்பு ஆகிய உடம்பை எடுக்கும் கிரியை இல்லை. ஆனால் ஜீவனோடு கலந்த அறிவிற்கு உடம்பை எடுக்கும் கிரியை உண்டு. ஜீவனிடம் அறிவு அம்சம் பாதியும் சடஅம்சம் பாதியும் உள்ளது. எப்பொழுது ஜீவன் தன்னிடத்தில் உள்ள சட அம்சத்தை நீக்குகிறானோ அப்பொழுதே அறிவு சொரூபமாகிய பிரமமாகி விடுகிறான். ஒரு மனித உடம்பிலிருந்து எப்பொழுது போக்குவரத்து உள்ள அறிவு அம்சம் பொருந்திய ஜீவன் பிரிகிறானோ

அப்பொழுது அது பிணம் என்று சொல்லப்படுகிறது.

12. குரு சுவாமியே இந்த ஜீவனுக்கு உடம்பை எடுப்பதும் விடுப்பதும் ஆகிய தொழில் எவ்வளவு காலம்வரை நீங்காது ?

ஏ ! சீடபுத்ரா ! அறிவு அம்சம் பாதியும் சடஅம்சமாகிய அஞ்ஞானம் பாதியும் சேர்ந்ததே ஜீவன் என்று சொல்லப்படும். அவனிடத்திலுள்ள ஜட அம்சமாகிய அஞ்ஞானத்தை இந்த உடம்பு இருக்கும் பொழுதே நீக்க வேண்டும். அப்பொழுதுதான் ஜீவன் இந்த உடம்பை எடுக்கும் கிரியை அற்று சிவத்தோடு சேர்ந்து சிவமே ஆகி விடுகிறான். இதுவே மனித உடம்பு எடுத்த ஒவ்வொருவரும் அடைய வேண்டிய முக்தி மோட்சமாம்.

13. சுவாமி ! அஞ்ஞானத்தை நீக்கும் உபாயம் யாது ?

ஏ சீடபுத்ரா ! ஆத்ம விசாரம் செய்வதே அஞ்ஞானத்தை நீக்குவதற்கு உள்ள உபாயம் ஆகும்.

14. குரு சுவாமியே ! அந்த அஞ்ஞானத்தை நீக்கும் வல்லமை உள்ள ஆத்ம விசாரம் எப்படிப்பட்டது ?

ஏ சீடபுத்ரா ! ஒவ்வொருவருடைய உடம்பிலும் அறிவுப் பொருள் ஒன்றும், அறிவற்ற ஜடப்பொருள் ஒன்றும் உள்ளன. இதில் அறிவுப் பொருள் எது என்றும், அறிவற்ற ஜடப்பொருள் எதுஎன்றும் பகுத்துப் பிரித்து உணர்வதே ஆத்ம விசாரம் என்று குரு உபதேசித்தார்.

15. இந்த உடம்பிலுள்ள அறிவுப்பொருளையும் அறிவற்ற சடப்பொருளையும் பிரித்தறியும் உபாயம் யாது ?

ஏ சீடபுத்ரா ! உன்னிடத்தில் தூல, சூக்கும காரண என்கிற மூன்று உடம்புகள் உண்டு. தூல உடம்பில் உள்ள 6 தத்துவங்களும் சூக்கும உடம்பில் உள்ள 20 தத்துவங்களும் காரண உடம்பில் உள்ளன. 2 தத்துவங்களும் ஆக 28 தத்துவங்களும் ஜடப்பொருள் என்று வேதங்களால் சொல்லப்பட்டன. இந்த மூன்று உடம்பையும் இந்த மூன்று உடம்புகளிலுள்ள 28 தத்துவங்களையும் அவைகளை எல்லாம் சுட்டி உணர்கிற அறிவே பேரறிவுப் பொருளாம் என்பதை உணர்வாயாக.

16. தூல சரீரதத்துவம் என்பது யாது ? அது எப்படி உண்டாயிற்று ?

சூக்கும பஞ்ச பூதத்தில் உள்ள 5 தமோ குணங்களையும் எடுத்து பஞ்சீகரணம் பண்ணியதால் தூல பஞ்ச பூதங்கள் உண்டாயிற்றாம். இந்த 5 தூல பூதங்கள் உண்டான விளக்கம் எப்படி என்றால் பஞ்சீகரணம் செய்ததால் ஆகாய பூதத்தின் அம்சங்களாக இருக்கும்,

1. சோகம் (முக்கியம்) 2. மோகம் 3. காமம் 4. குரோதம் 5. பயம் என இந்த 5 ம் ஆகாய பூதத்தின் அம்சங்களாம். சோகத்தைத் தவிர மற்ற 4ம் அமுக்கிய அம்சங்களாம். வாயு பூதத்தின் 5 அம்சங்கள் எப்படிப்பட்டது என்றால் 1. குனிதல் 2. நிமிர்தல் 3. விரித்தல் 4. குவிதல் 5. ஓடுதல் முக்கியம் இந்த 5ம் வாயு பூதத்தின் அம்சங்களாம். ஓடுதல் தவிர மற்ற 4உம் அமுக்கிய அம்சங்களாம்.

அக்கினி பூதத்தில் உள்ள 5 அம்சங்களும் எப்படிப்பட்டது என்றால் 1. பசி (முக்கிய) 2. தாகம் 3. சோம்பல் 4. நித்திரை 5. தேஜஸ் என இந்த 5உம் அக்கினி பூதத்தின்

அம்சங்களாம். பசியைத் தவிர மற்ற 4ம் அமுக்கிய அம்சங்களாம். நீர் பூதத்தின் 5 அம்சங்களும் எப்படிப்பட்டது என்றால் 1. சுக்கிலம் (முக்கிய) 2. சுரோணிதம் 3. ரத்தம் 4. மூத்திரம் 5. உமிழ்நீர் என 5ம் நீர் பூதத்திலுள்ள அம்சங்களாம். சுக்கிலம் தவிர மற்ற 4 அம்சங்களும் அமுக்கிய அம்சங்களாம்.

மண் பூதத்திலுள்ள 5 அம்சங்கள் எப்படிப்பட்டது என்றால் 1. எலும்பு (முக்கிய) 2. நரம்பு 3. தோல் 4. ரோமம் 5. மாமிசம் என 5உம் மண் பூதத்திலுள்ள அம்சங்களாம். எலும்பைத் தவிர மற்ற 4உம் அமுக்கிய அம்சங்களாம். ஆக இந்த 5 பூதங்களிடத்துள்ள 25அம்சங்களும் சேர்ந்து 1. தோல் 2. ரத்தம் 3. சதை 4. நரம்பு 5. எலும்பு 6. எலும்புக்குள் இருக்கும் கொழுப்பு ஆக இந்த 6 தத்தவங்களோடு கூடிய இந்தத் தூல உடம்பு உண்டாயிற்று என்று குரு உபதேசித்தார்.

17. சூக்கும சரீர தத்துவம் என்பது யாது ? எப்படி உண்டாயிற்று ?

இந்த 6 தத்துவங்களோடு கூடிய தூல உடம்பில் சூக்கும சரீர தத்துவங்கள் 20ம் குடி புகுந்திருக்கும் கிரமம் எப்படி என்றால் 1. உள்ளம் 2.மனம் 3.புத்தி 4.சித்தம் 5.அகங்காரம் என்கிற அந்தக்கரண தத்துவங்கள் ஐந்தும் 1. காது 2. துவக்கு 3. கண் 4. நாக்கு 5. மூக்கு என்கிற ஞானேந்திரிய தத்துவங்கள் ஐந்தும் ஆக இந்தப் பத்துத் தத்துவங்களும் சூக்கும பஞ்சபூதத்தின் 5 சத்துவ குணத்தை பஞ்சீகரணம் செய்ததால் உண்டாயிற்றாம். 1. வியானன் 2. பிராணன் 3. அபானன் 4. சமானன் 5. உதானன். வாயுக்களாகிய தத்துவங்கள் 5 உம் 1. வாக்கு 2. பாணி 3. பாதம் 4.பாயுரு 5. உபஸ்தம் என்கிற கர்மேந்திரிய தத்துவங்கள் 5ம் ஆக இந்தப் பத்துத் தத்துவங்களும் சூக்கும பஞ்ச பூதத்தின் ரஜோ குணத்தை எடுத்துப் பஞ்சீகர்ணம் செய்தால் உண்டானதாம்.

இந்த 20 தத்துவங்களும் சேர்ந்து சூக்கும சரீரத் தத்துவங்கள் என்று சொல்லப்படும். இந்த 20 தத்துவங்களும் மேலே கண்ட தூல உடம்பில் 13 இடங்களில் குடி இருக்கின்றன. ஒவ்வொன்றாக இருக்கும் இடங்கள் 1. உச்சியிலே உள்ளமும். 2. காதில் சுரோத்திரமும் 3. கண்ணிலே சட்சேந்திரியமும் 4. மூக்கு நுனியிலே ஆக்கிராண இந்திரியமும் 5. கையிலே பாணீந்திரியமும் 6. காலிலே பாதேந்திரியமும் 7. குய்யத்தில் உபஸ்தேந்திரியமும் ஆக இருக்கின்றன.

இரண்டு தத்துவங்களாக இருக்கும் இடம் 5. 1. வாயில் வாக்கேந்திரியமும் சிங்குவையும் 2. கண்டத்தில் மனமும் உதான வாயுவும் 3. இருதயத்தில் புத்தியும் பிராண வாயுவும் 4. நாபியில் சித்தமும் சமான வாயுவும் 5. குதத்தில் அபான வாயுவும் பாயுருவும் ஆக இருக்கின்றன. மூன்று தத்துவங்களாகச் சேர்ந்து இருக்கும் இடம் 1. அகங்காரமும் 2. துவக்கேந்திரியமும் 3. வியான வாயுவும் ஆக இந்த மூன்று தத்துவங்களும் உடம்பு ஏகமாக எல்லா இடத்திலும் உள்ளது என்று குரு சீடனுக்கு உபதேசித்தார் என்பதாம். ஆக இந்த தூல சரீர தத்துவம் 6உம் சூக்கும சரீர தத்துவம் 20உம் பஞ்ச பூத தத்துவம் 5உம், ஆக இந்த 31 தத்துவங்களும் ஒன்பதாவது சக்தியாகிய அஞ்ஞான சக்தியிலிருந்தே தோன்றிற்று என்பதாம்.

18. காரண சரீர தத்துவம் என்பது யாது ? எப்படி உண்டாயிற்று ?

ஒன்பதாவது சக்தியாகிய அஞ்ஞான சக்தியோடு பரை பிரம்மம் கலந்த காலத்தில் தூல

பஞ்சபூதமும், சூக்கும பஞ்சபூதமும், தூல சூக்கும சரீரமும் 31 தத்துவங்களும் 4 கோசங்களும் எப்படி உண்டாயிற்றோ அதுபோலவே எட்டாவது சக்தியாகிய அவித்தியா சக்தியோடு பரைபிரம்மம் கலந்த காலத்தில் உண்டான அவித்தியா விருத்தியிலிருந்து உண்டானவனே (ஜீவன்) சிதாபாசன் அல்லது ஜீவதத்துவமாம். ஆகவே அந்த ஜீவ தத்துவமும், அவித்தியா சக்தியும், அவித்தியா விருத்தியும் ஆகிய 3ம் சேர்ந்ததே காரண சரீரமாம். இந்த காரண சரீர தத்துவத்தில் ஜீவ தத்துவம் அவித்திய தத்துவம் ஆகிய இரண்டு தத்துவங்களும் ஜீவ காரண சரீர தத்துவங்களாம். ஜீவ காரண உடம்பே ஆனந்தமய கோசமாம் இது பஞ்சபூத உற்பத்திக்கு முன் உண்டானதாம். எட்டாவது சக்தியாகிய அவித்தியா சக்தியோடு பரைபிரம்மம் கலந்து இரண்டு தத்துவங்கள் உண்டானது போல ஏழாவது சக்தியாகிய மாயா சக்தியோடு பரைபிரம்மம் கலந்த காலத்தில் உண்டான விருத்திக்கே மாய விருத்தி என்ற பெயராம். அந்த மாயா விருத்தியிலிருந்து ஸர்வக்ஞன் அல்லது ஈஸ்வர தத்துவமும் மாயா தத்துவமும் உண்டாயிற்று. இந்த 2 தத்துவங்களும் சேர்ந்ததே ஈஸ்வரனுக்குக் காரண சரீரமாம். ஆக மேலே கண்ட 1. ஜீவ தத்துவம். 2. அவித்தியா தத்துவம் 3. ஈஸ்வர தத்துவம் 4. மாயா தத்துவம் 5. பிரம்ம தத்துவம் ஆகிய இந்த 5 தத்துவங்களும் இந்தப் பஞ்சபூத உலக உற்பத்திக்கு முன்பே உள்ள தத்துவங்களாம். இந்தக் காலத்திற்குத்தான் அனாதி காலம் என்ற பெயராம்.

அஞ்ஞான சக்தி, அவித்தியா சக்தி, மாயா சக்தி ஆகிய 3 சக்திகளும் மூலப்பிருகிரதி என்கிற பின்னா சக்தியின் பிள்ளைகளாம். ஆக உலக உற்பத்திக்கு முன் உண்டான தத்துவங்கள் 1.ஜீவகாரண சரீர தத்துவம் 2. ஈஸ்வர காரண சரீர தத்துவம் 3. பிரம்மமாயிருக்கிற ஆத்ம தத்துவம்.

உலக உற்பத்திக்குப் பின்னால் உண்டானவை பஞ்சபூத தத்துவங்கள். அதாவது ஆகாயம், வாயு, நீர், நெருப்பு, மண். அந்த 5 பூதங்களிலிருந்து உண்டான சூக்கும சரீர தத்துவம் 20 எப்படி என்றால்

1) அந்தக்கரணங்கள் - 5	2) ஞானேந்திரியங்கள் - 5
3) வாயுக்கள் - 5	4) கர்மேந்திரியங்கள் - 5

ஆக 20 ம் சூக்கும சரீர தத்துவங்கள். தூல சரீர தத்துவம் 6ம் எப்படி என்றால் 1. தோல் 2. இரத்தம் 3. தசை 4. நரம்பு 5. எலும்பு 6. கொழுப்பு (எலும்புக்குள் இருக்கும்)

தூல சரீர தத்துவம்	-	6
சூக்கும சரீர தத்துவம்	-	20
பஞ்சபூத தத்துவம்	-	5
ஜீவ காரண சரீர தத்துவம்	-	2
ஈஸ்வர காரண சரீர தத்துவம்	-	2
அறிவு சொரூபமாக உள்ள ஆத்ம தத்தவம்	-	1
தத்துவங்கள்	-	36

20. சீடன் : ஆத்ம தத்துவமே அறிவுப்பொருள் என்றும் மற்ற 35 தத்துவங்களும் அறிவற்ற ஜடப்பொருள் என்றும் எப்படிப் பிரித்து அறிவது சுவாமி ?

குரு : சீடனே ! தூல சரீர தத்துவம் 6 சூக்கும சரீர தத்துவம் 20, பஞ்ச பூதங்கள் 5 ஆக 31ம் பரைபிரம்மம் ஆனது அஞ்ஞான சக்தியுடன் கலந்த காலத்து தோன்றிற்று. எனவே அஞ்ஞான சக்தி தோற்றுவதற்கு முன் 31 தத்துவங்களும் இல்லையாம். பரைபிரமம் அவித்யா சக்தியுடன் கலந்த காலத்தில் அவித்யா தத்தவமும், ஜீவகாரண சரீரமும் ஜீவ தத்துவமும் உண்டாயிற்று. எனவே அவித்யா சக்திதோற்றுவதற்கு முன் அவித்யா தத்துவமும் ஜீவ காரண சரீரமும், ஜீவ தத்துவமும் இல்லையாம். பரைபிரமம் மாயா சக்தியுடன் கலந்த காலத்து மாயா தத்துவமும், ஈஸ்வர காரண சரீரமும், ஈஸ்வர தத்துவமும் உண்டாயிற்று. எனவே மாயா சக்தி தோற்றுவதற்கு முன் மாயா தத்துவமும் ஈஸ்வர காரண சரீரமும் ஈஸ்வர தத்துவமும் இல்லையாம். பரைபிரமமே எல்லாச் சக்திகளுடனும் கலந்துள்ளது என்பது சித்தாந்த பட்சமாம்.

21. சீடன் : வேதங்களும் ஞானிகளும் அருட்பெருஞ்ஜோதியாகிய கடவுள் ஒன்றே என்று கூறியிருக்க பல கடவுள் வழிபாடு தோன்றக் காரணம் என்ன ?

குரு : சீடனே ! உன் கேள்வி மிகச் சிறந்தது. அருட்பெருஞ் சோதியாகிய கடவுள் ஒன்றே 9 சக்தியுடன் கலந்த காலத்தில் பல கடவுள் வழிபாடுகளும், பல நாமங்களும் உண்டாயின.

1. அருட்பெருஞ்ஜோதி அபின்னாசக்தியுடன் கலந்தபோது சுத்தபிரமம் என்றும்
2. அருட்பெருஞ்ஜோதி என்றும், பராசக்தியுடன் கலந்த போது பரைபிரம்மம் என்றும்
3. அருட்பெருஞ்ஜோதி ஆனந்தரூப சக்தியுடன் கலந்தபோது பரமானந்தர் என்றும்
4. அருட்பெருஞ்ஜோதி சித்ரூப சக்தியுடன் கலந்தபோது தேஜோமயன் என்றும்
5. அருட்பெருஞ்ஜோதி சத்ரூப சக்தியுடன் கலந்தபோது பரிபூரணன் என்றும்
6. அருட்பெருஞ்ஜோதி பின்னாசக்தியுடன் கலந்தபோது சச்சிதானந்த பிரமம் என்றும்
7. அருட்பெருஞ்ஜோதி மாய சக்தியுடன் கலந்தபோது பரமாத்மசேதனம் என்றும்
8. அருட்பெருஞ்ஜோதி அவித்யாசக்தியுடன் கலந்தபோது ஜீவாத்ம சேதனம் என்றும்
9. அருட்பெருஞ்ஜோதி அஞ்ஞான சக்தியுடன் கலந்தபோது பிரமாதாசேதனம் என்றும்

அல்லது பலவேறுடம்பிர்குப் போக்குவரத்துச் செய்கிற ஜீவன் ஆம்.

மாயையுடன் அருட்பெருஞ்சோதி கலந்தபோது மாயையிலிருந்து பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளும் உண்டானார்கள்.

அதுபோல அவித்யா சக்தியுடன் அருட்பெருஞ்சோதி கலந்தபோது 1. தத்துவ நிஷ்டன் 2. கர்ம நிஷ்டன் 3. சோம்பல் நித்திரை மயக்கம் உள்ள ஜீவன் ஆகிய மூன்று விதமான ஜீவர்கள் உண்டாயினர். அஞ்ஞான சக்தியுடன் அருட்பெருஞ்சோதி கலந்தபோது பஞ்சபூதம் 5-ம் சூக்கும சரீர தத்துவம் 20-ம் தூலசரீர தத்துவம் 6ம் இந்த அண்டபுவன போகங்களும் உண்டாயின.

22. சீடன் : ஒன்பது சக்திகளும் தோற்ற ஒடுக்கம் உள்ளவைகளா ? அல்லது பிரம்மத்தைப்போல விளங்கிக் கொண்டிருக்கும் சக்திகளா ?

குரு : உன் கேள்விக்கு விளக்கமும் லட்சணமும் பொருந்திய, பிரம்மானந்தத்தைக் கொடுக்க கூடிய உபதேசத்தைக் கூறுகிறேன்.

ஒரு மச்சம் அல்லது மருகு உள்ளதுபோல அருட்பெருஞ்சோதியாகிய சிவத்திடம் அபின்னா சக்தி இருக்கிறது. மேலும் நமது உடம்பில் ஐந்து கோசங்கள் உள்ளதுபோல அபின்னா சக்தி பராசக்தி ஆனந்த ரூபசக்தி - சித்ரூபசக்தி சத்ரூப சக்தி ஆகிய ஐந்து

சக்திகளும் இருக்கின்றன.

இந்த ஐந்து சக்திகளும் தோற்றம் ஒடுக்கம் இல்லாதது. ஜீவர்கள் இப்பிறவித் துன்பத்தினின்று விடுபட்டு ஜீவன் முக்தியையும், விதேக முக்தியையும் அடைய வழிவகுக்கிற சக்திகளாக விளங்குன்றன. மேலும் மற்ற நான்கு சக்திகளும் ஒருகாலத்தில் தோன்றி மற்றொரு காலத்தில் ஒடுங்கும் தன்மையுள்ளனவாம். பராசக்தியின் சாயையே பின்னாசக்தியாகவும் ஆனந்த ரூபசக்தியின் சாயையே மாயாசக்தியாகவும், சித்ரூபசக்தியின் சாயையே அவித்தியா சக்தியாகவும், சத்ரூப சக்தியின் சாயையே அஞ்ஞான சக்தியாகவும் தோற்றிக் கொண்டிருக்கின்றது.

கயிறு இருக்க பாம்பு, பூமாலை, தடி, பூமிப்பிளவு ஆகியவை தோன்றுவது போல சச்சிதானந்தம் ஒன்றினாலேயே மற்ற நான்கு சக்திகளும் கற்பனையாகத் தோற்றுகின்றன.

23. காரண சரீர நாசமே ஜீவன் முக்தி என்றும் அதன்பின்னர் தூல சூக்கும சரீர நாசமே விதேகமுக்தி என்றும் உபதேசித்தீரே! அதனுடைய உண்மை விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டும். இந்தத் தூல உடம்பு உள்ள போதே காரண சரீரத்தை நாசமாக்கி, ஜீவன் முக்தியடையும் கிரமத்தையும் அதன் விளக்கத்தையும் கேட்பாயாக ! வேதங்களில் சொன்ன துவம்பத, தத்பத அசிபதவாச்சிய லட்சியங்களையும் அறிவாயாக ! நமது உடம்பில் தூலம் சூக்குமம் காரணம் என மூன்று சரீரங்கள் உண்டு.

சமாதி அவஸ்தையில் உள்ள அறிவு தூலசரீரத்துடன் கலந்த காலத்தில் விசுவன் என்றும், சூக்கும சரீரத்துடன் கலந்த காலத்தில் தைசசன் என்றும், காரண சரீரத்துடன் கலந்த காலத்தில் பிராக்ஞன் என்றும் உண்டான மூன்று நாமங்களும் அபிமானத்திரயங்கள் ஆம். சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்று மூன்றும் அவஸ்தாத்திரயங்கள் ஆம். குடத்தைப் பார்க்கிற குயவன் குடத்திற்கு அந்நியமாக இருந்தே அறிகிறான். அதுபோலவே, சமாதி அவஸ்தையில் உள்ள அறிவே இந்தத் துவம்பத லட்சியம் ஒன்பதையும் அறிகிறது. இந்த ஒன்பதுக்கும் அன்னியமாக இருந்து அறிகிற அறிவே துவம்பதத்திற்கு லட்சியமாம். மற்ற ஒன்பதும் வாச்சியமாகும். உடம்பிற்குப்புறத்தே உள்ள அறிவிற்குப் பரமாத்மா என்று பெயர். இது தத்பத லட்சியமாம்.

இந்த உலகத்தில் உள்ள அனைத்துத் தூல சரீரங்களும் சேர்ந்து ஒரே சமட்டி தூல சரீரம் அல்லது விராட் எனப்படும். அனைத்து சூக்கும சரீரங்களும் சேர்ந்து ஒரே சமட்டி. சூக்கும சரீரம் அல்லது இரணியகர்ப்பம் எனப்படும். அனைத்து காரண சரீரங்களும் சேர்ந்து ஒரே சமட்டி காரண சரீரம் அல்லது அவ்யாக்ருதம் என்பதாம். சமட்டி தூல சரீரத்துடன் கலந்து நின்ற பரமாத்மாவுக்கு வைசுவானரன் என்றும் சமட்டி சூக்கும சரீரத்துடன் கலந்து நின்ற பரமாத்மாவுக்கு சூத்ராத்மா என்றும் சமட்டி காரண சரீரத்துடன் கலந்து நின்று பரமாத்மாவுக்கு அந்தர்யாமி என்றும் பெயராம்.

இந்தப் பரமாத்மாவே மாயையோடு கலந்த காலத்தில் மூன்று ரூபங்களாகிய பிரம்மா விஷ்ணு ருத்திரன் என்ற மும்மூர்த்திகளாகி சிருஷ்டி, திதி சம்ஹாரம் செய்வது அவஸ்தா திரயங்களாம்.

மேலே கண்ட ஒன்பதும் தத்பத வாச்சியங்கள், உடம்பிற்கு புறத்தே உள்ள அறிவு வடிவமாகிய பரமாத்மாவே தத்பத லட்சியமாகும். பின்னாசக்தியின் தோற்றத்துக்கு முன்

பராசக்தியுடன் பரைபிரமம் கலந்த காலத்தில் மூன்று சக்திகள் வெளிப்பட்டன. அவிதகிருத சத்துவம், அவிகிருத ரசசு, அவிகிருத தமசு என்ற முக்குணங்களிலிருந்து ஆனந்தரூபசக்தி, சித்ரூபசக்தி, சத்ரூபசக்தி என்ற மூன்றும் உண்டாயின. இவை அசிபதத்திற்கு சரீரத்திரயங்களாம். ஆனந்தரூபசக்தியுடன் பரைபிரமம் கலந்து சுழுத்தி அவஸ்தை அடைந்தபோது, அந்த அறிவு வடிவிறகே பரமானந்தர் என்று பெயர்.

சித்ரூப சக்தியுடன் பரைபிரமம் கலந்து சொப்பன அவஸ்தை அடைந்தபோது அறிவு வடிவிற்கே தேஜோமயன் என்று பெயர். சத்ரூப சக்தியுடன் பரைபிரமம் கலந்த சாக்ர அவஸ்தை அடைந்தபோது அந்த அறிவு வடிவிற்கே பரிபூரணர் என்று பெயர். இம்மூன்றும் அபிமானத்திரயங்கள் ஆம். சர்வவியாபகம் சர்வபிரகாசம் சர்வானந்தம் இந்த மூன்றும் அசிபதத்துக்கு அவஸ்தா திரயங்களாம்.

இந்த ஒன்பதும் அசிபத வாச்சியங்கள் ஆகும். பராசக்தியுடன் கலந்து இருந்த பரைபிரம்ம அறிவு வடிவே அசிபதத்துக்கு லட்சியமாம். இனி மூன்று பதங்களின் அபவாதகிரமத்தை பார்ப்போம். சர்வசாட்சி என்கிற சுத்த பிரம்மமாகிய அறிவு வடிவமே என்னுடம்பில் உள்ள சீவசாட்கியாகிய அறிவு வடிவம் ஆகும். ஆதலால் சர்வ சாட்சியாயிருக்கிற என்னிடத்தில் பராசக்தி இல்லை. அதிலிருந்து தோன்றிய அவிகிருத முக்குணங்களாகிய ஆனந்த ரூபசக்தி, சித்ரூப சக்தி, சத்ரூபசக்தி இல்லை.

சர்வானந்தம், சர்வபிரகாசம், சர்வவியாபகம் இல்லை. பரமானந்தர் தேஜோந்மயன் பரிபூரணர் இல்லை. அவைகள் எல்லாம் நான் அல்ல. ஆனால் அவைகள் என்னை உணர்த்துகின்றன. இதுவே அசிபத ஐக்கியத்திற்கு உள்ள அர்த்தம். தத்பத துவம்பத ஐக்கிய விளக்கம் எப்படி என்றால் பரைபிரம்மாகிய என்னிடத்தில் மூல வடிவாகிய பின்னாசக்தியில்லை, அந்த பின்னா சக்தியிலிருந்து தோன்றிய விகிர்த சத்துவம், ரசசு தமசு என்கிற முக்குணங்களும் அவற்றினுடைய நாமங்களான மாயாசக்தி அவித்யாசக்தி அஞ்ஞான சக்திகளும் இல்லை. ஜீவ ஈசுவரர்களும் இல்லை. ஆயினும் விவர்த்தமாகத் தோன்றி என் சொரூபத்தை மறைக்கின்றன.

விச்சேப சக்தியினிடமிருந்து சூக்கும பஞ்சபூதங்களும் அவற்றிலிருந்து முக்குணங்களும் பரமாத்மாவின் கருணையால் உண்டாயின. மண்ணிலிருந்து கடகலசாதிகள் உண்டானது போல பஞ்சபூத முக்குணத்திலிருந்து தூல சூக்கும சரீரங்களையும் அந்தக் கரணங்களையம் ஞானேந்திரியங்களையும் உண்டாக்கிய பிறகு அந்தக்கரண விருத்தி உண்டாயிற்று.

அந்தக்கரண விருத்தியுடன் அறிவுகூடி ஆத்ம விசாரம் செய்வதால் விருத்தி ஞானம் என்கிற ஆத்மத்துவ ஞானம் உண்டாகிறது. ஆத்மஞானத்தை முழுமையாகப் பெற்றவரே ஞானிகளாவர். அந்த விருத்தி ஞானத்தால் அவித்தை என்கிற மறைப்பை நீக்கி என் நிஜ சொரூபத்தை அறிகிறேன். இதனால் சர்வதுக்க நிவர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் பெற்று நித்திய முகதிமோட்சம் அடையலாம். இதுவே மனிதப் பிறப்புக்கு வந்தவர் அடைய வேண்டிய நற்பேறு ஆகும்.

ஞானநூல்

1. வினா : மனிதப்பிறவிக்கு வந்தமக்கள் பெற வேண்டிய பேறுயாது எனின் ?

விடை : சம்சார துக்கத்தை அழித்து விடுவதே மனிதப் பிறவிக்கு வந்த மக்கள் பெரும் பேறாம்.

2. வினா : சம்சார துக்கம் என்பது எப்படிப்பட்டது எனின் ?

விடை : பிறப்பு, இறப்பு இரண்டுமே சம்சார துக்கம் என்பதாம்.

3. வினா : அத்தகைய சம்சார துக்கத்தை உடையவர்கள் யார் எனின் ?

விடை : பிறப்பு, இறப்பு என்கிற இரண்டையும் உடையவர்களே ! சம்சார துக்கத்தை உடையவர்கள் என்பதாம்.

4. வினா : பிறப்பு, இறப்பு என்கிற இரண்டும் ஒருவருக்கு எப்போது நாசமாகும் எனின்?

விடை : தத்துவஞானம் சித்தித்த காலத்தில் நாசமாகும் என்பதாம்.

5. வினா : தத்துவஞானம் ஒருவருக்கு எப்போது சித்திக்கும் எனின்?

விடை : தற்பத துவம்பத அசிபத சோதனம் சித்தித்தவர்களுக்கே தத்துவ ஞானம் சித்திக்கும் என்பதாம்.

6. வினா : ஒருவருக்கு தற்பத துவம்பத சோதனம் எப்போது சித்திக்கும் எனின் ?

விடை : வேதாந்த சிரவணமனன நிதித்தியாசனம் செய்து முடித்தவர்க்கே தற்பத துவம்பத சோதனம் சித்திக்கும் என்பதாம்.

7. வினா : ஒருவருக்கு வேதாந்த சிரவணமனன நிதித்தியாசனம் எப்போது சித்திக்கும் எனின் ?

விடை : நித்தியா நித்யவஸ்து விவேகம் வைராக்கியம் சமாதி சட்க சம்பத்து முமூச்சுத்துவம் இந்நான்கும் சித்தித்தவர்க்கே சிரவணமனன நிதித்தியாசனங்கள் சித்திக்கும் என்பதாம்.

8. வினா : சாதன சதுட்டியங்களிலொன்றாகிய நித்தியா நித்யவஸ்து விவேகம் ஒருவருக்கு எப்போது சித்திக்கும் எனின் ?

விடை : ஏது, சொரூபம், காரியம், அவதி இந்நான்கும் சித்தித்தவர்களுக்கே நித்தியா நித்யவஸ்து விவேகம் சித்திக்கும் என்பதாகும்.

9. வினா : ஏது சொரூபம் காரியம் அவதி இந்த நான்கில் ஏது என்பதுயாது எனின்?

விடை : ஒருவர் பூர்வம் அநேகஜன்மங்களில் செய்த நிஷ்காமகர்ம உபாசனைகளால் ஏற்பட்ட சித்தசுத்தியே ஏது என்பதாம்.

10. வினா : சொரூபம் என்பது யாது எனின் ?

விடை : பிரமமே நித்தியமென்றும் தேகாதி பிரபஞ்சமே அநித்தியமென்றும் வேதாந்த விசாரத்தாலேற்பட்ட நிச்சயமே சொரூபம் என்பதாகும்.

11. வினா : காரியம் என்பது யாது எனின் ?

விடை : நித்திய அநித்தியங்களை உபக்கிரம உபசம்மார யுக்திகளால் சதாசிந்தனம் செய்து கொண்டிருப்பதே காரியம் என்பதாகும்.

12. வினா : அவதி என்பது யாது எனின் ?

விடை : மதவாதிகள் கண்டிக்கினும் பேதநூல்களைப் படிக்கினும் பசுவைப்போலும் படிகத்தைப் போலும் அந்தந்த வயப்படாமல் மாணிக்கத்தைப்போல பிர்ம்மமே நித்தியமென்றும் தேகாதி பிரபஞ்சம் அநித்தியமென்கிற திடநிச்சயம் ஒன்றினாலும் மாறுபடாமலிருப்பதே அவதி என்பதாம். இந்த நான்கும் கைவரப் பெற்றவர்களுக்கே நித்தியா நித்யவஸ்து விவேகம் சித்திக்கும் என்பதாம்.

13. வினா : நித்தியா நித்திய வஸ்து விவேகம் வந்தகாலத்தில் ஒருவர்க்கு ஜீவன் பிரியுமானால் அவர்களுக்கு பலன் யாது ?

விடை : பிரம்ம லோகப்பிரரப்தியே பலனாம் என்று வருணபகான் பிருகு மகரிஷிக்கு உபதேசித்திருப்பதே சித்தாந்தமாம்.

14. வினா : சாதன சதுட்டியங்களிலொன்றாகிய வைராக்கியம் யாருக்கு சித்திக்கும் எனின் ?

விடை : ஏது சொரூபம் காரியம் அவதி இந்த நான்கும் சித்தித்தவர்களுக்கே சித்திக்கும் என்பதாம்.

15. வினா : ஏது என்பது யாது எனின் ?

விடை : இகத்திலுள்ள புஷ்ப சந்தனாதி விஷயங்களும் பரத்திலுள்ள ஊர்வசி ரம்பை அமிர்தாதி விஷயங்களும் அநித்தியமாயும் அசுத்தமாயும் இருத்தலால் வாந்தி எடுத்த ஆகாரம் போலும், மலம் மூத்திரங்கள் போலும் மேலும் மேலும் ராகது வேஷங்களை புதுப்பித்து நரகங்களுக்கு சமானமென்று நிரந்தரம் விசாரித்துப் பார்க்கும் தோட திருஷ்டியே ஏது என்பதாம்.

16. வினா : சொரூபம் என்பது யாது எனின் ?

விடை : ஆகாமிய சஞ்சிதம் என்னும் முதலை வாய்ப்படுத்தி ஜன்ம சாகரத்திலமிழ்த்தச் செய்வித்து விடும் என்று விஷயங்களிடில் அருவறுப்பும் பயமும் உற்று அவைகளை விட்டு விடுதலே சொரூபம் என்பதாம்.

17. வினா : காரியம் என்பது யாது எனின் ?

விடை : பெரும் நோயின் நிமித்தம் புசிக்கப்பட்ட மருந்தில் இச்சை உதியாதிருப்பது போல விட்ட விஷயங்களிற்றேக தாரண நிமித்தம் சிலவற்றினும் இச்சை உதியாதிருத்தலே காரியம் என்பதாம்.

18. வினா : அவதி என்பது யாது எனின் ?

விடை : வீதியில் கிடக்கும் சில துரும்புகளின் மேல் விருப்பு வெறுப்பு உண்டாகாதிருப்பத போல் இகபர விஷயங்களனைத்திலும் பிரிய அப்பிரியங்களின்றி நிராசையாயிருத்தலே அவதியாம். இந்த நான்கும் கைவரப்பெற்றவர்களுக்கே வைராக்கியம் சித்திக்கும் என்பதாம்.

19. வினா : வைராக்கியம் சித்தித்த காலத்தில் ஒருவருக்கு ஜீவன் பிரியுமானால் அவர்களுக்கு பலன் யாது ?

விடை : பிர்ம்ம லோகத்தில் சாமீப முத்தியே பலமாம்.

20. வினா : சாதன சதுட்டியங்களிலொன்றாகிய சமாதி ஷட்க சம்பத்து யாருக்கு சித்திக்கும் எனின் ?

விடை : ஏது, சொரூபம் காரியம் அவதி இந்த நான்கும் சித்தித்தவர்களுக்கே சித்திக்கும் என்பதாம்.

21. வினா : ஏது என்பது யாது எனின் ?

விடை : விடயங்களில் சலியாது சஞ்சரித்து திரிகிற மனதை சத்துவ குணத்தில் நிறுத்திப் பழகுவதே ஏது என்பதாம்.

22. வினா : சொரூபம் என்பது யாது எனின் ?

விடை : பால் வார்த்து வளர்க்கப்பட்ட பூனையேயாயினும் ஆகாரம் அகப்படா நேரத்தில் எலியைக் காணில் அதன்மேல் பாய்வது போல பாய்கிற சித்தத்தை வசப்படுத்தி சித்தநிரோதஞ் செய்தலே சொரூபம் என்பதாம்.

23. வினா : காரியம் என்பது யாது எனின் ?

விடை : புதிதாகிய போகங்களை விரும்பி கன்மங்களில் பிரவிர்த்திக்கும் புத்தி விசாரத்தில் நிலைநிற்காது சகல போகங்களும் பிரார்த்த கன்மத்தின்படி சித்திக்குமே தவிரவேறு எந்த முயற்சி செய்யினும் சித்தியாது என்கிற நிச்சயபுத்தி உண்டாதலே காரியம் என்பதாம்.

24. வினா : அவதி என்பது யாது எனின் ?

விடை : சுழுத்தியில் அகங்காரம் அடங்கி இருந்தது போல சாக்கிரத்தில் அடங்கிய சகல விடயங்களையும் மறந்திருத்தலே அவதி என்பதாம் இந்நான்கும் சித்தித்தவர்களுக்கே சமாதிசட்கசம் பத்து சித்திக்கும் என்பதாம்.

25. வினா : சமாதிஷட்கசம்பத்து சித்தித்த காலத்தில் ஒருவருக்கு ஜீவன் பிரியுமானால் அவர்களுக்கு பலன் யாது ?

விடை : பிர்ம்மலோக சாரூப முத்தியே பலனும் என்பதாம்.

26. வினா : சாதனசதுட்டியங்களிலொன்றாகிய முமூசுத்துவம் என்பது யாது ? அதுயாருக்கு சித்திக்கும் எனின்?

விடை : ஏது சொரூபம் காரியம் அவதி இந்த நான்கும் சித்தித்தவர்களுக்கு சித்திக்கும் என்பதாம்.

27. வினா : ஏது என்பது யாது எனின் ?

விடை : துர்ச்சங்கத்தை கூட்டாமலும் சற்சங்கத்தை விடாமலும் இருப்பதே ஏது என்பதாம்.

28. வினா : சொரூபம் என்பது யாது எனின் ?

விடை : பலநாள் பட்டினிகிடந்த ஒருவருக்கு அதிசயப் பெண் நடனம் ஆடினும், நல்ல கீதங்களை பாடினும் அந்த நடன கீதங்களை அவன் சற்றும் விரும்பாமல் எப்படி அன்னத்தையே விரும்புவார்களோ, அதே போல வேதாந்த விசாரத்தில் விருத்தி நிலைத்து இருப்பதே சொரூபம் என்பதாம்.

29. வினா : காரியம் என்பது யாது எனின் ?

விடை : தலையிலிருந்து உடம்பு ஏகமாய் நெருப்புபற்றிக் கொண்டவர் எப்படி தண்ணீர் இருக்கும் பெருங்குளத்தைதேடி ஓடுவார்களோ அதேபோல கன்மம் பத்தி உபாசனாதிகளை விரும்பாமல் நித்தியமாகிய ஆத்ம ஐக்கிய கூட்டத்தை மாத்திரம் அதிதீவிரமாக விரும்புவதே காரியம் என்பதாம்.

30. வினா : அவதி என்பது யாது எனின் ?

விடை : தாபத்திரயங்களை சகிக்க முடியாதவனாய் இந்த துக்கத்துக்கு காரணமாகிய ஏடணாத்திரயங்களை சுட்டசட்டியைக் கைவிட்டதுபோல கைவிட்டு பெரும் நோயினால் துன்புறுபவன் தகுதியுள்ள வைத்தியனை தேடி அடைவதுபோல நல்ல சற்குருவைத்தேடி அடைவதே அவதி என்பதாம்.

31. வினா : இந்த முமூட்சுத்துவம் சித்தித்த காலத்தில் ஒருவருக்கு ஜீவன் பிரிந்தால் அவருக்கு பலன்யாது எனின் ?

விடை : பிரம்மலோக சாயூட்சியமே பலமாம் என்பதாம்.

32. வினா : தற்பத துவம்பத அசிபத சோதனத்துக்கு ஏதுவாகிய சிரவணமனன நிதித்தியாசனங்களிலொன்றாகிய சிரவணம் என்பது எப்படிப்பட்டது எனின் ?

விடை : ஞானத்திற்கு பிரதிபந்தமாயிருக்கும் சம்சய பாவனையை நிவர்த்திப்பதே சிரவணம் எனப்படும் என்பதாம்.

33. வினா : சம்சய பாவனை என்பது எப்படிப்பட்டது எனின் ?

விடை : நான் ஜீவனா சிவமா என்று எண்ணுகிற எண்ணமே சம்சயபாவனை என்பதாம். அந்த சம்யபாவனையை நிவர்த்திப்பதே சிரவணத்தின் பலனாம்.

34. வினா : மனனம் என்பது எப்படிப்பட்டது ?

விடை : ஞானத்திற்கு பிரதிபந்தமாயுள்ள அசம்பாவனையை நிவர்த்திப்பதே மனனம் என்பதாம்.

35. வினா : அசம்பாவனை என்பது யாது எனின் ?

விடை : நான் சிவம் அல்ல என்று உண்டாகிற எண்ணமே அசம்பாவனை என்பதாம். அந்த அசம்பாவனையை நிவர்த்திப்பதே மனனத்தின் பலனாம்.

36. வினா : நிதித்தியாசனம் என்பது யாது எனின் ?

விடை : ஞானத்திற்கு பிரதிபந்தமாயுள்ள விபரீதபாவனையை நிவர்த்திப்பதே நிதித்தியாசனம் எனப்படும்.

37. வினா : விபரீத பாவனை என்பது யாது எனின் ?

விடை : ஜீவனே நான் என்று உண்டாகிற எண்ணமே விபரீத பாவனை என்பதாம் விபரீத பாவனையை நிவர்த்திப்பதே நிதித்தியாசனத்தின் பயனாம். இந்த நிதித்தியாசனம் சித்தித்தவர்களுக்கே தற்பத துவம்பத சோதனம் செய்ய தகுதி உள்ளவர்களாம்.

38. வினா : தத்துவ ஞானத்திற்கு சாட்சாத்சாதனமாயுள்ள துவம்பத சோதனம் தற்பத சோதனங்களில் ஒன்றாகிய துவம்பத சோதனம் என்பது யாது. அது யாருக்கு சித்திக்கும் எனின் ?

விடை : அவித்தையும் அவித்தையில் பிரதிபிம்பித்தசீவனும் அவித்தைக்கு அதிஷ்டான சேதனமாகிய கூடஸ்த சேதனமும் சேர்த்து துவம்பதத்திற்கு வாச்சியமாம். இதைப் பிரித்து அறிந்தவர்க்கே துவம்பதம் சித்திக்கும் என்பதாம். இதை அறிந்தவர்க்கே அவித்தையும் சீவனையும் நீக்கி கூடஸ்த சேதனமே இலட்சியமாம்.

39. வினா : தற்பத சோதனம் என்பது யாது ? அது யாருக்கு சித்திக்கும் எனின் ?

விடை : மாயையும் மாயையில் பிரதி பிம்பித்த ஈஸ்வரனும் மாயைக்கு அதிஷ்டானமாயுள்ள சச்சிதானந்த சேதனமும் சேர்ந்து தற்பதத்திற்கு வாட்சியமாம். இதைப்பிரித்து மாயையும் ஈஸ்வரனையும் நீக்கி சச்சிதானந்த சேதனமாத்திரம் தற்பதத்திற்கு இலட்சியமாம் என்று ஒருவர் அறிந்த காலத்தில் தத்துவஞானம் சித்தித்தவர்கள் என்பதாம். இப்படிப்பட்ட தத்துவ ஞானத்தை அடைந்தவர்க்கே சம்சார துக்கம் நாசமாகும் என்பதாம். இப்படிப்பட்ட மக்களே மனிதப் பிறப்பு எடுத்த பயனை அடைந்தவர்கள் என்று வேதங்களும், மகரிஷிகளும் உபதேசித்து இருக்கிறார்கள் என்பதாம்.

அனைவரும் இதனை விசாரம் செய்து அருட்சுகம் அடையுமாறு வேண்டுகிறோம்.

பாயிரத்துக்குள்ள விளக்கம்

உ

ஓம் தத் சத்

ஓம் பரப்பிரம்மனே நம :

பொன், நில, மாதர் ஆசை ; பொருந்தினர் , பொருந்தார்
உள்ளம் தன்னில், அந்தரத்தில் , சீவ சாட்சி மாத்திரமாய் நிற்கும் ;
எந்நிலங்களினு(ம்) மிக்க, எ(ஏ)ழுநிலம் அவற்றின் மேலாம்,
நன்னில(ம்) மருவும், ஏகநாயகன் பதங்கள் போற்றி. (1)

ஈன்று,அளித்து,அழிக்கும் செய்கைக்கு,ஏதுவாம்;அயனாய்,மாலாய்,
ஆன்ற ஈசனுமாய் ,தானே அனந்த மூர்த்தியுமாய் நிற்கும் ;
பூன்ற முத்தனுமாய் , இன்பப் புணரி, ஆதவனாய் நாளும்
தோன்றிய,விமல போத சொரூபத்தைப் பணிகின்றேனே. (2)

எவருடை அருளால், யானே எங்குமாம் பிரமம் ; என்பால்
கவருடைப் புவனம் எல்லாம், கற்பிதம் என்று அறிந்து,
சுவரிடை வெளி போல்,யான்,என் சொரூப சுபாவம் ஆனேன்;
அவருடைப் பதும பாதம்,அநுதினம் பணிகின்றேனே. (3)

என்னுடை மனது, புத்தி, இந்திரிய சரீரம் எல்லாம்,
என்னுடை அறிவினாலே, இரவி முன் இமமே ஆக்கி,
என்னுடை நீயும் நானும், ஏகம் என்று ஐக்கியம் செய்ய,
என்னுடைக் குருவாய்த் தோன்றும் ஈசனை,இறைஞ்சினேனே. (4)

அந்தமும், நடுவுமின்றி ,ஆதியும் இன்றி வான் போல்,
சந்ததம் ஒளிரும் ஞான சற்குரு பாதம் போற்றி ;
பந்தமும் வீடும் காட்ட, பரந்த நூல் பார்க்க மாட்டா,
மந்தரும் உணருமாறு,வத்து தத்துவம் சொல்வேனே. (5)

படர்ந்த வேதாந்தம் என்னும் பாற்கடல் மொண்டு ,முன்நூல்
குடங்களில் நிறைத்து வைத்தார் குரவர்கள் எல்லாம்; காய்ச்சி,
கடைந்து, எடுத்து அளித்தேன் இந்தக் கைவல்ய நவநீதத்தை,
அடைந்தவர், விடய மண் தின்று அலைவரோ? பசியிலாரே. (6)

முத்தனை , வேங்கடேச முகுந்தனை , எனை ஆட்கொண்ட
க(ர்)த்தனை,வணங்கிச் சொல்லும் கைவல்ய நவநீதத்தை,
தத்துவ விளக்கம் என்றும் , சந்தேகம் தெளிதல் என்றும் வைத்து ,
இரு படலமாக வகுத்து,உரை செய்கின்றேனே. (7)

பாயிரம்-7-பாடல்கள் முற்றியது.

உ

ஓம் தத் சத்

ஓம் பரப்பிரம்மனே நம :

1. தாண்டவராய சுவாமிகள் முதல் பாயிரத்தில் எந்த வேத மகா வாக்கியத்தை வைத்து வணங்கினார் ? ரிக் வேத மகா வாக்கியமாகிய பிரக்ஞானம் பிரம்மம் என்ற பதத்தை வைத்து வணங்கினார்.

2. பிரக்ஞானத்தைஎந்த பதத்தில் வைத்து வணங்கினார் ? உள்ளந்தன்னில் என்ற பதத்தை வைத்து வணங்கினார்.

3. முதல் பாயிரததில் பிரக்ஞானம் பிரமம் என்ற பதத்தை வைத்து ஏன் வணங்கினார் ?

பிரக்ஞானமே ஜீவ சாட்சி என்றும், ஜீவ சாட்சியே கூடஸ்த ஆத்மா என்றும், கூடஸ்த ஆத்மாவே பரமாத்மா என்றும் பரமாத்மாவே பரப்பிரமம் என்றும் பரப்பிரமமே சர்வ சாட்சி என்றும் சர்வசாட்சியே சுத்த பிரமம் என்றும் சுத்த பிரமமே ஏகநாயகன் என்றும் ஏகநாயகனே பிரக்ஞானமாக இருக்கிறது என்ற விளக்கத்தை பிரக்ஞானம் இல்லாவிட்டால் இந்த ஜீவன் உணர முடியாது. அதனால் பிரக்ஞானத்தை வைத்து வணங்கினார்.

4. பிரக்ஞானம் என்ற பதத்திற்கு முக்ய தாத்பரியம் என்ன ?

இந்த மாமிச உடம்பில் நான் மனிதனாகவே இருக்கிறேன் என்ற திடபுத்தியால் ராகதுவேஷமும், ராகதுவேஷத்தால் பாவ, புண்ணியமும், பாவ, புண்ணியத்தால் பிறப்பு, இறப்பு என்ற சம்சார துக்கமும் பிரக்ஞானம் பிரம்மம் என்ற திட புத்தியானது நாசமாக்குகிறது என்ற உணர்வதே முக்கிய தாத்பரியமாகும்.

5. பிரக்ஞானத்தை பிரம்மம் என்று ஏன் சொல்கிறோம் ?

எதனால் கேட்கப்படுகிறதோ,

எதனால் பரிசிக்கப்படுகிறதோ,

எதனால் பார்க்கப்படுகிறதோ,

எதனால் ருசிக்கப்படுகிறதோ,

எதனால் நுகரப்படுகிறதோ,

அதுவே பிரக்ஞானம் எனப்படும்.

சுரர், அசுரர், நரர், விலங்கு ஆகிய அனைவரிடத்திலும் உள்ள பிரக்ஞானம் ஒரே பரிபூரண பிரம்மாக இருப்பதால் என்னிடத்தில் உள்ள பிரக்ஞானமும் பிரம்மமாகவே இருக்கிறது. அதனால் பிரக்ஞானத்தை பிரம்மம் என்று ரிக்வேதம் கூறுகிறது.

6. பிரக்ஞானத்தின் சிறப்புத் தன்மை யாது ?

பிரக்ஞானம் இல்லையேல் ஞானநூல்களைப் படிக்கவும் குருவின் உபதேசங்களை கேட்கவும் முடியாது. பிரக்ஞானத்தை வேதப்பிரமாணத்துடன் சேர்த்து விசாரம் செய்வதால் உண்டாகிற பிரம்ம ஞானத்தால் ஜீவன் ஆனவன் ஆபாசனிடத்தில் உள்ள அஞ்ஞானத்தை நாசம் செய்கிறான். பிரம்ம சொரூபமே ஜீவனுடைய நிஜசொரூபம் என்பதை உணர்த்துவதே பிரக்ஞானத்துக்கு உள்ள சிறப்புத் தன்மை ஆகும்.

7. பிரக்ஞானத்தை வணங்குவதால் எப்படி எல்லாக் கடவுள்களையும் வணங்கியதாகும் ?

பிரக்ஞானமே சுத்த பிரமமாகவும், சுத்த பிரமமே ஏகநாயகனாகவும் இருப்பதால் பிரக்ஞானத்தை வணங்கினால் எல்லா கடவுளையும் வணங்கியது ஆகும்.

8. பிரக்ஞானம் எந்த தேசத்தில் வெளிப்படுகிறது ?

உள்ளம் என்ற தேசத்தில் பிரக்ஞானம் வெளிப்படுகிறது. பசு உடம்பு முழுவதும் பால் இருந்தாலும் தன் மடியில் இருந்தே பால் வெளிப்படுவது போலவாம்.

9. தாண்டவராய சுவாமிகள் கைவல்யநவநீத நூலை யாருக்காக ஆக்கினார் ?

ஞானியானவன் பிரம்ம சொரூபத்தையே பானம் பண்ணி வஸ்துவாகி விட்டதால் அவனுக்கு சிரவண மனன நிதித்யாசனம் தேவையில்லை. அதனால் ஞானிக்காக இந்த நூலை ஆக்கவில்லை. அஞ்ஞானி நித்திய, அநித்திய வஸ்து விவேகம். வைராக்கியம் முதலிய சாதனங்களில் ஒன்றுகூட கைவரப் பெறாதவன் அவிவேகம் நூற்றுக்குநூறு உடையவன். விசயசுகங்களை அனுபவிப்பதே மோட்சம் என்ற திடபுத்தி உடையவன் மூவாசை பொருந்தி உள்ளவன். அதனால் அஞ்ஞானிக்காகவும் ஆக்கவில்லை. சாதன சதுட்டயம் நான்கும் கைவரப்பெற்று மோட்சத்தேட்டம் தீவிரமாக இருக்கும் மும்மூட்சுக்கள் ஆகிய மந்த அதிகாரிக்காவே கைவல்யநவநீதம் ஆக்கப்பட்டது.

10. சர்வசாட்சிக்கும் ஜீவ சாட்சிக்கும் உள்ள ஏகத்வம் என்ன ?

ஜீவசாட்சியானது வியட்டி தூல சூக்கும காரண சரீரங்களின் மூன்று பாவ, அபாவங்களை விளக்கி வைத்துக்கொண்டான் ஒரு விகாரமும் அடையாமல் இருக்கிறது. பிரமத்தில் கற்பனையாக தோன்றிய அபின்னா பின்னா சக்திகளிடமிருந்து உண்டான மூன்று பாவ, அபாவங்களை சர்வசாட்சியானது விளக்கி வைத்துக் கொண்டும், தான் ஒரு விகாரமும் அடையாமல் சதோதயமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதுவே சர்வ சாட்சிக்கும் ஜீவசாட்சிக்கும் உள்ள ஏகத்வம் ஆகும்.

11. இந்த சாட்சி இருக்குமிடம் அந்தரத்தில் என்று ஏன் சொல்லப்பட்டது ?

அந்தரம்.... ஆகாயம், கடாகாயம், மகாகாய ரூபமே ஆகின்றதுபோல் சாட்சியும் பிரமரூபமாகவே உள்ளது. சமாதி அவஸ்தைக்கு மேலும் சுழுத்தி அவஸ்தைக்குக்

கீழாகவும் மத்திய இடத்தில் இருப்பதால் அந்தரம் என்று சொல்லப்பட்டது.

12. துரிய பூமியை நன்னிலம் என்று ஏன் கூறப்பட்டது ?

ஒரு மிலேச்சனேயாயினும், துரியபூமியை அடைவானாயின் அவனைச் சிவமே ஆக்கி விடுவதால் அந்த ஏழாம் பூமியை நன்னிலம் என்று கூறினார்.

13.நன்னிலம் மருவும் என்ற பதத்திற்கு பொருள் யாது ?

பிரக்ஞானமே ஜீவசாட்சியாகி ஜீவசாட்சியே ஆதமாவாக இருப்பதாலும், அந்த ஆத்மாவே நன்னிலமாகிய ஏழாம் பூமியில் இருப்பதாலும் நன்னிலம் மருவும் என்று கூறப்பட்டது. ஆதலால் பிரக்ஞானமே ஆத்மாவாக இருப்பதாலும், ஆத்மாவே பிரமமாக இருப்பதாலும் ரிக்வேதம் பிரக்ஞானம் பிரமம் என்று சொல்லப்பட்டது.

பாயிரம் - 2

1. இரண்டாவது பாயிரத்தில் தாண்டவராய சுவாமிகள் எந்த மகாவாக்கியத்தை வைத்து வணங்கினார் ?
அதர்வண வேதமகா வாக்கியமாகிய அயம் ஆத்மா பிரம்மம் என்ற பதத்தை வைத்து வணங்கினார்.

2. அயம் என்ற பதத்தை எந்தப் பதத்தில் வைத்து வணங்கினார் ?
தானே – என்ற பதத்தில் வைத்து வணங்கினார்.

3. தானே என்ற பதத்தின் பொருள் யாது ?
சுயம்பிரகாசமாகவே உள்ளது என்று பெயர்.

4. அயம் என்ற பதத்தின் பொருள் யாது ?
சுயம்பிரகாசமே பொருளாம்.

5. சுயம்பிரகாசம் எதனிடத்தில் உள்ளது ?
சுயம் பிரகாசம் ஆத்மாவினிடம் உள்ளது.

6. ஆத்மாவே பிரம்மம் என்று ஏன் சொல்லப்பட்டது ?
ஆத்மா சுயம் பிரகாசமாகவும், அபரோட்சமாகவும் பிரிய வஸ்துக்களுக்கெல்லாம் பிரியவஸ்துவாகவும், சமஸ்தமும் உதித்து ஒடுங்குவதற்கு காரமாகவும் உள்ளது. பிரமத்திடம் உள்ள அம்சம் ஆத்மாவினிடத்தில் இருப்பதால் ஆத்மா பிரமமாகவே உள்ளது என்று அதர்வண வேதம் சொல்கிறது.

7. ஈன்றளித்து அழிக்கும் செய்கைக்கு ஏதுவாய் அயனாய், மாலாய், ஆன்ற ஈசனுமாய்த்தானே அனந்த மூர்த்தியுமாய் நிற்கும் – விளக்கம் யாது ?

அநாதி காலம்தொட்டு அஞ்ஞானம் என்ற காரண சரீரத்தில் கட்டுண்டு கிடக்கிற ஜீவன் விடுபட்டு வீடுபேறு அடைவதற்காக தூல சூக்கும காரண சரீரங்களையும் அதற்கு

வேண்டிய புவன போகங்களையும், அனைத்தையும் ரட்சிப்பதற்காக மும்மூர்த்திகளையும் பரமாத்மா ஆக்கிக்கொடுத்தார் என்பதாம்.

8. பூன்ற என்ற பதத்தின் பொருள் யாது ?

சிவமாகிய ஏகநாயகனே பொருளாம்.

தூலசரீரம் முதல் அபின்ன சக்திவரையுள்ள அனைத்தும் சிவமாகிய ஏகநாயகனிடம் அடங்கியுள்ளது. பெரியதுக்கெல்லாம் பெரிதாகவும், காரணங்களுக் கெல்லாம் காரணமாகவும் நிராபேட்சிக தன்மை இருப்பதாலும் பூன்ற என்ற பதத்தால் *ஏகநாயகனை விளக்கினார்.*

பூன்ற - பூரணமாக உள்ள.

9. முத்தன் என்ற பதத்தின் பொருள் யாது ?

அபின்னா சக்திமுதல் அஞ்ஞான சக்திவரை உள்ள அனைத்துப் பொருள்களில் தான் ஒன்றையும் பற்றாது இருப்பதால் முத்தன் என்று சொல்லப்பட்டது.

10. இன்பப்புணரி என்ற பதத்தின் பொருள் யாது ?

இன்பப்புணரி - ஆனந்த சமுத்திரம் ஏகநாயகனிடத்தில் உள்ள பேரானந்தம் பிரளய காலத்து வெள்ளத்தைப் போல் எல்லையற்றதாக இருக்கிறது.

11. நாளும் தோன்றிய என்ற பதத்தின் பொருள் யாது ?

சத்தில் இருந்து உதயமான சித்தே அறிவு சொரூபமாக விளங்கி, வியட்டி மூன்று அவஸ்தைகளையும் மூன்று காலங்களையும் மூன்று பதவாச்சியங்களின் பாவ, அபாவங்களையும், விளக்கி வைத்துக் கொண்டு தான் ஒரு விகாரமும் அடையாமல் விளங்கிக் கொண்டு ஆத்மா இருக்கிறது என்பது பொருளாம்.

12. விமலம் என்ற பதத்தின் பொருள் யாது ?

பரமாத்வாவிடம் அசுத்த மலம் உள்ளது.

பரைபிரம்மத்திடம் சுத்த மலம் உள்ளது.

சர்வசாட்சியிடம் ஞானமலம் உள்ளது.

தேற்ளறாங்கொட்டைப் பொடி மண்ணை நீக்கி சுத்த ஜலத்தைப் பெற ஏதுவாக உள்ளது. அதுபோல சர்வசாட்சியிடத்திலுள்ள ஞானம் தத்பத, அசிபத, வாச்சியார்த்தங்கள் என்ற மண்ணை நீக்கி அதீத பிரமத்தை அடைய ஏதுவாக உள்ளது.

மும்மலங்களுமின்றிய சொரூபமாத்திரமாய் ஏகநாயகன் விளங்கிக் கொண்டிருப்பதால் விமலபோத சொரூபம் என்று சொல்லப்பட்டது.

விமலம் என்றால் மலங்களுக்கு அப்பாற்பட்டவன் என்று பொருள் ஆகும்.

13. ஆத்மாவை வைத்து ஏன் வணங்கினார் ?

நன்னிலத்தை மருவும் ஆத்மாவானது ஏக நாயகன் சொரூபமாகவே இருப்பதால் ஆத்மாவை வைத்து வணங்கினார்.

14. போதம் என்ற பதத்திற்குள்ள பொருள் யாது ?

ஞானத்தோடு கலந்த சேதனம் ஒன்று. இதுவே ஞானமலமாம் ஞானத்தைக் கடந்த சேதனம் அல்லது நிர்மலமான ஆத்ம சொரூபம் என்று பொருள் தரும்.

போத சொரூபம் - ஞான சொரூபம்.

பாயிரம் - 3

1. மூன்றாவது பாயிரத்தில் எந்த மகாவாக்கியத்தை வைத்து வணங்கினார் ?

யஜுர்வேத மகாவாக்கியமாகிய *அகம் பிரம்மாஸ்மி* என்ற பதத்தை வைத்து வணங்கினார்.

2. அகம் என்ற பதத்தை எந்தப் பதத்தில் வைத்து வணங்கினார் ?

மூன்றாவது பதமாகிய யானே - என்ற பதத்தில் வைத்து வணங்கினார்.

3. பிரம்மம் என்ற பதத்தை எந்தப்பதத்தில் வைத்து கூறினார் ?

ஐந்தாவது பதமாகிய எங்குமாம் பிரமம் என்ற பதத்தில் வைத்து கூறினார்.

4. அஸ்மி என்ற பதத்தை எந்தப் பதத்தில் வைத்து கூறினார் ?

பதினெட்டாவது பதமாகிய ஆனேன் என்ற பதத்தில் வைத்துக் கூறினார்.

5. அகம் என்ற பதத்திற்கு பொருள் யாது ?

ஜீவனே பொருளாம்

6. அஸ்மி என்ற பதத்தின் பொருள் யாது ?

ஏகநாயகனிடத்திலுள்ள சொரூபமே பொருள்.

7. சுவரிடை வெளிபோல் யான் என் சொரூபம் சுபாவம் என்பதன் பொருள் யாது ?

சுவர் என்ற உபாதிக்குள் கட்டுப்பட்ட மகா காயத்தை சுவரை களைந்து மகா காயம் ஆகவே உணர்கிறோம். பஞ்சகோசத்தில் கட்டுண்ட பிரமசொருபத்தை, கோசங்களையும், உடலையும், உலகத்தையும் தத்துவ ஞானத்தால் களைந்து ஏகநாயகன் ஆகவே உணரவேண்டும். நான் எனது நிஜசொரூபம் ஆனேன் என்று உணர்வதே ஜீவனது லட்சியமாம். சுபாவம் என்பதால் எனக்கும் பிரமத்திற்கும் பேதம் இல்லை என்பது தெளிவாகும்.

8. பிரமம் என்ற பதத்தின் பொருள் யாது ?

ஏகநாயகனே பொருளாம்.

9. மூன்றாவது பாயிரத்தில் யாரை வைத்து வணங்கினார் ?

யஜுர்வேத மகாவாக்கியத்தையும் அதை உணர்த்திய குருவையும் வணங்கினார்.

பாயிரம் - 4

1. நான்காவது பாயிரத்தில் தாண்டவராய சுவாமிகள் எந்த மகாவாக்கியத்தை வைத்து வணங்கினார் ?

சாமவேத மகாவாக்கியமாகிய தத்துவமசி மகாவாக்கியத்தை வைத்து வணங்கினார்.

2. அதை எந்த பதத்தில் வைத்து வணங்கினார் ?
நீயும், நானும், ஏகம் என பதிமூன்று, பதிநான்கு, பதினைந்தாவது பதங்களில் வைத்து வணங்கினார்.

3. தத்பதத்தை எந்தப்பதத்தில் வைத்து வணங்கினார் ?
நீயும் என்ற பதத்தில் வைத்து வணங்கினார்.

4. துவம்பதத்தை எந்தப்பதத்தில் வைத்து வணங்கினார் ?
நானும் என்ற பதத்தில் வைத்து வணங்கினார்

5. அசிபதத்தை எந்தப்பதத்தில் வைத்து வணங்கினார் ?
ஏகம் என்ற பதத்தில் வைத்து வணங்கினார்.

6. தத் என்ற பதத்தின் பொருள் ?
மாயையில் உபகிதமான பரமாத்மாவே லட்சியம் என்று அறிவதே பொருளாகும்.

7. துவம் என்ற பதத்தின் பொருள் யாது ?
அந்தக்கரணத்தில் உபகிதமான சாட்சியே லட்சியம் என்று அறிவதே பொருளாகும்.

8. அசி என்ற பதத்தின் பொருள் யாது ?
பராசக்தியில் உபகிதமான பரைபிரம்மமே லட்சியம் என்று அறிவதே பொருளாகும்.

தத்பத லட்சியமாகிய பரமாத்மாவும் துவம்பத லட்சியமாகிய சாட்சியும் அசிபத லட்சியமாகிய பரப்பிரம்மாகவே இருக்கிறது.

9. என்னுடைய மனது, புத்தி, இந்திரிய சரீரம் எல்லாம் என்னுடைய அறிவினாலே இரவி முன், இமமேயாக்கி என்ற பதங்களின் விளக்கம் யாது ?

உலகத்திலுள்ள பனித்துளிகளெல்லாம் சூரியனோடு ஐக்கியமாகிறது. அதுபோல் தூலசரீர தத்துவம் 6-ம் சூக்கும சரீரத்தில் உள்ள மனது, புத்தி, இந்திரியங்கள் என்ற தத்துவம் 20-ம் காரண சரீர தத்துவம் 2-ம் மாயை ஈஸ்வரன் இரண்டும், பஞ்சபூத தத்துவம் 5-ம் ஆக துவம்பத தத்பத அசிபதங்களுக்குள்ள சரீரத்திரய தத்துவங்கள் அனைத்தும் ஞான சூரியனில் ஐக்கியமாவதே விளக்கமாம். அனைத்துத் தத்துவங்களும் பனித்துளிகளை போலவும், குருவின் உபதேசத்தால் உண்டான ஞானம் சூரியனை போலவும் ஆகும்.

10. 4-வது பாயிரத்தில் யாரை வைத்து வணங்கினார் ?
குரு உபதேசத்தால் உண்டான ஞானத்தையே ஈசனாக வைத்து வணங்கினார்.

பாயிரம் - 5.6

1. தாண்டவராய சுவாமிகள் 5-வது 6-வது பாயிரத்தில் எதை வைத்து கூறி உள்ளார் ?

அதிகாரிக்குள்ள அனுபந்த சதுட்டயத்தை வைத்துக் கூறினார்.

2. அனுபந்த சதுட்டயம் என்பது எப்படிப்பட்டது ?

1 அதிகாரி 2. விஷயம் 3. சம்பந்தம் 4. பயன் என்று அனுபந்த சதுட்டயம் நான்கு வகைப்படும். 5-வது பாயிரத்தில் அதிகாரியும், விஷயமும் 6-வது பாயிரத்தில் சம்பந்தமும் பயனும் கூறப்பட்டுள்ளது.

3. அதிகாரி எப்படிப்பட்டவன் ?

சாதன சதுட்டயம் நான்கும் கைவரப்பெற்று மலவிட்சேப தோடம் நீங்கி ஆவரண தோடம் உள்ளவனே அதிகாரியாம்.

4. விஷயம் எப்படிப்பட்டது ?

ஜீவப்பிரம்ம ஐக்கியமே விஷயமாம்.

5. சம்பந்தம் எப்படிப்பட்டது ?

   1. பிரதிபாதக பிரதிபாத்திய சம்பந்தம்
   2. கர்த்திரு கர்த்தவ்ய சமபந்தம்
   3. ஜனக ஜன்னிய பாவ சம்பந்தம்.
   4. பிராபக பிராப்பிய பாவ சம்பந்தம்

பாயிரம் - 6

1. பிரதிபாதக பிரதிபாத்திய பாவ சம்பந்தம் எப்படிப்பட்டது ?

நூலுக்கும் விஷயத்திற்கும் உள்ள சம்பந்தம் ஆகும்.

சொல்வது நூல்.

சொல்லப்படுவது விஷயம் - ஜீவபிரமம் ஐக்கியம்.

சொல்வது பிரதிபாதகம் சொல்லப்படுகிற விஷயம் பிரதிப்பாத்தியம்.

2. கர்த்திரு கர்த்தவ்விய பாவ சம்பந்தம் எப்படிப்பட்டது ?

அதிகாரிக்கும் விஷயத்திற்கும் உள்ள சம்பந்தம் ஆகும். கர்த்திரு - அதிகாரி கர்த்தவ்வியம் - ஞான நூல்களில் கருத்தை செலுத்துவது - செய்யத்தக்க விசாரம்.

3. ஜனக, ஜன்னிய பாவ சம்பந்தம் எப்படிப்பட்டது ?

நூலுக்கும் ஞானத்துக்கும் உள்ள சம்பந்தம் ஜனகம் - உற்பத்தி செய்வது. ஜனிக்க வைத்தது.

ஜன்னியம் - ஜனித்தது உற்பத்தியானது

நூல் - ஜனகம்

ஞானம் - ஜன்னியம்

4. பிராபகப் பிராப்பிய பாவ சம்பந்தம் எப்படிப்பட்டது ?
அதிகாரிக்கும் ஞானத்துக்கும் உள்ள சம்பந்தம் ஆகும்.

பிராபகன் - அடைகிறவன் ஞானத்தை அடைகிற அதிகாரி. பிராப்பியம - அடையப்படுகிற பலம் - ஞானம். அதிகாரி பிராபகன் என்றும் ஞானம் பிராப்பியம் என்றும் கூறப்படும்.

ஞானத்தின் மூலமாக ஜீவப்பிரம ஐக்கியம் சித்திப்பது தான் பலமாம்.

5. பயன் எப்படிப்பட்டது ?
ஏகநாயகனாகிய அருட்பெருஞ்சோதியை அடைவதே பயன் ஆகும்.

6. படர்ந்த வேதாந்தம் என்பது முதலாக உள்ள 18பதங்களின் தாத்பரிய அர்த்தம் எப்படிப்பட்டது ?

தாண்டவராய சுவாமிகள் கைவல்ய நவநீதம் என்ற ஞான நூலை ஆக்கியுள்ளார் இதற்கு முன்பாகவே சமுத்திர ஜலம் விரிந்து விசாலமாக உள்ளதுபோல அநேக ஞானநூல்களை அளவற்ற பெரியோர்கள் எழுதி உள்ளனர். அந்த நூல்களில் ஜீவபிரம்ம ஐக்கியத்துக்கு விரோதமான பேதஞானத்தை உண்டாக்கும் உவமானங்கள், சமுத்திரஜலத்தில் உப்புகலந்துள்ளது போல நிறைந்திருந்தன. மேகமானது கடல்நீரிலுள்ள உப்பை நீக்கிச் சுத்தஜலமாக ஆக்கிக்கொடுப்பது போல, பேத ஞான வாக்கியங்களை நீக்கி, மந்த அதிகாரிகளுங்கூட அத்வைத ஞானத்தை எளிதில் உணரும்படி இந்த நூலை குருவருளால் ஆக்கினார். தயிரை கடைந்து வெண்ணெய் எடுப்பது போல இந்நூலை விசாரம் செய்பவர்க்கு ஜீவபிரம்ம ஐக்கியத்தை உண்டாக்கும் அதவைத ஞானம் உறுதியாகக் கிடைக்கும். இந்நூலை அடைந்தவர் விடயமண் தின்று அலைவரோ என்றும் பசியிலாரே என்றும் அவரே விளக்கியுள்ளார். அநாத்ம தத்துவமாகிய விஷய சுகங்களில் துக்கமே உள்ளது. ஆத்ம தத்துவத்தில் ஆனந்தமே உள்ளது. ஆத்மானந்தத்தை அடைந்தவர்கள் மேலேகண்ட விஷயானந்தம் என்ற மண்ணை விரும்பமாட்டார்கள்.

பாயிரம் - 7

1. தாண்டவராய சுவாமிகள் தன்னுடைய ஆசிரியராகிய நாராயண குருவை வணங்குகிறார். முதல் நான்கு பாயிரங்களில் நான்கு வேத மகாவாக்கியங்களில் அர்த்த சாரத்தையும், 5, 6-வது பாயிரங்களில் அனுபந்த சதுட்டயத்தையும், 7-வது பாயிரத்தில் இரு படலங்களின் பெயர்களையும் கூறினார்.

தத்துவ விளக்கப்படலத்தின் முதற்கவியில் சாதன சதுட்டயத்தைக் கூறியுள்ளார்.

இரண்டு இறக்கையுள்ள பட்சிக்கு உயர்ந்த மரத்திலுள்ள கனி சித்திப்பது போல சாதன சதுட்டயம் அனுபந்த சதுட்டயம் என்ற இரண்டும் சித்தித்த ஜீவனுக்கே சிவகனி என்ற நித்திய முத்தி மோட்சம் சித்திக்கும் என்பதே சித்தாந்தமாம்.

ஓம் சத் தத்

கைவல்ய நவநீதம்

முதற்பாயிரத்திற்குள்ள ரிக் வேதத்தின் வினா :

சிரவணம், அர்த்தம், தாத்பர்யம், பயன் உணர்த்தும் ஏடு.

பொன் நிலம் மாதர் ஆசை பொருந்தினர் பொருந்தார் உள்ளம்
தன்னில் அந்தரத்தில் சீவ சாட்சி மாத்திரமாய் நிற்கும்
எந்நிலங்களிலும் மிக்க எழுநிலம் அவற்றின் மேலாம்
நன்னிலம் மருவும் ஏக நாயகன் பதங்கள் போற்றி

முதல் பாயிரத்துக்குள்ள சிரவணம் சிரவண அர்த்தம், தாத்பரியம்,; பயன் எப்படி என்றால் முதல் பாயிரத்தில் மூன்றாவது வினாவுக்குள்ள வினா:

1. சிரவணம் எப்படி என்றால் முதல் பாயிரத்தில் பிரக்ஞானம் பிரமம் என்ற பதத்தை வைத்து ஏன் வணங்கினார்?

பிரக்ஞானமே ஜீவசாட்சி என்றும், ஜீவ சாட்சியே கூடஸ்த ஆத்மா என்றும், கூடஸ்த ஆத்மாவே பரமாத்மாவே என்றும் பரமாத்மாவே பரப்பிரமம் என்றும் பரப்பிரமமே சர்வசாட்சி என்றும், சர்வசாட்சியே சுத்த பிரமம் என்றும், சுத்தபிரமமே ஏகநாயகன் என்றும், ஏகநாயகனே பிரக்ஞானமாக இருக்கிறது என்ற விளக்கத்தை பிரக்ஞானம் இல்லாவிட்டால் இந்த ஜீவன் உணரமுடியாது. அதனால் பிரக்ஞானத்தை வைத்து வணங்கினார் என்று சொல்லிப்பழகுவதே சிரவணமாம்.

2. சிரவண அர்த்தம் எப்படி என்றால்?

சிரவணத்தில் கண்ட சேதனங்களை பிண்டத்தில் நான்கு சேதனமும், அண்டத்தில் நான்கு சேதனமும் உள்ளது என்று பிரிக்கப்படுகிறது. பிண்டத்தில் உள்ள நான்கு சேதனங்கள்.

1.கூடஸ்த ஆத்ம சேதனம்
2.சாட்சி சேதனம்
3.ஜீவ சேதனம்
4. பிரக்ஞான சேதனம்

அண்டத்தில் உள்ள நான்கு சேதனங்கள்

1.ஏகநாயக சேதனம்
2.சர்வசாட்சி சேதனம்
3.பரப்பிரம்ம சேதனம்
4.பரமாத்மா சேதனம்

இதில் பிண்டத்திலுள்ள பிரக்ஞான சேதனமும், அண்டத்திலுள்ள ஏகநாயக சேதனமும் ஒன்றாகவே இருக்கிறது என்று அறிவதே சிரவண அர்த்தமாம்.

3. தாத்பரியம் எப்படி என்றால்?

ஏகநாயகனும், பிரக்ஞானமும் ஆத்ம விசாரத்திற்கு முன்பு வெவ்வேறாக இருந்து விசாரத்திற்குப் பிறகு ஒன்றாயிற்று என்றால் விசாரததிற்கு முன்பும், பின்பும் எப்போதும் ஒன்றாகவே இருக்கிறது என்று அறிவதே தாத்பரியமாம்.

4. பயன் யாது என்றால்?

ரிக்வேத மகாவாக்யம் லட்சணா வாக்கியமாக இருப்பதால் மனத்திலுள்ள மாசு நீங்கி பரோக்ஷ ஞானத்ததை உண்டாக்குவதே பயனாம்.

4 வது வினா:- பிரக்ஞானம் என்கிற பதத்திற்கு முக்கிய தாத்பரியம் என்ன?

1. சிரவணம்: இந்த மாமிச உடம்பில் நான் மனிதனாகவே இருக்கிறேன் என்ற திட புத்தியால் ராகத் துவேஷமும் ராக துவேஷத்தால் பாவபுண்ணியமும். பாவ புண்ணியத்தால் பிறப்பு, இறப்பு என்கிற சம்சாரத்துக்கமும் அநேகயுகங்களாக உண்டாகிறது. இந்த திடபுத்தியை பிரக்ஞானம் பிரமம் என்ற திடபுத்தியானது நாசமாக்குகிறது என்று சொல்லிப்பழகுவதே சிரவணமாம்.

2. சிரவண அர்த்தம் எப்படி என்றால்?

மூன்றாவது வினா விடையில் கிடைத்த பரோக்ஷஞானத்தால் பலகோடி ஜென்மங்களாக சம்சார துன்பமாகிய பிறவித்துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. நான் மனிதன் என்ற திடபுத்தியே ஆகும் என்று அறிவதே சிரவண அர்த்தமாம்.

3. தாத்பரியம் எப்படி என்றால்?

பல கோடி பிறவித்துக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருந்த அந்த திடபுத்தியை நாசமாக்கும் வல்லமை எதற்கு உண்டு என்றால், அனேக விதமான தான தர்மங்களைச் செய்தாலும், யாக யோக, யக்கியம் மந்திர தந்திரங்களாலும் ஏனைய உபாயங்களாலும் அந்தப் புத்தியை நாசமாக்க முடியாது. பின்னையோ என்றால், என் கண்ணில் வெளிப்பட்டு விளங்குகிற பிரக்ஞானமே பிரமமாய் இருக்கிறது என்ற திட புத்தியே நாசமாக்க முடியும் என்று அறிவதே தாத்பரியமாம்.

4. பயன் யாது என்றால்?

புத்தி சுத்தமாகி லட்சியமாகிய பிரமத்தை அடைவதே பயனாம்.

5 வது வினா- பிரக்ஞானத்தை பிரமம் என்று ஏன் சொல்லப்பட்டது?

1. சிரவணம் எப்படி என்றால்?

எதனால் கேட்கப்படுகிறதோ, எதனால் பரிசிக்கப்படுகிறதோ எதனால் பார்க்கப்படுகிறதோ, எதனால் ருசிக்கப்பகிறதோ, எதனால் நுகரப்படுகிறதோ அதுவே பிரக்ஞானம் எனப்படும் சுரர், அசுரர், நரர், விலங்கு ஆகிய அனைவரிடத்திலும் உள்ள பிரக்ஞானமும் சேர்ந்து ஒரே பரிபூரண ஒரே பிரமமாக இருப்பதால் என்னிடத்தில் உள்ள பிரக்ஞானம் பிரமமாக இருக்கிறது. அதனால் பிரக்ஞானத்தை பிரமம் என்று ரிக்வேதம் கூறுகிறது. என்று சொல்லிப் பழகுவதே சிரவணமாம்.

2. இதுவே சிரவண அர்த்தமும் ஆகும்

3. தாத்பரியம் எப்படி என்றால்?

மூன்றாவது வினாவிடையில் நான் பிரமமாய் இருக்கிறேன் என்று உண்டான பரோட்ச

ஞானத்தை 5-வது வினாவிடையில் அபரோக்ஷ ஞானம் ஆக்கியதே தாத்பர்யமாம்:

4. பயன் யாது என்றால் அபரோக்ஷ ஞானம் சித்திப்பதே பயனாம்.

6-வது வினா பிரக்ஞானத்தின் சிறப்புத் தன்மை யாது?

1. சிரவணம் எப்படி என்றால்?

பிரக்ஞானம் இல்லையேல் ஞான நூல்களைப் படிக்கவும் குருவின் உபதேசங்களைக் கேட்கவும் முடியாது. பிரக்ஞானத்தை வேதப்பிரமாணத்துடன் சேர்த்து விசாரம் செய்வதால் உண்டாகிற பிரமஞானத்தால் ஜீவனாகிய ஆபாசனிடத்தில் உள்ள அஞ்ஞானம் நாசமாகிறது. பிரம சொரூபமே ஜீவனுடைய நிஜ சொரூபம் என்பதை உணர்த்துவதே பிரக்ஞானத்திற்குள்ள சிறப்புத் தன்மை ஆகும் என்று சொல்லிப்பழகுவதே சிரவணமாகும்.

2. சிரவண அர்த்தம் எப்படி என்றால்?

5-வது வினா விடையில் கிடைத்த அபரோக்ஷஞானத்தால் ஜீவனிடத்தில் உள்ள அஞ்ஞான ஆபாசங்களை நாசம் ஆக்கியது என்று அறிவதே சிரவண அர்த்தமாம்.

3. தாத்பரியம் எப்படி என்றால்?

ஆபாச ஜீவனிடத்தில் நான்கு அம்சங்கள் இருக்கின்றன. 1. சட அம்சம் 2. துக்க அம்சம் 3. சுயபிரகாச அம்சம்.4. ஆனந்த அம்சம். சடம், துக்கம் இந்த இரண்டும் மாயையின் அம்சமாக உள்ளது. சுயம்பிரகாசமும், ஆனந்தமும் சிவ அம்சமாகவே உள்ளது. இந்த ஆபாச ஜீவனிடத்தில் உள்ளது சட அம்சம், சுயம்பிரகாசத்தை மறைக்கிறது. துக்கம் ஆனந்தத்தை மறைக்கிறது. அதனால் ஆபாச ஜீவன் சுயம்பிரகாசமாகிய ஆத்மாவை அறிய முடிவதில்லை என்று அறிவதே தாத்பரியமாம்.

4. பயன் யாது என்றால்?

மாயா அம்சம் இரண்டையும் நாசமாக்கி தான் சிவ அம்சமாகவே இருக்கிறேன் என்று தெளிவதே பயனாகும்.

7-வது வினா- பிரக்ஞானத்தை வணங்குவதால் எப்படி எல்லாக்கடவுளையும் வணங்கியதாகும்

1. சிரவணம் எப்படி என்றால்?

பிரக்ஞானமே சுத்தபிரமமாகவும், சுத்த பிரமமே ஏகநாயகனாகவும் இருப்பதால் பிரக்ஞானத்தை வணங்கினால் எல்லாக் கடவுளையும் வணங்கியது ஆகும் என்று சொல்லப்பழகுவதே சிரவணமாம்.

2. இதுவே சிரவண அர்த்தமும் ஆகும்

3. தாத்பரியம் எப்படி என்றால்?

6-வது வினா விடையில் கிடைத்த தெளிவினால் அருள்முக்கோடி தேவர்கள் கண்ணில் வெளிப்பட்டு விளங்குகிற அனைத்துப் பிரக்ஞானங்களும் என் கண்ணில் வெளிப்பட்டு விளங்குகிற பிரக்ஞானமாகவே இருக்கிறது என்று அறிவதே தாத்பரியமாம்.

4. பயன் யாது என்றால்

நான் சிவ அம்சமாகவே இருக்கிறேன் என்ற தெளிவு உண்டான பிறகு நாம ரூபம் அனைத்தும் சற்பித சர்ப்பத்தைப் போல் மித்தையாகத் தோற்றுகிறது என்கிற உணர்வு உண்டாவதே பயனாகும்.

8-வது வினா பிரக்ஞானம் எந்த நேரத்தில் வெளிப்படுகிறது?.

1 சிரவணம் எப்படி என்றால்?

உள்ளம் என்ற தேசத்தில் பிரக்ஞானம் வெளிப்படுகிறது. பசு உடம்பு முழுவதும் பால் இருந்தாலும் தன் மடியிலிருந்தே பால் வெளிப்படுவது போலவாம் என்று சொல்லிப் பழகுவதே சிரவணமாம்.

2. சிரவண அர்த்தம் எப்படி என்றால்?

சர்வசாட்சியானது மலை, காடு, கடல், கோயில்கள், கோயில்களில் உள்ள மூர்த்திகள் முதலிய அனைத்து இடங்களிலும் ஏகமாகப் பட்டுக்கொண்டிருந்தாலும் அவைகளிடத்தில் உள்ளம் இல்லாததால் பிரக்ஞானம் வெளிப்படுவதில்லை. ஆனால், ஆடு, மாடு, குதிரை முதலிய விலங்கினங்களுக்கு தூல சரீரம் உள்ளம், பிரக்ஞானம் இவைகள் இருந்தும் பிரக்ஞானத்தின் சிறப்புத் தன்மையை ஏன் அறியவில்லை என்றால் பகுத்தறிவு இல்லாததால் பிரமானத்தின் சிறப்புத்தன்மையை அடைய முடியவில்லை என்று அறிவதே சிரவண அர்த்தமாம்.

3. தாத்பரியம் எப்படி என்றால்?

தேவர்கள், மனிதர்கள் இவர்களிடத்தில் உள்ளம் பிரக்ஞானம், பகுத்தறிவு இவை அனைத்தும் இருந்தும் ஏன் பிரக்ஞானத்தின் சிறப்புத்தன்மையை அடையவில்லை என்றால்? தங்களிடம் இருந்து வெளிப்படும் பிரக்ஞாத்தை வேதப் பிரமாணத்தோடு சேர்த்து விசாரம் செய்யாமல் விட்டதே பிரக்ஞானத்தின் சிறப்புத் தன்மையை அடையாததற்கு க் காரணமாம் என்று அறிவதே தாத்பரியமாம்.

4. பயன் யாது என்றால்?

எந்த ஒரு ஜீவன் தன்னிடத்திலிருந்தே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிற பிரக்ஞானத்தை வேதப் பிரமாணத்துடன் சேர்த்து விசாரம் செய்கின்றானோ அந்த ஒரு ஜீவனுக்கே பிரக்ஞானத்தின் சிறப்புத்தன்மையாகிய சிவ சொரூபம் சித்திப்பதே பயனாம்.

9-வது வினா: தாண்டவராய சுவாமிகள் கைவல்ய நவ நீத நூலை யாருக்கு ஆக்கினார்?

1. சிரவணம் எப்படி என்றால்?

ஞானியானவன் பிரம்ம சொரூபத்தையே பானம் பண்ணி வஸ்துவாகி விட்டபடியால் அவருக்குச் சிரவணமனன, நிதத்தியாசனம் தேவையில்லை. அதனால் ஞானிக்காக இந்து நூலை ஆக்கவில்லை. அஞ்ஞானி, நித்திய அநித்திய வஸ்து, விவேகம் வைராக்கிய முதலிய சாதனங்களில் ஒன்று கூட கைவரப்பெறாதவன். அவிவேகம் நூற்றுக்கு நூறு உடையவன், விசய சுகங்களை அனுபவிப்பதே மோட்சம் என்ற திடபுத்தி உடையவன். மூவாசை பொருந்தி உள்ளவன். அதனால் அஞ்ஞானிக்காகவும் ஆக்கவில்லை சாதனசதுட்டயம் நான்கும் கைவரப்பெற்று மோட்சதேட்டம் தீவிரமாக இருக்கும் முமூட்சுகள் ஆகிய மந்த அதிகாரிக்காகவே கைவல்ய நவ நீதம் ஆக்கப்பட்டது என்று சொல்லிபழகுவதே சிரவணமாம். இதுவே சிரவண அர்த்தமும் ஆகும்.

2. தாத்பரியம் எப்படி என்றால்?

இதுவரையில் கண்ட சிறப்புத்தன்மைகளை ஒரு மந்த அதிகாரியே உணரமுடியும் என்று அறிவதே தாத்பரியமாம்.

3. பயன் யாது என்றால்?

மனிதப்பிறவிக்குவந்த மக்கள் ஒரு மந்த அதிகாரி ஆகிலும் ஆக வேண்டும் என்பதே பயனாம்.

10-வது வினா ஜீவசாட்சிக்கும், சர்வசாட்சிக்கும் உள்ள ஏகத்தத்துவம் யாது?

1. சிரவணம் எப்படி என்றால்?

ஜீவ சாட்சியானது வியட்டி தூல, சூக்கும காரண சரீரங்களின் மூன்று பாவ அபாவங்களை விளக்கி வைத்துக் கொண்டு தான் ஒரு விகாரமும் அடையாமல் இருக்கிறது.

சர்வசாட்சியாகிய பிரமத்தின் கற்பனையாகத் தோன்றிய அபின்னா, பின்னா சக்திகளிடம் இருந்து உண்டான மூன்று பாவ, அபாவங்களை சர்வசாட்சியானது விளக்கி வைத்துக் கொண்டும் தான் ஒரு விகாரமும் அடையாமல் சதோதயமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதுவே ஜீவ சாட்சிக்கும் சர்வசாட்சிக்கும் உள்ள ஏகத்துவம் ஆகும் என்று சொல்லிப்பழகுவதே சிரவணமாம்.

2. சிரவண அர்த்தம் எப்படி என்றால்?

வியட்டி மூன்று அவஸ்தைகளையும் அறிவது ஜீவசாட்சி என்றும் சமட்டி மூன்றுபத வாச்சியங்களை அறிவது சர்வ சாட்சி என்றும் அறிவதே சிரவண அர்த்தமாம்.

3. தாத்பரியம் எப்படி என்றால்?

மூன்றுபத வாச்சியார்த்த சமூகக் கூட்டங்களின் பாவ அபாவங்களை விளக்கி வைத்துக்கொண்டு இருப்பது சர்வசாட்சி என்பது சுருதிவாக்கியமாக இருப்பதால் சர்வ சாட்சியைத் தவிர ஜீவ சாட்சி என்று ஒன்று இருக்க முடியாது என்று அறிவதே தாத்பரியமாம்.

4. பயன் யாது என்றால்?

சர்வசாட்சி ஒன்றே உள்ளது என்று தெளிவதே பயனாம்.

11-வது வினா: இந்த சாட்சி இருக்கும் இடம் அந்தரம் என்று ஏன் சொல்லப்பட்டது

1. சிரவணம் எப்படி என்றால்?

அந்தரம்....ஆகாயம்..கடா ஆகாயம், மகா ஆகாய ரூபமே ஆகின்றது போல் சாட்சியும் பிரம்ம ரூபமாகவே உள்ளது. சமாதி அவஸ்தைக்கு மேலும், சுழுத்தி அவஸ்தைக்கு கீழுமாக மத்திய இடத்தில் இருப்பதால் அந்தரம் என்று சொல்லப்பட்டது என்று சொல்லி பழகுவதே சிரவணமாம்.

2. சிரவண அர்த்தம் எப்படி என்றால்?

1. அபின்னா சக்தியில் உபகிதமான சேதனம் சுத்தப் பிரமமாகிய ஏக நாயகனாம் அபின்னா சக்தியில் ஆருடமான சேதனம் சர்வ சாட்சி. பராசக்தி, ஆனந்த ரூபசக்தி, சித்ரூபசக்தி, சத்ரூபசக்தி, பின்னாசக்தி, மாயாசக்தி, அவித்தியாசக்தி, அஞ்ஞானசக்தி இச்சக்திகளில் உபகிதமான சேதனம் ஏகநாயகனேயாகும்.

2. பராசக்தியில் ஆரூடமான சேதனம் பரபிரம்ம சேதனம்

3. ஆனந்த ரூப சக்தியில் ஆருடமான சேதனம் பரமானந்த சேதனம்.

4. சித்ரூப சக்தியில் ஆரூடமான சேதனம் தேஜோமய சேதனம்.

5. சத்ரூபசக்தியில் ஆரூடமான சேதனம் பரிபூரண சேதனம்.

6. பின்னாசத்தியில் ஆரூடமான சேதனம் சச்சிதானந்த சேதனம்.
7. மாயா சக்தியில் ஆரூடமான சேதனம் பரமாத்ம சேதனம்.
8. அவித்தியா சக்தி விருத்தியில் ஆரூடமான சேதனம் சாட்சி சேதனம்.
9. அஞ்ஞான விருத்தியில் ஆரூடமான சேதனம் ஆபாசஜீவன் என்று அறிவதே சிரவண அர்த்தமாம்.

3. தாத்பரியம் எப்படி என்றால்?

எப்படி ஒரு கயிற்றினிடத்திலிருந்தே சர்ப்பம் பூமாலை, தடி இம்மூன்றும் கற்பனையாகத் தோற்றுகிறதோ அதுபோல இச்சாட்சியினிடத்திலிருந்தே மூன்று சரீரங்களும், மூன்று அவஸ்தைகளும் கற்பனையாக தோற்றுகிறது. கயிறு என்றை அறிவதால சர்ப்பம், பூமாலை, தடி இந்த மூன்றும் எப்படி நாசமாகிறதோ அதுபோல சாட்சி ஒன்றை அறிவதால் மூன்று சரீரங்களும் மூன்று அவஸ்தைகளும் நாசமாகி சாட்சி மாத்திமாய் நிற்பர் என்று உணர்வதே தாத்பரியமாம்.

4. பயன் யாது என்றால்

12-வது வினா விடையில் கண்ட நன்னிலமாகிய ஆத்மாவில் ஐக்கியமாவதே பயனாம்.

12-வது வினா துரிய பூமியை நன்னிலம் என்று ஏன் கூறப்பட்டது?

1. சிரவணம் எப்படி என்றால்

ஒரு மிலேச்சனேயாயினும் துரிய பூமியை அடைவானாயின் அவனை சிவமே ஆக்கி விடுவதால் ஏழாம் பூமியை நன்னிலம் என்று கூறினார். இதுவே தாத்பரியமும் பயனாம்.

13-வது வினா: நன்னிலம் மருவும் என்ற பதத்திற்கு பொருள் யாது?

பிரக்ஞானமே ஜீவசாட்சியாகி ஜீவசாட்சியே ஆத்மாக இருப்பதாலும் அந்த ஆத்மாவே நன்னிலமாகிய ஏழாம் பூமியில் இருப்பதாலும் நன்னிலம் மருவும் என்று கூறப்பட்டது. ஆதலால் பிரக்ஞானம் ஆத்மாவாக இருப்பதாலும் ஆத்மாவே பிரமமாக இருப்பதாலும் ரிக்வேதம் பிரக்ஞானம் பிரமம் என்று சொல்லப்பட்டது.

13-வது வினா விடைக்குள்ள தாத்பரியமும் பயனும் யாது எனில்,

மேலே கண்ட லட்சணங்கள் அனைத்துக்கும் சாக்ஷாத்காரம் எப்படி என்றால், மும்மலங்களும் இல்லாத ஏகநாயகனே என்னுடைய பிரக்ஞானம் இருக்கிறது என்று உண்டாகிற நிச்சயமே சாக்ஷாத்காரமாம. அல்லது பிரம்மவித்தாம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஓம்

சமர்ப்பணம்

ஆன்ம விளக்க அருள்கோரும் வேதாந்தம் நோன்பெற்று கொள்ளுக நெஞ்சு.

பேரன்புடையீர்!

வாழையடி வாழையென வந்த திருக் கூட்டம் என்னும் அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் மறை மொழிக்கிணங்க, ரெட்டியாரூர் வேதாந்த தேசிகர் திரு சு. பழனியப்ப சுவாமிகளின் சீடர்களின் ஒருவனாகிய அடியேன் அன்னார் உபசேித்தருளிய மகா வாக்கியங்களை சின்னாம்பாளையம், உடுமலை வாளவாடியிலும்

உபதேசித்துக்கொண்டு வருகின்றேன். ஆகவே நமது சற்குரு அவர்களுக்கு இப் புகழ் பாமாலை சமர்ப்பிக்கின்றேன்.

குருமொழியால் கூடிவாழும் கோடி நன்மைகிட்டும் உருவாகும் உண்மை உயர்வு

அன்பன்

கவிஞன் க. கிருஷ்ணசாமி. வாளவாடி

ஓம்

அறிமுகம்

வேதாந்த விளக்கம்

வேதாந்தபட்சத்தை வாய்மொழியாய் உரைக்கவல்ல விசாரஞான
நாதாந்த மேல்நிலைகள் நெஞ்சத்தே மாணுகின்ற நல்ல ஞானம்
பூதாந்த காரியங்கள் புட்டறுத்துப் போகின்ற புகழாம் ஞானப் 1
போதாந்தம் புகலுகின்ற சற்குரு ரெட்டியாரூர் பழனியப்ப சாமி

பிரமத்துப் பாவனையால் பிரக்ஞான விளக்கத்தைப் பிறழா துற்றுந்
திரவிசாரம் மன்னியவர் தீங்கில்லாப் பாங்கதனை தினமும் மன்னிப்
பரோட்சஞானம் உண்டுபண்ணும் பரமஹம்சர் சத்புருட பாவமாகச் 2
சரிநிகராம் ஆன்மாவைச் சிந்திக்க வைத்திருவார் சித்தம் நன்றே

மூதுணர்ந்த ஞானிகளை முன்னோக்கி வழி நின்று முகமன் செய்து
வேதாந்த விளக்கத்தை விவேகத்தை வற்புறுத்தும் வித்தர் வீடு
ஈதென்று காட்டுபவர் இம்மைக்கும் மறுமைக்கும் ஈடற் பால 3
பாதகமொன் றில்லாத பாவிக்கும் பழனியப்பர் பாங்கு மேலே

வேதாந்தத்தின் சத்தமன்றி வேறுபிற சத்தத்தை விழையாரன்றோ
சாதனத்தைச் சதுட்டியத்தைச் சம்மந்தத் தைமிகவும் சார்ந்து நின்று
நூதனமாக விவேகத்தை நுழைத்துவிடும் ஆற்றலான ஞான அஸ்தி 4
பாதியான பிரியத்தைச் செய்விப்பார் சற்குருவாம்

ஆதாரம் அதிஸ்டானம் ஆசிரியம் ஆரோபம் ஆன வற்றுள்
பேதத்தைப் பாதித்தும் பிரம்மத்தைச் சாதிக்கும் பான்மையான
ஆதாரம் காட்டிபிர பல சுருதி வாக்கியத்தை ஆத ரித்துத் 5
தோதாக எடுத்துரைக்கும் பழனியப்பர் சொல் கேட்கத் தொல்லை போமே

பிரகிருதி மாயையும் அவித்தையும் பிறப்பிறப்பேற் படுத்து மென்றும்
நிரதிசய ஆனந்தம் அதனிடத்தில் சற்றுமிலை நிர்ண யத்துத்
திரவிசார ஞானத்தால் திரிபுடிகள் நீங்குமெனத் திட்டமாக 6
உரைசெய்யும் பழனியப்ப உரைசால உயர்வுசாலும் உண்மை யிஃதே

ஒன்றான பிரம்மத்தை ஓதுவதும் உணர்த்துவதும் ஒருங்க தாக
நன்றான வத்துவினை நவில்வதுவும் பயில்வதுவும் நாட்டமாக
குன்றான விதிமுறைகள் கூறுவதும் ஆற்றுவதும் குணம தாக 7
நின்றான பழனியப்பர் ஞானவுரை நெஞ்சத்தே நிறுத்த லாற்றே

ஆதாரா மூச்சாக ஆன்மாவுரைப் பேச்சாக அமைந்த சீலர்
பாதார விந்தத்தைப் பற்றுங்கால் பரமகதிப் பன்மை பற்றும்
பூதார காரியங்கள் தனுவண்ட புவனத்து போக மெல்லாம்
தீதராமந் தோய்ந்து விடுமதனை விடுகவெனும் திருவார் மன்னே 8

துவம்பதத்தைத் தத்பதத்தை அசிபதத்தை சோதனந்தான் செய்யும் நல்ல
சிவபதத்தை ஓங்கார பதத்தையும் பிரமத்துச் சீர்ப தத்தை
நவபதத்திற் கெட்டாத மாயை யின் அகடிதக நடவடிக்கை
விவகரித்துப் பேசியான தர்க்கம் செய் பழனியப்பர் வினயங் கோரே 9

வியாபகமாய் விமலமைதாய் வித்தைாய் விதிமுதலாய் விளங்க வல்ல
தாயாபரத்து வத்துவினை தாண்டவ ராயர் விண்ட தத்துவத்தை
பயபக்தி யோடுசிவ அனுபூதி சித்தத்து பராப ரத்து
வியநிலைக் கண் வினவுலுற்ற பழனியப்ப சாமியவர் வித்தை மேலே 10

முக்குணத்துக் கற்பனையும் மூலதூல ஆரோப வாச்சியத்தை
விக்கினத்தை யுண்டாக்கும் விபரீத பாவனையாம் விகற்பமான
மக்கினமாம் மலதோட விட்சேப தோடத்தின் மலினந் தன்னை
அக்கதனின் வேறாக அளந்துரைக்கும் பழனியப்பர் ஆற்றலுள்ளே 11

பிறப் பிறப்புக் கேதுவாக பிரவிர்த்தி மார்க்கத்தை பின்பற்றாமல்
பிறப்பறுக்க ஏதுவான நிவிர்த்தியான மார்க்கத்தை பின்பற் றென்றே
அறத்தினிடை வாயிலாக அனவிசாரம் செய்கின்ற ஆசான் றானாம்
திறத்தினிடை பழனியப்பர் தீவிர தர வைராக்யத் தீர்வைதேரே 12

முக்காலத் துற்றபொருள் முன்னேற்றம் பற்றிடுக முனைப்ப தாக
எக்காலத் துற்றபொருள் ஏற்றந்தான் ஊற்றந்தான் எண்ணிப் பார்மின்
தக்கதாக உற்றபொருள் தார்மீக தன்னியத்தைத் தகைமை யோடு
மிக்கதாக உற்றபொருள் மீக்கூறும் பழனியப்பர் மேன்மை பற்றே 13

தேசகால வத்துபரிச் சேதமற்ற ஆன்மாவைத் தேர்மின் ஓர்மின்
கோசபாசச் சிக்கலிலா கொற்றமான ஆன்மாவை கொள்மின் உளமின்
நாசமிலா நெஞ்சத்து நடுவாய ஆன்மாவை நாடு மின் நீர்
பூசலறுமின் பகழுரைசெய் பழனியப்பர் பூமாவாம் பயிற்சி பாரே 14

வீணான காரியத்தில் விகற்பங்கள் மிஞ்சுமெனும் விதியை சுட்டி
மாணான காரணத்தை மானுடசம் பிரதாய மகத்து வத்தை
பூணாக விளங்குமொரு புண்ணியத்தை விசாரத்தை புத்தி தன்னில்
நாணாத வாறுசொலும் நல்லைவராம் பழனியப்பர் நட்பு கொள்ளே 15

ஞானத்தால் முக்தியென நாலுமறை கோருகின்ற நேர்த்தி தன்னை
ஆனதர்க்க ந்தனைமிகவும் ஆலசிய மில்லாத ஆற்றலாக
தானமாக தவமாக தாத்பர்ய நிச்சயித்தான் தத்துவ வத்தை
மோனமாகக் கூறுகின்ற பழனியப்பர் மூதுரைகள் மேவ நன்றே 16

பரபிரமத்தை இலக்கியத்தை பிரதிபாதித் தல் செய்யும் பழனியப்பர்
பரதுரிய அனுபவத்தை படம்பிடித்துக் காட்டுகின்ற பழனியப்பர்
பரமாத்மா சீவாத்மா ஒரு தன்மை ஓர்ந்துரைக்கும் பழனியப்பர்
பரைப்பிரம்ம சுத்தபிர மப்பாங்கு பகுத்துரைக்கும் பழனியப்பர் 17

அன்புமொழி இசைஞான ஆத்மார்த்த தத்துவத்தை ஆர்த்தல் செய்யும்
பண்புமொழி இசைஞான பரமார்த்த தத்துவத்தை பகர்தல் செய்யும்
தன்மொழி ஞானமாக கற்பனையாங் கில்லதனை சுழல் செய்யும்
சென்மவழி பழனியப்பர் செய்மொழியை சிந்திக்கச் சேமந்தானே 18

அறியாமை மாயையை அவித்தையயை ஆவரண அஞ்ஞா னத்தை
சிறிதுக்கும் சிறிதான சீவசிதா பாசனையும் சீரா யுள்ள
அறிவுக்கும் அறிவான ஆன்மாவை பிரம்மத்தை ஆய்ந்துரைக்குங்
குறியான பழனியப்பர் குற்றமில்லா விசாரத்தின் கொற்றங்காணே 19

நடுவான பிரம்மத்தை நாடுதலைச் செய்கவென நல்லுரைகள்
தொடுவான பிரம்மத்தைத் தோத்திரங்கள் செய்கவென தொல்லுரைகள்
அடுமுரணில் பிரம்மத்தை ஆற்றுதலைச்செய்கவென அன்பு ரைகள்
சுடுமுரணில் லாவாறு சுட்டுரைக்கும் பழனியப்பர் சுருதிசாலே 20

நாமரூப குணமற்ற நடுவான வத்துவினை நம்பிக்கையாய்
சேமமுற சிந்தனைகள் செய்திடுவீர் சென்மலாபச் சிறப்பு சார
காமபகை கொடுங்கோபம் கட்டறுக்க வல்லதான கன்ம ஞானம்
சாமவேத உபதேசம் செய்கின்ற பழனியப்பர் சால்பு பற்றே 21

சாகாத கலைஞானம் சத்துவத்தின் மேலான தத்துவத்தின்
வேகாத காலுணர்வு வேள்விபோக தவஞான வேட்பு தன்னை
போகாத புனலுண்மை புண்ணித்தின் நாளமான பாகந் தன்னை
ஏகமான நாயகனை எடுத்தியம்பும் பழனியப்பர் ஏற்றம் சீரே 22

ஆனந்த வடிவான அத்வைத பிரம்மத்தை ஆய்ந்து தானே
தானந்த வடிவான தானாக பிரம்மத்தைத் தேர்ந்து தானே
வானந்த வடிவான வத்துவான பிர்மத்தை வணங்கத் தானே
ஊனந்த வடிவ உபாதி ஒழியுமென்னும் பழனியப்பர் உரைமேற்கொள்ளே 23

உலகத்துச் சத்தத்தால் உதிக்கின்ற ஞானத்தால் உபாதி மிஞ்சும்
விலக்கத்துச் சத்தத்தால் விளைகின்ற ஞானத்தால் விபரீ தந்தான்
இலக்கத்துச் சத்தத்தால் எழுகின்ற ஞானத்தால் இறையா மென்னும்
துலக்கத்துச் சொல்புகலும் தூயவராம் பழனியப்பர் துறையை மேவே 24

ஓங்கார தியானத்தால் மனமாசு நீங்குமென ஒப்பு கையாய்
ஆங்கார கோபமெலாம் அடியோடு நீங்குமென அன்பு டைத்தாய்
ரீங்கார ருக்வேத யஜுர் வேத சாம அதர்வணவே தத்
பாங்கான நியதிதனைப் பகருகின்ற பழனியப்பர் பான்மை பற்றே 25

சுத்தான்மா தத்துவத்தை சுட்டித்தான் காட்டிடுவார் சுருதி வாயில்
ஒத்தான்மா தத்துவத்தை உள்ளொக்க ஓர்ந்திடுவார் உலகு வாயில்
மித்தையா மென்பதனை மிடுக்காக எடுத்து ரைப்பார் மனத்து வாயில்
சத்தியமா ஆன்மாவைச் சார்ந்திருக்கும் பழனியப்பர் சார்பு பற்றே 26

பிறந்திழைத்துப் போவதென்ன புத்திபல மோபுகல்வீர் பிரபஞ் சத்துப்
பிறவாத நெறியுடைய ராகுமினே உனையுணர்ந்து பாரு மின்னே
பிறவாத பிரம்மமாக நீயிருக்கும் உண்மைதனைப் பகுத்துப் பார்த்து
இறவாத பெருநெறியை வேதவிசாரத்த டைக என்பார் தேரே 27

ஓடுகின்ற மனம்தனை ஓர்முகத்தான் படுத்துவதற்க் குகந்த மார்க்கம்
தேடுகின்ற மாந்தரே நீர் தெய்வீகந் தேறுவீரே சாம வேதம்
பாடுகின்ற உபதேச கலையான சத்தான பிரம்மப் பாட்டை
ஊடுகின்ற வல்லேரேல் உயர்மனிதர் நீர்என்னும் உரியார் தேர 28

சித்தையும் சடத்தையும் பிரித்தறிந்து சடமதனைத் தள்ளி நீக்கி
சித்தான வாய்ப்பதனில் சிரத்தையும் பக்தியுமே செலுத்தி யாங்கே
சத்தான வாய்ப்பதனை சதாகால சிந்தனைகள் செய்க வென்றே
முத்தாக மொழிகின்ற பழனியப்பர் சொல் சீவன் முக்தி பார்க்கும் 29

அகங்கார நோயகல மமதையாம் பேயகல அன்பு பட்சத்
சுகங்காண சுருதி வாயிற் குணங்காண மனங்காண சுத்தங் காண
இகங்காண பரங்காண இரண்டற்ற அத்வைத இசையுங்காண
அகங்காண பிரம்மநசை அறிவு காண பழனியப்பர் அருள்வாய் மன்னே 30

இமயத்துச் சாதனங்கள் அமைந்திடும் பொ ருட்டான இலக்கிய த்தைச்
சமயத்து வா தனைகள் சஞ்சலங்கள் தீர் பொருட்டாம் சக நிட்டை
சமதமத்து வாயிலான சத் விசார தர்மத்தை சாங்கோ பாங்காய்
விமலமா சொரூபத்தை விளம்புகின்ற பழனியப்பர் வித்தை மேலே 31

தன்னான ஆன்மாவை தான்மறந்து விட்டந்தோ தன்னல் லாத
மின்னான இவ் வுடம்பை மாமிசமாம் பிண்டத்தை மீக்கூர் தல்என்
பொன்னான காலத்தைப் போக்கியது பொருத்தமல்ல பொருத்தமாகும்
தன்னான ஆன்மாவை தனதென்னல் எனபார் சொல் தேர் இன்னே 32

எக்கலப்பும் இல்லாத அதீதமான சிவமதனின் இணைய நிற்பீர்
முக்கலப்புக் கொண்டதான மூலசக்தி தேவர்மும் மூர்த்தி தானும்
துக்கத்து மாயமான தேகாதி பிரபஞ்ச தோற்றந்தானும்
சிக்கலெனை விட்டொதுக்கி ஆன்மாவைத் தேர் என்பதாம் சீபார் பின்னே 33

குணமற்ற ஆன்மாவைக் குறித்திடுக வாழ்நாளுள் குற்றமின்றி
பிணக்கற்று வாழ்வதற்குப் பிரபலமாம் சுருதிவாயில் பார்க்கக் கேட்க
கணக்கற்ற எண்ணங்கள் கருதுவதால் என்னபயன் கடவு ளுண்க்
கணக்காகக் காட்டுவது வேதாந்தம் என்பவர்வாய் கணக்குங் கொள்ளே 34

சென்மலாபம் முத்தியின்பம் சேர்க்கின்ற உபாயத்தைக் சத்தந்தான் எத்
தன்மையாம் ஞானத்திற் கேதுவாக உள்ளதெனும் தாத்பரிய யத்தை
தன்மய திருஷ்டிதனை தத்துவவி சாரத்தைத் தழுவி நின்று
நன்பொருளை நவிலுகின்ற பழனியப்ப சுவாமியவர் நடப்புத் தேரே 35

உள்ளபொருள் ஒன்றென்று ஒருங்குடை விசாரத்தால் உரைத்தல் செய்து
தெள்ளுதமிழ் நீதிதனை தெய்வீகக் குறளமுதின் சாரந் தன்னை
கள்ளபுலன் கட்டழிந்து போகின்ற ஞானத்தை கவினுமாக
உள்ளொக்க உணர்த்துகின்ற உயர்வாளர் பழனியப்பர் உண்மை தேரே 36

வேதந்தான் விள்ளுகின்ற விவேகத்தை ஞானத்தை விரும்பு சத்த
நாதத்தான் காதுவழி புகும்போதில் அதற்குரிய நடப்பு ; அர்த்த
போதந்தான் மனத்தினுடை சம்மந்தத் தாலுண்டாம் பிரிக்கும் ஆண்டு
பாதந்தான் கதியென்று பற்றசெயும் என்பார் தான் பழனியப்பர் 37

விசாரத்தின் வாயிலாக விருத்தியாகும் ஞானத்தால் விகற்பம் தீரும்
உசாவுதனின் வாயிலாக உண்டாகும் ஞானத்தால் உயர்வு சாரும்
அசாதாரணத் தன்மை அவித்தையின் ஞானத்தால் அரும்பும்; விட்டு
அசாவின்மை மெய்ப்பொருளை ஆற்றுகின்ற பழனியப்பர் அறிவுசாரே 38

பராபரத்துச் சிந்தனைகள் பாலிக்கும் வண்ணமாக பாடபோதம்
நிராமயத்துச் சிந்தனைகள் நீடிக்கும் வண்ணமாக நீதி போதம்
விராகத்துச் சிந்தனைகள் விளங்குகின்ற வண்ணமாக விசார போதம்
நிராசையாம் சிந்தனைகள் நிலவசெயும் பழனியப்பர் நிலையும் மன்னே 39

புத்திசாலி நீயென்ற புகழ்பெருமை அடையவேண்டின் பூமா வித்தைச்
சத்தியமாக் கண்டிடுக சதாகால விசாரணைகள் செய்க உய்க
நித்தியனும் நீயாவாய் நிமலமான சொரூபனும் நீ நீயே என்ற
உத்திரத்தை யளிக்கின்ற ரெட்டியாரூர் பழனியப்பர் உயர்வைப் பாரே 40

மானுடத்தைப் போலுயர்வு மற்றான பிறவிக்கு மாண்பும் உண்டோ
தேனிடத்துச் சுவைபோல ஆன்மாவின் இடத்துத்தான் சுகமும் உண்டு
வானிடத்துச் சம்மந்தம் விசாரத்து ஞானத்தால் விளங்குமென்றே
ஆனியாக உரைக்கின்ற ஆய்வாளர் பழனியப்பர் ஆற்றல் தேரே 41

ஆதங்கமில்லாமல் ஆத்மாவாம் விசாரத்தை அனுகிச்செய்க
தீதங்க மில்லாம் திரவிசாரம் செய்திடுக தீர்வையாக
வேதங்கள் கூறுகின்ற வெகுவான பிரம்மத்தை வேண்டி நிற்க
போதங்க ளுண்டாகும் பொன்னான காணுமென்பார் பழனியப்பர் 42

வேடிக்கை விநோதங்கள் விசாரத்திற் கொவ்வாது மனதிற்கொள்வீர்
நீடிக்கை யாம்நம்முள் நிலைத்திருக்கு மான்மாவை நிச்சயத்து
நாடிக்கைக் கொண்டக்கால் நாசமுண்டோ நலிவுண்டோ நவில்வீர் ஞானம்
வாடிக்கை யாகுங்காண் பழனியப்பர் வாய்மைசொல் வகையுந்தேரே 43

அழிகின்ற இவ்வுடம்பு பஞ்சபூத காரியந்தான் ஆகுமென்று
ஒழியாத விசாரத்தை ஓதுதலை மேற்கொண்டு ஒப்பமாக
கழிகின்ற வாழ்நாளை கழிந்துபோன வாழ்நாளை கணக்கிட்டுப்பார்
விழித்தெழுக விளியாத ஆன்மாவை விரும்பென்பார் விதியும் கோரே 44

மனத்தின்கண் ணுள்ளமாசும் சித்தத்தின் கண்ணுள்ள மலமும் சீவ
இனத்தின் கண் ணுள்ளகசா யம்மூன்றும் ஒழியுவகை இயல்பல் செய்வார்
மனமாசு பகிரங்க சாதனத்தால் மலம்கசாயம் வேத அர்த்த
வினயத்தால் தத்துவத்து ஞானத்தால் நீங்குமென்பார் விளக்கம் நன்றே 45

தனித்தபெருங் கருணையொடு ஈசனிந்த சீவர்க்குத் தூலமான
தனுகரண அண்டத்தை புவனத்தை போகத்தை தக்கவேத
மனுநீதி சாஸ்திரத்தை ஆய்ந்துகொள பகுத்தறிவு மாண்பும் தந்த
வினையளவு ஓர்பழனி யப்பர்வித் தைமேவ வீழு பேரே 46

அகண்டமான வத்துவினை அனைத்துக்கும் மேலான ஆதாரத்தை
புகல்கின்ற போதில்தான் புத்திபலன் உண்டாகும் புண்ணியங்கள்
தகவுடைமை யன்னதான தார்மீக நோக்கங்கள் தத்துவங்கள்
உகந்தவழி உருவாகும் என்பாரை ரெட்டியாரூராரைத் தேரே 47

மனிதநேய ஒற்றுமையை மாதவத்திற் கொற்றநான மகத்துவத்தை
புனிதஞான தானத்தை தானத்தை பூமாவாம் வித்தையை புகழ்ப லத்தை
இனிதான இலக்கியத்தை இதிகாச புராணத்தின் இயல்பல் தன்னை
நனிதான எடுத்துரைக்கும் நல்லவராம் பழனியப்பர் நட்பை நாடே 48

சுகர்ஞான தத்துவத்தை சுத்தான்மா வித்தையைச் சுட்டிக்காட்டி
பகர்ஞான தத்துவத்தைப் பாமரரும் பண்டிதரும் பெறுதற்கான
நுகர்ஞான தத்துவத்தை வாக்கதனால் வசனித்து நெஞ்சுகொல்ல
நிகர்ஞான தத்துவத்தை நிர்ணயிக்கும் பழனியப்பர் நிலையுஞ்சாலே 49

சனகாதி யாம்முனிவர் யாக்வல்யர் காக்கியம்மை சரியாக் கண்ட
மனுவாதி முதலான தத்துவத்தை ஆன்மாவை முற்படுத்தி
சனனமர ணத்திரையை விலக்கவல்ல யூகத்தைச் செப்புகின்ற
வினையாளர் பழனியப்பர் வித்தையை மேவுங்கால் வீடு பேறே 50

பிறப்பதனை முற்படுத்திப் பேசுகின்ற காட்டுகின்ற பூமா வித்தைச்
சிறப்பதனை மாமனிதன் தேவனெனும் மகத்துவத்தை சத்வி சார
திறமதனை சத்புருட இலட்சணத்தை சாத்வீக தர்மந் தன்னை
அறமதனை முறையாக அறிவிக்கும் பழனியப்பர் அன்பை மேலே 51

தத்துவ ஞா னம்வந்த போதுமழி யாதுபார மார்த்த சத்தை
தத்துவஞா னம்வந்த போதழியும் விவகாரீக சத்தை பின்போ
தத்துவஞா னம்வரா தழிவதுபி ராதிபாசீக சத்தை என்றும்
தத்துவஞா னம்புகலும் தயவாளர் பழனியப்பர் தம்மைத் தேரே 52

பிறவிக்குப் பயனான பிரம்மத்து வித்தையை பகர்ந் தகத்தின்
துறவுக்குப் பயனான துரியசிவ பாவனையை தூயதாம் நல்
உறவுக்குப் பயனான ஒழுக்கத்தை வேதாந்த உயர்வை முத்தித்
திறவுக்குப் பயனான திருஷ்டாந்தம் நல்குவார் ரெட்டியாரூ ராரே 53

சத்தான பிரம்மறிவை சாகாத கலையறிவை சகத்தோர் காண
முத்தான ஆன்மாவை முமூட்செனவாம் தத்துவத்தை முற்படுத்தி
வித்தான வேதாந்த விளக்கநல விசாரத்தை விரித்து வீடு
சொத்தான நித்யமுத்தி சொலும்வல்லார் பழனியப்பசாமி தானே 54

தத்துவம்முப் பத்தாறில் முப்பந்து தத்துவத்தில் சத்தா னந்தச்
சித்துமிலை ஆன்மாவாம் தத்துவத்தில் ஆனந்தச் சத்துச் சித்தம்
ஒத்திருக்கும் உண்மைபரர் உடம்பிடத்தில் சடம் துக்கம் உண்ட சத்தாம்
சத்தியமீ துண்மைபார் என்றுரைக்கும் பழனியப்ப சகசம் தேரே 55

இயற்கையாய் விளங்குகின்ற இதமான வத்துவினை இலக்கியத்தை
செயற்கையாய் சிறப்பதுவாய் சிந்திக்கத் தக்கதுவாய் சீருமாகி
வியனாகி விமலமான சொரூபமாகி விந்துமாகி விளங்க வல்ல
பயனான பரைப்பிரம்மம் பகருகின்ற பழனியப்பர் பாண்மை பற்றே 56

பரமாத்மா சீவாத்மா ஒன்றேதான் வேறல்ல பெயரால் வேறு
திர விசாரத் தன்றி யதுதெரிந்துகொள வாகாது சாத்தி யந்தான்
அரிசிவனும் ஒன்றென்ற ஆதாரம் காட்டிடுவார் ஆக மத்தால்
புரிந்துகொள பொறுமைமுக்கியமென்று புகன் றிடுவார் பழனியப்பர் 57

பேதங்கள் போயகல மனத்தினது போராட்டம் பொசுங்கிப் போக
ஏதங்கள் விட்டகல ஏமாற்றப் படுந்துயரம் எத்திப் போக
நாதங்கள் நெஞ்சத்துள் நயந்தொலி செய்ஞானங்கள் நம்மை நாட
வேதங்கள் விளக்கங்கள் கோரிடுவார் ரெட்டியாரூர் வாழ்வார் தாமே 58

தோய்ந்து தோய்ந்து செய்திடுக தொன்பிரம விசாரத்தைத் தொடக்கந் தன்னை
ஆய்ந்து ஆய்ந்து கண்டிடுக ஆன்மாவின் பட்சத்தாம் அறிவு தன்னை
தேய்ந்து தேய்ந்து போகுங்காண் தெய்வீகம் அல்லாத சிறுமை முற்றும்
மாய்ந்து மாய்ந்து போமென்னும் மகான்பழனியப்பசாமி மாண்புந் தேரே 59

அவஸ்தையும் உபாதிகளும் அகண்டபிரமத்தின் கண் அறவே இல்லை
கல்லலாகும் உபாதிகள் கண் டப்பொருளிடத் துண்டதனைக் கண்டு கொள்க
உவமான மூலமாக உணர்த்திடுவார் அஃததனை உதறித்தள்ளி
உவமேயம் பற்றிடுக என்பார் சொல் பற்றுங்கால் உபாதி போமே 60

வேதமகா வாக்கியத்தை வாயெழுப்ப காதுகேட்க மனமும் கொள்ள
வேதமாக வாக்கியத்தால் அர்த்தத்தால் ஞானத்தால் வாக்கு தோடம்
தீதுமலி எண்ணத்தால் உண்டான மனத்தோடம் சீவ தோடம்
பாகமாம் முத்தோடம் பாழாகிப் போகுமென்பார் பழனியப்பர் 61

துரியசிவ பாவத்தை தூயநல்ல ஒழுக்கத்தை துவம்ப தத்தை
அரியமணி தப்பிறப்பை அத்வைத சிறப்புதனை அகமும் ஒக்க
உரியவிச ாரத்ததனால் உணர்த்தி நலஉற்சாகம் ஊட்டு கின்ற
பெரியவராம் பழனியப்பர் பிரம்மவித்தை பிறவிபிணி போக்கும் பாரே 62

அணுவுக்கும் அணுவாகி ஆதிமூலம் வேதமாகி அகண்ட மாகி
அணுகாமல் இருப்போர்க்கும் அணுகித்தான் இருப்போர்க்கும் ஆரு யிருக்கும்
துணையாகி ஒன்றுபட்ட தோழமையாய் நீங்காமல் தானி ருக்கும்
இணையிலாத வத்துவினை இயம்புகின்ற பழனியப்ப இன்சொல் தேரே 63

குருவான மேலாகக் கோருகின்ற நெறியாளர் குறியா ளர்தான்
மருவானை பெண்ணாக்கி மகிழ்ந்தகதை கற்பனைகள் விடுக என்பார்
தெருளானை ஒன்றென்று நன்றென்று தேர்ந்து உரைக்கும் தெய்வீ காளர்
பொருளானை பிரம்மாணை போற்றிடுவார் தம் ஆணை பொருந்தப் பாங்கே 64

கைவல்யம் நவநீதம் கட்டளையும் கண்ணனுரை கீதை யுந்தான்
கைவல்யம் ஆக்கியவர் கண்டித்து பாடமனக் கணக்குஞ் சொல்வார்
கைவல்யம் அஃததனை எல்லோரும் செயவேண்டி கருணை யோடு
கைவல்யம் சொல்கின்றார் கடவுண்மை காட்டுகின்றார் கணக்காய்த் தானே 65

ஓங்கார தியானத்தால் மலதோடம் நீங்குமென ஓதல் செய்வார்
ஆங்கார மனமாயம் அத்தியந்தப் பிரளயத்தின் அமைப்பு ரைப்பார்
தீங்கான துற்சங்கத் தீவினைகள் பற்றிடாத திருஷ்டாந் தத்தை
பாங்காக எடுத்துரைக்கும் ரெட்டியாரூர் பழனியப்பர் பான்மை பற்றே 66

பிரம்மத்தை நினையாமல் விசாரித்தும் உணராமல் போவா யாகில்
பிரபஞ்ச நினைவென்ன கடலலைபோல் எழும் செய்யும் பீழை நோயாம்
கரவுதனுக்குட்படுத்தும் காமத்து வெகுளிகளைக் கூட்டு விக்கும்
விரக்தி மனப்போர் நீங்க பழனியப்பர் விசாரம்சால் விகற்பம் போமே 67

பயனிலாத காரியங்கள் பழகுவதால் பிறவிக்கு பாரமாகும்
நயனிலாத காரியங்கள் நண்ணுவதால் ஞானத்தின் நட்டம் அஃதே
பயனாகுங் காரியங்கள் பரமாத்மா நினைத்து செயல் பின்னும் முன்னும்
நயனாகும் என்று நவில் ரெட்டியாரூர் பழனியப்பர் நட்பு கொள்ளே 68

பிரகாச ரூபமான பிரமத்தை நினைந்திந்தப் பிரபஞ்சத்தில்
திரவிசாரம் தேர்ந்திடுக தத்துவமாம் ஞானத்தைச் சம்பாதித்து
கரவிலாது வாழ்ந்திடுக கண்டதுவும் கொண்டதுவும் கோல மென்னும்
விரக்திமனம் விலகவழி விளம்பலுற்ற பழனியப்பர் விவேகம் மேலே 69

பரமாக வைக்கின்ற பகுத்தறிவு விசாரத்தைப் பன்னிச் செய்க
தரமாக வைக்கின்ற தத்துவத்தின் விசாரத்தைத் தழுவிச் செய்க
உரமாக வைக்கின்ற உண்மையாம் விசாரத்தை உவந்து செய்யத்
திரளாக வாருங்கள் என அழைக்கும் பழனியப்பர் தயவைத் தேரே 70

கோடிட்டுக் காட்டுகின்ற வேதத்துக் கொள்கையில் கவனம் வைத்து
வீடிட்டுக் காட்டுகின்ற விசாரத்து தர்மத்தை விளக்கி நல்ல
பாடிட்டுக் காட்டுகின்ற மனிதராக புனிதராக புவனந் தன்னில்
நீடிட்டு வாழ்கின்ற நிலைசொல்லும் பழனியப்பர் நீதி தேரே 71

தன்னைத்தான் உணராது போம்போது தர்மத்தின் சங்க டந்தான்
பின்னைத்தான் சகடம் போல் சுழன் றிடுவாய் பிறந்திழைத்துப் போவாய் அன்றோ
முன்னைத்தான் மறைகளெ லாம்மொழிகின்ற தத்துவத்து வாயில் தன்னை
இன்னைத்தான் தேர்ந்திடுக இறப்பிலை பிறப்பில்லை என்பார் தேரே 72

சிவனுடைய சிருஷ்டிதனை சீவனுடை சிருஷ்டி தனை சிந்தித்தல் செய்
சிவனுடைய சிருஷ்டியாகும் தனுகரண அண்டங்கள் சிறப்பின்மிக்க
புவனத்துப் போகங்கள் தேர்ந்திடுக சீவனுடை படைப் பகந்தை
அபிமானம் ஆசைகோபம் என்பார் ரெட்டியாளூர் ஆசான்தானே 73

தேகபுத்திவிட்டொழித்துத் தேகிபுத்தி தேர்ந்திடுக திர விசாரம்
பாகத்தே செய்திடுக பரமாத்மா சீவாத்மா பகுத்துணர்க
வேகமனம் களைந்திடுக வேதாந்த சித்தாந்த வேட்கை கொள்க
ஏகமனப் பான்மைசார் என்பாரே ரெட்டியாளூர் எந்தை ஆசான் 74

தூலத்தின் காரணத்தைச் சற்றெண்ணிப்பாராமல் தன்ன தென்று
காலத்தை வீணாகக் கழிக்கின்ற மாந்தர் நீர் கேளீர் இஃதே
தூலசூக்ம சரீரங்கள் இரண்டுந்தா மேலான சிவன்சொத் தாகும்
ஆலசிய மின்றியற் குரியபணி ஆற்றென்னும் ஆசான் பாரே 75

சத்தென்ப ஆன்மாவின் பாலுள்ள சக சத்தை தத்துவத்தை
சித்தென்ப ஆன்மாவின் பாலுள்ள சிறப்பதனை சித்தம் கொள்ள
சத்தென்ப சித்தென்ப சார்ந்திருக்குமிடத்தில்தான் சகசா னந்தம்
ஒத்திருக்கும் என்று சதா ஓதிடுவார் யார் ரெட்டியாயூரார் தானே 76

சத்விசார இலட்சணத்தை சாத்வீக தர்மத்தை சமத மத்தை
அத்வைதகோட்பாட்டை ஆன்மாவாம் பிரமத்தின் அடைவு தன்னை
புத்தியொக்க புகழொக்க புகல்கின் பூமா வித்தை பழனியப்பர்
சத்தஞானம் கேட்குங்கால் சமாதான பாவனங்கள் சாத்ய மாமே 77

மனவிரோத மில்லாமல் மகத்தான தத்துவத்தை மந்தி ரத்தை
இனவிரோதமில்லாமல் இயற்கையின் வழிபாட்டை இலக்கி யத்தை
சனவிரோத மில்லாமல் சகசமான நிட்டையை சத்துவத்தை
கனரோதம் மில்லாமல் கழலுகின்ற பழனியப்பர் கருணை மேலே 78

சொத்தாக சுகமாக சொக்கத்து பூமியாக சுமந் திருக்கும்
வித்தாக வினையாக வீயாத நலமாக விளங்குகின்ற
முத்தாக முதலாக முடிவாக இரண்டற்ற மூலமாக
சத்தாக உள்ளான்மா சாற்றுகின்ற பழனியப்பர் சமர்த்து பாரே 79

ஆனந்த வடிவான ஆன்மாவை பிரமத்தை ஆதரித்து
வானந்த மாகுசிவ விசாரத்தை வந்திப்பார் மற்றை யாரும்
தானந்த மாகவேண்டி தத்துவத்து ஞானத்தை தயவி னூடே
ஊனந்த மாகதினம் உச்சரிக்கும் பழனியப்பர் உயர்வை மானே 80

அகங்காரங் கொண்டலைதல் ஆன்மனான உனக்கழகோ அறிந்து சொல்லு
சுகங்காண வேண்டுவையே சுத்தான்மா ஒன்றை தான் சுருதி வாயில்
மிக வேண்டிப் பற்றிடுக மீக்கூறு மானுடத்து மகிமை தன்னை
அகவேண்டிப்பற்றிடுக அருள் என்பார் பழனியப்ப ஆசான் தானே 81

பதமுத்தி சாருங்கால் பிறப்பென்றும் இறப்பென்றும் பேதங் காட்டும்
பதமு மதன் அர்த்தங்கள் விசாரித்தும் உணர்ந்திடாத போதி லந்தப்
பதார்த்தஞானம் கிட்டாது நித்தியத்து முத்தியெது புரிந்திடாது
பத அர்த்தம் விளக்கமாக இலட்சணமாய் பழனியப்பர் புகல்வார் தாமே 82

பிறவாத பெருநெறியில் பிறங்கிடத்தான் வேண்டுவையேல் பிரமம் எண்ணு
இறவாத நிலையின்கண் இருந்திடத்தான் வேண்டு வையேல் இனிதை எண்ணு
மறவாத ஞானங்கள் மலர்ந்திடத்தான் வேண்டு வையேல் விசாரம் பண்ணு
பிறவாத பெருநெறியில் பிறங்கிடுவாய் என்பார் தான் பழனியப்பர் 83

முக்திக்கு முதலான மார்க்கத்தை முயன்றிடுக மேலும் என்பார்
பக்திக்கு முதலான மார்க்கத்தைப் பயின்றிடுக பரமார்த் தத்துச்
சக்திக்கு முதலான மார்க்கத்தை சந்தித்துச் சிந்தி என்பார்
யுக்திக்கு முதலான மார்க்கமுரைப் பார்ரெட்டியாரூரார் தான் 84

சத்தங்கள் பிரதானம் ஞானத்திற் காகுமென்று சாற்றுவார் காண்
சுத்தங்கள் பிரதானம் ஞானத்திற் காகுமென்று சூழு ரைப்பார்
மொத்தங்கள் கூடாது தீரவிசா ரித்தறிந்து மனத்திற் கொள்ளும்
எத்தனத்திற் ஈடில்லை என்றுரைப்பார் பழனி அப்பர் என்பார்தானே 85

மனமாசு சித்தமலம் சீவனிடத் துற்றகசாயம் மறைந்து போகும்
இனமாசு அத்தனையும் இழிந்து போகும் மற்றதனை இயம்பக் கேளீர்
குணமாசு நாமரூப மெனும் மாசு நிழற்படாத கடவுள் தேர்க
பிணமாசில் பிரம்மம்சார் பிறவிகள்போம் என்பாரே பழனியப்பர் 86

தன்னைத்தான் உணர்வதே உத்தமமாம் சத்திய மாந் தானா மென்றும்
பின்னைத்தான் ஏதுணர்ந்தா லும்என்ன எவ்வித்துப் பயனும் இல்லை
முன்னைத்தான் மறைகளெல்லாம் முன்னோடி யாம்பிரமத்தை முற்றுரைக்கும்
சொன்னைத்தான் தேரசொர்க்கம் என்பாரே பழனியப்ப சாமி என்பார் 87

கூற்றமுண்டு எவ்வுயிர்க்கும் கூராய்ந்து பார்க்குங்கால், குற்றமுண்டு
மாற்றமுண்டு எவ்வுயிரும் மறுதலித்துப் போவது உண்டு மண்ணின் மீதில்
ஏற்றமுண்டு என்றுசொல பிரமத்தைத் தவிர வேறு இல்லை யஃதே
ஊற்றமுண்டு பண்ணுமென ஓதுவாரே ரெட்டியாரூர் உற்றார் தாமே 88

தங்கமும்மாத் தும்போல ஆன்மாவும் அறிவுந்தான் சேர்ந் திருக்கும்
தங்கத்தி லுள்ள மாத்து அத்தங்கத் தின் உயர்வு தனைக் காட்டல்போல்
தங்கமான ஆன்மாவின் இடத்துள்ள அறிவது தான் அவ்வான் மாவின்
தங்கமான உணர்வதனைக் காட்டுமென்பார் ரெட்டியாரூர் குரு பிரானே 89

வீணாக வாழ்நாளைக் கழித்திடாமல் வேதாந்த விசாரம் கொள்க
நாணாத செயற்கெல்லா நாணுகின்ற புத்தியது நழுவிப் போகும்
கோணா தசெயலெலாம் கொடிகட்டி பறக்கும்பார் கருணை யூடே
மாணான மானுடத்து மகத்துவத்தை பாரென்பார் மகிமை பாரே 90

காட்சியனு மானத்தைக் கருதலான அனுமானங் கண்கூடாக
மாட்சியாக ஆகமத்தின் அனுமான பிரமாண வாழ்வு தாழ்வை
காட்சியனு மானங்காண் பூமணத்தால் சொல் அளவாம் கருதலென்ன
ஆட்சியாக உரைக்கின்ற பழனியப்பர் அறிவுரை ஆக்க மாமே 91

தெளிவுண்டாம் சிந்தனையில் தெய்வீக தரிசனந்தான் தேர்ந்திருக்கும்
வெளிவுண்டாம் வேதாந்த விசாரத்தால் வேறுபாடு மறைந்து போகும்
துளியுண்டாம் பயனில்லை தூலதேகத் திடத்ததனை தெரிந்து புத்தி
வெளிக்கொண்டல் வானாகு மென்பாரே ரெட்டியாரூர் வாழ்வார் தானே 92

மாத்தில்லா பொன்னாக மணியாக முத்தாக மிளிருகின்ற
ஆத்மாவே நீயென்று வேதங்கள் மகரிஷிகள் ஆன்றுரைக்கும்
தாத்பர்ய நிச்சயமாம் சொல்தேர்க தக்கசமா தானம் என்பார்
தோத்ரங்கள் விசாரங்கள் தானென்பார் ரெட்டியாரூர் தொண்டர் தாமே 93

பேதத்து வசனத்தால் அசுபத்து வாசனைகள் பிறப் பிறப்பு
ஏதத்து விவரீதம் ஏற்படுத்தும் அசுரகுண எதிர்ப்பு நீங்க
வேதத்து விசாரத்தை விஷயதோஷ விவேகத்தை விருத்தி பண்ண
போதத்து சுபவாச னையென்று புகன்றிடுவார் பழனியப்பர் 94

எதார்த்தசிவ ஞானந்தான் பிறப்பிறப்பு எனும் நோயை எடுக்குந் தானே
பதார்த்தஅவ ஞானங்கள் பதட்டநிலை யுண்டு பண்ணும் பாவம் சேர்க்கும்
எதார்த்தசிவ ஞானத்தை ஏற்றுவிப்பார் தோற்றுவிப்பார் இதயம் ஒக்க
பதார்த்த அவப் பற்றில்லார் ரெட்டியாரூர் வசிக்கிற பழனியப்பர் 95

மனச்சாந்தி யளிக்கின்ற உபதேச கலையதனின் வாக்கியத்தை
இனச்சாந்தியளிக்கின்ற இன்முகத்து பாவனையில் எடுத்த ரைத்து
தினச்சாந்தி யளிக்கின்ற தினவிசார ஞானத்தின் துறையின் நம்மை
இனச்சாந்தி படுத்திடுவார் இதயங்கொள்வார் விசாரத் தினிமையாலே 96

தொட்டுரைக்க இயலாத தோற்றத்த மாயத்துச் சக்தி தன்னை
சுட்டுரைக்க இயலாத சுயமான பிரம்மத்துச் சூட்சுமத்தைப்
பட்டுரைக்க வேண்டுமென பதமான விசாரத்தை பகர்ந்த மஃதே
கட்டுரைக்கும் பழனியப்பர் கருத்துரைகள் கருத்துயரங் கெடுக்குந்தானே 97

அத்தியாசக் கற்பனைகள் அகற்றவல்ல விசாரத்தை ஆகமத்தை
வித்தியாசக் கற்பனைகள் விட்டகற்ற வல்லதான விவேகந் தன்னை
அத்தியாசக் கற்பிதமாம் ஆக்கைதான் இருக்கையில் ஆன்மா பற்ற
வித்தியாசம் தீருமென்பார் ரெட்டியாரூர் வேதாந்த தேசிகர் ஆம் 98

வாச்சியத்தை விட்டொழித்து வகையான இலட்சியத்தை வாழ்த்துதல் செய்
பூச்சியமாம் சிவாசன் புகழுகின்ற கைவல்யப் பனுவல் ஓங்க
வாச்சியத்தைப் பிரித்துணர்த்தி இலட்சியத்தைக் காட்டுகின்ற விசாரதானம்
மாச்சர்யம் போம்படியாய் வழங்குகின்ற ரெட்டியாரூர் மனிதர் தேரே 99

தான்பெற்ற விசாரஞானந் தனையடுத்த மற்ற வரும் தெரியவேண்டி
வான்பெற்ற வண்ணமாக வேதாந்த விசாரத்தை வந்திப் பார்காண்
ஊனற்ற ஆன்மாவின் விளக்கத்தை யுணர்வது தான் உண்மை ஞானந்
தானென்று செப்பிடுவீர் தத்துவத்துப் பழனியப்ப சாமி தானே 100

பயன்

பழனியப்ப சுவாமியவர் பரமாத்த விசாரத்தைப் பற்றும் போதில்
வழக்கென்ப நீங்குமென வாய்விட்டுக் கூறுகின் றோம் வம்பு மாயை
வழக்கற்று போகுங்காண் பிறப்பிறப்பு பெருந் துக்கம் விலகி ஆன்மா
பழகுநல சுபாவங்கள் பற்றித்தான் வாழ்வாரே புவிய லாங்கே

முற்றும்.





ரெட்டியாரூர் திரு. **சு.பழனியப்ப சுவாமிகளின், 14-ம் ஆண்டு குருபூஜை** விழாவின் போது இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நூலிலுள்ள நிறைஞானக் கருத்துக்களின் பெருமை எங்கள் குருநாதரையே சேரும். இதில் பிழையிருந்தால் மாணாக்கர்களாகிய எங்களையே சாரும்.

கைவல்ய ஓங்கார தத்துவ ஞான வகுப்புகள்

குருவின் ஆத்மார்த்த சீடர் ஆத்மபோதகர் **இல.மனோகர் சுவாமிகள்** அவர்களால் கீழ்க்காணும் இடங்களில் தத்துவ ஞான வகுப்புகள் நடைபெறுகிறது.

பிரதிவாரம் செவ்வாய் - தென்சங்கம்பாளையம் தத்துவஞானசபை

பிரதிவாரம் சனிக்கிழமை - பொள்ளாச்சி மகாத்மா காந்தி மண்டபம்

பிரதிவாரம் ஞாயிற்றுக்கிழமை - தலைமை தத்துவ ஞானசபை, போடிபாளையம்.

பிரதிவாரம் சனிக்கிழமை
மாலை 6.00 மணிமுதல் 7.30 மணிவரை - அண்டவாணர் சிவன் கோவில், வெங்கடாசலம் வீதி, R.S.புரம், கோயம்புத்தூர்.

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஞாயிறு
மாலை 6.00 மணிமுதல் 7.30 மணிவரை - பதஞ்சலி யோக மையம், ஐஸ்வர்யா நகர், உடுமலை.